

# குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே

டொக்டர் ஹேய்ம் ஜி இனோட்
தமிழில் - எஸ். கே. விக்னேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே..

டொக்டர் ஹேய்ம் ஜி இனோட்

தமிழில்: எஸ்.கே.விக்னேஸ்வரன்

மூன்றாவது மனிதன் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title: Kulanthaikalukkum unkalukkum idaye
Author: Dr Haim.G.Ginott ©
Translation: S.K.Vickneaswaran
First Edition: June 2001
Published by: Moonravathu manithan Publications
37/14, Vauxhall Lane,
Colombo - 02
Tel: 01-302759
E Mail: 3man@sltnet.lk
Cover Photo: M.K.M.Shakeeb
Pages: (144+Xiv)
Printed at: UK Printers, Colombo -13
Price: Rs. 200.00

இந் நூல்
தம்மை ஒறுத்தென்னைத்
தலைநிமிர்ந்து நிற்கவைத்த
என்
அம்மாக்கும் ஐயாக்கும்
சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

குழந்தைகள் பெற்றோர்களுக்கிடையேயான பு...
மனிதகுல வளர்ச்சிப் போக்கில் மிகப் பெரும் பின்ன...
நமது தமிழ்ச் சூழலில் ஆழப்பதிந்து வேர் விட்டு எதிர்கா... ிக மோ...
அக புறத் தாக்கத்திற்குட்படுத்தி வருகிறது. நமது முன்னை...
இன்றைய நவீன விஞ்ஞான, கல்வியியல் மனிதர்களி...
மோசமான பாதிப்பிலிருந்து வெளிவராதவர்களாகவே...

குழந்தை வளர்ப்பை, பேணுகையை ஒரு கல்விய...
மிக அக்கறையுடன் பார்க்கப்பட வேண்டிய விடய...
பாரம்பரியமான குழந்தை வளர்ப்பு அணுகு முறை...
அதிகாரங்களும் தொடர்ந்தும் பல சந்ததிகளுக்கு... நுகிறது.
இதன் தொடர்ச்சியாகவே பெற்றோர்கள் தங்கள் பீடங்களில வீ... னர். இந்த
வேர் கொண்ட பீடங்களைத் தகர்த்து - குழந்தைகளும் பெற்... அகத்தாலும்
புறத்தாலும் மிக நெருங்கி வர வேண்டிய தேவையை நாம்... ம். இது நமது
வாழ்வின் மிக அடிப்படையான விடயமும் கூட.

இந்த நூலின் மொழி பெயர்ப்பாளர் எஸ்.கே.விக்னே... ந நல்ல தந்தையாக
குழந்தைகளுக்கு எப்படி இருப்பது என்ற அவரின் தே... க அவர் வாசித்தறிந்த
...தனது அக்கறைக்குரிய உழைப்பினால் இ... ஒரு நல் ஆவணமாகத்
...ிருக்கிறார். அவரின் இந்த அரிய உழைப்பை... ால் மிக அக்கறையுடன்
...கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குள்ள...

...ளிலிருந்து தன்னிடத்தே வாங்கிக் கொ... லம் ஒரு மொழி தன்னை
...கொள்கிறது. இந்த வளத்திற்கு மொ... பில் மட்டுமன்றி,அரசியல்,
...சார ரீதியான விளைவுகளும் உ... உணர்ந்து இந் நூல்
...றது. இந் நூலை பதிப்பிக்கக் (மொழ... லாகவிருந்த நண்பர்
...ஸ்வரன் அவர்களுக்கு எனது நன்றி, ...ிஷருமான
...ஆசிரியர் எஸ்.சிவகுமார், ஔவை,
...உதவிய எம்.எஸ்.எம்.றிகாஸ்,சர்மினி...
...க்கும் எனது நன்றிகள்.

...ளசர்
பதிப்பாளர்



"குழந்தை... லைப்பு.
பெற்றோ... ய ஒரு மு... ண்மையை
நுணுக்க... க்கும் வகையில் "குழ... மு இடையே" என்ற
இந்த... க்கியமானதொரு காலகட்டத்தில் வெளியாகிறது. குழந்தைகள் மற்றும்
சி... ல், பெற்றோரியம், சமூகவியல், சமூக உளவியல், உளவியல்,
...ற, நலவியல் போன்ற மிகவும் அவசியமான துறைகளில் தமிழில் நல்ல
...அரிதாகவே கிடைக்கின்றன. பொறியியல், கணக்கியல், உயிரியல்,
...னங்கள், மருத்துவம், கணனித்துறைகளையே பொருள் நாட்டம் காரணமாகவும்,
...ாதரம் காரணமாகவும் தொடர்ந்தும் நாடி வருகிற ஒரு சமூகம் எங்களுடையது.
இந்தத் துறைகளில் வல்லுனர்களையும், ஆற்றல் மிக்கவர்களையும் உருவாக்கியிருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்ள முடிந்தாலும் இந்தத் துறைகளில் கூட நமது மொழிக்கும் சமூகத்துக்கும் வளமும், ஆழமும் அறிவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரக்கூடியவர்கள் அறிஞர்கள் எத்தனை பேரை நாம் உருவாக்கியிருக்கின்றோம் என்ற கேள்விக்கு ஏமாற்றமே ஒரு தீவிரமான மறுமொழியாகக் கிடைக்கும்.

போர்ச் சூழலும், அகதி வாழ்வும், தொடர்ச்சியான இடம்பெயர்வுகளும், இழப்பும் அவலமும் எமது சமூகத்தின் மீது பாரிய வடுக்களை உள்ளும் புறமும் ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த வடுக்களும் காயங்களும் ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளிலேயே ஆறிவிடப்போகின்றவையல்ல. நீண்ட காலத்துக்கு இவற்றோடு நாம் வாழ வேண்டி இருக்கும். இத்தகைய வடுக்கள் எமது சமூகத்துக்கு ஏற்படுத்தியுள்ள பண்பாட்டு, கலாசார, உளவியல், சமூகவியல் நெருக்கடிகளை நாம் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. இத்தகைய எதிர்கொள்ளலுக்கு அறிவும் ஆழ்ந்த தேடல், நாம் எதிர்நோக்குகிற சிக்கல்களை ஏற்கெனவே எதிர்நோக்கி வெற்றி கண்டிருக்கிற வேறு நாட்டு மக்களுடைய அனுபவங்களைத் தெரிந்து கொள்ளுதல் மொழிபெயர்ப்புக்கள் என்பன இன்றியமையாதன. நடைமுறைக்கு சாத்தியமானவை எவை என்றும் நாம் தெரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. இது ஒரு பலமான சவால். இந்தச் சவாலுக்கான ஒரு மிகவும் பயன் மிக்க ஒரு பதிலே எஸ்.கே.விக்னேஸ்வரனின் இந்த மொழிபெயர்ப்பு ஆகும்.

பெற்றோரியம் (Parenting) என்று இப்பொழுது அழைக்கப்படுகிற ஒரு துறை உளவியலோடு மட்டுமன்றி நலவியல் (Health studies) மற்றும் குழந்தைகள் இயலுடன் தொடர்புற்றுள்ளது. குழந்தைகள் வளர்ப்புத் தொடர்பாக எமது சமூகத்தில் பாரம்பரியமாக நாம் கடைப்பிடித்து வருகிற நடைமுறைகளையும், பண்பாட்டுக் கோலங்களையும், அணுகுமுறைகளையும் நாம் இன்று மறுபரிசீலனை செய்ய வேண்டி இருக்கிறது. அதிகாரமும், அசமத்துவமும், ஆணாதிக்க முறைமையுமே எமது சமூகத்தினதும் குடும்ப அமைப்பினதும் மூலமாக இருந்தன. பெற்றோரியத்தைப் பொறுத்தவரையிலும் கூட தகப்பனுக்கான அதிகாரமும் முதன்மையும்தான் பெருவழக்காக இருந்தது. குழந்தைகள், சிறுவர்களது நலன்கள் எவை எனத் தீர்மானிப்பதில் எங்களது பார்வைக் கோணமும், எமது அபிலாஷைகளும் எமது கனவுகளுமே முக்கியமான பங்காற்றினவே தவிர குழந்தைகளுடனான தொடர்பாடல், உறவு என்பன கூட அதிகாரத்தை மையமாக வைத்தே இடம்பெற்று வந்துள்ளன. தண்டனை வழங்குவதும், அடிப்பதும் ("அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்") பயமூட்டுவதும்தான் பிழைதிருத்த வழியாகக் கையாளப்பட்டு வருகின்ற முறையை இன்றும் நாம் பார்க்கிறோம்.

தண்டனை வழங்கும் முறை, தண்டனை என்ற கோட்பாடே இப்போது குழந்தைகள் வளர்ப்பில் அர்த்தமற்றதாகவும் மிகுந்த உளவியல் பாதிப்பை ஏற்படுத்துவதாகவுமே ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஒழுங்கானதும் தொடர்ச்சியானதுமான தொடர்பாடல் எங்களுக்கும் எமது குழந்தைகளுக்கும் இடையே இருக்க முடியுமானால் இத்தண்டனை முறை வழக்கற்றுப்போய்விடும். சமூகத்தில் மட்டுமல்ல, குடும்ப உறவுகளிலும் குடும்ப அமைப்பிலும் குழந்தை வளர்ப்பிலும் கூட ஒரு சமத்துவமான, ஜனநாயக நெறிமுறை பேணப்பட வேண்டியது சீரான சமூக உருவாக்கத்துக்கு அவசியம் . அத்தகைய உணர்வை இந்த நூல் உள்ளடங்கிய முறையில் எமக்குத் தருகிறது.



சிறுவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய உரிமைகள், சிந்தனைகள் பற்றிய பெரும் புரிதல்களும் மாற்றங்களும் இன்று ஏற்பட்டு வருகின்றன. அவற்றை எமது சமூகப் பரப்பிலும் அனுபவங்களிலும் நாம் இணைத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. எமது சமூகத்தில் குழந்தைகளதும் சிறுவர்களதும் நிலை கடந்த இருபது ஆண்டுகளில் மிகவும் மோசமான பாதிப்புக்களுக்கு உள்ளாகி விட்டது. ஊட்டச் சத்து, உளநலம் ஆகிய அம்சங்களில் இலங்கையில் முன்னணியில் இருந்தவர்கள் என்ற மோசமான நிலையில் இருந்து இன்று, இலங்கையிலேயே மிகவும் மோசமான நிலையில் இருக்கிற ஒரு சமூகமாக வடக்குக் - கிழக்கிலுள்ள சிறுபான்மையினர் மாறியுள்ளனர். குழந்தைகளின் இறப்பு வீதமோ மிக அதிகரித்துவிட்டது என்று சமூக மருத்துவத்துறையைச் சேர்ந்த கலாநிதி என்.சிவராஜா போன்றவர்களது ஆய்வுகள் தெரிவிக்கின்றன. போரும், வன்முறையும், பயங்கரமும் குழந்தைகளைப் பாதிக்கின்ற போது அவர்களுடைய உளவளர்ச்சி, சமூக இயங்குதிறன், பொற்றோருடனான உறவுகள், கல்வி, கிரகிப்பு போன்ற பல அம்சங்கள் தீவிரமாகப் பாதிக்கப்படுகின்றன. குடும்ப வன்முறையை அனுபவித்த அனுபவிக்கிற குழந்தைகளைப் பெற்றோரியம் எப்படி அணுகுகிறது அல்லது இத்தகைய சிக்கல்களூடாக வளர்ந்த, வளர்கிற குழந்தைகளை நாம் எப்படி அணுகுவது என்பது பற்றிய அறிவும், அனுபவமும், பயிற்சியும் எமக்கு இன்று தேவை. இந்தத் தேவையின் அடிப்படையான ஒரு கூறு குழந்தைகளுடன் நாம் எப்படி உறவாடுகிறோம், உரையாடுகிறோம், தொடர்பு கொள்ளுகிறோம் என்பது இந்த அடிப்படைத் தேவை குறித்த ஒரு சீரான புரிதலை இந்த நூல் வழங்குகிறது. தவிரவும், குழந்தைகளின் நடத்தைகள் தொடர்பான விடயங்களில் அக்கறை எடுத்து அவர்களை வழிப்படுத்த எடுக்கும் முயற்சிகளில் முக்கியமானது பெற்றோரை அறிவூட்டுவதுதான். குழந்தைகளை அறிவூட்டுவதை விடவும் முக்கியமான விடயம் இதுதான். இந்த நூல் அதை மிகவும் சிறப்பாகச் செய்கிறது. இது ஒரு துவக்கம் தான். எமது தேவை பெரிது. வழங்கலும் வளமும் சிறிது. எந்த நீண்ட பயணமும் ஒரு சிறு காலடியுடனேயே துவங்கப்படுகிறது என்பதற்கமைய இந்த முயற்சியை நாம் மனமார வரவேற்க வேண்டும்.

நூலைத் தமிழில் தந்திருக்கிற எஸ்.கே.விக்னேஸ்வரன் மொழி ஆளுமை பெரிதும் வாய்க்கப்பெற்றவர். அவருடைய சிறுகதைகளும் கவிதைகளும் குடத்துள் விளக்காகப் புனை பெயர்களில் ஒளிந்து கொண்டுள்ளன. நீண்டகால இதழியல் அனுபவமும், தொடர்ச்சியாக எழுதி வருகிற அனுபவமும் நீண்டகால மொழிபெயர்ப்புப் பயிற்சியும் இலக்கிய வளமும் அறிவியல் கல்வியும் சிக்கலான மொழிபெயர்ப்புக்களையும் நளினமாகவும் தெளிவாகவும் அழகுறவும் செய்ய அவருக்கு உறுதுணையாக அமைந்துள்ளன. அவருடைய சலிக்காத உழைப்பை மிகுந்த அக்கறையுடன் பேணி வருகிற எம்.பௌஸர் அவர்களுக்கு எமது நன்றிகள் என்றும் உரியன. மொழிபெயர்ப்பு என்பது பல வழிகளிலும் மறுபடைப்பே ஆகும். அந்த அம்சத்தை இந்த நூலில் நீங்கள் உணர முடியும்.

*சேரன்*
சமூகவியல்துறை,
யோர்க் பல்கலைக்கழகம்
கனடா
*மே 2001*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிபெயர்ப்பாளர் குறிப்பு

கணவன் மனைவியாக இல்வாழ்வில் பிரவேசிக்கின்ற ஒவ்வொரு நவீன சமுதாயத்தின் ஆணும் பெண்ணும் எதிர்கொள்கிற இரண்டாவது முக்கியமான சவால் குழந்தை வளர்ப்பாகும். முதலாவது சவால், அவர்கள் கணவன் மனைவியாக இணைந்து வாழ்கின்ற புதிய வாழ்வினை தமது சுய கௌரவமும், ஆளுமையும் பாதிக்கப்படாத விதத்தில் தமக்கிடையேயான உறவை வளர்த்துக் கொள்ளுதல் என்கின்ற சவால். இந்தச் சவாலை வெற்றிகரமாக கையாள்வதற்கான முன்னனுபவம் பெரும்பாலான ஆண் பெண்களுக்கு இருப்பதில்லை. பிற உறவினர் நண்பர்களது அனுபவங்களே அவர்களுக்கு இவ்விடயத்தில் ஓரளவு உதவுகின்றன என்ற போதும், இது தொடர்பான கல்வி எதையும் அவர்கள் எங்கும் கற்றுக் கொள்வதில்லை. இதனால் சமூகத்தின் ஆளுமை பெற்றுள்ள சிந்தனையின் அடிப்படையில் தாம் தமக்குள்ளே வளர்த்துக் கொண்டுள்ள தமது ஆளுமைப் பண்புகளைப் பொறுத்து அவர்களின் வாழ்வின் வெற்றி தோல்விகள் அமைந்து விடுகின்றன. ஆணாதிக்கம் அதன் வெளிப்படான பெண்ணடிமைத்தனம் என்பவற்றை ஏற்றுக் கொள்ளும் இரு நபர்கள் ஒன்றாக வாழ்ந்து முடித்துவிடக்



கூடுமாயினும், அவர்கள் தமது சுயத்தைப் பேணவும், சந்தோசமாக தமது வாழ்வை வாழ்ந்ததாகத் திருப்திப்பட்டுக் கொள்ளவும் உதவப் போவதில்லை. மாறாக தாம் சந்தோசமாகவே வாழ்ந்தோம் என்ற பிரமையுடன் வாழ்நாளைக் கழித்து விடுவதற்கே இவை உதவ முடியும்.

ஆயினும், ஒரு கணவன் மனைவியைக் கொண்ட குடும்பம் சந்தோசமான தமது எதிர்பார்ப்புகள், விழுமியங்கள், ஆளுமைகள் மேலும் பேணப்பட்டும் வளர்ந்தும் செல்வதற்கேற்ற விதத்தில் இல்வாழ்வை வாழ்கிறார்களோ இல்லையோ குழந்தைகளின் பெற்றோர்கள் ஆகிவிடுகிறார்கள். இவ்விடத்தில் அவர்களது இரண்டாவது சவால் ஆரம்பமாகிறது. குழந்தைகள் சந்தோசமாகவும், நம்பிக்கையுடனும் ஆரோக்கியத்துடனும் வளர்வதற்கு பெற்றோர் தமது கடமைகளைச் சரிவர ஆற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும். ஆனால் சரிவரக் கடமை ஆற்றுவது எப்படி என்ற விடயம் பெரும்பாலான தம்பதிகட்கு பரம்பரை பரம்பரையாக வந்த பட்டறிவு மற்றும் சூழலைப் பார்த்துக் கற்றுக் கொண்டது என்பதற்கு மேல் அதிகமாக இருப்பதில்லை. குழந்தை வளர்ப்புப் பற்றிய எந்தப் பாடநெறிகளும் பல்கலைக்கழகங்களில் போதிக்கப்படுவதாகத் தெரியவில்லை. ஒரு இயந்திரவியலாளராக, கணக்காளராக, வைத்தியராக வருவதற்காக கல்வியில் நாம் செலவிடும் நேரத்தில் ஒரு சிறிதளவு கூட ஒரு பெற்றாராக இருப்பதற்கான அறிவுத் தகுதியைப் பெற்றுக் கொள்வதற்காக ஒதுக்கப்படுவதில்லை. மனித சமுதாயத்தின் மிக முக்கியமான ஒரு விடயமாக இருந்த போதும் இவ்விடயம் யாரும் அதிக கவனம் எடுத்துச் செயற்படும் ஒன்றாக இன்னமும் வளரவில்லை.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் தான் எமது திருமண வாழ்க்கையும் பெற்றோராகும் நிகழ்வும் தொடங்கியது. பெற்றோர் என்ற முறையில் குழந்தையின் உணர்வுகளையும் விருப்பங்களையும் விளங்கிக் கொள்ளவும், அதை ஆரோக்கியமாக வளர்க்கவும் நானும் ஔவையும் எதிர்கொண்ட சவால்களின் காரணமாக தமிழிலும் ஆங்கிலத்திலும் குழந்தை வளர்ப்புத் தொடர்பான புத்தகங்களைத் தேடிப் படிக்கத் தொடங்கினேன். அவற்றுள் என்னை மிகவும் பாதித்த, மிகவும் அருமையான, பெற்றோருக்கான வழிகாட்டல் நூலென நான் கருதிய இந்த நூலை - இது 1964 இல் எழுதப்பட்ட ஒரு நூல் என்ற போதும் இத்தனை வருடங்களுக்குப் பிறகும் தமிழ்ச் சூழலுக்கு அது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று கருதி - தமிழில் பெயர்க்க முடிவு செய்தேன்.

சரிநிகர் ஆசிரியர்களுள் ஒருவராக இருந்ததால் எனக்கு இந்த மொழி பெயர்ப்பை தொடராக பத்திரிகையில் வெளியிடுவதற்கான சூழலும் கிடைத்தது. சரிநிகர் ஒரு மாற்றுப் பத்திரிகை என்ற முறையில் அரசியல், மொழியியல், சமூகவியல், பண்பாடு மற்றும் அறிவியல் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் மாற்றுச் சிந்தனையை வளர்க்கும் நோக்குடன் செயற்பட வேண்டும் என்று நாம் கருதிச் செயற்பட்டு வந்ததால், இந்நூலை சரிநிகரில் தொடராக வெளியிடுவது பொருத்தமானதே என்று கருதினோம். பத்திரிகையில் வேலை பார்த்த அதனுடன் சம்பந்தப்பட்ட நண்பர்கள் அனைவரும் இம் முயற்சியை ஆர்வத்துடன் பாராட்டி உற்சாகமூட்டி வந்தார்கள். முதலில் முக்கிய பகுதிகளை மொழிபெயர்ப்பதாக நாம் நினைத்த போதும் வாசகர்கள் காட்டிய ஆதரவு காரணமாக நூலை முழுதாகவே மொழி பெயர்த்தேன். நூலின் மொழிபெயர்ப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது முடிந்தளவுக்கு கலைச்சொற்களை தவிர்த்தும், சாதாரண வாசக அனுபவமுள்ள பெற்றோருக்கும் பயன்படக்கூடிய விதத்தில் எளிய நடையிலும் மொழிபெயர்க்க முயன்றுள்ளேன். உரையாடல்களை முடிந்தளவுக்கு பேச்சு மொழியில் பெயர்த்திருக்கிறேன்.

இதுதான் இந்த நூல் மொழி பெயர்பாக வந்த கதை. இப் புத்தகத்தை படிப்பதற்கான அவசியத்தை சின்னக் குழந்தையாக இருந்து கொண்டே எனக்கு ஏற்படுத்தியவள் எமது முதலாவது மகள் அரசி. இரண்டாவது மகள் அனிச்சா பிறந்த போது இந்நூல் எனக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருந்தது. இவர்கள் இருவரும் எனக்குள் இதை மொழிபெயர்க்கும் ஆர்வம் ஏற்படுவதற்குத் தங்களை அறியாமலே என்னைத் தூண்டியவர்கள். அவர்கள் இருவருக்கும் இந்நூல் வெளிவருகையில் எனது முதல் நன்றியை தெரிவித்தாக வேண்டும்.

அடுத்து இந்த மொழிபெயர்ப்பில் நான் ஈடுபடத் தொடங்கிய நாள் முதல் அதை ஆர்வத்துடன் பார்த்தும் ஊக்கப்படுத்தியும் வந்த எப்போதும் என் எழுத்துக்கு உந்து சக்தியாக இருந்து வரும் துணைவியும் என் இனிய நண்பியுமான ஔவைக்கு என் நன்றிகளைச் சொல்ல வேண்டும்.

சரிநிகர் பத்திரிகையின் ஆசிரியர்களாக இருந்த சி.அ.ஜோதிலிங்கம், அ.ரவி, குருபரன், பின்னாளில் சரவணன், பாரதிமோகன் சி.செ.ராஜா ஆகியோருக்கும் மற்றும் நண்பர்களான கேசவன், இளம்சரோஜினி, ரமேஷ், ரேவதி, எஸ்.பிரியதர்சினி, ஆர்.பிரியதர்சினி, ரவிவர்மன், நோர்பேட், சில்வெஸ்டர் ஆகியோருக்கும், குறிப்பாக பத்திரிகை தொடராக வந்த காலத்தில் அதற்குரிய படங்களைத் தேடி எடுத்து அழகுற வடிவமைப்புச் செய்து வந்தவரும், நண்பனும் ஓவியனும், கவிஞனுமான ரஷ்மிக்கும் இந்நூலுக்கான முகப்பு அட்டைக்கான புகைப்படத்தை தந்துதவியவரும், சரிநிகர் சக ஆசிரியர்களுள் ஒருவராக இருந்தவரும், கவிஞருமான நண்பர் எம்.கே.எம்.ஷகீப்பிற்கும் எனது நன்றிகளைக் கூற நான் கடப்பாடுடையேன்.

சரிநிகரை சேர்ந்தவர்கள் என்றாலும், ஆரம்பகால பிரதம ஆசிரியராக இருந்தவரும், நூல் தொடராக வந்த காலத்தில் அதுபற்றி அக்கறையுடன் என்னுடன் உரையாடி, மொழிபெயர்ப்புத் தொடர்பாகத் தனது கருத்துகளைக் கூறி உதவி, நூலுருப் பெறுமுன்பாக பிரதியை முழுமையாக பார்த்து ஆலோசனை கூறி முன்னுரையும் எழுதித் தந்த நண்பர் கவிஞர் சேரனுக்கும், எப்போதும் எனது எழுத்துக்களை அது எழுதப்படும் போதே படித்து அபிப்பிராயம் கூறி என்னை எழுத ஊக்குவித்தவரும், இந்நூலை அச்சுக்குப் போகுமுன்பாக முழுமையாகப் பார்த்து செப்பனிட உதவியவரும் இன்றைய சரிநிகர் ஆசிரியருமான நண்பன் சிவகுமாருக்கும், என் எழுத்துக்களை எப்போதும் ஆர்வத்துடன் படித்து அபிப்பிராயம் கூறி என்னை எழுதத் தூண்டிக் கொண்டிருக்கும் நண்பனும், கவிஞனுமான இந்திரனுக்கும் (தேவஅபிரா) தனியாக நன்றி கூறுவது அவசியமாகும். இது வெறும் முகமன் அல்ல. இவர்கள் இல்லாவிட்டால் இந்நூல் புத்தகமாக வெளியிடப்பட வேண்டும் என்ற உணர்வு என்னுள் தோற்றியிருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை.



இறுதியாக, இந்நூலை எப்படியாவது நூல் வடிவில் கொண்டு வந்து விடவேண்டும் என்ற ஆர்வத்துடனும் தன்னுடைய சொந்த நூல் ஒன்றைக் கொணர்வது போன்ற அக்கறையுடனும் வெளிக் கொணர்வதில் கடுமையாக உழைத்த என் அன்பு நண்பரும் மூன்றாவது மனிதன் ஆசிரியருமான பௌசருக்கும் எனது நன்றியைச் சொல்லியாக வேண்டும். புத்தகங்கள் எழுதப்படுவதுடன் எழுத்தாளரின் பணி முடிவடைந்து விடலாம். ஆனால் அந்த எழுத்தால் ஒரு சிறிதளவு பயனாவது வரவேண்டுமாயின் அவை நூலுருப் பெற்றே ஆக வேண்டும். இந்நோக்குடன் பல தரமான, இன்றைய தமிழ் சூழலுக்கு அவசியமான புத்தகங்களை நேர்த்தியாகவும், அழகாகவும் வெளியிட்டு வரும் நண்பர் பௌசர் அவர்களின் விடா முயற்சி இல்லை என்றால் இன்று இந்த நூலை நாம் கையில் வைத்திருக்கும் வாய்ப்பேற்பட்டிருக்காது. மூன்றாவது மனிதன் வெளியீடாக இந்நால் வெளிவருவதில் நான் பெருமகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

எஸ்.கே.விக்னேஸ்வரன்

152/6, றோயல் பேர்ள் காடின்ஸ்
அல்விஸ் ரவுண் றோட்,
வத்தளை
தொலைபேசி: 943268
தொலைமடல்: arasi@sltnet.lk
ஜுன் 19, 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே...!

## சரிநிகரில் வெளியான அறிமுகக் குறிப்பு

டொக்டர் ஹெயிம் ஜி ஜினோட் அவர்களது உலகப் பிரசித்தி பெற்ற 'குழந்தைகளின் உளவியலைப் புரிந்து கொள்வதனை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்ட 'Between Parents and Child' என்ற நூலை நன்றியுடன் மொழிபெயர்த்துத் தருகிறோம். குழந்தைகளின் உளவியலைப் புரிந்து கொள்ளத் தவறுகின்ற பல இளம் பெற்றோர் தமது குழந்தைகளின் உள்ளத்துள் மறைந்திருக்கும் அபூர்வங்களைக் காணத் தவறி விடுகின்றனர். இதன் காரணமாக, தம்மை அறியாமல் குழந்தைகளின் எதிர்காலத்தையே பாழடித்து விடுகின்ற பெற்றோர்களும் உண்டு.

டொக்டர் ஹெயிமின் நூல் தமிழில் இது வரை வந்த சிறுவர் உளவியல் நூல்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறந்த நடைமுறை உதாரணங்களைக் கொண்ட காத்திரமான படைப்பாகும்.

டொக்டர் தனது முன்னுரையில் இவ்வாறு எழுதுகிறார்: "எந்தவொரு பெற்றோரும், அதிகாலையில் விழித்தெழும் போதே, தமது குழந்தையின் அன்றைய பொழுதை மோசமாக்கி விடும் நோக்குடன் விழித்தெழுவதில்லை. 'இன்றைக்கு எனது குழந்தையைத் திட்ட வேண்டும், குற்றம் குறை பிடிக்க வேண்டும், அவமானப்படுத்த வேண்டும்' என்று எதிர்பார்ப்பதில்லை. திட்டல், வாக்குவாதம், சண்டை எதுவுமே இன்று இருக்கக் கூடாது என்பதே அவர்களது காலைநேரத்து விருப்பமாக இருக்கிறது. ஆனால் இவ்வளவு நல்ல விருப்பங்கள் இருக்கும் போதே, எப்படியோ சண்டை வெடித்து விடுகிறது. மீண்டுமொருமுறை, நாம் சொல்ல விரும்பாத சொற்களை, நாமே விரும்பாத தொனியில் உச்சரித்து விடுகிறோம்."

"எல்லாப் பெற்றோர்களும் தமது குழந்தைகள் சந்தோசமாகவும், பாதுகாப்பாகவும் இருப்பதையே விரும்புகின்றனர். ஒருவரும் தமது குழந்தை பயந்த சுபாவமுள்ளதாக, வெட்கப்படுவதாக, யோசனை அற்றுச் செயல்படுவதாக, அருவருப்பூட்டுவதாக இருப்பதை விரும்புவதில்லை. ஆயினும், அவர்களது வளர்ச்சிப் படிமுறையினூடாக பெரும்பாலான குழந்தைகள் சகிக்க முடியாத பழக்கங்களைக் கொண்டவர்களாகவும், பாதுகாப்புப் பற்றிய உணர்வு அற்றவர்களாகவும், தம்மையோ பிறரையோ மதிக்கும் பண்பற்றவர்களாகவும் உருவாகி விடுகிறார்கள். நாம் சிறுவர்கள் அமைதியானவர்களாக இருப்பதை விரும்புகிறோம், ஆனால் அவர்களோ மோசமானவர்களாக இருக்கிறார்கள். நாம் அவர்கள் தற்றுணிச்சல் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என விரும்புகிறோம், அவர்களோ பயந்த சுபாவமுள்ளவர்களாக இருக்கிறார்கள். நாம் அவர்கள் சந்தோசமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம், அவர்களோ அப்படி இருப்பதில்லை."

"இந்த நூலின் நோக்கம், பெற்றோர்களுக்கு, குழந்தைகள் தொடர்பான தமது இலட்சியங்கள் என்ன என்பதைப் புரிந்து கொள்ள உதவுவதும், அந்த இலட்சியங்களை அடைய வேண்டிய ஆலோசனைகளைப் பரிந்துரை செய்வதும் ஆகும். பெற்றோர்கள் பல ஸ்தூலமான பிரச்சினைகளுக்கு, விடை காணப்பட வேண்டிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் 'குழந்தையிடம் அதிகமாக அன்பு காட்டுங்கள், அவர்களின் மீது மேலும் கவனிப்பை வழங்குங்கள்" என்பன போன்ற ஆலோசனைகள் இப்பிரச்சினைக்கு போதிய பதிலை வழங்குவதில்லை."

"கடந்த 15 ஆண்டுகளாக, இந்நூலின் ஆசிரியர் பெற்றோர்களுடனும் சிறுவர்களுடனும் தனிநபராகவோ, குழுக்களாகவோ, வழிகாட்டியாகவோ, உளவியலாளராகவோ, சேர்ந்து பழகியுள்ளார். அந்த அனுபவத்தின் பயன் தான் இந்த நூல். இந்நூல் ஒரு நடைமுறை வழிகாட்டி. இது பெற்றோருக்கு ஏற்படும் நாளாந்தப் பிரச்சினைகட்கும் உளவியற் சிக்கல்கட்கும் உரிய ஸ்தூலமான பதில்களைப் பிரேரிக்கிறது. குறிப்பிட்ட சில ஆலோசனைகளை இந்த நூல் வழங்கும் அதேவேளை சிறுவர்களுடன் வாழும் பெற்றோர்கட்கு அவர்கள் தமது குழந்தைகளுடன் பரஸ்பர மதிப்புடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான அடிப்படைக் கோட்பாடுகளையும் தருகிறது."

இது வாசகர்கட்கு மிகவும் பயன்தரும் ஒன்றாக அமையும் என்று நம்புகிறோம்.

சரிநிகர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...... பக்கம்


1. குழந்தைகளுடன் உரையாடுதல் 01

2. பாராட்டுதலும் விமர்சித்தலும்: புதிய வழிமுறைகள் 16

3. சுய தோல்வியைத் தரக் கூடிய மாதிரிகளைத் தவிர்த்தல் 28

4. பொறுப்புணர்வும் சுதந்திரமும் 37

5. கட்டுப்பாட்டொழுங்கு: அனுமதிக்கக் கூடிய அளவும் அதன் எல்லையும் 54

6. குழந்தையின் வாழ்வில் ஒரு நாள் 68

7. பொறாமை 77

8. குழந்தைகளின் பரபரப்புக்கான சில ஏதுக்கள் 87

9. பாலியற் கல்வி 97

10. பாலியற் பாத்திரமும் சமூகச் செயற்பாடும் 112

11. நிபுணத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள் 121

12. நிபுணத்துவ உதவி தேவைப்படும் பெற்றோர் 135

பின்னுரை 144


# 1. குழந்தைகளுடன் உரையாடுதல்

## குழந்தைகளின் கேள்விகளில் மறைந்திருக்கும் அர்த்தங்கள்

குழந்தைகளுடன் உரையாடுவது ஒரு தனிக்கலை. அதற்கு அதற்கே உரிய சட்ட திட்டங்களும், அர்த்தங்களும் உண்டு. குழந்தைகள் பெரும்பாலும் தமது உரையாடல்களின் போதும், அபிப்பிராயங்களைத் தெரிவிக்கையிலும் மிகவும் சாதுர்யமாகவே நடந்து கொள்கின்றனர். அவர்களது செய்திகள் பெரும்பாலும் பூடகமானவை: சங்கேதத் தன்மை வாய்ந்தவை: கவனமாக மொழி பெயர்க்கப்பட வேண்டியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்டி என்ற பத்துவயதுக் குழந்தை தனது தகப்பனிடம் இவ்வாறு கேட்டான்:
'ஹாலெம்' நகரில் உள்ள கைவிடப்பட்ட சிறுவர்களின் தொகை என்ன?'
-ஒரு இரசாயனவியலாளரும் புத்திஜீவியுமான தகப்பனாருக்கு அந்தக் கேள்வி மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது. சமூகப் பிரச்சினைகளில் தனது மகனுக்கு உள்ள அக்கறை அவருக்கு சந்தோசமூட்டியதில் வியப்பில்லை. அவர், மகனுக்கு அது தொடர்பாக நீண்ட விளக்கம் ஒன்றை அளித்து விட்டு அவனை நோக்கினார். ஆனால் அவனோ, திருப்தியுற்றவனாகத் தெரியவில்லை. அதே விடயம் தொடர்பாக அவன் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தான். 'நியூயோர்க் நகரத்தில் எத்தனை குழந்தைகள்?', 'முழு அமெரிக்காவிலும் எத்தனை பேர்,' 'முழு உலகத்திலும்.....?'

இறுதியில் தான் தனது மகனுடைய அக்கறை ஒன்றும் சமூகம் பற்றியதல்ல. தனிப்பட்ட ஒன்று என்று புரிந்தது தகப்பானருக்கு. கைவிடப்பட்ட சிறுவர்கள் மீதான அனுதாபத்தின் காரணமாக அவன் அந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. அவனது கேள்வி 'நானும் கைவிடப்பட்ட சிறுவர்களில் ஒருவனாகி விடுவேனோ' என்ற அச்சத்திலிருந்து எழுந்தது. அவன் எதிர்பார்த்தது; கைவிடப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை அல்ல. உண்மையில், தானும் கைவிடப்பட்ட சிறுவர்களில் ஒருவனாகி விடமாட்டேன் என்பதை உறுதி செய்து கொள்வதே அவனது நோக்கமாக இருந்தது.

ப்ரூஸ், ஐந்து வயதுச் சிறுவன். அவன் முதன் முதலாக பாலர் பள்ளிக்குப் போயிருந்த போது, கூட வந்திருந்த அம்மாவிடம் அங்கிருந்த சுவரில் வரையப்பட்டிருந்த ஓவியங்களைச் சுட்டிக்காட்டி இவ்வாறு கேட்டான்:
'யார் இந்த அசிங்கமான படங்களை வரைந்தது?'
தாயாருக்குத் தர்மசங்கடமாகிப் போய் விட்டது. அவள் மகனை அப்படிப் பேசக்கூடாது. என்று கண்டிப்பது போலப் பார்த்தபடி மெதுவாகக் கிசுகிசுத்தாள்:
'இவ்வளவு அழகான படங்களை அசிங்கம் என்று சொல்வது சரியல்ல.'

ஆனால் ஆசிரியருக்கு அவனது கேள்வியின் அர்த்தம் புரிந்து விட்டது. அவர் புன்னகைத்தபடியே சொன்னார்: 'நீங்கள் இங்கே அழகான படங்களைத் தான் வரைய வேண்டுமென்றில்லை. உங்களுக்கு விருப்பமானபடி நீங்கள் வரையலாம்...'
ப்ரூஸின் முகத்தில் பெரிய புன்னகை ஒன்று தோன்றியது. அவனுக்கு, அவனது மனத்தில் புதைந்திருந்த கேள்விக்குரிய பதில் இப்போது கிடைத்து விட்டது: 'ஒரு சிறுவன் அழகாக படங்களை வரையாவிட்டால் என்ன நடக்கும்?'

அடுத்ததாக ப்ரூஸ் அங்கிருந்த ஒரு உடைந்த விளையாட்டுத் தீயணைக்கும் இயந்திரத்தை எடுத்து நேரடியாகவே கேட்டான்.
'இதை உடைத்தது யார்?'
'இதை யார் உடைத்திருந்தால் தான் என்ன? இங்கு இருப்பவர்கள் எவரையும் தான் உனக்குத் தெரியாதே ஏன் தான் இப்படிக் கேட்கிறாய்?'
உண்மையில் ப்ரூஸின் நோக்கம் பெயர்களை அறிவதல்ல. அவனுடைய நோக்கமெல்லாம் விளையாட்டுப் பொருட்களை உடைப்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பது தான். கேள்வியைப் புரிந்து கொண்ட ஆசிரியர் சரியான பதிலைத் தந்தார்.



'விளையாட்டுப் பொருட்கள் விளையாடுவதற்குத் தானே? அவை சிலவேளைகளில் உடையும், இது நடக்கக் கூடிய ஒன்று தானே.'
ப்ரூஸ் திருப்தியாகத் தலையாட்டினான். அவனது கேள்வி கேட்கும் திறமை அவனுக்கு தேவையான தகவலைப் பெற்றுத் தந்தது.
'இந்தப் பெரியவர் (ஆசிரியர்) நல்லவர். இவர் விரைவில் கோபமடைய மாட்டார். ஒரு படம் மோசமாக வரையப்பட்டாலோ ஒரு விளையாட்டுப் பொருள் உடைந்தாலோ அவர் கோபமடையப் போவதில்லை. நான் பயப்பட வேண்டியதில்லை. இங்கே தங்குவதில் எந்தப் பயமும் இல்லை!'
ப்ரூஸ் தாயாருக்குக் கைகாட்டிவிட்டு தனது பாலர் பாடசாலையின் முதல் நாளை ஆரம்பிக்கத் தொடங்கினான்.

கரோல் பன்னிரண்டு வயதுச் சிறுமி. அவள் மிகவும் வேதனையடைந்தவளாக, கண்ணீர் மல்க நின்றிருந்தாள். அவளது விருப்பத்திற்குரிய மைத்துனி அவளை விட்டுவிட்டு கோடைகால விடுமுறைக்காக தனது வீட்டுக்கு போகப் போகிறாள்.
கரோல்: (கண்ணீர் மல்க): சுசி போகப்போகிறாள். நான் திரும்பவும் தனிமையில் இருக்கப்போகிறேன்.

தாய்: உனக்கு இன்னொரு சினேகிதி கிடைப்பாள்.
கரோல்: நான் சரியாக தவிச்சுப் போவேன்.
தாய்: உனக்கு அது பழகிப் போய் விடும்.
கரோல்: ஓ...... அம்மா (அழுகிறாள்)
தாய்: உனக்கு பன்னிரண்டு வயதாகி விட்டது. இன்னும் ஒரு அழுகுணிப் பாப்பாவாக இருக்கிறாய்.
கரோல் தாயை முறைத்துப் பார்த்து விட்டு தனது அறைக்குள் ஓடிப் போய், கதவை மூடிக் கொண்டாள்.

இந்தச் சம்பவம் ஒரு சந்தோசமான முடிவுக்கு வந்திருக்க முடியும். ஒரு குழந்தையின் உணர்வு எமக்கு அது ஒன்றும் முக்கியத்துவம் அல்லாததாக இருப்பினும் கூட மிகவும் காத்திரமான அக்கறைக்குரிய ஒன்றாகக் கருதப்பட வேண்டும். கோடைகால விடுமுறைப்பிரிவு ஒரு தாயின் கண்ணில் அழுது கவலைப்படுமளவுக்கு முக்கியமற்ற சின்ன விடயமாக இருக்கலாம். ஆனால் அதற்காக தாய் காட்ட வேண்டிய அனுதாபம் சிறியதாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

'கரோல் சரியான கவலையாக இருக்கிறாள். அவளைக் கவலைப்படுத்துவது என்ன என்பதை நான் விளங்கிக் கொள்கிறேன்.' என்று காட்டுவதன் மூலம் அவளுக்கு என்னால் உதவ முடியும் என்று தாய் நினைத்திருந்தால் இப்படிக் கூறியிருக்க முடியும்:
"சுசி இல்லாமல் தனிமையாக இருக்கும் என்ன?"
"உனக்கு அவளில்லாதது சரியான கவலையாக இருக்கும் என்ன?"
"ஒன்றாக இருந்த ஒருவரைப் பிரிந்து இருப்பது என்பது கஷ்டமான ஒன்று தான்...."
"அவள் இல்லாவிட்டால் உனக்கு வீடே வெறிச்சென்று இருக்கும் என்ன?"
இத்தகைய அணுகுமுறை பெற்றோருக்கும் குழந்தைகட்கும் இடையில் அன்னியோன்யத்தை வளர்க்கும். குழந்தை தனது கவலை புரிந்து கொள்ளப்படுவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரும் பட்சத்தில் அதன் துயரம் இல்லாது போய்விடும். ஏனென்றால் அவர்கள் விளங்கிக் கொள்ளப்படுகிறார்கள். தாய் மீதான அவர்களது அன்பும் இதனால் ஆழமாகிறது. ஏனென்றால் அவள் விளங்கிக் கொள்கிறாள். தாயின் அனுதாபம் உணர்வு பூர்வமான முறையில் அவர்களது ஆளுமையைத் தட்டிக் கொடுக்கிறது.

## பயனற்ற உரையாடல்கள்

குழந்தைகளுடனான உரையாடலின் போது பெற்றோர்கள் சலித்துப் போகின்றார்கள். ஏனென்றால், அந்த உரையாடல்கள் அவர்களுக்கு எந்தத் தகவல்களையும் தருவதில்லை. இந்தப் புகழ் பெற்ற உரையாடலைப் பாருங்கள்:

"எங்கே போனாய்?"
"வெளியே"
"என்ன செய்தாய்?"
"ஒன்றுமில்லை"

தாம் நியாயமானவர்களாக இருக்க விரும்பும் பெற்றோர்கள் விரைவிலேயே இத்தகைய உரையாடல்கள் எவ்வளவுக்குக் களைப்பூட்டுபவை என்பதைக் கண்டு கொள்வார்கள். ஒரு தாய் சொல்கிறாள்: "நான் எனது முகம் கறுத்துப் போகும் அளவுக்கு எனது பிள்ளையுடன் நியாயமாக நடந்து கொள்ள முயல்கிறேன். ஆனால், அது என்னைக் கவனிப்பதே இல்லை. நான் அழும் போது மட்டும் தான் நான் சொல்வதை அது கேட்கிறது..."

குழந்தைகள் பெற்றோர்களுடனான உரையாடல்களை பெரும்பாலும் எதிர்க்கிறார்கள். அவர்கள் போதனை செய்யப்படுவதை, ஏதாவது சொல்லப்பட்டுக் கொண்டே இருப்பதை, விமர்சிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். அவர்கள், பெற்றோர்கள் தேவைக்கதிகமாகப் பேசுவதாக உணர்கிறார்கள்.

எட்டு வயது டேவிட் தனது தாயிடம் கேட்கிறான்: "நான் ஒரு சின்னக் கேள்வி கேட்டால் ஏன் இப்படி நீண்ட பதிலைச் சொல்கிறீர்கள். தனது நண்பர்களுக்கு அவன் இப்படிச் சொல்வான்: "நான் அவளுடன் கதைக்கத் தொடங்கினாலோ....ஐயோ எனக்குப் பிறகு விளையாடவே நேரமிருக்காது!"

ஒரு குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையிலான உரையாடலைக் கூர்ந்து கவனித்தால் ஒருவர் மீது ஒருவர் ஆச்சரியத்துக்குரிய விதத்தில் எவ்வளவு தூரம் அக்கறையுள்ளவர்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டு கொள்ளலாம். அவர்களுக்கிடையேயான உரையாடல் தமக்குத் தாமே பேசிக் கொள்வது போன்று இருக்கும். ஒருவரது பேச்சு விமர்சனங்களையும் அறிவுறுத்தல்களையும் கொண்டதாகவும், மற்றவரது மறுப்பும் ஒப்புக்கொடுத்தலுமாக அந்த நாடக வசனங்கள் அமைந்திருக்கும். இத்தகைய உரையாடல்களின் துயரம் என்னவென்றால், அவை அன்பு இன்மையால் வருபவை அல்ல. மாறாக ஒருவரை ஒருவர் கௌரவிக்காமையால் வருகின்றன. அறியாமையால் வருபவை அல்ல, மாறாக தேர்ச்சியின்மையால் வருபவை என்பது தான்.



நமது நாளாந்த பாவனையிலுள்ள மொழி குழந்தைகளுடன் பயனுள்ள விதத்தில் தொடர்பாடப் போதுமானதல்ல. குழந்தைகளை நெருங்கிச் செல்லவும், பெற்றோர்களது மனக் கவலையைக் குறைக்கவும் நாம் புதிய ஒரு வழியைக் கையாள வேண்டும் புதிய முறையில் அவர்களுடன் உரையாட வேண்டும்.

## தொடர்பாடலுக்கான புதிய ஒழுக்க நெறி

குழந்தைகளுடனான புதிய தொடர்பாடல் ஒழுக்கநெறி தேர்ச்சியினையும், கௌரவித்தலையும், அடிப்படையாகக் கொண்டது. இது தகவல்கள் குழந்தைகளதும் பெற்றோர்களதும் சுய கௌரவத்தைப் பேணுவதாக அமைவதையும், அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும்விட புரிந்துணர்வை வெளிப் படுத்துவதையும் கோரி நிற்கிறது.

எரிக் - வயது ஒன்பது - கடும் கோபத்துடன் வீட்டுக்கு வந்தான். அவனது வகுப்பு அன்று ஒரு சுற்றுலா போக ஏற்பாடாகியிருந்தது. ஆனால் அதை மழை வந்து குழப்பி விட்டது. தாய் ஒரு புதிய அணுகு முறையை கையாள்வது என்று தீர்மானித்தாள். கடந்த கால அணுகுமுறைகள் மோசமாக்கவே செய்தன என்பதால் அவற்றைத் தவிர்க்கவே அவள் விரும்பினாள்: "மழையினால் நின்று போன சுற்றுலாவுக்காக அழுவதில் பயனில்லை", "இப்படியான சந்தோசங்களுக்கு இன்னுமொரு நாள் வரும் தானே", "மழையை நானா வரச் செய்தேன்... ... உனக்குத் தெரியும் தானே... ... அப்ப ஏன் என் மீது ஆத்திரப்படுகிறாய்," இது அவளது கடந்த கால அணுகுமுறை.

அவளுடைய புதிய அணுகுமுறை இப்படியிருந்தது. தாயார் தனக்குள் சொல்லிக் கொண்டாள்: "இன்றைய சுற்றுலா குழம்பியது மகனை மிகவும் பாதித்துள்ளது. இவன் ஏமாற்றமடைந்து போய் இருக்கிறான். தனது ஏமாற்றத்தை என் மீது கோபிப்பதன் மூலம் பகிர்ந்து கொள்கிறான். அவனுக்கு அவனது உணர்ச்சிகளைக் கொண்டிருக்க உரிமையிருக்கிறது. அவனது உணர்வுகளை கௌரவிக்கவும், அவற்றைப் புரிந்து கொள்ளவும் செய்கிறேன் என்று காட்டுவதன் மூலம் அவனுக்கு என்னால் உதவ முடியும்."

எரிக்கிடம் அவள் சொன்னாள்:
தாய்: உனக்கு சரியான ஏமாற்றமாகப் போய் விட்டது என்ன?
எரிக்: ஓம்... ... நிறைய... ...
தாய்: நீ எல்லாத்தையும் தயார் பண்ணி இருக்க இந்த பாழாய்ப் போன மழை வந்து கெடுத்து விட்டது... ...
எரிக்: ஓம்...... அதுதானே... ...
சில கணம் எரிக் மௌனமாக இருந்தான். பிறகு தானாகவே சொன்னான். "ம்... ... பரவாயில்லை... ... இன்னொரு நாள் வராமலா போகப் போகிறது... ..."
அவனது கவலை மறைந்து போய் விட்டது. அன்று மாலை முழுவதும் அவன் மிகவும் இயல்பாகவே இருந்தான். வழமையாக எரிக் கோபத்துடன் வரும் போது அந்த வீடு இரண்டு பட்டு விடும். அவன் அந்த வீட்டினுள் ஒவ்வொருவரையும் ஏதாவது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தை வைத்துச் சீண்டிக் கொண்டேயிருப்பான். நடைசியாக அவன் களைத்துப் போய் தூங்கும் வரை, அங்கு அமைதியே இருக்காது.

இந்த அணுகுமுறையில் அப்படி என்னதான் சிறப்பம்சம் இருந்தது? இதிலிருந்த பயன்மிக்க பகுதிகள் தான் என்ன?

ஒரு குழந்தை தீவிரமான உணாவுகளால் பாதிக்கப்பட்டிருக்கும் போது அது ஒருவரையும் கணக்கெடுக்க மாட்டாது. அது புத்திமதியையோ, சமாதானத்தையோ, ஆக்கபூர்வமான விமர்சனத்தையோ ஏற்றுக்கொள்ளத் தயாராக இராது. தனது மனதில் தான் அனுபவித்துக் கொண்டிருக்கும் அவஸ்தைகள் தான் அதை முழுமையாக தெரிவிக்காமலேயே, பிறரால் விளங்கிக் கொள்ளப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறது. தனது உணர்வுகளில் ஒரு பகுதியை மட்டும் வெளியிட்டுவிட்டு மற்றவற்றை நாம் ஊகித்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.
ஒரு குழந்தை எம்மிடம் 'இன்று ஆசிரியர் எனக்கு அடித்து விட்டார்' என்று சொல்லும் போது, நாம் அது தொடர்பாக மேலதிக விபரங்களைக் கேட்கக் கூடாது. அது மட்டுமல்ல, 'நீ என்ன செய்தாய்... ...? உன்னை ஆசிரியர் அடித்தார் என்றால், நீ ஏதாவது செய்திருக்க வேண்டும். என்ன செய்தாய்? என்று கூறுதலும் கூடாது. நாம் அது அடிக்கப்பட்டதற்காக கவலைப்படுவதாக சொல்வதும் கூட (Sorry) தேவையற்றது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அதன் உணர்வுகளை, கவலையை, அதனது அந்தரமான நிலையை, வெட்கத்தை, பழிவாங்கும் ஆத்திரத்தை எல்லாம் புரிந்து கொள்வதாகக் காட்ட வேண்டும். அதனது உணர்வுகளை எப்படி நாம் அறிவது? அதைக் கவனிப்பது, அது பேசுவதைக் கேட்பது என்பதன் மூலமாகத் தான். அத்துடன் எமது சொந்த உணர்வுகளையும் வெளிப்படுத்த வேண்டும். தனது சகாக்கள் மத்தியில் அவமானப்படுகின்ற ஒரு குழந்தை எப்படி உணரும் என்பதை நாம் அறிவோம். எனவே, அதன் உணர்வை நாம் புரிந்து கொண்டுள்ளோம் என்று காட்டக்கூடிய விதத்தில் நாம் பேச வேண்டும். கீழ்வரும் ஏதாவது ஒரு வசனம் இதற்குப் பொருத்தமானது.

'இது ஒரு பயங்கரமான, அந்தரமான ஒன்றாக இருந்திருக்கும்'
'அது உனக்கு பயங்கர ஆத்திரத்தைக் கொடுத்திருக்கும்'
'அந்த நேரத்தில் அந்த ஆசிரியர் மீது உனக்கு பயங்கர வெறுப்பு ஏற்பட்டிருக்கும்'
'இது உனது உணர்வுகளைப் பயங்கரமாகத் தாக்கியிருக்கும்'
'இன்றைக்கு உனக்கு ஏதோ ஒரு கூடாத நாள் போல'
ஒரு குழந்தைக்கு 'நீ அப்படி கருதுவது சரியல்ல' என்று கூறுவதன் மூலம் அதன் ஆழமான உணர்வுகளை இல்லாமலாக்கிவிட முடியாது. அல்லது 'அப்படி நினைப்பதற்கு அங்கே ஒன்றும் இல்லை' என்று கூறுவதும் அப்படியே தான். ஆழமான மனப்பதிவுகளை விரட்டி இல்லாமல் செய்துவிட முடியாது. அவற்றின் அழுத்தங்கள் மற்றவர்களால் தாம். அனுதாபத்துடன் புரிந்து கொள்ளப்படுகிறோம் என்று தெரியும் போது கொஞ்சம் கொஞ்சமாக முனை மழுங்கிக் குறைந்து போகின்றன.
இது குழந்தைகட்கு மட்டுமல்ல, பெரியோர்களுக்கும் கூடப் பொருத்தமானது. ஒருசில பெற்றோர்கள் மத்தியில் நடந்த கலந்துரையாடலிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்வரும் பகுதி இதைத் தெளிவாகக் காட்டுகிறது.



தலைவர்: ஒரு காலை நேரம் என்று எடுத்துக் கொள்வோம். அன்றைக்கு எல்லாம் மோசமாக நடக்கின்றன. டெலிபோன் அடிக்கிறது. குழந்தை அழுகிறது. நீங்கள் கவனிக்கு முன்னரே அடுப்பிலிருந்த உணவு கருகி விடுகிறது. உங்களது கணவர் இதைக் கண்டு விட்டுக் கேட்கிறார்: 'கடவுளே நீ எப்ப தான் சாப்பாட்டை கருக்காமல் சமைக்கப் பழகப் போகிறாயோ?' உங்களது எதிர்வினை என்ன?
திருமதி அ: சாப்பாட்டை தூக்கி அவரது முகத்தில் வீசி எறிவேன்.
திருமதி ஆ: உன்ரை சாப்பாட்டை நீயே சமைத்துத் தின்னேன்' என்று சொல்லுவேன்.
திருமதி இ: இது என்னைச் சரியாகப் பாதிக்கும். நான் அழுவேன்.
தலைவர்: உங்களது கணவரின் சொற்கள் உங்களிடம் எத்தகைய உணர்வுகளை ஏற்படுத்தியிருக்கும்?
பெற்றோர்கள்: கோபம், வெறுப்பு மனக்கசப்பு... ...
தலைவர்: உங்களால் இன்னொரு தடவை சமைக்க முடியுமா?
திருமதி அ: இல்லை. அன்று முழுவதுமே பாழ் தான்.
தலைவர்: உதாரணமாக, அதே நிலைமை. சாப்பாடு கருகுகிறது. உங்கள் கணவர் நிலைமையை அவதானித்துவிட்டு சொல்கிறார்: 'ஓ.... அன்பே.... இன்றைக்கு உனக்கு நல்லாத் தான் விடிஞ்சிருக்கு.... முதல் குழந்தை, பிறகு டெலிபோன்... ... இப்ப சாப்பாடு...'
திருமதி அ:என்னுடைய கணவன் அப்படிச் சொன்னாலோ... நான் செத்தே போவேன்.
திருமதி ஆ: ஆ...... எவ்வளவு சந்தோசமாக இருக்கும்.
திருமதி இ: என்னுடைய சந்தோசத்தில் கட்டிப்பிடித்து ஒரு முத்தம் கொடுத்து விடுவேன்.
தலைவர்: ஏன்... ...? குழந்தை இன்னமும் அழுகிறது... ... சாப்பாடு கருகிவிட்டது... அப்படியிருந்துமா?
பெற்றோர்கள்: அது ஒன்றும் பிரச்சினையில்லை.
தலைவர்: அப்ப எது நிலைமையை மாற்றுகிறது?.
திருமதி ஆ: அவர் என்னோடு நிற்கிறார். அவர் என்னை விமர்சிக்கவில்லை. அவர் எனக்கு எதிராக இல்லை என்பது சந்தோசத்தையும் நன்றியுணர்வையும் ஏற்படுத்தும்.
தலைவர்: இப்போது, உங்கள் கணவர் வீட்டை விட்டுப் போனதும், உங்களுக்கு வீட்டைத் துப்புரவாக்குவது சிரமமாக இருக்காதா?
திருமதி இ: இல்லை. நான் அதை உல்லாசமாக பாடியபடியே செய்வேன்.
தலைவர்: இப்போது ஒரு மூன்றாவது வகை கணவனைப் பற்றி சொல்லப் போகிறேன். எரிந்து போன சாப்பாட்டை பார்த்து விட்டு அவர் மிகவும் அமைதியாகச் சொல்கிறார்: 'பார் அன்பே...... நான் எப்படி சமைப்பது என்று உனக்கு காட்டித் தருகிறேன்.
திருமதி அ: இவன் முதலாமவனை விட மோசமானவன். இவன் எங்களை முட்டாளாக நினைக்கிறான்.

தலைவர்: இப்போது இந்த மூன்று அணுகுமுறைகளும் எப்படி நாம் குழந்தைகளை அணுவதில் பயன்படுகிறது என்று கவனிப்போம்.
திருமதி அ: எனக்கு நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று தெரிகிறது. நான் எப்போதும் எனது மகனுக்கு இப்படிச் சொல்லுவேன். 'இதையெல்லாம் தெரிந்து வைத்திருக்க வேண்டிய வயது உனக்கு வந்து விட்டது! உனக்கு இதைச் செய்யத் தெரிய வேண்டும்' என்று சொல்லுவேன். இது அவனுக்கு கோபத்தை ஊட்டுகிறது. இது வழமையாக நடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி ஆ: நான் எப்போதும் மகனுக்கு சொல்லுவேன். 'பொறு மகன், இதை எப்படி செய்வது என்று நான் சொல்லித் தருகிறேன்.'
திருமதி இ: நான் பெரும்பாலும் விமர்சிக்கப்பட்டுப் பழகி அதுவே எனது இயல்பாகி விட்டது. எனது அம்மா எனக்கு எதிராகச் சொன்ன அதே வார்த்தைகளை நான் எனது பிள்ளைகட்கும் சொல்கிறேன். இதற்காக எனது அம்மாவை நான் வெறுக்கிறேன். நான் ஒரு போதும் எதையும் சரியாகச் செய்ததில்லை. அம்மா தான் என்னைச் செய்ய வைத்தார்.
தலைவர்: இப்போது அதே வேலையை உங்கள் மகளுக்கு செய்கிறீர்கள்.
திருமதி இ: ஆம். ஆனால் எனக்கு இது பிடிக்கவில்லை. நான் அப்படிச் செய்யும் போது என்னையே எனக்குப் பிடிக்கவில்லை.
தலைவர்: அதாவது உங்கள் குழந்தைகளுடன் பேச புதிய வழிகளைத் தேடுகிறீர்கள்.
திருமதி இ: ஆம், நிச்சயமாக.
தலைவர்: இந்த எரிந்த சாப்பாட்டுக் கதையிலிருந்து நாம் என்னென்னத்தைக் கற்றுக் கொள்ளலாம் என்று பார்ப்போம். நாம் விரும்புபவர்களது உணர்வுகளை மாற்றுவதில் உதவியது என்ன?
திருமதி ஆ: அதாவது யாராவது உங்களைப் புரிந்து கொள்கிறார்கள் என்பது.
திருமதி அ: அதாவது உங்களை எப்படித் திருத்திக் கொள்வது என்று ஆலோசனை கூறாமல் புரிந்து கொள்வது.
இந்த உதாரணம் சொற்களின் பலத்தை உணர்த்துகிறது. சந்தோசத்தையோ, சச்சரவையோ அவை ஏற்படுத்தக் கூடியன. சக்தி வாய்ந்தவை என்பதை இதன் மூலம் நாம் காணலாம். இந்தக் கதையின் அடிநாதம் என்னவென்றால் எமது எதிர்வினைகள் (சொற்களும், உணர்வுகளும்) ஒரு எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்தவும் எமது இல்லத்தில் அமைதியை உருவாக்கவும் வல்லன என்பதே.

## சம்பவங்களிலிருந்து உறவுக்கு

ஒரு குழந்தை ஒரு சம்பவம் பற்றிச் சொல்லும் போது, அல்லது கேட்கும் போது, அனேகமான சந்தர்ப்பங்களில் அச்சம்பவங்களைவிட, அச்சம்பவங்களின் மூலமாக மறைமுகமாக எதிர்பார்க்கப்படும் உறவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே சிறப்பானதாக இருக்கிறது. இந்த உதாரணத்தைப் பாருங்கள்.

ஃபுளோரா தனது சகோதரனை விட தனக்குக் குறைவான பரிசுப் பொருட்களே கிடைக்கின்றன என்று தாயாரிடம் குறைப்பட்டுக் கொண்டாள். அவளுக்கு வயது ஆறு. தாயார் இந்தக் குற்றச்சாட்டை மறுக்கவில்லை. அவளது சகோதரன் வயது கூடியவன் என்பதால் அதிகளவு பரிசைப் பெறும் தகுதி அவனுக்கு உண்டு என்று குறிப்பிடவும் இல்லை. அது மட்டுமல்ல, இந்தப் பிழையை தான் திருத்தி விடப் போவதாகக் கூறவும் இல்லை. குழந்தைகள் பரிசுப் பொருட்களின் அளவையும் தொகையையும் விட பெற்றோர்களுடனான தமது உறவின் ஆழம் குறித்தே அதிகம் அக்கறையுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது அவளுக்குத் தெரியும். அவள் 'உங்களுக்கும் நிறைய பரிசுகள் தேவையா?' என்று கேட்டாள். அதற்கு மேல் எதுவும் பேசாமல் ஃபுளோராவை



அணைத்துக் கொண்டாள். மகளோ ஒருவகை ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் இந்தச் செயலை ஏற்றுக் கொண்டாள். நீண்ட முடிவேயற்ற விவாதங்களுக்கு இட்டுச் சென்றிருக்கக் கூடிய ஒரு உரையாடல் எவ்வளவு இலகுவாக முடிந்து விட்டது?

## சம்பவங்களிலிருந்து உணர்வுகட்கு

ஒரு குழந்தை ஒரு சம்பவம் பற்றிச் சொல்லும் போது அந்தச் சம்பவத்தை விட அச்சம்பவத்தைச் சூழவுள்ள உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது சில வேளைகளில் மிகவும் பயன்மிக்கதாக இருக்கும்.
ஏழு வயதான குளோரியா வீட்டுக்கு மிகுந்த கவலையுடன் வந்தாள். தனது சிநேகிதி டோரி மழை நீர் நிரம்பிய வாய்க்காலுள் பையன்களால் எவ்வாறு தள்ளி வீழ்த்தப்பட்டாள் என்று தனது தாயாரிடம் அவள் தெரிவித்தாள். அது தொடர்பான மேலதிக விபரங்களைக் கேட்பதற்குப் பதில் தாயார் தனது மகளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, இப்படித் தெரிவித்தாள்:
'அதைச் செய்த பையன்கள் மீது உங்களுக்கு சரியான கோபமாக இருக்கும் என்ன?'
'இன்னமும் அவர்கள் மீது உங்களுக்கு கோபமாக இருக்கும் என்ன'?
-இந்த வசனங்கள் ஒவ்வொன்றிற்கும் குளோரியா 'ஆம், ஆம்' என்று மனக் கிளர்ச்சியுடன் பதிலளித்துக் கொண்டிருந்தாள்.
'அவர்கள் இதே வேலையை உங்களுக்கும் செய்வார்களோ என்று உங்களுக்கு பயமாக இருந்ததா?'
குளோரியா உறுதியாகச் சொன்னாள்:
'செய்யட்டும் பார்ப்பம். அவையளையும் சேர்த்து இழுத்துக் கொண்டு தான் நான் விழுவேன். அது அவையளையும் தோய வைத்து விடும்' அவள் சொல்லும் போதே பலமாகச் சிரித்தாள். அவளது மனதில் அவர்களை இழுத்துக் கொண்டு தான் விழுவதும் படமாக ஓடியிருக்க வேண்டும். தேவையற்ற புத்திமதிகளுக்கும், பாதுகாப்பு அறிவுரைகளுக்கும் இட்டுச் சென்றிருக்கக் கூடிய ஒரு உரையாடல் இவ்வாறு சந்தோசமாக முடிவுற்றது.
ஒரு குழந்தை தனது நண்பன் அல்லது ஆசிரியர் பற்றிய குற்றச்சாட்டுக்களுடன் வீட்டுக்கு வரும் போது, அதன் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது முக்கியமாகும். தகவல்களை விசாரித்து சம்பவத்தைப் புரிந்து கொள்ள முயல்வது ஒன்றும் அவ்வளவு முக்கியமானதல்ல. பத்துவயது ஹெரால்ட் சிணுங்கிக் கொண்டு குற்றம் சாட்டியபடியே வீட்டுக்கு வந்தான்.

ஹெரால்ட்: என்ன வாழ்க்கை இது, வீட்டு வேலையை மறந்து போனேன் என்று சொன்னதற்காக ரீச்சர் என்னை ஒரு பொய்யன் என்று சொல்லி விட்டார். அவர் என்னைத் திட்டினார். கடவுளே! திட்டினது மட்டுமல்லாமல், உங்களுக்கு ஒரு கடிதம் எழுதப் போவதாகவும் சொன்னார்.
தாய்: அப்ப உங்களுக்கு இன்றைய நாள் ஒரு கஷ்டமான நாளாகப் போய் விட்டது என்ன?
ஹெரால்ட்: அப்பிடிச் சொல்லுங்கோ அம்மா.
தாய்: எல்லாப் பிள்ளைகளுக்கும் முன்னால் பொய்யன் என்று திட்டு வாங்கியது ரொம்பவும் வெட்கமானதாக இருந்திருக்கும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெரால்ட்: ஓம்... ... ஓம்... ... சரியான வெட்கம்.
தாய்: அவளுக்கு ஏதாவது நடக்க வேண்டும் என்று நீங்கள் உங்களுக்குள் நினைத்திருப்பீர்கள் என்ன?
ஹெரால்ட்: ஓம். நினைத்தேன்... ஆனால் அது எப்படி உங்களுக்குத் தெரியும்?
தாய்: அப்பிடித்தான் நாங்கள் எல்லோரும் எங்களை யாராவது கவலைப்படுத்தும் போது நினைக்கிறோம்.
ஹெரால்ட்: அது ஒரு வகையான அமைதிக்காக...

## பொதுவானதிலிருந்து குறிப்பானதற்கு

ஒரு குழந்தை தன்னைப் பற்றி ஒரு அபிப்பிராயம் சொல்லும் போது, அதை ஒப்புக் கொண்டோ, மறுத்தலித்தோ பேசுவதை விட, குழந்தை தனது எதிர்பார்ப்புக்கு மேலாகவே அதை விளங்கிக் கொள்ளக் கூடிய விதத்தில் விபரமாகப் பேசுவது பயனுள்ளதாக இருக்கும். உதாரணமாக ஒரு குழந்தை தனது 'கணக்குப் பாடத்தில் நான் சரியான வீக்' என்று கூறும் போது, ஓம்... உனக்கு கணக்கு என்றால் கஷ்டம் தான் என்று சொல்வதோ, அதன் அபிப்பிராயத்தை மறுதலிப்பதோ, அல்லது கொஞ்சம் கவனமாகப் படித்தால் உன்னால் நன்றாக செய்ய முடியும் என்பன போன்ற வெற்று ஆலோசனைகளை வழங்குவதோ எந்தப் பயனுமற்றவை. இத்தகைய 'உதவிகள்' குழந்தையின் சுய மரியாதையைப் பாதிப்பதுடன், இத்தகைய உடனடி அறிவுறுத்தல்கள் குழந்தையின் மனவுறுதியையும் குறைக்கும்.

நான் கணக்குப் பாடத்தில் சரியான வீக்' என்ற கூற்றைப் புரிந்துணர்வுடனும் ஆதரவுடனும் எதிர்கொள்ள முடியும். கீழ்வரும் ஏதோதொரு வசனம் இதைச் செய்யும்:
'கணக்கு ஒன்றும் லேசான பாடம் அல்ல'
'சில கணக்குகள் செய்யக் கஷ்டமானவை தான்'
'ஆசிரியர் அதை இலகுபடுத்துவதில்லை. அவர் உங்களை விமர்சிப்பதிலேயே காலத்தைக் கடத்தி விடுகிறார்'.
'அவர் உன்னை நீயே ஒரு முட்டாள் என்று எண்ண வைப்பார்'
'சோதனை இதைவிட மோசமாக இருக்கும்.'
'ஃபெயில் ஆகுவதைப்பற்றி அதிகமாக கவலைப்படுகிறாய் போல'
'நாங்கள் என்ன நினைப்போமோ என்று கவலைப்படுகிறாய் போல'
'எங்களுக்கு ஏமாற்றமாய் போய்விடும் என்று பயப்படுகிறாய் போ'
'எங்களுக்குத் தெரியும் சில பாடங்கள் கஷ்டமானவை தான் என்று'
எங்களுக்கு நம்பிக்கை இருக்கு: நீ உனக்கு ஏலுமானளவுக்கு செய்வாய் என்று'

ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுவன். தான் பரீட்சையில் தோல்வியுற்ற பெறுபேற்று அறிக்கை (Progress Report)யுடன் வீட்டுக்கு வந்த போது, இம்மாதிரியான புரிந்துணர்வுடன் தகப்பன் தன்னுடன் பேசியதைப் பற்றிக் குறிப்பிடுகையில் அந்தக் கணம் நான் செத்தே போய் விட்டேன் என்றான். அவனது உள்மனதின் பதிவு இவ்வாறு இருந்தது.
'நான் எப்படியாவது எனது அப்பாவின் நம்பிக்கைக்கு ஏற்ற விதத்தில் நடக்க வேண்டும்.'
இருந்தாற் போல அனேகமாக எல்லாப் பெற்றோர்களும் தமது பிள்ளைகள் 'நான் ஒரு முட்டாள' என்று சொல்வதைக் கேட்டிருப்பார்கள்: தமது மகன் அல்லது மகள்



ஒரு போதும் முட்டாளாக இருக்க முடியாது என்று கருதும் பெற்றோர்கள், தமது பிள்ளை முட்டாள் அல்ல புத்திசாலி என்று ஏற்றுக் கொள்ள வைக்கப் பிரயாசைப் படுவார்கள். இந்த உரையாடலைப் பாருங்கள்:
மகன்: நான் ஒரு முட்டள்.
தகப்பன்: இல்லை, நீ ஒரு முட்டாள் அல்ல.
மகன்: இல்லை, நான் ஒரு முட்டாள் தான்.
தகப்பன்: இல்லை, நீ முட்டாள் அல்ல. யோசித்துப்பார், முகாமில் நீ எவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தாய்? அந்த முகாம் பொறுப்பாளர் உங்களை சிறந்த புத்திசாலியாகவே கருதினார்.
மகன்: உங்களுக்கு எப்படி அவர் கருத்துத் தெரியும்.
தகப்பன்: அவர் எனக்குச் சொன்னார்.
மகன்: அப்படியானால் ஏன் அவர் எப்போதும் என்னை முட்டாள் என்றே திட்டிக் கொண்டிருந்தார்.
தகப்பன்: அவர் வேடிக்கைக்குச் சொல்லியிருப்பார்.
மகன்: நான் முட்டாள் தான். எனக்கு அது தெரியும். இதோ எனது பாடசாலைப் பெறுபேறுகளைப் பாருங்கள்.
தகப்பன்: நீ கொஞ்சம் கஷ்டப்பட்டு உழைத்தால் சரி.
மகன்: நான் நன்றாகக் கஷ்டப்பட்டு வேலை செய்கிறேன். ஆனாலும் எந்தப் பயனும் இல்லை. எனக்கு மூளையே இல்லை.
தகப்பன்: நீ புத்திசாலி தான் எனக்குத் தெரியும்.
மகன்: இல்லை. நான் முட்டாள் தான். எனக்குத் தெரியும்.
தகப்பன்: (பலமாக) நீ முட்டாள் அல்ல.
மகன்: நான் முட்டாள்.
தகப்பன்: இல்லை. இல்லை. இல்லை... ... ஒரு பிள்ளை தன்னை முட்டாள் என்றோ அசிங்கமானவன் என்றோ குறிப்படும் போது எமக்கு அதன் சுய மதிப்பீட்டை உடனடியாக மாற்றுவதற்காக சொல்லவோ, செயலாற்றவோ ஒன்றுமே இல்லை. தன்னைப் பற்றிய ஒருவரது சுய மதிப்பீட்டை மாற்றுவதற்கான நேரடி முயற்சிகளை எவருமே எதிர்பார்க்கத் தான் செய்வார்கள். ஒரு சிறுவன் சொன்னான், அப்பா உங்கள் நல்லெண்ணம் எனக்குப் புரிகிறது. ஆனாலும் நீங்கள் சொல்லும் அளவுக்கு நான் ஒன்றும் புத்திசாலியல்ல"

ஒரு பிள்ளை தன்னைப்பற்றி எதிர்மறையான ஒரு பார்வையை கொண்டிருக்கும் போது எமது மறுப்போ, எதிர்ப்போ, எந்தப் பயனும் தரப்போவதில்லை. அவர்கள் வெறுமனே தமது அபிப்பிராயத்தை உறுதியாக வெளிப்படுத்துகிறார்கள் என்பதால், நாம் செய்யக் கூடிய பெரிய உதவி அவர்களை நாம் புரிந்து கொள்வதாகக் காட்டுவது மட்டுமே, அவர்களது பொதுவான உணர்வை மட்டும் அல்ல, அவற்றின் தாக்கங்களையும் நாம் புரிந்து கொள்வதாகக் காட்டுவது மட்டுமே. பாருங்கள்:
மகன்: நான் ஒரு முட்டாள்.
தகப்பன்: (மிகுந்த அக்கறையுடன்) நீ உண்மையில் அப்படித்தான் நினைக்கிறாயா? உன்னைக் கெட்டிக்காரன் என்று நீ நினைக்கவில்லையா?
மகன்: இல்லை.
தகப்பன்: அப்ப இதற்காக நீ உனக்குள் நிறையக் கவலைப்படுகிறாய்... ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன்: ஆம்.
தகப்பன்: பள்ளிக்கூடத்தில் நீ நிறைய நேரம் பயந்து கொண்டே இருக்கிறாய்... ... பரீட்சையில் தோல்வியுறுவேன் என்று பயப்படுகிறாய்... ... குறைந்த புள்ளிகளே விழும் என்று நினைக்கிறாய்... ... ஆசிரியர் கூப்பிடும் போது உனக்கு குழப்பம் ஏற்பட்டு விடுகிறது... ... உனக்கு விடை சரியாகத் தெரிந்தாலும் கூட அது அந்த நேரத்தில் நினைவுக்கு வருவதில்லை... ... உனது வார்த்தைகள் பயனற்றவையாக இருக்குமோ என்றும், இதைக் கேட்டால் ஆசிரியர் திட்டுவாரோ என்றும் பயப்படுகிறாய்... ... இதனால் பல தடவைகளில் எதுவும் பேசாமல் இருக்கவே நீ விரும்புகிறாய்... ...நான் நினைக்கிறேன், எப்போதோ ஒரு தடவை நீ ஏதாவது பேசப்போக முழு மாணவர்களும் சிரித்திருக்கிறார்கள். இது உனக்கு உன்னை முட்டாளாக உணர வைக்கிறது. கவலையும் ஆத்திரமும் வருகிறது. (இந்த இடத்தில் பிள்ளை தனது அனுபவங்களில் ஒன்றைச் சொல்லக் கூடும்.)
தகப்பன்: பார் மகன்... ...எனது பார்வையில் நீ சிறந்தவனாக இருக்கிறாய். ஆனால் உனக்கு உன்னைப் பற்றி வேறு அபிப்பிராயம் இருக்கிறது.
இந்த உரையாடல் அச்சிறுவனது மனதில் இருக்கும் தன்னைப் பற்றிய மதிப்பீட்டை உடன் மாற்றாது போகலாம். ஆனால் அந்த மதிப்பீடு பற்றிய ஒரு சந்தேக விதையை இது நிச்சயமாக விதைக்கத் தான் செய்யும். 'எனது தகப்பனார் என்னைப் புரிந்து கொள்ளவும் நான் ஒரு நல்ல பையன் என்று கருதவும் செய்கிறார். சிலவேளை நான் அவ்வளவுக்கு மோசமானவனாக இல்லையோ!' என்று அவன் தனக்குள் நினைக்கலாம். இத்தகைய உரையாடல்களின் அன்னியோன்னியம் ஒரு மகனுக்கு, தகப்பனது எதிர்பார்ப்புக்கேற்ப தான் வாழ வேண்டும் என்ற ஒரு உந்துதலைக் கொடுக்கக்கூடும்.

ஒரு குழந்தை 'எனக்கு ஒரு போதும் அதிர்ஷ்டம் கிட்டுவதில்லை' என்று சொல்லுகிறதென்று வைத்துக் கொள்வோம். எந்த ஒரு விவாதமோ, விளக்கமோ இந்த நம்பிக்கையைப் போக்க உதவப் போவதில்லை. அந்தக் குழந்தைக்கு அதிர்ஷ்டம் வாய்த்த ஒரு சம்பவத்தை நாம் சொல்லும் போது, அது தனக்கு துரதிர்ஷ்டம் வாய்த்த இரண்டு சம்பவங்களையாவது திருப்பிச் சொல்லிக் கொண்டே இருக்கும். நாம் செய்ய வேண்டியதெல்லாம், நாம் எவ்வளவு ஆதரவுடன் அதன் உணர்வுகளைப் புரிந்து கொள்கிறோம் என்று காட்டுவது தான்'
இந்த உரையாடலைப் பாருங்கள்:
மகன்: நான் ஒரு அதிர்ஷ்டம் கெட்டவன். எனக்கு ஒரு போதும் அதிர்ஷ்டம் கிட்டுவதேயில்லை.
தாய்: நீ உண்மையாகவே அப்படி நினைக்கிறாய் தானா?
மகன்: ஓம்... ...
தாய்: அப்ப நீ விளையாடும் நேரமெல்லாம் எனக்கு அதிர்ஷ்டமில்லை. நான் தோற்கப் போகிறேன் என்று நினைப்பாயா?
மகன்: அதே தான் அதையே தான் நான் நினைக்கிறேன்.
தாய்: பள்ளிக்கூடத்தில், ஏதாவது கேள்விக்கு விடை உனக்குத் தெரிந்திருந்தால் அன்றைக்கு ரீச்சர் உன்னிடம் கேள்வி கேட்கவே மாட்டார் என்று நினைப்பாயா?
மகன்: ஓம்... ...
தாய்: ஆனால் தப்பித் தவறி நீ வீட்டு வேலையைச் செய்யாமல் விட்டிருந்தாலோ அன்றைக்குப் பார்த்து ரீச்சர் உன்னைக் கூப்பிடுவார் என்று நினைக்கிறாய் ... ...



மகன்: ஓம்.
தாய்: இப்படி உனக்கு நிறைய நடந்திருக்கும் என்று நினைக்கிறேன்.
மகன்: ஓம்... ... ஒரு நாள் (மகன் சில உதாரணங்களைச் சொல்லத் தொடங்குகிறான்)
தாய்: நீ அதிர்ஷ்டம் பற்றி என்ன நினைக்கிறாய் என்று கேட்க எனக்கு நல்ல விருப்பமாக இருக்கிறது. ஏதாவது நடந்தால் ஒன்று அதிர்ஷ்டம் அல்லது துரதிர்ஷ்டம் என்று நினைக்கிறாய்... ... சொல்லு... ... இதைப்பற்றி நாங்கள் பேசுவோம்... ...
இத்தகைய உரையாடல்கள் குழந்தைகளின் அதிர்ஷ்டம் குறித்த நம்பிக்கையைப் போக்காமல் இருக்கலாம். ஆனால், தான் ஒரு புரிந்துணர்வுள்ள தாயைக் கொண்டிருப்பது எவ்வளவு அதிர்ஷ்டம் என்ற செய்தியை இது நிச்சயம் அவனுக்குக் கொடுக்கவே செய்யும்.

குழந்தைகள் எம்மை நேசிக்கும் அதேவேளை எதிர்க்கவும் செய்கிறார்கள். அவர்கள் தம்மீது ஆதிக்கம் கொண்டவர்கள் மீது, உதாரணமாக பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் மீது இரண்டு விதமான உணர்வுகளையும் கொண்டுள்ளனர். பெற்றோர்களுக்கு இத்தகைய இரண்டு விதமான - ஒன்றுக்கொன்று நேரெதிரான மனோநிலைகளைக் கொண்டிருத்தலை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. இத்தகைய இரட்டை உணர்வைத் தாமும் கொண்டிருப்பதை அவர்கள் விரும்புவதும் இல்லை. குழந்தைகளிடம் இத்தன்மை இருப்பதை அவர்களால் சகிக்க முடிவதும் இல்லை.
ஆனால், எம்மிடையேயும் எமது குழந்தைகளிடையேயும் இத்தகைய இரண்டு விதமான போக்கு நிலவுவதை ஏற்றுக் கொள்ளுவதற்கு நாம் பயில வேண்டும். தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கமால் இருக்க வேண்டுமானால், குழந்தைகளின் இத்தகைய உணர்வுகள் சாதாரணமானவையும், இயற்கையானவையும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். குழந்தையின் இத்தகைய இரட்டைப் போக்கை ஏற்றுக் கொண்டு அதன் உணர்வுகளை வெளிப்படுத்த அனுமதிப்பதன் மூலம் அக்குழந்தையை தனது தவறை புரிந்து கொள்ள வைக்க முடியும்:
'உங்களுக்கு உங்களுடைய ஆசிரியர் பற்றி இரண்டு விதமான உணர்வுகள் ஏற்படுகின்றன. உங்களுக்கு அவரை பிடிக்கவும் செய்கிறது. அதேவேளை பிடிக்காமலும் போகிறது.'
'உனது அண்ணாவில் ஆசையாகவும் இருக்கிற அதே நேரம் எரிச்சலாகவும் இருக்கிறது. இரண்டு விதமான உணர்வுகள்... ... அவன் மீது'
'இதைச் செய்யவோ அதைச் செய்யவோ என்று இருக்கிறது. பாடசாலைக்குப் போகவும் விருப்பமாக இருக்கிறது: வீட்டில் நிற்கவும் ஆசையாக இருக்கிறது.
அவர்களது இரட்டைப் போக்கு குறித்த இவ்வாறான அமைதியான, விமர்சனம் எதுவும் அற்ற வார்த்தைகள் அவர்களுக்கு உதவியாக இருக்கும். ஏனென்றால் அது தமது குழம்பிய உணர்வுகள் கூட, ஒன்றும் புரிந்து கொள்ள முடியாதவை அல்ல என்பதை அவர்களுக்கு உணர்த்துகின்றன. அதேவேளை. இப்படியான வார்த்தைகள் நிச்சயமாக எந்தப் பயனும் அற்றவை:
'என்ன மகன்... ... நீ ஒரே குழப்பமாக உள்ளாய். ஒருகணம் நீ உனது நண்பனுடன் சந்தோஷமாக இருக்கிறாய். அடுத்த கணம் அவனுடன் சண்டை பிடிக்கிறாய்... ... இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்'
மனித யதார்த்தம் குறித்த தேர்ந்த அணுமுறைகள் இத்தகைய இரட்டைப் போக்கு நிலவுவது சாத்தியமே என்று கூறுகின்றன. அன்பும், வெறுப்பும் கலந்திருப்பதை, ஈடுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் அதேவேளை எதிர்ப்புணர்வும் இருப்பதை, அர்ப்பணிப்பும் சச்சரவும் ஒன்றாக கலந்திருப்பதையெல்லாம் சாத்தியமானவையே என்று கூறுகின்றன.

இத்தகைய ஒரு கருதுகோளை ஏற்றுக் கொள்வது என்பது இலகுவானதல்ல. எமது சிறுபராயப் பயிற்சியும், வளர்ந்த பின் நாம் பெற்றுக் கொண்டுள்ள கல்வி முறையும் ஒன்றுக்கொன்று எதிரான பார்வைகளைக் கொண்டிருப்பதை மறுதலிக்கின்றன. நாம் எதிர்மறையான உணர்வுகள் கூடாதவை என்றும் அவ்வாறு ஏற்படின் அவற்றையிட்டு வெட்கப்பட வேண்டும் என்றும் தான் பயிற்றப்பட்டிருக்கிறோம். ஆனால், புதிய விஞ்ஞான ரீதியான அணுகுமுறையானது, உண்மையில் செயல்களை மட்டுமே நல்லது அல்லது கெட்டது என்று கூற முடியும் என்கிறது. நினைவில் எழும்பும் உணர்வுகளை அல்ல. செயல்களை மட்டுமே பாராட்டவோ, இகழவோ முடியும். உணர்வுகளை அப்படிச் செய்ய முடியாது. முடியாது மட்டுமல்ல செய்யப்படவும் கூடாது. உணர்வுகளை மதிப்படுவதும், மனக்கிளர்வுகளை கட்டுப்படுத்த முனைவதும் சுதந்திரத்திலும் மன ஆரோக்கியத்திலும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்திவிடும்.

உணர்வுகள் எமது பரம்பரை அனுபவங்களின் ஒரு பகுதியாகும். மீன்கள் நீந்துகின்றன, பறவைகள் பறக்கின்றன, அவ்வாறே மக்கள் உணர்கின்றார்கள். சில வேளைகளில் நாம் மகிழ்ச்சியாக உள்ளோம். சில வேளைகளில் அப்படி இருப்பதில்லை. எமது வாழ்வில் சில சமயங்களில் கோபத்தையும் அச்சத்தையும், கவலையும், சந்தோஷத்தையும், பெருமிதத்தையும் குற்ற உணர்வையும், ஆசையையும், வெறுப்பையும் தித்திப்பையும் அருவருப்பையும் நிச்சயமாக உணரத்தான் செய்கிறோம். எம்முள் எழும் உணர்வுகளில் எந்தெந்த உணர்வுகள் எவ்வெப்போது எழவேண்டும் என்று எம்மால் தீர்மானிக்க முடியாவிட்டாலும் அவற்றை எப்படி, எப்போது வெளிப்படுத்துவது என்று எம்மால் தீர்மானிக்க முடியும். அவற்றை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்போமானால், அதுதான் பிரச்சினையின் முக்கியமான பகுதி. பலர் தமது உணர்வுகளைத் தவறாகப் புரிந்து கொள்ளும் விதத்திலேயே கல்வியூட்டப்பட்டுள்ளார்கள். அவர்கள் வெறுப்படையும் போது, அது வெறும் விருப்பின்மையே என்று அவர்களுக்கு சொல்லப்படுகிறது. அவர்கள் பயமுற்று இருக்கும் போது, பயப்படுவதற்கு ஒன்றுமில்லையென்று அவர்களுக்குக் கூறப்படுகிறது, அவர்கள் நோயினால் துயருறும் போது, துணிவாகவும் புன்னகைத்தபடியும் இருக்குமாறு கேட்கப்படுகிறார்கள். எமது பெரும்பாலான கவிதைகள் "துன்பம் வரும் போது சிரியுங்கள்' என்றே எமக்கு அறிவூட்டுகின்றன.

இதற்குப் பதிலாக என்ன செய்யப்பட வேண்டும்? எதைச் செய்யுமாறு பிரேரிக்கப்படுகிறது?

உண்மையை!

ஆம். உண்மை மட்டுமே உணர்வுகள் பற்றிய கல்வியானது குழந்தைகட்கு நாம் எதை உணர்கிறோம் என்பதை புரிந்து கொள்ள அவர்களுக்கு உதவுகிறது. ஒரு குழந்தையைப் பொறுத்தவரை அது எதனை உணர்கிறது என்று தெரிந்து கொள்வது, அதை ஏன் உணர்கிறது என்று புரிந்து கொள்வதை விடவும் மிகவும் முக்கியமானது. தனது உணர்வு என்ன என்பதை அது தெளிவாகப் புரிந்து கொள்ளுமானால், தான் தனக்குள்ளேயே குழப்பமாக இருப்பதாக அது உணரவேண்டிய தேவை குறைந்துவிடும்.



## தன் ஆளுமையைப் புரிந்து கொள்ள ஒரு கண்ணாடி

ஒரு குழந்தை தனது உணர்வுகளைப் புரிந்து கொள்ளவதில் எம்மால் எப்படி உதவ முடியும்? நாம் அது தன் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு கண்ணாடியாக செயற்படுவதன் மூலமாக இந்த உதவியைச் செய்ய முடியும். குழந்தை தனது உருவ அமைப்பை கண்ணாடியில் பார்த்துத் தெரிந்து கொள்கிறது. அவ்வாறே தனது உணர்வுகளை அதன் மீதான எமது பிரதிபலிப்புகளின் மூலமாக அதனால் உணர்ந்து கொள்ள முடியும்!

ஒரு கண்ணாடியின் செயற்பாடு என்ன? பொருளின் விம்பத்தை அப்படியே எந்த மாற்றமும் இல்லாமல் பிரதிபலிப்பது தானே? ஒரு கண்ணாடி எம்மைப் பார்த்து, 'நீ அழகற்றவனாக இருக்கிறாய்' உனது கண்கள் சிவந்து உள்ளன. மொத்தத்தில் நீ ஒரே அசிங்கமாக உள்ளாய், உன்னை நீ கொஞ்சம் ஒழுங்குப்படுத்திக் கொள்' என்று சொல்ல வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பது இல்லை. அப்படி அது சொல்லுமானால் அதை நாம் விரும்பப் போவதுமில்லை. அப்படி ஒரு மந்திரக் கண்ணாடி இருக்குமானால், ஒரு சில நாட்களில் அதை ஒரு தொற்று நோய் கிருமியைப் போல வெறுத்தொதுக்கி கண்டாலே ஒதுங்கிப் போய்விடுவோம். கண்ணாடியிடம் நாம் எதிர்பார்ப்பதெல்லாம் எமது பிரதி விம்பத்தை மட்டுமேயன்றி ஒரு போதனையை அல்ல. எமது விம்பம் எமக்கே பிடிக்காமல் இருக்கலாம். ஆயினும், நாம் எப்படி திருத்திக் கொள்வதென்பதை நாமே தீர்மானிக்க விரும்புவோம்.

ஒரு உணர்வுக் கண்ணாடியின் செயற்பாடு கூட அதுதான். எத்தகைய திரிபோ மாற்றமோ இல்லாமல் உணர்வுகளை அது பிரதிபலிக்க வேண்டும்.

'நீ மிகவும் கோபமாக இருக்கிறாய் போல் தெரிகிறது'

'நீ அவனை நன்றாக வெறுக்கிறாய் போலப் புரிகிறது'

'இந்த ஒழுங்குகள் உனக்கு அருவருப்பூட்டுகின்றன போலத் தெரிகிறது'

ஒரு குழந்தைக்கு இவ்வாறான உணர்வுகள் இருக்குமானால், இத்தகைய வசனங்கள் மிகவும் பயன் மிக்கவையாக அமையும். இவை அதற்கு தனது உணர்வுகள் என்ன என்பதைத் தெளிவாகக் காட்டும். முகக் கண்ணாடியில் பார்க்கும் போதோ, அல்லது உணர்வுக் கண்ணாடியில் பார்க்கும் போதோ குழந்தைக்குத் தன்னைப் பற்றிய ஒரு தெளிவான விம்பம் தெரியுமானால், அது போதும். குழந்தை தன்னைத் தானே சுயமாக விளங்கிக் கொண்டு, தன்னை மாற்றிக் கொள்வதற்கு அது பெரும் உதவியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2.பாராட்டுதலும் விமர்சித்தலும்: புதியவழிமுறைகள்

## பறந்த சாம்பற் தட்டு

அது ஒரு திங்கட் கிழமை. வாரமுடிவுக்கு பின்வந்த முதல் நாள். அதிகாலை நேரம். டெலிபோனில் ஒரு பெண்மணியின் குரல். மிகுந்த பரபப்புடன் அவள் பேசினாள். 'இதை எப்படி விளங்கப்படுத்தப் போகிறீர்கள்...? முடிந்தால் சொல்லுங்கள் பார்க்கலாம்... நாங்கள் காரிலே போய்க் கொண்டிருந்தோம். முழுக் குடும்பமும், பிறிஸ்பேக்கில் இருந்து நியூயோர்க் வரை. 400 கிலோ மீற்றர் தூரம் நாம் பயணம் செய்திருந்தோம். காரின் பின் சீற்றில் ஐவன் உட்கார்ந்தபடி வந்து கொண்டிருந்தான். எமது மூத்த மகன் அவன். மிகவும் அமைதியாகவும் ஆழ்ந்த சிந்தனையுடனும், எந்தவித குழப்படியுமில்லாமல் ஒரு அருமையான பிள்ளையாக அவன் வந்து கொண்டிருந்தான். நாங்கள் லிங்கோ குகையினுள் பிரவேசிக்கையில் அவனை நோக்கித் திரும்பினேன். அவன் இவ்வளவு தூரம் அமைதியாக வந்ததற்காக அவனைப் பாராட்ட வேண்டும் போல எனக்குத் தோன்றியது. நான் சொன்னேன். 'ஐவன் மிகவும் நல்ல பிள்ளையாக நடந்து கொண்டிருக்கிறாய்... உன்னைப் பார்க்க எனக்குப் பெருமையாக இருக்கிறது...'

சொல்லி 'ஒரு நிமிடம். ஒரே நிமிடம் தான். வானம் தலைகீழாய் புரண்டது! ஐவன் அங்கிருந்த சிகரட் சாம்பல் தட்டை (Ash tray) இழுத்து வீசினான். அதிலிருந்த சாம்பல் எரிந்த சிகரட் துண்டுகள் கார் முழுவதும் சிந்தின. குண்டு வெடித்து புகை எழுவது போல கார் முழுவதும் சிகரட் தூள் புகை கிளம்பியது. நாங்களோ குகைக்குள்ளே போய்க் கொண்டிருக்கிறோம். சரியான வாகன நெரிசலில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தோம். உண்மையில் அந்தக் கணமே அவனைக் கொன்று போட வேண்டும் போலிருந்தது. அந்த இடத்தில் எமது காரைச் சுற்றி வேறு வாகனங்கள் இல்லாமல் இருந்திருந்தால் நான் அவனைக் கொன்றே இருப்பேன். அவ்வளவு கோபம் எனக்கு. உண்மையில் எனக்கு மிகவும் கவலையாக இருந்தது என்னவென்றால், நான் அவனைப் பாராட்டிய போது அவன் இப்படி நடந்து கொண்டது தான். குழந்தைகளை இனிமேல் பாராட்டவே கூடாதா... ... என்ன சொல்கிறீர்கள்... ...?'

சில வாரங்களுக்குப் பிறகு ஐவன் தனது இந்தக் கொந்தளிப்புக்கான காரணத்தை விளக்கினான். வீட்டிலிருந்து காரில் புறப்பட்ட நேரத்திலிருந்து காரின் முன்சீற்றில் தகப்பனுக்கும் தாய்க்குமிடையே செல்லமாக உட்கார்ந்து வந்து கொண்டிருக்கும் தனது தம்பியை எப்படி இல்லாமல் செய்யலாம் என்று யோசித்துக் கொண்டே அவன் வந்தான். கடைசியாகத் தான் அவனுக்கு அந்த யோசனை தோன்றியது. தங்களது காரை சரிபாதியாக ஒரு பலாக்காயை வெட்டுவது போல பெரிய கத்தி ஒன்றினால் இரண்டாக வெட்டிப் பிளந்தால், அந்த வெட்டின் போது தம்பியும் இருதுண்டாக வெட்டப்பட்டு விடுவான். தகப்பனும் தாயும் தப்பி விடுவார்கள். இப்படி அவன் யோசித்துக் கொண்டிருக்கையில் தான் கார் குகைக்குள் நுழைந்து கொண்டிருந்ததும் தாயார் திரும்பிப்



பார்த்து அவனைப் புகழ்ந்ததும் நடந்தது. அந்தப் புகழ்ச்சி அவனைக் குற்ற உணர்வுக்குள்ளாக்கி விட்டது. இது அவனுக்கு, தான் அந்தப் புகழ்ச்சிக்கு உரியவன் அல்ல என்று எப்படியாவது காட்ட வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியது. அங்குமிங்கும் அவதிப்பட்டு நோக்கினான். கையில் அகப்பட்டது சிகரட் சாம்பல் தட்டுத் தான். அப்புறம் நடந்ததெல்லாம் தாய் விபரித்தவைகள்... ..

## பாராட்டுவது எதை?
## செய்கையையா அல்லது செய்தவரையா?

புகழ்ச்சி குழந்தைகளின் தற்றுணிச்சலையும் பாதுகாப்புணர்வையும் வளர்த்து விடுகின்றது என்று பலரும் நம்புகிறார்கள். ஆனால், நடைமுறையில் மன அதிர்ச்சியையும் தவறான நடவடிக்கைகளையும் கூட அது ஏற்படுத்தக் கூடும். ஏன் பெரும்பாலான குழந்தைகள் தமது குடும்ப அங்கத்தவர்கள் குறித்து சில வேளைகளில் மோசமான அழிவுத்தனமான விருப்பங்களை உடையவர்களாக இருப்பதுண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில், பெற்றோர்கள் 'நீ எவ்வளவு ஒரு நல்ல பிள்ளை' என்று சொல்லிப் புகழும் போது அந்தக் குழந்தையால் அதை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. ஏனென்றால், தன்னைப் பற்றிய அபிப்பிராயம் அதற்கு வேறானதாக இருக்கிறது. அதன் கண்களில் தான் ஒரு போதும் 'நல்லபிள்ளையாக இருக்க முடியாது என்று நினைக்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்தான் தனது தாயின் வாய்க்கு ஒரு ஷிப் (Zip) போட வேண்டுமென்றோ, தனது தமயன் அடுத்த சனி, ஞாயிறு விடுமுறையின் போது ஆஸ்பத்திரியில் இருந்தால் நல்லதென்றோ அது நினைத்திருக்கக் கூடும். உண்மையில் எவ்வளவுக்கு எவ்வளவு குழந்தை புகழப்படுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு தனது உண்மை வடிவைக் காட்டுவதற்காக துடுக்குத்தனமாக நடந்து கொள்கிறது. குழந்தை அதன் நல்ல செயல் ஒன்றுக்காக புகழப்பட்டதும், அந்தப் புகழ்ச்சியை உண்மையல்ல என்று நிரூபிப்பதற்காக செய்வது போல மோசமாக நடந்து கொள்கிறது. இவ்வாறு செயலில் காட்டுவது, தன்னைப் பற்றிய வெளியுலகின் அபிப்பிராயங்கள் குறித்த உடன்பாடின்மைகளை வெளிப்படுத்த குழந்தைகள் பயன்படுத்துகின்ற வழிமுறையாக இருக்கக்கூடும்.

இந்த உண்மை எதைக் காட்டுகிறது? புகழ்ச்சி தேவையில்லை. என்பதையா? இல்லை. மாறாக, இது காட்டுவதெல்லாம், புகழ்ச்சியானது. பென்சிலின் ஊசி மருந்தைப் போல, கவனமில்லாமல் செய்யப்படக் கூடாது என்பதைத் தான். சக்தி வாய்ந்த மருந்துகளைப் பயன்படுத்துவதற்கு பல விதிமுறைகளும், முன் எச்சரிக்கை ஒழுங்குகளும் இருக்கின்றன. நேர இடைவெளி, மருந்து கொடுக்கப்படும் அளவு, ஒவ்வாமை ஏற்படக்கூடிய வாய்ப்பு என்பன குறித்து இறுக்கமான விதிமுறைகள் உள்ளன. அவற்றில் மிக மிக முக்கியமான விதி தான் புகழ்ச்சி. எப்போதும் முயற்சியையும் செயலையும் பற்றியதாக வேண்டுமே, ஒழிய குழந்தையின் இயல்பு குறித்ததாகவோ அதன் ஆளுமை குறித்ததாகவோ இருக்கக் கூடாது என்பது. ஒரு சிறுவன் தோட்டத்தைச் சுத்தம் செய்திருந்தால், அவன் எவ்வளவு கடினமாக வேலை செய்துள்ளான். இப்போது இந்தத் தோட்டம் எவ்வளவு அழகாக இருக்கிறது என்பன போன்ற பாராட்டுகளை தெரிவிப்பது இயல்பானது. ஆனால், அவன் எவ்வளவு 'நல்லவன்' என்று கூறுவது ஒரு விதத்திலும் பொருத்தமில்லாத, சம்பந்தமில்லாத ஒரு பாராட்டாகும். புகழ்ச்சி வார்த்தை குழந்தைக்கு அதன் செயலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடியில் பார்ப்பது போன்ற ஒரு உண்மையான படத்தை ஏற்படுத்த வேண்டுமே ஒழிய, அதனது ஆளுமை குறித்த ஒரு தெளிவற்ற கற்பனைத் தன்மையை வழங்குவதாக இருக்கக் கூடாது.
கீழுள்ள உதாரணம் ஒரு பொருத்தமான புகழ்ச்சியைக் காட்டுகிறது:
ஜிம் - எட்டுவயதுச் சிறுவன். வீட்டின் பின் முற்றத்தை நன்றாகச் சுத்தம் செய்திருந்தான். இலை குழைகளைப் பொறுக்கி குப்பைகளை அகற்றியதுடன் அங்கிருந்த பொருட்களையும் புதிய ஒழுங்கில் அடுக்கியிருந்தான். தாயாருக்கு மிகவும் சந்தோஷம். அவனது முயற்சியையும் செயலையும் அவள் பாராட்டினாள்.
தாய்: முற்றம் எவ்வளவு அசிங்கமாக இருந்தது. இவ்வளவு அழகாக அதை சுத்தம் செய்ய முடியும் என்று நான் நினைக்கவே இல்லை.
ஜிம்: நான் செய்தேன்!
தாய்: அது ஒரே இலையும் குழையும் குப்பை குவியலுமாய்க் கிடந்தது.
ஜிம்: நான் எல்லாவற்றையும் சுத்தப்படுத்தினேன்.
தாய்: என்ன அருமையான வேலை.
ஜிம்: ஓம்... ... அருமையான வேலைதான்.
தாய்: இப்ப முற்றம் எவ்வளவு சுத்தமாக இருக்கிறது: பார்க்கச் சந்தோஷமாக இருக்கிறது.
ஜிம்: நல்லாயிருக்கு
தாய்: நன்றி, மகனே...
ஜிம்: (கொஞ்சம் பெரிய சிரிப்புடன்) நல்லது... ...

தாய் இவ்வுரையாடல் மூலம் அவனது வேலை குறித்து சந்தோஷப்படவும். அவன் செய்திருந்த நேர்த்தி குறித்து பெருமைப்படவும் செய்து விட்டாள். அன்றைய மாலை, தகப்பன் வீட்டுக்கு வந்ததும் அதை அவருக்குக் காட்டி தனது வேலையையும் அதன் நேர்த்தியையும் அவர் பாராட்டுவதையும் கேட்க வேண்டும் என்று நினைத்ததில் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. தான் ஒரு செயலைச் சிறப்பாகச் செய்ததற்கான பெருமையை தன்னுள் திரும்பவும் அனுபவிக்கவும் அவன் விரும்பினான்.
மாறாக அவனது ஆளுமை தொடர்பாக புகழ்ச்சியை வழங்கும் பின்வரும் சொற்கள் சொல்லப்பட்டால், அவை எந்தப் பயனையும் அளித்திருக்க மாட்டா.
'நீ எவ்வளவு ஒரு அருமையான பிள்ளை!'
'நீ உண்மையிலேயே அம்மாவின் செல்லக்குட்டி தான்'
'நீ இல்லாமல் அம்மாவுக்கு என்ன தான் செய்ய ஏலும்.'

இந்தப் புகழுரைகள் குழந்தையை மிரட்டி விடுவதுடன் ஒரு வகை அங்கலாய்ப்பையும் ஏற்படுத்திவிடக் கூடும். அது, தான் ஒன்றும் அருமையான பிள்ளையில்லை, இப்படியான ஒரு பெயருடன் தன்னால் இருக்க முடியாது என்று உணரவுங்கூடும். எனவே, இந்தப் பொய்யான நல்ல பெயர் எப்போதாவது உடைந்து தனது உண்மைச் சொரூபம் தெரிய வருமோ என்ற ஒரு வகையான அச்சத்துடன் அந்தகைய ஒரு நிலையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை விட, தனது மனச்சுமையை உடனே குறைக்க சுலபமான ஒரு வழியை அது தேடுகிறது. உடனே ஏதாவது துடுக்கான செயலில் ஈடுபடுகிறது.
ஒருவரது ஆளுமை குறித்து நேரடிப் புகழ்ச்சி, நேரடிச் சூரியஒளி போல அசௌகரியமானதும், கண்ணைக் குருடாக்குவதும் ஆகும். அற்புதமானவன். கண்ணியமானவன். அடக்கமானவன் போன்ற சொற்களால் ஒருவரைப் புகழும் போது



அவருக்கு அது தர்மசங்கடத்தையே கொடுக்கிறது. அவர் அதில் ஒரு பகுதியையாவது மறுத்துரைக்கவே விரும்புவார். பகிரங்கமாக எழுந்து நின்று 'நன்றி நீங்கள் கூறியவற்றை நான் ஒத்துக் கொள்கிறேன்' என்று கூறி அப்புகழுரையை ஏற்க முடியாது. தனிப்பட்ட முறையிலும் கூட, அவர் அப்புகழுரையை நிராகரிக்கவே செய்வார். தனக்குத் தானே கூட நேர்மையாக அவரால் 'நான் அற்புதமானவன்' என்று சொல்ல முடியாது.
அவர், புகழ்ச்சியை மறுப்பதுடன் மட்டுல்ல, தன்னைப் புகழ்பவர்கள் குறித்து ஒரு கணம் மீள்பரிசீலனை செய்யவும் செய்வார்: 'என்னை இவ்வளவு தூரம் சிறப்பாக நினைக்கிறார்கள் என்றால், அவர்கள் அவ்வளவு புத்திசாலிகளாக இல்லாமல் இருக்க வேண்டும்.'

## எமது சொற்களும் குழந்தைகளின் ஊகங்களும்

குழந்தைகளைப் புகழ்ந்துரைக்கும் போது நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். எமது புகழ்ச்சி அவர்களது தன்மை அல்லது இயல்பு அதாவது ஆளுமை பற்றியதாக இருப்பதற்குப் பதில், அவர்கள் செய்யும் முயற்சி, சாதனை என்பன பற்றியதாக அமைதல் வேண்டும். எங்களது அபிப்பிராயங்கள் மூலமாக குழந்தைகள் தாமே தம்மைப் பற்றி முடிவு செய்து கொள்ளும் வாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
இந்த உதாரணம் இதனைத் தெளிவாக விளக்குகிறது:
பத்து வயதுச் சிறுவனான கென்னி தங்கள் வீட்டின் நில அறையை ஒழுங்குபடுத்துவதில் தன் தகப்பனுக்கு உதவி செய்து கொண்டிருந்தான். அது கொஞ்சம் கடினமான வேலை தான். இந்த வேலையின் போது மிகவும் பாரமான தளபாடங்களை அவன் நகர்த்த வேண்டியிருந்தது. அவனது வேலையைக் கவனித்த தகப்பனார் சொன்னார்:
'அந்த மேசை மிகவும் பாரமான மேசை. அதை நகர்த்துவது சரியான கஷ்டம்.'
'ஆனால் நான் அதை நகர்த்தினேன்' என்றான் கென்னி பெருமையுடன்.
'அதை நகர்த்த சரியான பலம் தேவை' இது தகப்பன்.
கென்னி உற்சாகத்துடன் இவ்வாறு சொன்னான்:
'நான் நல்ல பலசாலி '

இந்த உதாரணத்தில் தகப்பன் அந்த வேலை எவ்வளவு கடினமானது என்பது பற்றியே பேசினார். கென்னி தானே தனது சொந்தப் பலத்தைப் பற்றி ஊகித்துக் கொண்டான். இதற்குப் பதிலாக தகப்பன் 'நீ நல்ல பலசாலி தான் மகன்' என்று சொல்லியிருந்தால் குழந்தையின் எதிர்வினை வேறாக இருந்திருக்கும். அது 'இல்லை. என்னைவிடப் பலமானவர்கள் எனது வகுப்பில் இருக்கிறார்கள்' என்று பதிலிறுத்திருக்கக் கூடும்.
இது ஒரு கசப்பான அல்லது பயனற்ற வாக்குவாதத்திற்குக் கூட இட்டுச் சென்றிருக்கக் கூடும்!

புகழ்ச்சி இரண்டு பகுதிகளைக் கொண்டது. குழந்தைகள் தாமே அதன் மூலம் ஊகித்து செய்து கொள்பவைகள். எங்களது சொற்கள் நாம் குழந்தையின் முயற்சி, வேலை, சாதனை, உதவி அல்லது படைப்பு என்பவற்றைப் பாராட்டுவதாக தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். நாம் சொல்லும் முறை மூலமாக குழந்தை தனது சொந்த ஆளுமை குறித்து ஒரு முடிவுக்கு தவிர்க்க முடியாமல் வருதல் வேண்டும். அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கேற்ற விதத்தில் நாம் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். நாம் எமது சொற்கள் என்ற மந்திரச் சுவரை எழுப்புவதன் மூலமாக குழந்தை தன்னைப் பற்றிய ஒரு நேர்ப்படியான (positive) சித்திரத்தை அதில் வரையும் நிலைக்கு நகர்த்த வேண்டும். கீழுள்ள உதாரணங்கள் இதை விளக்குகின்றன:

பயனுள்ள புகழ்ச்சி: 'அந்தக் காரை கழுவியதற்கு உங்களுக்கு நன்றி. அது இப்போது புதுக்கார் போல வந்து விட்டது.'

குழந்தை ஊகிக்கக்கூடிய முடிவு: 'நான் ஒரு நல்ல வேலை செய்திருக்கிறேன். எனது வேலை பாராட்டப்படுகிறது.'

(பயனற்ற புகழ்ச்சி: 'நீங்கள் அருமையான பிள்ளை')

பயனுள்ள புகழ்ச்சி: 'உங்களது வாழ்த்து மடல் எனக்கு நன்றாகப் பிடித்தது. அது மிகவும் அழகாகவும் உள்ளார்த்தம் பொதிந்த ஒன்றாகவும் இருந்தது.'

குழந்தை ஊகிக்கக் கூடிய முடிவு: 'எனக்கு நல்ல ரசனை இருக்கிறது. என்னுடைய தெரிவுகள் குறித்து நான் பயப்படத் தேவையில்லை.'

(பயனற்ற பாராட்டு: 'நீங்கள் எப்போதுமே நல்ல அக்கறையுள்ள ஒரு பிள்ளை தான்')

பயனுள்ள புகழ்ச்சி: 'உனது கவிதை எனது இதயத்துடன் பேசியது.'

ஊகிக்கக் கூடிய முடிவு: 'எனக்கும் கவிதை எழுத முடியும் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது.'

(பயனற்ற புகழ்ச்சி: 'உங்கள் வயதுக்கு நீங்கள் ஒரு கவிஞரே தான்')

பயனுள்ள புகழ்ச்சி:' நீ செய்திருக்கும் புத்தகப் பெட்டி மிகவும் அழகாக இருக்கிறது'

ஊகிக்கக் கூடிய முடிவு: 'நான் இவற்றை செய்யும் திறமை உடையவன் தான்.'

(பயனற்ற புகழ்ச்சி: 'நீ உண்மையிலேயே ஒரு நல்ல மரவேலையாள் தான்')

பயனுள்ள புகழ்ச்சி: 'உனது கடிதம் எனக்கு ரொம்பவும் சந்தோசத்தைக் கொடுத்தது.'

ஊகிக்கக் கூடிய முடிவு: 'என்னால் மற்றவர்களைச் சந்தோசப்படுத்த முடியும்.'

(பயனற்ற பாராட்டு: 'கடிதம் என்று வந்து விட்டால் நீ ஒரு அபார திறமைசாலி தான்!')

பயனுள்ள புகழ்ச்சி: 'பாத்திரங்களை நீ கழுவியது எனக்கு ரொம்பவும் உதவியாக இருந்தது... நல்ல சந்தோஷம் எனக்கு.'

ஊகிக்கக் கூடிய முடிவு: 'நான் பிறருக்கு உதவியாக இருக்கிறேன்.'

(பயனற்ற பாராட்டு: 'வேலைக்காரியை விட நன்றாகவே நீ செய்திருக்கிறாய்')

பயனுள்ள புகழ்சி: 'நான் உங்களுக்கு அதிகமாகத் தந்து விட்டேன் என்று சொன்னதற்கு நன்றி. நான் உங்கள் நடத்தையை மெச்சுகிறேன்.'

ஊகிக்கக் கூடிய முடிவு:' நான் நேர்மையாக நடந்து கொண்டதற்காக சந்தோசமாய் இருக்கிறேன்.'

(பயனற்ற புகழ்ச்சி:'நீங்கள் ஒரு நேர்மையான பிள்ளை')

பயனுள்ள புகழ்ச்சி: 'நீ எழுதியிருப்பது எனக்குப் பல சிந்தனைகளை ஏற்படுத்தியது.

ஊகிக்கக் கூடிய முடிவு: 'நான் ஒரு சுயமான படைப்பாளியாக இருக்க முடியும்.'

(பயனற்ற புகழ்ச்சி: 'உனது வகுப்புக்கு நீ எழுதி இருப்பது அபாரம். உண்மையில் நீ இன்னும் கற்பதற்கு நிறைய உண்டு!')

இத்தகைய கூற்றுகளும் அவை தொடர்பான குழந்தையின் நேர்ப்படியான முடிவுகளும் தான் மன ஆரோக்கியத்தினைக் கட்டியெழுப்புவதற்கான செங்கட்டிகள். எமது சொற்களை அடிப்படையாக வைத்து குழந்தை தான் என்ன முடிவை எடுக்கிறதோ



அதைப் பிறகு அது தனக்குள் திரும்பத் திரும்பச் சொல்கிறது. யதார்த்தபூர்வமான நேர்ப்படியான கூற்றுகள் தனக்குள்ளே திரும்பத் திரும்பச் சொல்லப்படும் போது ஒரு குழந்தை தன்னைப் பற்றியும், தன்னைச் சூழவுள்ள உலகத்தைப் பற்றியும் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொள்ள உதவுகிறது.

## விமர்சனம்: ஆக்க விமர்சனமும் அழிவு விமர்சனமும்

ஒரு விமர்சனம் எப்போது ஆக்கபூர்வமானதாய் அமைகிறது? எப்போது அழிவு பூர்வமானதாக அமைகிறது?

ஆக்க பூர்வ விமர்சனம், ஒரு விடயத்தை எப்படிச் செய்வது? எந்த விடயம் செய்யப்பட வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்வதுடன் நிறுத்திக் கொள்கிறது. குழந்தையின் சொந்த ஆளுமை குறித்து அது எந்த எதிர்ப்போக்கான கருத்தையும் சொல்வதில்லை. பத்து வயதான 'லாரி' கவனக் குறைவினால் கிளாசில் இருந்த பாலை சாப்பாட்டு மேசையில் கொட்டி விட்டான்.

தாய்: ஒரு கிளாசை எப்படிப் பிடித்திருப்பது என்பதைத் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்கு உனக்கு வயது வந்து விட்டது. எத்தனை தடவை நான் உனக்குச் சொல்லி விட்டேன். கவனமாக நடந்து கொள் என்று.

தகப்பன்: அவனுக்கு அது ஏலாது. அது ஒரு புத்தி கெட்டது. எப்பவும் அப்படித் தான் இருந்தது. இனியும் இருக்கப் போகுது.

லாரி ஊற்றியதோ ஒரு ஐந்து காசு பெறாத பால். ஆனால், அந்த விடயத்தைத் தொடர்ந்து வந்த கடுமையான அவமதிப்பு, குழந்தையின் தன்நம்பிக்கையில் ஏற்படுத்தும் பாதிப்பின் பெறுமதியோ இதைவிட எவ்வளவோ அதிகமானது. ஒரு பிழை நடக்கும் போது, பிழை செய்தவரது இயல்பு குறித்து விளங்கப்படுத்துவதற்குரிய தருணம் அதுவல்ல. ஒரு தவறு நடக்கும் போது அந்தத் தவறினைக் கையாளுவதே சிறப்பானது. தவறு செய்தவரைக் கையாளுவது அல்ல.

ஒரு குழந்தை தவறாக நடந்து கொள்ளும் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும்? இந்த உதாரணத்தைப் பாருங்கள்:

எட்டு வயதான மார்ட்டின் தவறுதலாக தன்னுடைய பாலை மேசை மீது ஊற்றி விட்டான். இதைத் தாய் கண்டு விட்டாள்:

' ஓ...பால் ஊத்துப்பட்டிட்டுது.' என்றவள், 'இதோ இன்னொரு கிளாஸ் பால் இருக்கிறது' என்று கூறியபடி துணியையும் பாலையும் கொடுக்கிறாள். மார்ட்டின் ஒரு வகையான ஆறுதலுடனும் சுயநம்பிக்கையுடனும் தாயைப் பார்க்கிறான். 'நன்றி அம்மா' என்று முணுமுணுக்கிறான். தாய் உதவி செய்ய மகன் மேசையைத் துடைக்கிறான். அவள் எந்தவிதமான, குழந்தையின் மனதை நோகச் செய்யும் அபிப்பிராயங்களையோ, பயனற்ற அறிவுரைகளையோ சொல்லவில்லை. அது தொடர்பாக பிறகு தாய் சொன்னது இதுதான்: எனக்கு 'அடுத்த தடவை கவனமாக இரு' என்றாவது சொல்ல வேண்டும் போலத்தான் இருந்தது. ஆனால் எனது மௌனத்தையிட்டு அவன் எவ்வளவு நன்றியுள்ளவனாக இருக்கிறான் என்பதைக் கண்ட போது நான் எதையும் சொல்லவில்லை. கடந்த காலம் முழுவதும் இத்தகைய கொட்டப்பட்ட பாலுக்காக கத்தியதில் கண்டதெல்லாம் அன்றைய முழு நாளையும் வீணாக்கியது மட்டும் தான்!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலைமைகள் எவ்வாறு மோசமடைகின்றன?

பெரும்பாலான குடும்பங்களில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான சச்சரவுகள் ஒழுங்காக முன் கூட்டியே எதிர்பார்க்கக் கூடிய விதத்தில் நடந்து வருகின்றன. குழந்தை ஏதாவது ஒரு 'பிழையான' விடயத்தைச் செய்யும் போதோ சொல்லும் போதே பெற்றோர்கள் இதற்குப் பதிலாக, அதை அவமதிக்கும் விதத்தில் ஏதாவது செய்கிறார்கள். குழந்தை இன்னும் மோசமான விதத்தில் பதிலளிக்கிறது. பெற்றோர்கள் இதற்கு உயர்ந்த ஸ்தாயியில் மிரட்டவோ, தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி தண்டனை வழங்கவோ செய்கிறார்கள்.

தாய்: 'அதை உடைக்கப் போகிறாய்... ... நீ எப்போதும் இப்படித்தான் பொருட்களை உடைக்கிறவன்.'
நத்தானியல்: 'இல்லை நான் உடைக்க மாட்டேன். (அவன் சொல்லும் போதே கோப்பை கீழே விழுந்து உடைந்து நொருங்குகிறது.)
தாய்: 'எத்தனை தடவை கத்திறது... நீ ஒரு முட்டாள்... வீட்டிலை உள்ள எல்லாச் சாமான்களையும் இப்படி உடைச்சுத் தள்ளிறாய்.

நந்தானியல்:'நீயும் ஒரு முட்டாள் தானே நீ மட்டும் அப்பாவின் 'ஷேவிங் ரேசரை' உடைக்கவில்லையா?
தாய்: 'நீ சரியான கெட்டவன். அம்மாவையே முட்டாள் என்று சொல்கிறாயா?'
நந்தானியல்: 'நீ தான் கெட்டவள். நீ தான் முதலில் என்னை முட்டாள் என்று சொன்னாய்.'
தாய்: 'மூடுவாயை... ... இனி ஒரு கதையும் கதைக்கப்படாது. போ உடனே உன்ர றூமுக்கு...'
நத்தானியல்: 'மாட்டேன் ஏலுமெண்டால் என்னை அனுப்பு பாப்பம்...'
தனது அதிகாரத்திற்கு ஏற்பட்ட இந்த நேரடிச் சவாலினால் தாய்க்கு ஆத்திரம் பொங்கி வர வெறி பிடித்தவள் போல மகனை இழுத்து அவனுக்கு பளார் பளார் என்று அடி போட்டாள். தான் அவளது அடியிலிருந்து தப்பிக் கொள்ள வேண்டும் என்பதற்காக தாயைப் பிடித்து தள்ளினான் மகன். அவன் தள்ளியதால் தடுமாறிய தாய் கண்ணாடிக் கதவொன்றில் இடிக்க அதன் கண்ணாடி உடைந்து அவள் கையை வெட்டி விட்டது. தாயின் கையிலிருந்து இரத்தம் வருவதைக் கண்ட நத்தானியலுக்கு பயமாகப் போய் விட்டது. அவன் வீட்டை விட்டு ஓடி விட்டான். அன்று இரவாகியும் கூட அவன் வீட்டுக்குத் திரும்பவே இல்லை. வீடு எப்படி இருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. அன்று இரவு அந்த வீட்டில் யாருமே அமைதியாக உறங்கவில்லை.

வெற்றுத் தேநீர் கோப்பைகளுடன் விளையாடுவதை தவிர்த்துக் கொள்ள நந்தானியல் கற்றுக் கொண்டானா இல்லையா என்பது இப்போது இரண்டாம் பட்சப் பிரச்சனையாகி விட்டது. இதை விட அவன் அன்றைய பொழுது தன்னைப் பற்றியும் தாயைப் பற்றியும் கற்றுக் கொண்டவை முக்கியமாகி விட்டன. கேள்வி என்னவென்றால் இத்தகைய ஒரு சண்டை தேவை தானா? அதைத் தவிர்த்திருக்க முடியாதா? அல்லது இத்தகைய சந்தர்ப்பங்களை இதைவிடப் புத்திசாலித்தனமாகக் கையாள முடியாதா?
மகன் தேநீர்க் கோப்பைகளை உருட்டி விளையாடுவதைக் கண்டதும் தாய், அந்த



எடுத்து விட்டு பதிலுக்கு ஒரு பந்தையோ அல்லது வேறெதையோ அவனுக்குக் கொடுத்திருக்கலாம். அல்லது கோப்பை உடைந்ததும், அந்த உடைந்த துண்டுகளை அப்புறப்படுத்துவதில் மகனுக்கு உதவியிருக்கலாம். அப்படிச் செய்யும் போது தேநீர்க் கோப்பைகள் இலகுவில் உடையக் கூடியவை அது சின்னக் கோப்பையாக இருப்பினும் உடைந்தால் எல்லாவிடமும் ஒரே குப்பையாகி விடும் என்பது போன்ற விடயங்களைச் சொல்லியிருக்கலாம். இத்தகைய மெல்லிய தொனியிலான வார்த்தைகள் நந்தானியலை தனது தவறுக்காக வருத்தப்படச் செய்திருக்கும். ஏச்சுக்கள், அடிகள் என்பன இல்லாமலேயே தேநீர்க் கோப்பைகள் விளையாட உகந்தவையல்ல என்பதை அவன் புரிந்து கொண்டிருப்பான்.

சிறிய தவறுகளிலிருந்து குழந்தைகள் பெரிய பெறுமதியான பாடங்களைக் கற்றுக் கொள்கிறார்கள். குழந்தைகள் தங்களது பெற்றோர்கள் மூலமாக சந்தோசமளிக்காத எரிச்சலூட்டுகிற செயல்களுக்கும், கவலைக்கிடமான கடுங்கோபம் கொள்ள வைக்கின்ற விடயங்களுக்குமிடையில் வித்தியாசம் காணப் பழகிக் கொள்ள வேண்டும். இதற்குப் பெற்றோர்கள் உதவ வேண்டும். சில பெற்றோர்கள் ஒரு முட்டை உடைந்த விடயத்தைக் கூட ஒரு கால் முறிந்து போன விடயத்துக்குரிய அழுத்தத்துடன் எதிர் கொள்வர். ஒரு கண்ணாடி ஜன்னல் உடைந்ததற்கு மனம் உடைந்து போன ஒருவரைப் போல உணர்வுகளை வெளிப்படுத்துவர். ஆனால், சிறிய தவறுகள் இவ்வாறு அணுகப்படக் கூடாது. உதாரணமாக இப்படிச் செய்யலாம்:
'அப்ப திரும்பவும் நீ உனது கையுறையைத் தொலைத்து விட்டாய். இது எனக்கு எரிச்சலூட்டுகிறது. ஏனென்றால், கையுறைகள் சும்மா கிடைப்பதில்லை. அவற்றை வாங்கப் பணம் வேண்டும்.'
இது கவலைப்படுத்துகிற ஒரு விடயம் தான் ஆனால், பெரும் கேட்டைவிளைக்கக் கூடிய ஒரு விடயம் அல்ல.
ஒரு தொலைந்து போன கையுறை ஆத்திரத்தில் தடுமாறும் நிலைக்குக் காரணமாக இருக்க வேண்டியதில்லை. கிழிக்கப்பட்ட சேட் ஒன்று, 'ஒரு துயரம் நிறைந்த நாளை உருவாக்குவதற்குக் காரணமாக அமைய வேண்டிய அவசியம் இல்லை.

## வசை அடை மொழிகள்

வசை கூறும் அடை மொழிகள், நஞ்சு தோய்க்கப்பட்ட அம்புகள் போன்றவை. அவை எதிரிகளை நோக்கி மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டியவை. பிள்ளைகளை நோக்கியல்ல. ஒருவன் 'இது ஒரு அசிங்கமான கதிரை' என்று சொல்லும் போது அந்தக் கதிரைக்கு எதுவும் நடந்து விடுவதில்லை. கதிரை அவமதிக்கப்படப்போவதோ, தர்மசங்கடத்துக்குள்ளாகப் போவதோ கிடையாது. பாவிக்கப்பட்ட அடைமொழி பற்றிய எதுவித சலனமும் இல்லாமல் அது அப்படியே இருக்கும். ஆனால் குழந்தை அசிங்கம் என்றோ, முட்டாள் என்றோ அல்லது குப்பை என்றோ ஒரு அடைமொழியால் அழைக்கப்பட்டால் அந்தக் குழந்தைக்கு என்ன நடக்கிறது? அதன் உடம்பிலும் ஆத்மாவிலும் அது தாக்கங்களை ஏற்படுத்துகிறது. எதிர்ப்புணர்வு, கோபம், வெறுப்பு என்பனவற்றுக்கு அது உள்ளாகிறது. பழிவாங்கும் உணர்வுக்கு அது உந்தப்படுகிறது. இத்தகைய உந்துதல்களால் குற்ற உணர்வுக்கும், இக்குற்ற உணர்வு காரணமாக ஒரு ஏக்கம் கலந்த கவலை உணர்வுக்கும் அது உள்ளாகிறது. இது தவறான நடவடிக்கைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிப்பட்ட அறிகுறிகளும் தோன்றும் நிலைக்கு இட்டுச் செல்கிறது. சுருக்கமாகச் சொன்னால், குழந்தையையும் அதன் பெற்றோர்களையும் பலத்த நெருக்கடிக்குள்ளாக்கும் பல பிரச்சினைகளுக்கு இது வழிவகுத்து விடுகிறது.
ஒரு குழந்தையை 'குப்பை' என்று வசை கூறினால், முதலில் அது 'இல்லை நான் அப்படி இல்லை' என்று மறுத்துரைக்கக் கூடும். ஆனால் பெரும்பாலான நேரங்களில் அது தனது பெற்றோர்களை நம்புவதால் தான் 'குப்பை'யான ஒரு குழந்தை தான் என்று தனக்குள்ளேயே நினைக்கத் தொடங்குகிறது. எப்போதாவது அது நடக்கும் போதோ அல்லது விழும் போதோ அது தன்னைத் தானே உரத்து 'நீ ஒரு குப்பை' என்று சொல்லிக் கொள்கிறது. அது கொஞ்சம் கொஞ்சமாக சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய தேவை வருகின்ற சந்தர்ப்பங்களையெல்லாம் தவிர்க்கத் தொடங்குகிறது. தான் குப்பைத்தனமான ஒன்றாக இருப்பதால் தன்னால் வெல்ல முடியாது என்று நம்பத் தொடங்கி விடுகிறது.

ஒரு குழந்தை திரும்பத் திரும்ப பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் முட்டாள் என்று சொல்லப்படும் போது, அது அதனை நம்பத் தொடங்கி விடுகிறது. தான் உண்மையிலேயே முட்டாள் தான் என்று நினைக்கத் தொடங்குகிறது. இதனால், அது தனது கல்வி ஊக்கங்கள் எல்லாவற்றையும் விட்டு விடுகிறது. போட்டிகளிலும், நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளாமல் விலகிச் செல்வதன் மூலமாக தான் மோசமான ஒரு வசவை எதிர்கொள்ளாமல் தப்பி விடலாம் என்று உணர்கிறது. எந்த முயற்சியும் எடுக்காமல் இருப்பதே தான் பாதுகாப்பாக இருக்க உகந்தது என்று கருதுகிறது. இதனால், அதன் வாழ்க்கைக் கோட்பாடு இவ்வாறு உருமாறிப் போய் விடுகிறது.
"எதையாவது செய்வதற்கு முயலாவிட்டால் நான் ஒரு போதும் தோற்றுப் போய்விட மாட்டேன்."

## எமது கோபங்களைக் கையாள்வது எப்படி?

எமது இளமைக்காலக் கல்வியின் போது, கோபத்தை எப்படி வாழ்க்கையின் ஒரு அம்சமாக ஏற்றுக் கொண்டு அதை அணுக முடியும் என்று எமக்கு போதிக்கப்படுவதில்லை. கோபம் ஒரு வகையான குற்றவுணர்வுக்குரிய அம்சமாகவும், அதை வெளிப்படுத்துவது பாவகரமான காரியமாகவும் உணர்வதற்கே நாம் பயிற்றப்பட்டிருக்கிறோம். கோபம் கொள்வது தவறானது என்று நம்பும் விதத்திலேயே நாம் வழிநடத்தப்பட்டு வந்துள்ளோம். கோபம் கொள்வது ஒரு துர்நடத்தை மட்டுமல்ல, அது ஒரு பெரும் குற்றச்செயலுமாகும் என்றே எமக்கு ஊட்டப்பட்டிருக்கும் அறிவு கூறுகிறது. எமது குழந்தைகளுடன் நாம் அமைதியாக இருக்க விரும்புகிறோம். எமது அமைதி எவ்வளவுக்கு அதிகமாக இருக்கின்றதென்றால் ஒரு கட்டத்தில் எம்மால் கட்டுப்படுத்த முடியாமல் குமுறி வெடிக்க வேண்டிய அளவுக்கு அமைதியாக இருக்கிறோம். எமது கோபம் குழந்தைகளுக்கு தீங்கிழைத்து விடலாம் என்று அஞ்சுவதால், சுழியோடிகள் தமது மூச்சை அடக்கி வைத்திருப்பதைப் போல் அவற்றை பிரயாசையுடன் அடக்கி வைத்திருக்கிறோம். ஆனால், எவ்வாறாயினும் இவ்வாறு அடக்கி வைத்திருக்கும் எமது சக்தியானது எல்லையற்ற ஒன்றாக இருப்பதில்லை. அது எப்போதும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே உள்ளது.



கோபம், சாதாரண தடிமல் போன்று மிகச் சாதாரணமாக அடிக்கடி வருகிற ஒரு பிரச்சனையாகும். நாம் அதை விரும்பாமல் இருக்கலாம். ஆனால், எம்மால் அதைப் புறக்கணித்து விடமுடிவதில்லை. எமக்கு அதைப் பற்றி மிகவும் நன்றாகவே தெரிந்திருக்கலாம் ஆனாலும் அது வருவதைத் தவிர்த்துக் கொள்ள முடிவதில்லை. கோபம் எதிர்பார்க்கக் கூடிய ஒழுங்கிலும், சந்தர்ப்பங்களிலும் வருகின்றது என்ற போதும் அது பெரும்பாலும் திடீரென சற்றும் எதிர்பாராத விதமாக வருவதும் உண்டு. கோபம் நீண்ட நேரம் நீடித்திருக்காத ஒன்றாக இருக்கலாம். ஆனால், அது வருகின்ற கணத்தில் மிகவும் சக்தி மிக்கதாக இருக்கிறது.

நாம் எமது கட்டுப்பாட்டை இழந்து கோபமுறும் போது, எமது அறிவை இழந்து விட்டவர்களாக நடந்து கொள்கிறோம். நாம் எமது எதிரிகளிடம் காட்டத் தயங்குபவற்றைக் கூட எமது குழந்தைகளுக்குச் சொல்லவோ, செய்யவோ செய்கிறோம். நாம் திட்டுகிறோம் அவமதிக்கிறோம் அவர்களது பலவீனத்தின் மீது தாக்குகிறோம். எல்லாம் முடிந்ததும் நாம் குற்ற உணர்வுக்குள்ளாகிக் கவலைப்படுகிறோம். இனிமேல் இவ்வாறானதொரு செயலில் ஈடுபடப்போவதில்லை என்று தீர்மானம் எடுக்கிறோம். ஆனால், திரும்பவும் கோபம் வருகிற சந்தர்ப்பம் விரைவிலேயே வந்து விடுகிறது. எமது நல்ல நோக்கங்களை எல்லாம் அது தூக்கி வீசிவிடுகிறது. மீண்டுமொருமுறை எவருக்காக எமது வாழ்க்கையையும் வளங்களையும் அர்ப்பணித்துள்ளோமோ, அவர்களை நம்மை அறியாமலே தாக்கி விடுகிறோம்.

இதற்காக, 'இனிமேல் கோபிப்பதில்லை' என்று தீர்மானமெடுப்பது வெறுமனே பயனற்றது மட்டுமல்ல மோசமானதும்கூட. இவை எரிகிற நெருப்புக்கு மேலும் நெய்யூற்றுகின்ற வேலையையே செய்கின்றன. கோபம் ஒரு சூறாவளியைப் போன்றது, வாழ்க்கையின் ஒரு அம்சமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது. அதை எதிர்கொள்ள நாம் எம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அமைதியான குடும்பம், யுத்தமற்ற உலகினை எதிர்பார்ப்பவர்களைப் போன்று, மனிதரது இயல்பிலே திடீர் மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையின் மீது கட்டியெழுப்பப்படுவதில்லை. அது திட்டமிட்ட நடைமுறைகளிலும், நெருக்கடிகளை அவை வெடிப்பதற்கு முன்பாகவே தணிக்கின்ற படிமுறையான முயற்சிகளிலுமே தங்கியிருக்கிறது.

குழந்தைக் கல்வியில் பெற்றோரின் கோபத்திற்கும் ஒரு இடம் இருக்கிறது. உண்மையில் கோபப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் கோபப்படாமல் இருப்பது குழந்தைகளுக்கு எல்லாம் சரி தான் என்ற அல்லது எதுவுமே சரியல்ல என்பது போன்ற ஒரு செய்தியையே வழங்குகிறது. எனவே, குழந்தைகளில் அக்கறையுள்ளவர்கள் ஒரு போதும் கோபத்தை முழுமையாக அடக்கி விட முடியாது. ஆனால், இதன் அர்த்தம் குழந்தைகளால் மட்டுமீறிய கோபத்தையும், வன்முறையையும் தாங்கிக் கொள்ள முடியும் என்பதல்ல. இது எதைத் தெரிவிக்கின்றது என்றால், 'என்னுடைய பொறுமைக்கும் எல்லையுண்டு' என்ற செய்தியை வெளிப்படுத்தக் கூடிய அளவு கோபத்தை குழந்தைகளால் புரிந்து கொள்ள முடியும் என்பதை மட்டுமே .

பெற்றோர்களைப் பொறுத்தவரை கோபம் என்பது பெறுமதிமிக்க ஒரு உணர்ச்சியாகும். எனவே, அந்தப் பெறுமதி பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால், கோபம் ஒரு போதும் லாபமில்லாத போது பாவிக்கப்படக்கூடாது. கோபம் அது வெளிப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்தில் மேலும் அதிகரிக்கக்கூடிய ஒன்றாக ஒரு போதும் அமைதல் கூடாது. வைத்தியம் ஒரு போதும் நோயின் அளவை மிஞ்சியதாக இருக்கக் கூடாது. கோபமானது பெற்றோருக்கு அமைதியையும், குழந்தைக்கு கொஞ்சம் அறிவையும் தருவதாக வேறெந்தப் பக்க விளைவுகளையும் தராததாக இருத்தல் வேண்டும். எனவே, நாம் ஒரு போதும் குழந்தையை அதன் நண்பர்கள் முன் ஏசக்கூடாது. ஏனென்றால், இது அதனை இன்னும் மோசமாக நடக்கத் தூண்டுகிறது. பதிலாக நாமும் மேலும் அதிகமான கோபத்துக்குள்ளாகிறோம். கோப அலைகளை உருவாக்குவதோ, எதிர்த்தலோ அல்லது தாக்குதல் நடத்துவதோ எமது நோக்கமல்ல எமது நோக்கமெல்லாம் எமது எதிர்பார்ப்பு நடைபெற வேண்டுமென்பதும், நெருக்கடி நிலை தணிய வேண்டும் என்பதும் தான்.

## கோபத்தைக் கையாள மூன்று படிமுறைகள்

எம்மை, நெருக்கடி நிறைந்த நேரங்களை அமைதியாக எதிர்கொள்ளும் விதத்தில் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் நாம் கீழ் வரும் விடயங்களை அங்கீகரித்தாக வேண்டும்.

1. குழந்தைகள் எம்மைக் கோபமூட்டுவார்கள் என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. நாம் எமது கோபத்திற்கு உரித்துடையவர்கள். அதற்காக எந்தவித அவமானத்துக்கோ, குற்ற உணர்வுக்கோ உட்பட வேண்டியதில்லை.

3. நாம் எவற்றை உணர்கிறோமோ அவற்றை வெளிப்படுத்தும் உரித்து எமக்கு உண்டு. பாதுகாப்பு விடயம் தவிர்ந்த எல்லா அம்சங்களிற்கும் இது பொருந்தும். நாம் எமது கோப உணர்வுகளையும் வெளிப்படுத்த முடியும். ஒரு குழந்தையின் ஆளுமை மற்றும் இயல்பு (பண்பு) என்பவற்றின் மீதான தாக்குதலாக அது இல்லாதவரை கோப உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியும்.

இந்த அனுமானங்கள் ஸ்தூலமான வழிமுறைகளில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். கொந்தளிக்கும் உணர்வுகளைக் கையாளுவதற்கான முதலாவதுபடி அவற்றைத் தெளிவாக இனங்காணுவதாகும். இது ஒருவருக்கு தமது உணர்வுகளைத் திருத்திக் கொள்ள அல்லது வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுக்க வேண்டியதை இனங்காட்டுகிறது.

'எனக்குச் சினமாக இருக்கிறது'

'எனக்கு எரிச்சலாக இருக்கிறது'

இத்தகைய சிறிய வார்த்தைகளும் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொள்ளலும் எத்தகைய அமைதியையும் தராவிடில் நாம் இரண்டாவது படியை நோக்கிச் செல்லலாம்.

'எனக்குக் கோபமாக இருக்கிறது'

'எனக்குச் சரியான கோபம் வருகிறது'

'எனக்குப் படுபயங்கரமான கோபம்'

'எனக்குக் கொதி வருகிறது'



சிலவேளைகளில் எமது உணர்வுகள் பற்றிய இத்தகைய வசனங்கள் (எவ்வித விளக்கமும் இல்லை) குழந்தைகளின் நடவடிக்கைகளை நிறுத்தி விடக் கூடும். அல்லாத போது மூன்றாவது படிக்கு நாம் போக வேண்டி இருக்கும். இது எமது எதிர்ப்புணர்வையும் கூறுவதாகும். கூடவே எமது அடுத்த நடவடிக்கை பற்றிய அறிவிப்பாகவும் இது இருக்கும்.

'சப்பாத்து, கால்மேஸ், சேர்ட் எல்லாம் அங்குமிங்குமாய் சிதறுப்பட்டிருப்பதைப் பார்க்கிற போது எனக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வருகிறது. எல்லாவற்றையும் தூக்கி றோட்டிலே வீசி விட வேணும் போல இருக்கிறது'

'நீ உனது தம்பியை அடிக்கும் போது எனக்கு கோபம் வருகிறது. என்குள்ளே பயங்கரமான ஆத்திரம் வருகிறது. இனி ஒரு நாளும் நீ அவனை அடிப்பதை அனுமதிக்க மாட்டேன்'

'சாப்பிட்டது சாப்பிட முதலே கோப்பைகளையும் தட்டுக்களையும் அப்படியே மேசையில் விட்டு விட்டு நீ ரி.வி. பார்க்க ஓடுகிற போது எனக்குச் சகிக்க முடியாதளவு கோபம் வருகிறது. எல்லாப் பாத்திரங்களையும் தூக்கி ரி.வி. மீது வீசி உடைத்து விடலாம் போல கோபம் வருகிறது... ...'

'நான் சாப்பிடக் கூப்பிட நீ வராமல் இருக்கும் போது எனக்குச் சரியான கோபம் வருகிறது. இவ்வளவு கஷ்டப்பட்டு ஒரு நல்ல சாப்பாட்டை நான் செய்து வைத்திருப்பது வந்து சாப்பிட்டு அதைப் பாராட்ட வேண்டுமென்றே ஒழிய, இப்படிக் கவலைப்படுத்துவதற்காக அல்ல...'

இந்த அணுகுமுறை பெற்றோர்களுக்கு தமது கோபத்தை எத்தகைய பாதிப்பும் இல்லாமல் தணித்துக் கொள்ள உதவுகிறது. மறுபுறத்தில் இது எவ்வாறு கோபத்தை பாதுகாப்பான முறையில் வெளிப்படுத்தலாம் என்ற கல்வியையும் குழந்தைகட்கு ஊட்டுகிறது. குழந்தை தனது கோபத்தை யாரையும் காயப்படுத்தாத விதத்தில் வெளிப்படுத்தலாம் என்பதை இதன் மூலம் விளங்கிக் கொள்ளக் கூடும். இந்த விளக்கத்தை அது பெறுவது என்பது பெற்றோர்களின் (வெறும்) கோபத்தை வெளிப்படுத்தும் முறையினால் மட்டும் சாத்தியமில்லை. இது பெற்றோர்கள், கோபத்தை வெளிப்படுத்தும் ஏற்புடைய முறைகளை குழந்தைகட்கு சுட்டிக்காட்டுவதிலும், கோபத்தைத் தணிப்பதற்கான கௌரவமான வழிவகைகளை விளக்குவதிலும் கூடத் தங்கியுள்ளது. அழிவுத்தன்மை வாய்ந்த உணர்வுகளுக்கு பொருத்தமான மாற்றீடுகளை எவ்வாறு கண்டடைவது என்ற பிரச்சினை பற்றி அத்தியாயம் 5இல் ஆராயப்படுகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.சுயதோல்வியைத் தரக்கூடிய மாதிரிகளைத் தவிர்த்தல்

குழந்தைகளுடனான தொடர்பாடலில் நாம் கையாளும் சில மாதிரிகள் பெரும்பாலும் சுய தோல்வியையே தருகின்றன. அவை எமது நீண்ட கால நோக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தடையாக அமைவது மட்டுமல்லாமல், குடும்பங்களில் எப்போதும் பெரும் நாசத்தையும் விளைவிக்கின்றன. இத்தகைய சுய தோல்வியைத் தரும் மாதிரிகளாக மிரட்டல், இலஞ்சம், வாக்குறுதி, சுடுசொல் பாவித்தல், பொய் அல்லது களவு தொடர்பாக போதனை செய்தல் அல்லது அமைதியாக இருப்பது பற்றிய மோசமான முறையிலான கற்பித்தல் என்பவற்றைக் கூறலாம்.

## மிரட்டல்:

துர்நடத்தைக்கு அழைப்பு விடுத்தல்:

குழந்தைகளைப் பொறுத்தவரை அவர்கள் மிரட்டல்களை தடுக்கப்பட்ட ஒரு செயலை மீளச் செய்விப்பதற்கான அழைப்பாகவே கொள்கின்றனர். 'இன்னொரு தடவை நீ இதைச் செய்தால்' என்று மிரட்டுகையில் குழந்தை அதிலுள்ள 'ஆல்" என்ற விகுதியைக் கவனிப்பதில்லை. அதற்கு 'இன்னொரு தடவை செய்' என்றே அது கேட்கிறது. சிலவேளை 'இதை நான் இன்னொரு தடவை செய்யவேண்டுமென்று அம்மா



எதிர்பார்க்கிறாள்... ... செய்யாவிட்டால் அவருக்கு ஏமாற்றமாக இருக்கக் கூடும்.' என்று கூட அது அர்த்தப்படுத்திக் கொள்கிறது.

இத்தகைய மிரட்டல்கள் - அவை பெரியவர்களுக்கு நியாயமானவையாகத் தோன்றலாம் - அவற்றைப் பயனற்றவை என்று சொல்வதை விடவும் மோசமானவை என்று சொல்வதே பொருத்தமானது. அவை தீயசெயல்கள் மீளவும் செய்யப்படுவதை உறுதிப்படுத்துகின்றன. ஒரு எச்சரிக்கை குழந்தையின் சுயத்திற்கு ஒரு சவாலாகவே அமைகிறது. குழந்தைக்கு கொஞ்சமாவது சுயகௌரவம் இருக்குமாயின், அதைத் திருப்பிச் செய்வதன் மூலமாக அது தனக்கும், பிறருக்கும் தான் ஒன்றும் வெறும் சின்னப்பாப்பா அல்ல என்று காட்டவே முனையும்.

ஐந்து வயதான ஒலிவர் ஜன்னல் மீது தொடர்ந்து பந்தை வீசிக்கொண்டு இருந்தான். தாயார் பல தடவை எச்சரித்தும் அவன் அதை நிறுத்தவில்லை. இறுதியாகத் தாய் சொன்னாள்.

'பந்து இன்னொரு தடவை ஜன்னலில் பட்டுதோ... ... சத்தியமாகச் சொல்கிறேன். உனது கன்னம் இரண்டும் மின்னும்.'

சொல்லி ஒரு நிமிடம் தான். தாயாருக்கு அவரது எச்சரிக்கை பலனளித்து விட்டதை உணர்த்துகின்ற, கலீரென ஜன்னல் கண்ணாடி உடைகிற சத்தம் கேட்டது. பந்து கடைசியாக ஜன்னலில் பட்டே விட்டது. இதன் பின்னரான சம்பவங்கள் எப்படித் தொடர்ந்திருக்கும் என்பது ஒன்றும் ஊகிக்க முடியாததல்ல. பதிலாக இத்தகைய ஒரு தவறான நடத்தையை மிரட்டாமலே எப்படிப் பயனுடைய விதத்தில் கையாண்டிருக்கலாம் என்பதைக் கீழ் வரும் உதாரணம் காட்டுகிறது.

ஏழு வயதான பீற்றர் தனது விளையாட்டுத் துப்பாக்கியால் தனது தம்பியை நோக்கிச் சுட்டான். 'பிள்ளை மீது சுடவேண்டாம்... ... அந்த இலட்சினை மீது சுடு' என்று சொன்னாள் தாய். பின் துப்பாக்கியைத் தனது கையில் பிடித்துக் கொண்டு சொன்னாள். 'மனிதர்களை யாரும் சுடுவதில்லை.'

தாயார் எது நடக்க வேண்டும் என்று விரும்பினாரோ அதற்குரியதைச் செய்தாள். குழந்தையைப் (தம்பி) பாதுகாப்பதுடன், பீற்றர் ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் எதற்கும் ஒரு அளவு உண்டு என்பதையும் இதன் மூலம் சுட்டிக் காட்டினார். பீற்றர் அவனது சொந்த 'நானு'க்கு (Ego) பாதிப்பு ஏற்படாத வகையில் தனது செயலின் பின்விளைவுகளை உணர்ந்து கொண்டான். இந்த நடவடிக்கையின் தொனிப்பொருளாக அவன் விளங்கிக் கொண்டது இதுதான்: 'இலட்சினையை நோக்கியே சுட வேண்டும் அல்லது துப்பாக்கியை வைத்திருக்கும் வாய்ப்பை இழக்க நேரும்.'

இந்தச் சம்பவத்தில் தாய் வழமையான பொறிக்கிடங்குக்குள் விழுவதில் இருந்து தப்பிக் கொண்டாள். முன் கூட்டியே எதிர்வு கூறக் கூடிய ஒரு தோல்வியை நோக்கிச் செல்வதை அவள் தவிர்த்துக் கொண்டாள்.

'நிறுத்து பீற்றர். உனக்கு சுடுவதற்கு தம்பியைத் தவிர வேறொன்றும் கிடைக்கவில்லையா? ஒரு நல்ல இலட்சினை உனக்கு கிடைக்கவில்லையா? இன்னொரு தடவை, ஒரேயொரு தடவை தம்பியை நோக்கிச் சுட்டாய்... உந்தத் துவக்கை நீ இனிமேல் காணவே மாட்டாய்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான ஒரு பேச்சுக்கு, அக்குழந்தை ஒரு அப்பாவியான பணிந்து போகிற பிள்ளையாக இருந்தால் ஒழிய அதன் எதிர்வினை திரும்பவும் அதே வேலையைச் செய்வதாகவே இருக்கும். இதற்குப் பின் என்ன நடக்கும் என்று சொல்லத் தேவையில்லை. இது ஒவ்வொரு பெற்றோராலும் திருத்தப்படக்கூடிய ஒரு விடயம் தான்.

## இலஞ்சம்

'இப்படிச் செய்தால்' என்ற வகையான அணுகுமுறைகூட, அதாவது 'இப்படிச் செய்தால் (அல்லது செய்யாவிட்டால்) உனக்கு ஒரு பரிசு தரப்படும்' என்ற விதத்திலான அணுகுமுறை கூட சுய தோல்விக்கு இட்டுச் செல்லும் ஒரு அணுகுமுறையாகும்.

'தம்பியோட நல்ல பிள்ளையாய் இருந்தால் நான் உங்களைப் படத்துக்குக் கூட்டிப் போவேன்'

'படுக்கையை நனைக்கிறதை (சிறுநீர் கழிப்பதை) விட்டு விட்டாயென்றால், வாற கிறிஸ்மஸ்க்கு ஒரு சைக்கிள் வாங்கித் தருவேன்.'
'இந்தக் கவிதையைப் பாடமாக்கினால், ஒரு படகுப் பயணத்துக்கு நான் கூட்டிப்போவேன்.' இத்தகைய 'இப்படிச் செய்தால்' அணுகுமுறை சில வேளைகளில் குழந்தையை ஒரு உடனடித் தேவைக்காக வெற்றி கொள்ள உதவக்கூடும். ஆனால், இந்த வகை அணுகுமுறை பெரும்பாலும் குழந்தையைத் தொடர்ச்சியாக இத்தகைய முயற்சிகளில் சுயமாக ஈடுபடுவதற்குப் பயிற்றுவிப்பதில்லை. உண்மையில் நாம் பாவிக்கும் சொற்களே, குழந்தை நல்ல பிள்ளையாக மாறுமோ என்ற சந்தேகத்தை வெளிப்படுத்துகின்றன. 'இந்தக் கவிதையை நீ பாடமாக்கினால்' என்று சொல்லும் போதே 'நீ பாடமாக்குவாய் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை' என்பதையும் சேர்த்தே நாம் சொல்கிறோம். 'படுக்கையை நனைக்காவிட்டால்' என்று சொல்லும் போதும் அதே சந்தேகத்தையே நாம் கிளப்புகிறோம்.அதாவது:'நீ அதை நிறுத்துவாய் என்று நாம் நம்பவில்லை...'

'இலஞ்சம்' கொடுப்பதற்கு சில தார்மீக எதிர் நியாயங்களும் இருக்கின்றன. டோர்த்தி பரோச் இவ்வாறு கூறுகிறார்: "ஒரு குழந்தை 'நான் மோசமானவனாகி விடுவேன்' என்று நினைக்க வைப்பதன் மூலமாகவே அம்மாவிடமிருந்து நான் விரும்பும் எல்லாவற்றையும் பெற்று விடுகிறேன். உண்மையில் அம்மா தான் கொடுப்பது வீண் அல்ல என்று நம்புவதற்காகவே நான் அடிக்கடி கூடாதவனாக நடந்து கொள்ள வேண்டும்" என்று சொல்கிறது.

இத்தகைய நியாயங்கள் விரைவிலேயே 'பிளைக் மெயில்' (BLACK MAIL) பண்ணும் நிலைக்குத் தள்ளுவதுடன் குழந்தை தான் நல்ல பிள்ளையாக நடப்பதற்காக எப்போதும் பரிசுகளையும் சலுகைகளையும் எதிர்பார்க்கத் தொடங்குகின்றது. சில பெற்றோர்கள் தாம் கடைகளில் பொருட்களை வாங்கித் திரும்புகிற போது பிள்ளைகளுக்கு ஏதாவது பரிசு வாங்காமல் வரக் கூடாது என்று கருதுகிறார்கள். இது விரைவிலேயே இப்படி



கடைத் தெருவால் வரும் போதெல்லாம் குழந்தைகள் பெற்றோர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கும் நிலைமையை மாற்றி 'எனக்கு என்ன கொண்டு வந்தீர்கள்?' என்று கேட்கும் நிலையைத் தோற்றுவிக்கிறது.

பரிசுகள் பயனுள்ளவையாகவும், சந்தோஷமானவையாகவும் இருப்பது அவை முன்கூட்டியே அறிவிக்கப்படாது இருக்கும் போது மட்டுமே, அவை எதிர்பாராதவிதமாகக் கிடைக்கும் போதும், அவை குழந்தையின் செயலைப் பாராட்டுவதாயும், விதந்துரைப்பதாயும் அமையும் போதும் பயன்மிக்கதாக அமைகின்றன.

## வாக்குறுதிகள்

நடைமுறைச் சாத்தியமற்ற எதிர்பார்ப்புக்களும், நடைமுறைகளும்:
குழந்தைகளுக்கு ஒரு போதும் வாக்குறுதிகளை வழங்குவதோ அல்லது அவர்களிடமிருந்து வாக்குறுதிகளை வாங்குவதோ கூடாது. வாக்குறுதிகளுக்கு ஏன் இவ்வளவு கட்டுப்பாடு? ஏனென்றால், குழந்தைகளுக்கும் எங்களுக்கும் இடையிலான உறவு நம்பிக்கையின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட வேண்டும். ஒரு பெற்றோர் வாக்குறுதி கொடுப்பது. தான் சொல்வதைக் கட்டாயம் செய்வேன் என்று உறுதி செய்வதற்காகவே தான். இதன் மூலம் அவர் வாக்குறுதி கொடுக்காத சந்தர்ப்பங்களில் சொல்பவை எவையும் செய்யப்படமாட்டா என்று மறைமுகமாக ஒப்புக் கொள்கிறார். வாக்குறுதிகள் நடைமுறைச் சாத்தியமற்ற எதிர்பார்ப்புக்களைப் பிள்ளைகளிடம் உருவாக்குகிறது. ஒரு குழந்தையை மிருகக் காட்சிச் சாலைக்கு அழைத்துச் செல்வதாக வாக்குறுதி கொடுக்கும் போது, அது அன்று மழை பெய்யாது, அன்றைக்குக் கார் பழுதாகாது, அன்றைக்கு வேறெந்தப் பிரச்சினையும் வராது என்று முடிவு கட்டுகிறது. ஆனால், வாழ்க்கை நிச்சயப்படுத்தப்பட முடியாத ஒன்றாக இருப்பதால், வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் போகக்கூடும். இவ்வாறான வேளைகளில் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாகவும், பெற்றவர்கள் நம்பத்தகாதவர்கள் என்றும் குழந்தை முடிவு கட்டுகிறது. குழந்தையின் இது தொடர்பான நம்பிக்கையீனமான குரல் இப்படி ஒலிக்கும்
'ஆனால், நீங்கள் எனக்கு வாக்குறுதி தந்தீர்கள்.'

குழந்தைகளின் இத்தகைய சோகமான குற்றச்சாட்டுக்கு அப்படி ஒரு தவறைச் செய்யாத, செய்ய விரும்பாத பெற்றோர் கூட உள்ளாவதை அடிக்கடி காணலாம். கடந்த காலத் தவறுகளை நிறுத்துவது, அல்லது எதிர்காலத்தில் நல்லதனமாக நடந்து கொள்வது சம்பந்தமான வாக்குறுதிகளைப் பெறுவது அல்லது கொடுப்பது ஒரு போதும் குழந்தைகளைப் பொறுத்தவரை செய்யப்படக் கூடாதவையாகும். ஒரு குழந்தை ஒரு வாக்குறுதியைக் கொடுப்பதென்பது இல்லாத ஒரு வங்கிக் கணக்கிலிருந்து காசு பெறுவதற்கான காசோலை ஒன்றைக் கொடுப்பது போல, அதன் சொந்த வாக்குறுதியாக அது இருப்பதில்லை. இத்தகைய தவறான, ஏமாற்றுகின்ற பொய் வேலைகளுக்கு நாம் குழந்தைகளை ஒருபோதும் ஊக்குவிக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசை அல்லது திட்டு:

குழந்தை கற்றுக் கொள்வதற்கான மிகவும் பலமான தடையாக இது விளங்குகிறது. வசவுகள் பிள்ளைகளது மனதில் பெரும் ஆரோக்கியக்குறைவை ஏற்படுத்துகின்றன. இவற்றைச் சொல்வதன் மூலம் நல்ல முறையிலான தொடர்பாடல் பண்பைப் பெற்றோர் இழந்து விடுவதுடன் அதற்குத் தடையாகவும் ஆகிவிடுகின்றனர்.

'எத்தனை தடவை நான் ஒரு விடயத்தை திருப்பித் திருப்பிச் சொல்வது. உனக்கென்ன செவிடா? அப்ப ஏன் தான் நான் சொல்வதைக் கவனிக்கிறாயில்லை.'
'சரியான மோடு நீ. எங்கையோ காட்டிலை வளர வேண்டியனி...! உனக்குச் சரியான இடம் அது தான்...'

'என்னதான் உனக்கு நடந்திட்டுது? உனக்கென்ன விசரோ அல்லது நீ ஒரு முட்டாளோ? எனக்குத் தெரியும், நீ எங்கை போய் முடியப் போகிறாய் என்று'
இத்தகைய பெற்றோர்கள் தமது கருத்துக்கள், பதில் தாக்குதல் கருத்துக்களுக்கு அழைப்பு விடுகின்றன என்பதையோ, இத்தகைய கருத்துக்கள் தொடர்பாடலைத் தடை செய்வதுடன், பழிவாங்கும் மனோபாவத்தை வளர்க்கின்றன என்பதையோ தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.

கசப்பான வசவுகளும், முகத்திலடித்தாற் போல் சொல்லப்படும் வார்த்தைகளும் குழந்தை வளர்ப்பில் உகந்தவை அல்ல. அவற்றுக்கு அங்கே இடமேயில்லை. 'நீ இப்படி அலட்டுகிற அளவுக்கு சின்னப்பாப்பா அல்ல, நீ நன்றாக வளர்ந்து விட்டாய்' என்பது போன்ற வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். 'உனக்குத் தலை கனத்துப் போய் விட்டது...', 'நீ உன்னை யார் எண்டு தான் நினைச்சுக் கொண்டிருக்கிறாய்?' என்பன போன்ற வார்த்தைகளைத் திட்டமிட்டோ அல்லது திட்டமிடாமலோ சொல்லுவதன் மூலம் குழந்தையின் தரத்தை அதனிடம் அதன் நண்பர்களிடமும் தரமிறக்குவதையே பெற்றார்கள் செய்கின்றனர்.

## பொய் சொல்வது தொடர்பான ஒரு கொள்கை

குழந்தைகள் பொய் சொல்லும் போது அதுவும், அந்தப் பொய் தெளிவாகவே பொய் என்று தெரியும் போது பெற்றோர் பெரும் கோபத்துக்கு உள்ளாகிறார்கள். உடல் முழுவதும் தான் செய்ததற்கான அடையாளங்களை வைத்துக் கொண்டே நான் பெயின்ற் (paint) இல் தொடவில்லை என்றோ, சொக்லேட்டை எடுத்துச் சாப்பிடவில்லை என்றோ ஒரு குழந்தை சொல்லும் போது கோபம் வரத்தான் செய்கிறது.

ஏன் குழந்தைகள் பொய் சொல்லுகிறார்கள்? சில வேளைகளில் அவர்கள் உண்மை சொல்ல அனுமதிக்கப்படாமலிருப்பதே அவர்கள் பொய் சொல்லுவதற்குக் காரணமாக அமைந்து விடுகிறது. ஒரு குழந்தை தனது தமையனைத் தான் வெறுக்கிறேன் என்ற ஒரு உண்மையை தனது தாயிடம் சொன்னால் அந்தத் தாய் அதற்காக அந்தக் குழந்தையைக் கண்டிக்கக்ச டும். தனது உணர்வுகளைத் தலை கீழாக்கி தனது தமையன்



மீது தனக்கு நல்ல விருப்பம் என்று சொன்னால் சிலவேளை அக்குழந்தைக்குப் பாராட்டுக் கிடைக்கக்கூடும். ஒரு முத்தமும் கூடக்கிடைக்கலாம். ஒரு பொய் சொன்னதற்காக! இத்தகைய அனுபவங்களிலிருந்து ஒரு குழந்தை எந்த முடிவுக்கு வர முடியும்? குழந்தை 'உண்மை சொல்வது பாதிப்பை ஏற்படுத்தும், பொய் சொல்வது பாராட்டைத்தரும், எனது அம்மா குட்டிப் பொய்களை விரும்புகிறாள்' என்ற ஒரு முடிவுக்கு வரக்கூடும்!

நாம் குழந்தைக்கு நேர்மையைக் கற்பிக்க விரும்புவோமானால் சில கசப்பான உண்மைகளைக் கூட சந்தோஷமான உண்மைகளைப் போலவே கேட்கவும் தயாராக இருக்க வேண்டும். ஒரு குழந்தை நேர்மையாக வளர வேண்டுமானால் அது தனது உணர்வுகளைக் குறித்து பொய்யுரைப்பதற்கு ஊக்குவிக்கப்படக்கூடாது. அவை நேர்மையானவையாகவோ எதிர்ப்படியானவையாகவோ அல்லது குழப்பமானவையாகவோ எப்படி இருப்பினும் அந்த உணர்வுகள் குறித்து பொய்யுரைக்கக் கூடாது. குழந்தைகளின் உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகையில் அவற்றுக்கு நாம் காட்டும் எதிர்வினையிலிருந்து தான் அவர்கள் நேர்மையாக இருப்பதா அல்லது நேர்மையில்லாமல் இருப்பதா சிறந்த கொள்கை என்று முடிவு செய்கிறார்கள்.

## உண்மைகளைச் சொல்லும் பொய்கள்

உண்மை சொல்லும் சந்தர்ப்பங்களில் அதைச் சொன்னதற்காகத் தண்டிக்கப்படும் போது குழந்தைகள் தற்பாதுகாப்புக்காகப் பொய் சொல்லுகிறார்கள். அவர்கள் இயற்கையில் தம்மிடம் குறைவாக உள்ள ஒன்றை இருப்பதாகக் காட்டிக் கொள்ளவுங் கூடப் பொய் சொல்லுகிறார்கள்.. பொய்கள் பயம் அல்லது நம்பிக்கை பற்றிய உண்மைகளைக் கூறுகின்றன. அவை ஒருவர் என்னவாக இருக்க விரும்புகிறார் அல்லது என்ன செய்ய விரும்புகிறார் என்பதை வெளிப்படுத்துகின்றன.

ஒரு பொய் குறித்து எமது அணுகுமுறை அப்பொய்யின் உள்ளடக்கத்தை நிராகரிப்பதாகவோ அல்லது அதைச் சொல்பவரைக் கண்டனம் செய்வதாகவோ அமைவதற்குப் பதில் எமது எதிர்வினையின் மூலம் நாம் அப்பொய்யின் சாரத்தைப் புரிந்து கொண்டிருக்கிறோம் என்பதை வெளிப்படுத்த வேண்டும். இதுவே ஒரு முதிர்ச்சியான அணுகுமுறையாக அமையும். பொய்யினூடாக நாம் பெற்றுக் கொள்ளும் தகவல்கள், குழந்தைக்கு யதார்த்த உலகத்தையும் பயனுள்ள சிந்தனையையும் வேறுபடுத்தி உணர்ந்து கொள்வதற்கு உதவுவதற்குப் பயன்படுத்தப்பட முடியும்.

ஒரு சிறுவன் தனக்கு கிறிஸ்மஸ் பரிசாக ஒரு உயிருள்ள யானைக்குட்டி கிடைத்தது என்று சொல்லும் போது அவனை ஒரு பொய்யன் என்று நிரூபித்துக் காட்டுவதை விட 'அப்படிக் கிடைத்திருக்க வேண்டுமென்று நீ விரும்புகிறாய் என்ன' என்று கூறுவது அதிகளவு பயனுள்ளதாக இருக்கும். அல்லது இப்படிக் கூறலாம்.'ஒரு யானை இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறாய் என்ன?' 'உனக்குச் சொந்தமாக ஒரு மிருகக் காட்சிச்சாலையே இருக்க வேணும் என்று உனக்கு விருப்பம் என்ன?'
'உனக்குச் சொந்தமாக ஒரு காடு நிறைய மிருகங்கள் இருந்தால் நல்லது என்று விரும்புகிறாய்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூண்டப்படுதலால் வரும் பொய்கள்

பெற்றோர் குழந்தைகள் தற்பாதுகாப்புக்காகப் பொய் சொல்லக்கூடிய கேள்விகளை ஒரு போதும் கேட்கக்கூடாது. குழந்தைகள் தம்மைப் பெற்றோர் விசாரணைக்குட்படுத்தும் போது, அதுவும் தாம் சொல்ல வேண்டிய பதில் ஏற்கெனவே பெற்றோர்களுக்குத் தெரிந்த ஒன்றே என்று அவர்கள் நினைக்கும் பட்சத்தில் கோபமடைகின்றார்கள். அவர்கள் ஒருவகைப் பொறி போன்ற கேள்விகளை அல்லது ஒரு அசிங்கமான பொய்யை அல்லது தர்மசங்கடமான ஒரு ஒப்புக் கொள்ளலைச் செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தக் கூடிய கேள்விகளை வெறுக்கிறார்கள்:

குயின்ரைன் ஒரு ஏழுவயதுச் சிறுவன். தன் துப்பாக்கியை உடைத்து விட்டான். அவனுக்குப் பயமாக இருந்ததால் உடைந்த துண்டுகளை வீட்டின் கீழ்த்தட்டில் உள்ள ஓரிடத்தில் மறைத்து வைத்தான். ஆனால் தகப்பன் துண்டுகளைக் கண்டு விட்டார். குயின்ரைனை நோக்கி அவர் சில கேள்விகளைக் கேட்டார்.
தகப்பன்: உனது புதிய துப்பாக்கி எங்கே ?
குயின்ரைன்: தெரியாது. எங்கேயாவது இருக்கும்.!
தகப்பன்: நீ அதை வைத்து விளையாடுவதை நான் காணவேயில்லையே?
குயின்ரைன்: எனக்கு அது எங்கே இருக்கிறதென்றே தெரியாது.!
தகப்பன்: எனக்கு இப்ப அதைப் பார்க்க வேண்டும்.
குயின்ரைன்: ஆராவது அதைக் களவெடுத்து விட்டார்களோ என்னவோ?
தகப்பன்: நீ ஒரு படு பொய்யன். நீ துவக்கை உடைத்து விட்டாய். இப்படி ஒளித்துத் தப்பிவிடலாம் எண்டு மட்டும் நினைக்காதை சரியா? இந்த உலகத்தில் எனக்குப் பிடிக்காத ஒண்டு இருக்கிறதென்றால் அது பொய் சொல்லுவது தான்.'
அத்துடன் தகப்பன் அவனுக்கு நீண்ட நாட்களுக்கு நினைவிருக்க வேண்டும் என்பதற்காக சில அடிகளையும் போட்டார்.
இது ஒரு தேவையற்ற சண்டை. ஒரு புலனாய்வுத்துறையாளன் போலவும் எதிர்த்தரப்பு வக்கீல் போலவும் நடந்து கொள்வதற்குப் பதில் தகப்பன் மகனுக்கு மிகவும் உதவியாக நடந்து கொண்டிருக்கலாம்.
'உனது துப்பாக்கி உடைந்திருந்ததை நான் கண்டேன்.
'அதைக் கனகாலம் பாவிக்கவில்லை.'
இப்படியான ஒரு உரையாடல் சிலவேளை குழந்தைக்குச் சில பயனுள்ள பாடங்களைத் தந்திருக்கும். 'அப்பா என்னை விளங்கிக் கொள்கிறார். எனக்கு என்ன பிரச்சினையென்றாலும் அதை நான் அவருக்குச் சொல்லலாம். அவர் வாங்கித் தரும் பொருட்களை நான் கவனமாகப் பாவிக்க வேண்டும்.'

## நேர்மையின்மையைக் கையாள்வது எப்படி?

பொய் சொல்வது தொடர்பான எமது கொள்கை தெளிவானது. ஒரு புறத்தில் நாம் ஒரு புலனாய்வுத்துறை அதிகாரி போல் நடந்து கொள்வதையோ அல்லது பாவமன்னிப்பைக் கோருவதையோ செய்யக்கூடாது. மறுபுறத்ததில் நாம் எது உண்மையோ அதைச் சொல்லத் தயங்கக் கூடாது. ஒரு மண்வெட்டியை மண்வெட்டி



என்று சொல்லத் தயங்கத் தேவையில்லை. எமது குழந்தையின் நூல்நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட புத்தகம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய திகதிக்குப் பின்னும் கொடுக்கப்படா விட்டால் நாம் இப்படிக் கேட்கக் கூடாது. 'நீ நூல்நிலையப் புத்தகத்தை திருப்பிக் கொடுத்து விட்டாய் என்று உனக்கு ஞாபகமா? அப்படியானால் எப்படி உனது மேசை மீது அந்தப் புத்தகம் இன்னமும் இருக்கிறது?'
பதிலாக நாம் இப்படிச் சொல்லலாம்:
'உனது நூல்நிலையப் புத்தகத்தை நான் பார்த்தேன். அது கொடுக்கப்பட வேண்டிய திகதி முடிந்து விட்டது'
பாடசாலையிலிருந்து குழந்தை கணிதப் பாடத்தில் தேறவில்லை என்று (fail) அறிவிப்பு வந்திருக்கும் ஒரு நிலையில் நாம் இப்படிக் கேட்கக்கூடாது.
'நீ கணக்குப் பாடத்தில் தேறிவிட்டாயா?உண்மையாக நீ தேறிவிட்டாய்? பொய் சொல்வது உன்னைக் காப்பாற்றப் போவதில்லை. நான் உனது ஆசியருடன் பேசினேன். நீ கணிதத்தில் தேறவில்லை என்று எனக்கு தெரியும்.
பதிலாக இப்படிக் சொல்லலாம்.
'உனது கணித ஆசிரியர் நீ கணித பாட சோதனையில் சித்தியடையவில்லையென்று அறிவித்திருக்கிறார்.எங்களுக்குச் சரியான கவலை. என்ன செய்யலாம் என்று நாங்கள் யோசிக்கிறோம்.

சுருக்கமாகச் சொன்னால் குழந்தையைப் பொய் சொல்ல வைக்கும் நிலைக்கு நாம் தள்ளிவிடக் கூடாது. ஒரு குழந்தை பொய் சொல்லும் போது நாம் ஒரு போதும் உணர்ச்சி வசப்பட்டுக் கோபப்படுவதோ அல்லது ஒழுக்கவியல் பற்றிய உணர்வுகட்குட்பட்டு இப்பொய்யை எதிர்கொள்வதோ கூடாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் எமக்கு அந்த விடயங்களில் பொய் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று பிள்ளைக்கு உணர்த்துவது தான்.

## களவு செய்தல்

தமக்குச் சொந்தமில்லாத பொருட்களைக் குழந்தைகள் வீட்டுக்குக் கொண்டு வருவது ஒன்றும் புதுமையான விடயம் அல்ல. அது மிகவும் சாதாரணமான ஒன்றே! இத்தகைய 'களவு' கண்டுபிடிக்கப்படும் போது போதனையில் இறங்குவதோ நாடக பாணியில் அதைக் களவு என்று கூறி நடந்து கொள்வதோ தேவையற்றது. குழந்தையை அதன் சுயகௌரவம் பாதிக்கப்படாமலேயே சரியானதைச் செய்வதற்கு எம்மால் வழிகாட்ட முடியும்.

'அந்த வண்டி யாரோ ஒருவருடையது. அதை அவரிடம் திருப்பிக் கொடுத்துவிடு'
'அந்தத் துப்பாக்கி உன்னுடையதல்லவே, அதைத் திருப்பி எடுத்துப் போ'
ஒரு குழந்தை கடையிலுள்ள உணவுப் பொருளைக் 'களவாடி' தனது பொக்கற்றினுள் போடும் போது எத்தகைய உணர்வுகளையும் வெளிக்காட்டாமல் அதை எதிர்க்க வேண்டும்.

'உனது இடது பொக்கற்றிலுள்ள 'லொலிபொப்' கடையில் இருக்க வேண்டியது.'
குழந்தை தனது பொக்கற்றுக்குள் 'லொலிபொப்' இல்லையென்று சொல்லுமானால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே வசனத்தை திருப்பிச் சொல்ல வேண்டும். 'உனது இந்தப் பொக்கற்றிலுள்ள லொலிபொப் கடைக்குச் சொந்தமானது.' அதற்கும் மறுப்பின், அந்த லொலிபொப்பை எடுத்துவிட்டு 'இது கடைக்குச் சொந்தமானது. இங்கே தான் வைக்க வேண்டும்' என்று கூறவேண்டும்.

## தவறான கேள்வியும் சரியான கூற்றும்

உங்கள் குழந்தை உங்களது பொக்கற்றிலிருந்து பணத்தை எடுத்திருப்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமானால் அதனிடம் 'எடுத்தியா' என்று கேட்காமல் விடுவதே நல்லது. பதிலாக இப்படிச் சொல்லலாம். 'நீ எனது பொக்கற்றிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து விட்டாய். அதைத் திருப்பித் தா.' அது பணத்தைத் தந்ததும் 'உனக்குப் பணம் தேவையானால் என்னைக் கேள். நாம் அதைப் பற்றிப் பேசலாம்.' குழந்தை எடுக்கவில்லை எனறு மறுத்தால் நாம் விவாதிக்கவோ மன்னிப்புக் கோரும்படி கேட்கவோ கூடாது. மாறாக 'நீ பணத்தை எடுத்தாய் அதைத் திருப்பித் தா' என்று சொல்ல வேண்டும். பணம் ஏற்கெனவே செலவு செய்யப்பட்டிருந்தால் உரையாடல் அந்தப் பணத்தை எப்படி மீள அறவிடுவது என்பது குறித்ததாக அமைய வேணடும். அதற்கு வழங்கப்படும் செலவுப்பணம் போன்றவற்றிலிருந்து அது அறவிடப்படலாம். முக்கியமானது என்னவென்றால் ஒரு குழந்தையை பொய்யன் அல்லது பொய்க்காரி என்றோ கூறக்கூடாது என்பது தான். குழந்தையை 'ஏன் அப்படிச் செய்தாய்' என்று கேட்பது அவ்வளவு பயன்தராது. சிலவேளைகளில் அதற்கே தான் ஏன் அப்படிச் செய்தேன் என்பது தெரியாமல் இருக்கும். அப்படியான வேளைகளில் 'ஏன்' என்ற எமது கேள்வியின் அழுத்தம் இன்னொரு பொய்யினைச் சொல்வதில் தான் கொண்டு போய் விடும்.

குழந்தை தனக்குப் பணம் தேவைப்படும் போது எம்முடன் பேச வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதைக் குறிப்பிடுவதே உண்மையில் மிகவும் பயனுள்ளதாகும். 'உனக்கு ஒரு ரூபாய் தேவை என்ற விடயத்தை நீ எனக்குச் சொல்லாதது எனக்குச் சரியான ஏமாற்றமாக இருந்தது.' 'உனக்குப் பணம் தேவைப்பட்டால் எனக்கு வந்து சொல்லு. நாம் அதைப் பற்றிப் பேசலாம்.'
எடுக்க வேண்டாம் என்று சொன்ன இடத்திலிருந்து ஏதாவது தின்பண்டத்தை எடுத்து குழந்தை சாப்பிட்டிருந்தால், எடுத்ததற்கான அடையாளமாக தின்பண்டத்தின் துகள்கள் அதன் முகத்தில் ஒட்டியிருக்கும் ஒரு நிலையில் இவ்வாறான கேள்விகளைக் கேட்கக்கூடாது.
'யாராவது இந்த இடத்திலிருந்த அந்தத் தின்பண்டத்தை எடுத்துச் சாப்பிட்டீர்களா?'
'யாராவது ஒருவர் தின்பண்டத்தை எடுத்ததை நீ கண்டாயா? நீ ஒன்றையும் சாப்பிடவில்லையா?'
இத்தகைய கேள்விகள் குழந்தையைத் தவிர்க்க முடியாமல் பொய் சொல்ல வைக்கும். இது மேலும் அவமதிப்பையும் பாதிப்பையும் அதற்குக் கொடுக்கக்கூடும். அடிப்படையான விதி என்னவென்றால '*விடைதெரிந்திருக்கும் போது நாம் கேள்வி கேட்கக்கூடாது.*' இத்ததைய சந்தர்ப்பத்தில் வெளிப்படையாகப் பேசுவது நல்லது.



# 4.பொறுப்புணர்வும் சுதந்திரமும்

## பொறுப்புணர்ச்சி: செயலும் பெறுமதியும்

குழந்தைகளுக்குப் பொறுப்புணர்ச்சியைப் போதிப்பதற்கான வழிவகைகளை எல்லாப் பெற்றோர்களும் தேடுகிறார்கள். பெரும்பாலான குடும்பங்களில் 'நாளாந்தம் செய்யப்படும் செயல்கள் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியும் என்ற எதிர்ப்பார்ப்பு நிலவுகிறது. குப்பைக் கூடைகளை துப்புரவு செய்தல். முற்றத்துப் புற்களை வெட்டி மட்டமாக்கல் என்பவற்றில் பையன்களைப் பொறுப்புள்ளவனாக்குவது பயனுள்ளது என்று கருதப்படுகிறது. பாத்திரங்களைக் கழுவுவது கட்டிலைத்தட்டி விரிப்பது போன்றவை சிறுமிகளுக்குப் பொறுப்புணர்ச்சியின் அடிப்படைகளை ஏற்படுத்திக் கொள்ள அவசியமான வேலைகள் என்று நம்பப்படுகிறது. ஆனால் நடைமுறையில் இத்தகைய விடயங்கள். (சில வேளைகளில் வீட்டை ஒழுங்காக நிர்வகிக்க உதவக்கூடுமே ஒழிய) குழந்தைகளின் பொறுப்புணர்ச்சியில் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. மாறாக இத்தகைய நாளாந்த வேலைகள் நாளாந்த சச்சரவுகளிலும், இச்சச்சரவுகளினால் பெற்றோர்களும் பிள்ளைகளும் ஆத்திரமும் எரிச்சலும் அடைவதிலுமேயே கொண்டு போய் விடுகின்றன. நாளாந்த வேலைகளைப் பலவந்தமாகவேனும் செய்வித்து விட முயல்வது, ஒரு வேளை கீழ்ப்படிவையும் சுத்தமான அடுப்படிகள் மற்றும் முற்றங்களைப் பெற்றோருக்குத் தரவும் கூடும். ஆனால் குழந்தைகளின் இயல்புருவாக்கத்தில் இவை மிகவும் களைப்பை ஏற்படுத்தி விடுகினறன.

பொறுப்புணர்ச்சி என்பது ஒரு போதும் திணிக்கப்படக் கூடியதல்ல. இது ஒரு வெளிப்படையான உண்மை. அது குடும்பத்தினதும் சமூகத்தினதும் பெறுமானங்கள் உள்வாங்கப்படுவதாலும் ஊட்டப்படுவதாலும் ஒருவருக்கு உள்ளிருந்தே வளர்ந்து வரும் ஒன்றாகும். சமூகத்தின் நேர்ப்படியான பெறுமானங்களுடன் (positive values)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கப்படாத பொறுப்புணர்ச்சியானது சமூகவிரோதத்தன்மை கொண்டதாயும் அழிவுத்தன்மை வாய்ந்ததாகவும் அமைந்து விடும். சமூக விரோதக் குண்டர் படையினர் கூடக் கூட்டத்திலுள்ள தமது சகாக்களுடனும் தமது கூட்டத்துடனும் மிகுந்த கட்டுப்பாடோடும் பொறுப்புணர்ச்சியோடும் பழகுகிறார்கள். உதாரணமாக மாஃபியா அமைப்பின் உறுப்பினர்கள் தமது கடமைகளை உயிரிலும் மேலாகக் கருதி நிறைவேற்றுகிறார்கள். தமது சக உறுப்பினர்கட்கு சட்ட உதவி செய்கிறார்கள். கைதாகி விட்ட தமது சகாக்களின் குடும்பங்களைப் பராமரிக்கிறார்கள்.

குழந்தைகள் பொறுப்புணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அதேவேளை அவர்களது பொறுப்புணர்ச்சியானது மனித நலன்களின் அடிப்படையிலிருந்து எழுந்து வருகின்ற, வாழ்வுக்கு மதிப்பளிக்கின்ற ஒன்றாக அமைய வேண்டும் என்றும் நாம் எதிர்பார்கிறோம். மிகவும் பரிச்சயமான வார்த்தைகளில் சொல்வதானால் பொறுப்புணர்வு என்பது மனித உயிர் சுதந்திரம் என்பவற்றுக்கு மதிப்புக் கொடுத்தலை அடிப்படையாகக் கொண்டதாகவும் சந்தோசத்தைத் தருவதாகவும் அமைய வேண்டும். ஆயினும் நாம் பொதுவாக பொறுப்புணர்ச்சி குறித்து அதன் பரந்த அர்த்தங்களில் சிந்தித்துப் பார்ப்பதில்லை. பொறுப்புணர்ச்சி என்று நாம் கருதுவதெல்லாம் எமது குழந்தையின் குப்பையாதக் கிடக்கும் அறை, பாடசாலைக்கு ஒழுங்காகப் போவதில் சிரத்தையற்று இருப்பது, ஒழுங்கற்ற வீட்டுவேலைகள், பியானோ வகுப்புக்கோ மாலைநேர சங்கீத வகுப்புக்கோ செல்லப் பஞ்சிப்படுதல், கீழ்ப்படியாத தன்மை அல்லது கூடாத பழக்க வழக்கம் என்பவற்றில் தங்கியுள்ள ஒன்று என்று தான்.

ஆனால் பொறுப்புணர்ச்சி என்பது இவற்றினால் மதிப்பிடக்கூடிய ஒன்றல்ல. குழந்தைகள் அமைதியானவர்களாகவும் தம்மையும் தமது அறைகளையும் சுத்தமாக வைத்திருப்பவர்களாகவும் தமக்கு வழங்கப்படும் வேலைகளை நேர்த்தியாகச் செய்து முடிப்பவர்களாவும் இருக்கலாம். இவ்வளவும் செய்யும் அதேவேளை பொறுப்பற்ற முடிவு எடுப்பவர்களாகவும் அவர்கள் இருக்கக் கூடும். அது பெரும்பாலும் என்ன செய்ய வேண்டும் என்று அடிக்கடி அறிவுறுத்தப்படும் குழந்தைகளிடம் காணப்படுகிறது. ஏனென்றால் அவர்களுக்கு, தமக்குத் தேவையான ஒன்றைத் தாமே தெரிவு செய்வதற்கும், அதற்குத் தேவையான முடிவைத் தாமே எடுப்பதற்கும், அது தொடர்பான தமது ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. அவர்களுக்காகப் பிறரே முடிவுகளை எடுக்கிறார்கள். நாம் குழந்தைகட்கு வழங்கும் அறிவுறுத்தல்கள் தொடர்பான குழந்தைகளின் உள்ளத்திலெழும் எதிர்வினை உணர்வுகள் மிகவும் முக்கியமானவை. ஏனென்றால் அவை தான் நாம் குழந்தை தெரிந்து கொள்ள வேண்டுமென விரும்பியவற்றில் எவ்வளவு வீடயங்களை அது கற்றுக் கொள்கிறது என்பதைத் தீர்மானிக்கின்றன. மனித சமூகப் பெறுமானங்கள் நேரடியாகக் கற்பிக்கக் கூடியவையல்ல. அவை குழந்தையின் அன்பைப் பெற்றுக் கொண்டுள்ள மனிதர்களைப் பின்பற்றுவதன் மூலமாகவும் அவர்களை அடையாளங் கண்டு கொள்வதன் மூலமாகவும் குழந்தைகளின் உருவாக்கத்தின் ஒரு பகுதியாக உள்வாங்கப் படுகின்ற விடயங்களாகும்.

ஆகவே குழந்தைகளின் பொறுப்புணர்வு என்கிற பிரச்சினை பெற்றோர் பற்றிப் பேசும் ஒன்றாகி வீடுகிறது. அதாவது பெற்றோர் குழந்தை வளர்ப்பு நடவடிக்கைகளின் போது



அவர்கள் வெளிப்படுத்தும் பெறுமானங்களில் தான் இது தங்கியுள்ளது. இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் குழந்தை வளர்ப்பு நடைமுறைகளின் போது பெற்றோர்கள் வெளிப்படுத்தும் தம்பற்றிய பெறுமானங்கள் குழந்தைகளின் பொறுப்பீனத்திற்குப் பொறுப்பாகி விடுகின்றன. ஆக நாம் கவனத்திலெடுக்க வேண்டிய இப்போதைய கேள்வி இது தான். எமது குழந்தைகளிடம் பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஏதாவது தெளிவான வழிமுறை அல்லது அணுகுமுறை இருக்கிறதா?

## பொருத்தமான குறிக்கோள்களும் நாளாந்த நடைமுறையும்

குழந்தைகளின் பொறுப்புணர்ச்சியானது பெற்றோரது இயல்பு, செயற்திறன் என்பவற்றிலிருந்து ஆரம்பமாகிறது. பெற்றோரது போக்கு அல்லது இயல்பு என்னும் போது அது குழந்தைகள் தமது எல்லா உணர்வுகளையும் உணர்வதற்கு அக்கறையுடன் அனுமதிக்கும் போக்கையும் உள்ளடக்கியதாகும். அதேபோல் செயற்திறன் என்கிற போது அது குழந்தைகள் தமது உணர்வுகளை நடைமுறைப்படுத்தலாம் என்று செயல்முறை மூலமாக விளக்கும் ஆற்றலையும் உள்ளடக்கியதாகும்.

இந்த இரு அவசியமான விடயங்களையும் கொண்டிருப்பதில் உள்ள சிரமம் மிகவும் பெரியது. எமது பெற்றோர்களோ ஆசிரியர்களோ உணர்வுகளை எதிர்கொள்ளுவதற்குப் போதுமான பயிற்சியை, பலமான உணர்வுகளை சமாளிப்பது எப்படி என்பதை எமக்கு ஒருபோதும் கற்பித்திருக்கவில்லை. குழந்தைகளது கொந்தளிக்கும் உணர்வுகளை எதிர்கொள்ள வேண்டி வரும் போது நாம் குழந்தைகளது உணர்வுகளை மறுத்துரைக்கவோ அவர்களைப் பொறுப்பற்றவர்களாக்கவோ அடக்கவோ அல்லது அவர்களது உணர்வை அழகுபடுத்தவோ தான் முற்படுகிறோம். இதற்கு நாம் பாவிக்கும் சொற்கள் பெரும்பாலும் பயனற்றவையாக அமைந்து விடுகின்றன.

மறுத்துரைத்தல்: 'உனக்கே நீ என்ன சொல்கிறாய் என்று விளங்கவில்லை. நீ அதன் அர்த்தத்தை விளங்கிக் கொண்டு சொல்லவில்லை. நீ உனது சகோதரனை எவ்வளவு தூரம் விரும்புகிறாய் தெரியுமா?'
பொறுப்பற்றதாக்கல்: 'உது நீ அல்ல. உனக்குப் பிடிச்சிருக்கிற பேய் தான் உன்னை உப்பிடிச் செய்ய வைக்கிறது.'
அடக்குதல்: 'உந்த மாதிரி அவனை வெறுக்கிறேன் என்று இன்னொரு தடவை சொன்னியோ உனக்கு மரண அடி நடக்கும்... ஒரு நல்ல பிள்ளை ஒரு போதும் இந்த மாதிரி நினைப்பதில்லை.'
அழகுபடுத்தல்: 'நீ உண்மையில் உனது சகோதரனை வெறுக்கவில்லை. சில வேளை உனக்கு அவனில் விருப்பமில்லாமல் இருக்கலாம். நீ அந்தப் பக்கமாக நினைச்சுப்பார்.'

ஓடும் ஆற்றை நிறுத்திவிட முடியாது. வேண்டுமானால் அதன் திசையை மாற்றி ஓட வைக்க முடியும். அதுபோல் தான் உணர்ச்சிகளும் அவற்றை ஒரு போதும் நிறுத்திவீட முடியாது. மேற்கூறிய உதாரணங்கள் இந்த அடிப்படை உண்மையை கவனத்தில் எடுக்கவில்லை. உண்மையில் கடுமையான உணர்வுகள் மிஸ்ஸிஸிபி நதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கியெழும் நீர் போன்றவை. மறுக்கப்படவோ காரணம் கூறப்படவோ அல்லது அதைப் பற்றிப் பேசாமல் இருக்கவோ கூடியன அல்ல. அவற்றைக் கணக்கிலெடுக்காமல் விடுவது என்பது பெரும் ஆபத்துகட்கு இட்டுச் செல்லக்கூடும்.

குழந்தைகளது உணர்வுகள் கணக்கெடுக்கப்பட வேண்டும். அவற்றின் சக்தி மதிக்கப்பட வேண்டும். அவை கௌரவத்துடன் அணுகப்பட்டு திசைதிருப்பப்பட வேண்டும். இவ்வாறு உணர்வுகள் ஆற்றுப்படுத்தப்படுமானால் அவர்கள் எமது இருப்பிற்குப் புத்துயிரூட்டுபவர்களாகவும் வாழ்வில் மகிழ்ச்சியையும் ஒளியையும் தருபவர்களாகவும் அமைவர்.

இவையெல்லாம் பெரிய இலட்சியங்கள். ஆனால் எம்மிடம் இன்னமும் அதே கேள்வி எஞ்சி இருக்கிறது. நாளாந்த நடைமுறையையும் எமது விருப்புக்குரிய இலக்குகளையும் இணைப்பது எப்படி? நாம் எங்கிருந்து தொடங்குவது?

## நீண்டகால குறுகிய கால திட்டங்கள்

இந்தக் கேள்விக்கான பதில் நீண்டகால குறுகிய கால முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களை உருவாக்குவதில் தான் தங்கியுள்ளது. உடனடியாக நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் குழந்தைகளின் இயல்புருவாக்கத்திற்கான கல்வி என்பது ஒரு போதும் சொற்களினூடாக உருவாக்கப்பட முடியாத ஒன்றாகும் என்பதைத் தான்.அது செயல்முறை மூலமாகவே உருவாக்கப்பட்டு வருகின்றது.

நீண்டகாலத் திட்டத்தின் முதலாவதுபடி குழந்தைகள் தமக்குள் எதை உணர்கிறார்கள் சிந்திக்கிறார்கள் எள்பதை அறிந்து கொள்வதில் நாம் ஆர்வம் காட்ட வேண்டும் என்று உறுதி செய்து கொள்ளவதாகும். இது மிகவும் முக்கியமானது. ஏனென்றால் அவர்களது வெளிப்படையாகத் தெரியும் குளப்படிகள் மற்றும் செயல்களை மட்டும் கவனத்தில் எடுப்பது போதுமான ஒன்றல்ல.

குழந்தைகள் தமக்குள் என்ன நினைக்கிறார்கள், உணர்கிறார்கள் என்று அறிந்து கொள்வது எவ்வாறு?

இதைப் புரிந்து கொள்வதற்கான அடையாளங்களை அவர்கள் எமக்கு வெளிப்படுத்துகிறார்கள். தமது உணர்வுகளைச் சொற்களினூடாக, தொனிகளினூடாக அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். எங்களுக்குத் தேவையானதெல்லாம் அதைக் கேட்பதற்கு உரிய ஒரு காது, பார்ப்பதற்குரிய ஒரு கண், புரிந்து கொள்ளக்கூடிய ஒரு இதயம், அவ்வளவு தான்!.

எமது உள்ளார்ந்த கோட்பாடாக இருக்க வேண்டியது இது தான்: 'நான் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்வதைக் காட்ட வேண்டும். அதை நேரடியாக விமர்சிக்காத அல்லது மட்டம் தட்டாத வார்த்தைகளின் மூலமாக வெளிப்படுத்த வேண்டும்'

ஒரு குழந்தை பாடசாலையிலிருந்து அமைதியாக ஆறுதலாக நடந்து வரும் போதே அதற்கு ஏதோ விரும்பத்தகாத சம்பவம் நடந்து விட்டது என்பதை அதனது காலடிகளை வைத்தே நாம புரிந்து கொள்ள வேண்டும். எமது உள்ளார்ந்த கோட்பாட்டின்



அடிப்படையில் நடப்பதானால் எமது உரையாடலை நாம் இப்படி ஆரம்பிக்கக் கூடாது.
'எதுக்கு இந்த மூஞ்சை?'
'என்ன முகம் ஒரு மாதிரி இருக்கு?'
'என்ன நடந்தது... உன்ரை நண்பர்களில் ஒருவருடன் கோபமா?'
'இன்றைக்கு என்ன செய்திட்டு வாறீர்?'
'இன்றைக்கு என்ன பிரச்சினை?'
குழந்தையின் உள்ளக எதிர்வினை பற்றி அதிகளவு அக்கறை கொண்டவர்கள் என்ற முறையில் நாம் மனதில் வெறுப்பையும் அதிருப்தியையும் ஏற்படுத்தக் கூடிய வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். முழு உலகமும் அழிந்து போய்விட வேண்டும் என குழந்தையை நினைக்க வைக்கக்கூடிய அபிப்பிராயங்களை நாம் தவிர்த்து விட வேண்டும்.

பதிலாக பெற்றோர்களாகிய நாம் அதைப் புரிந்து கொள்கிறோம் என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் இவ்வாறு கூறலாம்:
'உங்களுக்கு ஏதோ விரும்பத்தகாதது நடந்து விட்டது!'
'இன்றைக்கு ஒரு கஷ்டமான நாள் என்ன?'
'யாரோ உங்களுக்கு இன்றைக்கு கஷ்டம் கொடுத்து விட்டார்கள் போல'.
இத்தகைய அபிப்பிராய வார்த்தைகள். உங்களுக்கு என்ன நடந்தது? உங்களுக்கு என்ன ஆயிட்டுது? என்று கேட்பதை விடவும் வரவேற்கத்தக்கவை.பொதுவாகவே கேள்விகள் எப்போதும் விடுப்பு அறியும் ஆவலையே வெளிப்படுத்துகின்றன. ஆனால் அபிப்பிராயங்கள் ஆதரவை வெளிப்படுத்துகின்றன.

ஒரு குழந்தை தான் வாழ்கின்ற தனது வாழ்வின் அனுபவங்களிலிருந்தே கற்றுக் கொள்கிறது. இந்த உண்மையிலிருந்து அதனால் தப்பித்துக் கொள்ள முடியாது. அது விமர்சனங்களுக்கு மத்தியில் வாழும் போது தன்னைத் தானே இகழவும் பிறர் மீது பிழை பிடிக்கவும் மட்டுமே கற்றுக் கொள்ளுகிறது. அது தனது சொந்த முடிவுகளின் மீதே ஐயம் கொள்கிறது. அது மட்டுமல்ல, மற்றவர்களது நோக்கங்கள் மீதும் நம்பிக்கையீனப்படத் தொடங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அது ஒரு தொடர்ச்சியான அச்சுறுத்தலை எதிர்நோக்கும் வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்ளத் தொடங்குகிறது.

## யுத்தத்திலிருந்து சமாதானத்திற்கு

நாளாந்த வேலைகள் தொடர்பாக பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது பிரகடனப்படுத்தப்படாத 'யுத்தத்தில்' ஈடுபட்டிருக்கும் பெற்றோர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அதுதான் இந்த யுத்தத்தில் வெல்ல முடியாது என்பது. குழந்தைகளைக் கண்டிப்பதற்கு எமக்கு இருப்பதைவிட அதிகளவு நேரமும் சக்தியும் அவர்களுக்கு இருக்கிறது. ஏதாவது ஒரு கட்டத்தில் நாம் வெற்றி பெற்றிருந்தாலும் கூட அவர்கள் உயிர்ப்பற்றவர்களாக உணர்ச்சிகளை வெளிக்காட்டாதவர்களாக தம்மை மாற்றிக் கொள்வதன் மூலமாகவோ அல்லது வேண்டுமென்றே தவறு செய்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிச்சலூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்ற செயல்களின் மூலமோ தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவே செய்வர்.

நாம் வெல்வதற்கு ஒரேயொரு வழி மட்டுமே உண்டு. அதாவது குழந்தைகளை வென்றெடுத்தல் மூலமாக மட்டுமே இந்த முயற்சி சாத்தியப்பட முடியும். இது கடினமான ஒன்று தான் என்றாலும், சாத்தியமற்ற ஒன்றல்ல. இதைச் செய்யும் ஆற்றலும் கூட எமக்கு இருக்கத்தான் செய்கிறது. இப்போது எமக்கு குழந்தையுடன் ஒரு நல்ல உறவு இல்லாவிட்டாலும் கூட அதை விரைவிலேயே கட்டி எழுப்பிவிட முடியும்

பெற்றோர்கள் கீழுள்ள வழிகளில் செயற்படுவதன் மூலம் குழந்தைகளிடம் நல்ல மாற்றங்களை உருவாக்க முடியும்.

## 1.அக்கறையுடன் கவனித்தல்

குழந்தைகள் தமது உணர்வுகளிலும் சிந்தனைகளிலும் பெற்றோர்கள் அக்கறையில்லாது இருப்பதாக உணரும் போது விரக்தியும் கோபமும் அடைகிறார்கள்.தமது கருத்துக்கள் முட்டாள் தனமானவை என்றும் பெற்றோர் அக்கறைப்படும் அளவுக்குப் பெறுமதி வாய்ந்தவை அல்ல என்றும் முடிவு செய்து கொள்கிறார்கள். அதனால் தாம் விரும்பப்படக் கூடியவர்கள் அல்ல என்றும் தம்மை யாரும் விரும்பவில்லை என்றும் முடிவு கட்டுகிறார்கள்.

குழந்தையின் உணர்வுகட்கு அக்கறையுடன் கவனிப்பைச் செலுத்துவதன் மூலமாக ஒரு பெற்றார் அக்குழந்தையின் கருத்துக்கள் பெறுமதி வாய்ந்தவை. அக்குழந்தை கௌரவிக்கப்பட வேண்டியது என்ற செய்தியை தெரியப்படுத்துகிறார். இந்தச் செய்தி, குழந்தை தன்னைத்தானே பெறுமதி வாய்ந்த ஒன்றாகக் கருதும் நிலையை உருவாக்குகின்றது. தன்னைத்தானே பெறுமதி வாய்ந்ததாக உணரும் போது ஒரு குழந்தை உலகின் பிற விடயங்களுடனும் மக்களுடனும் மிகவும் சிறப்பான முறையில் ஈடுபாடு காட்டுகிறது.

## 2.கோபத்தினைத் தவிர்த்தல்

பெற்றோர் மிகவும் கவனமாக எரிச்சலையோ கோபத்தையோ உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளை அல்லது அபிப்பிராயங்களைத் தவிர்க்க வேண்டும்.
அவமதிப்பு: 'உனது பாடசாலைக்கே உன்னாலே கெட்ட பேர். எங்களுக்கு உன்னால் ஒரு பிரயோசனமும் இல்லை.'
வசைபாடல்: மொக்கு, கிழடு, முட்டாள், ஊர்சுற்றி, கெட்டவன்... போன்றவை.
எதிர்வுகூறல்: 'கடைசியாக நீ சிறுவர் சீர்திருத்தப் பாடசாலைக்கோ சிறைச்சாலைக்கோ தான் போய்ச் சேரப்போகிறாய்...'
மிரட்டல்: 'இப்ப நீ பேசாமல் இருக்காட்டில் உனக்குத் தாற சிலவுக் காசும் கிடைக்காமற் போய்விடும்'.
குற்றம் சுமத்தல்: 'எப்பவும் இப்படித் தான். நீ தான் முதலில் பிரச்சினையைத் துவக்கி வைக்கிற ஆள்.



அதிகாரம் செய்தல: 'வாயை மூடு இப்ப சொல்லிறதைக் கேள்!'

## 3.உணர்வுகளையும் சிந்தனைகளையும் எந்தவிதமான தாக்குதல் நோக்கமும் இன்றி வெளிப்படுத்தல்

குழந்தையின் மீதோ அதன் கௌரவத்தின் மீதோ எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாத விதத்தில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் பெற்றோர்கள் நெருக்கடியான சூழல்களை வெற்றிகரமாகக் கையாளக் கூடியவர்களாக உள்ளனர்.(பார்க்க அத்தியாயம்-2)

பெற்றோர்கள் குழந்தைகளை அக்கறையுடன் கவனிப்பவர்களாகவும் அவர்களைத் தாக்கக்கூடிய அபிப்பிராயங்களையும் தேவைகளையும் எத்தகைய அவமதிப்பும் இல்லாமல் தெரிவிப்பவர்களாகவும் இருந்தால் குழந்தைகளிடம் மாற்றம் உருவாகத் தொடங்கி விடும். ஆதரவான சூழல் குழந்தையைப் பெற்றோருக்கு அண்மித்ததாக வரச் செய்கிறது. அவர்களது ஆதரவான அணுகுமுறை, நியாயமான தன்மை, அக்கறையான கவனிப்பு, பண்பான அணுகுமுறை என்பன நிலவும் போது குழந்தை மாறுதலை நோக்கி ஊக்குவிக்கப்படுகிறது. இவை ஒரு நாளில் நடக்கும் மாற்றங்கள் அல்ல. ஆனால் இந்த முயற்சிகள் நிச்சயமான பலனை இறுதியில் தரவே செய்யும்.

இந்த விடயங்களை அதாவது இந்த அணுகுமுறையையும் நடைமுறையையும் செயற்படுத்தும் போது ஒரு பெற்றார் குழந்தைக்கு பொறுப்புணர்ச்சியைப் போதிப்பதில் பெரும்பகுதியை நிறைவேற்றி விடுகின்றார். ஆயினும் பெற்றோரது மாற்றம் மட்டும் போதுமானதல்ல. ஏனென்றால் பொறுப்புணர்ச்சி பற்றிய உணர்வு ஒவ்வொரு குழந்தையினதும் சொந்த முயற்சிகளினூடாகவும் அனுபவங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே பெற்றோரின் மாற்றம் குழந்தைக்கு பொறுப்புணர்ச்சியைப் புரிந்து கொள்வதற்கு உரிய சூழலைத் தருகின்ற போதும், குழந்தைக்கு சில குறிப்பான அனுபவங்களும் தேவைப்படுகின்றன. ஆகவே குழந்தையின் எந்த வயதில் எந்த விடயங்கள் பொறுப்புணர்ச்சிக்குரியவை என்பதை தீர்மானித்துக் கொள்வது முக்கியமாதாகும்.

## பொறுப்புணர்வு:கருத்தும் தெரிவும்

எந்தக் குழந்தையும் பொறுப்புணர்ச்சி பற்றிய புரிதல்களுடன் பிறப்பதில்லை. அத்துடன் அது அதனை ஒரு குறிப்பிட்ட வயதில் உள்வாங்கிக் கொள்வதும் இல்லை. பியானோ வாசித்தல் போன்ற பொறுப்புக்கள் மிகவும் மெதுவாகவும் நீண்டகால அடிப்படையிலுமே புரிந்து கொள்ளப்படுகின்றன. நாளாந்த அனுபவமும், முடிவெடுத்தல் தொடர்பான பயிற்சிகளும் அதற்குத் தேவை. ஒருவருடைய வயதுக்கும் உள்வாங்கும் ஆற்றலுக்கும் ஏற்ற விதத்தில் தெரிவுகளைச் செய்து கொள்வதற்கு அதற்குப் போதிய அனுபவங்கள் தேவைப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரச்சினைக்குரிய பகுதிகளும் பொறுப்புணர்ச்சியும்

பொறுப்புணர்ச்சிக்கான கல்வி குழந்தையின் மிக ஆரம்ப வயதிலேயே ஆரம்பிக்கிறது. அது, குழந்தைகளுக்குத் தேவையான இடங்களில் தமது கருத்தைச் சொல்லவும், அவர்களோடு சம்பந்தப்பட்ட விடயங்களில் தமது தெரிவைச் செய்யவும் வேண்டிய வாய்ப்புக்களை வழங்குவதன் மூலமாக ஊட்டப்பட முடியும். இவ்விடத்தில் தெரிவுக்கும் கருத்தைத் தெரிவிப்பதற்கும் இடையில் ஒரு தெளிவான வேறுபாடு ஏற்படுத்தப்படுகிறது. சில விடயங்கள் குழந்தைகளின் பொறுப்புணர்ச்சி எல்லைக்குட்பட்டவையாக உள்ளன. அவற்றில் அதற்குத் தெரிவு செய்ய அனுமதி வேண்டும். வேறு சில விடயங்கள் குழந்தையின் நலன்கள் சம்பந்தப்பட்டவை. அவற்றிற்கான பொறுப்புக்கள் பெற்றோராகிய எம்மைச் சார்ந்தவை. இந்த விடயங்களில் குழந்தைக்குத் தெரிவு இல்லை. ஆனால் தனது கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பு அதற்கு உண்டு. நாம் குழந்தைக்கான தெரிவுகளை மேற்கொள்ளும் அதேவேளை அத்தெரிவை ஏற்றுக் கொள்ளும் தவிர்க்க முடியாமையை விளங்கிக் கொள்ள அதற்கு உதவி செய்யவும் வேண்டும். உண்மையில் தேவையானது என்னவெனில் இந்த இரண்டு பொறுப்புணர்ச்சிக்குரிய விடயங்கட்கும் இடையிலான வேறுபாட்டை தெளிவாக விளங்கிக் கொள்ளுதலேயாகும். பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையிலே பொதுவாக முரண்பாடுகள் ஏற்படக்கூடிய சில விடயங்களைப் பார்ப்போம்.

### உணவு

இரண்டு வயதுக் குழந்தை ஒன்றிடம் அதற்கு அரைக் கிளாஸ் பால் தேவையா அல்லது முழுக் கிளாஸ் பால் தேவையா என்று கூறுமாறு கேட்கலாம் . நாலுவயதுக் குழந்தை ஒன்றிடம் அதற்கு ஒரு முழு அப்பிள் தேவையா பாதி அப்பிள் தேவையா என்று முடிவு செய்ய விட்டு விடலாம். ஆறு வயதுக் குழந்தை ஒன்றுக்கு தனது முட்டை நன்றாக அவிக்கப்பட்ட முட்டையாக இருக்க வேண்டுமா அல்லது அரை அவியலாக இருக்க வேண்டுமா என்று முடிவு செய்ய முடியும்.

குழந்தைகள் இப்படிப்பட்ட முடிவுகளை எடுப்பதற்கான சூழலை வேண்டுமென்றே நாம் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். பெற்றோர்கள் சூழலை உருவாக்குகின்றார்கள்: குழந்தைகள் தமது தெரிவுகளைச் செய்கின்றார்கள். ஒரு குழந்தையிடம் உனக்குக் காலைச் சாப்பாட்டிற்கு என்ன வேண்டும்? என்று கேட்கக் கூடாது. 'உனது காலை உணவுக்கான முட்டை அவிக்கப்படுவதா அல்லது பொரிக்கப்படுவதா விருப்பம்?' என்று கேட்க வேண்டும். 'உனது பாண் ரோஸ்ட் செய்து தரப்பட வேண்டுமா? வேண்டாமா? உனது களியை சூடாகச் சாப்பிட விரும்புகிறாயா குளிரூட்டிச் சாப்பிட விரும்புகிறாயா? தோடம்பழச்சாறா பாலா குடிக்கப் போகிறாய்?" என்பன போன்ற கேள்விகளே விரும்பத்தக்கவை.

இவை குழந்தைக்குத் தான் சம்பந்தப்பட்ட விடயங்களில் சில தெரிவுகளை மேற்கொள்ளுவதற்கான பொறுப்புணர்ச்சியை வழங்குகின்றன. இதனால் அது வெறும் உத்தரவுகளை ஏற்கும் ஒன்றல்ல. மாறாக தனக்குத் தேவையானவற்றில் முடிவெடுக்கும் விடயத்தில் பங்கு கொள்ளும் ஒன்றாக மாறுகிறது. பெற்றோரின் இத்தகைய நடவடிக்கைகளால் அது தெளிவான ஒரு செய்தியைப் பெற்றுக் கொள்கிறது. 'நாம் தேநீரையோ அல்லது பாலையோ தருகிறோம். தெரிவு செய்ய வேண்டியது உனது பொறுப்பு.'



சாப்பிடும் போது குழந்தைகளின் உணவு, அதன் ருசி என்பன தொடர்பாக அதிக அக்கறை எடுக்கும் தாய்மார்களால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பிரச்சினைகள் உருவாகின்றன. அவர்கள் சில காய்கறி வகைகளைச் சாப்பிடுமாறு குழந்தைகளை நச்சரிக்கின்றார்கள். உடம்பின் எந்தெந்தப் பகுதிக்கு எந்தெந்தக் காய்கறிகள் முக்கியம் என்று (பெரும்பாலும் எந்தவித விஞ்ஞானபூர்வமான அடிப்படைகளுமின்றி) கூறி அவற்றை உண்ணுமாறு வலியுறுத்துகின்றார்கள். குழந்தைகளைப் பொறுத்தவரை தாய்மார் உணவு தொடர்பாக தீவிரமான உணர்வுகள் அற்றவர்களாக இருப்பதே சிறந்தது. தாய்மார் குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டமும் ருசியும் உள்ள உணவுகளை அது தனது பசிக்கேற்ற அளவு சிறிதாகச் சாப்பிட்டாலும் போதுமான சத்தினைக் கொண்டிருக்கக் கூடியதாகத் தயாரிக்க வேண்டும். சாப்பிடுதல் என்பது குழந்தையின் பொறுப்புணர்ச்சிக்குட்பட்ட ஒரு விடயமாகும்.

### உடைகள்

குழந்தைகளுக்கு உடைகளை வாங்கும் போது அவர்களுக்குத் தேவையானது என்ன? எமது நிதி வசதிக்குக் கட்டுப்பாடானது என்ன என்பதை முடிவு செய்வது எமது பொறுப்பாகும். ஒரு கடையில் நாம் எமது நிதிநிலைக்கும் குழந்தையின் தேவைக்கும் உரிய சில மாதிரிகளைத் தெரிவு செய்து அவற்றுள் தான் விரும்பும் ஒன்றைத் தெரிவு செய்யும் உரிமையைக் குழந்தைக்கு வழங்க வேண்டும். ஆறு வயதுக் குழந்தை ஒன்றுக்குக் கூட எம்மால் தெரிவு செய்யப்பட்டவற்றினுள் தனக்கு விருப்பமான ஒன்றைத் தேர்தெடுக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும். தனக்குப் பிடித்த சேர்ட் சட்டை அல்லது கால்மேஸ் எதுவாயினும் சரிதான். பெரும்பாலான குடும்பங்களில் குழந்தைகள் இவ்விடயங்களில் எந்த அனுபவத்தையும் பெறுவதில்லை. ஏன் சில பெரியவர்கள் கூட தமக்குரிய தெரிவை தமது தாயோ மனைவியோ கணவனோ மூலமாக அன்றி தம்மால் சுயமாகத் தெரிவு செய்ய முடியாதவர்களாக இருக்கின்றார்கள். விஷேடமாக ஓரளவு வளர்ந்த பிள்ளைகட்கு தமது நண்பர்களது உடைகளை விட அதிகளவில் தரத்தில் வேறுபடாத உடைகளைக் கொண்டிருக்க அனுமதி வழங்க வேண்டும்.
வகுப்பிலுள்ள சிறுவர்கள் எல்லோரும் நீலநிற சப்பாத்துப் போட்டிருக்க ஒருவன் மட்டும் செந்நிறச் சப்பாத்தை அணிந்து வருவானானால் அவன் பிற சிறுவர்களால் கேலி செய்யப்படுவான் என்பதில் சந்தேகமில்லை. குழந்தைகள் மத்தியில் அபிப்பிராயங்கள் அவர்கள் எதைச் சரியானது என்று கருதுகிறார்கள், எதைக் கூடாதது அசிங்கம் என்று கருதுகிறார்கள் என்பதை நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். உடைகள் தொடர்பான எமது பொறுப்பெல்லாம் இதுதான்: நாம் தெரிவு செய்பவற்றுள் அவர்கள் தமக்குப் பிடித்ததை தேர்தெடுத்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டு வேலை (home work)

முதலாம் வகுப்பில் இருந்து வீட்டு வேலை என்பது குழந்தையினதும் ஆசிரியரதும் பொறுப்புக்களே என்பதை வெளிப்படுத்தும் போக்கை பெற்றோர்கள் கட்டாயம் கொண்டிருக்க வேண்டும். பெற்றோர் வீட்டு வேலைகளைச் செய்யுமாறு குழந்தைகளை நச்சரிக்கக்கூடாது. குழந்தைகள் கேட்டுக் கொண்டால் ஒழிய, பெற்றோர்கள் அவர்களது வீட்டுவேலைகளை மேற்பார்வை செய்வதோ சரிபார்ப்பதோ அவசியமில்லை. (பெரும்பாலான ஆசிரியர்கள் இக்கருத்துடன் முரண்படுவார்கள் என்பது உண்மையே) பெற்றோர் குழந்தையின் வீட்டுவேலைகள் குறித்த பொறுப்புக்களை தாம் எடுத்துக் கொண்டு விடுகின்றனர். பிறகு பெற்றோர்கள் இதிலிருந்து ஒரு போதும் விடுபடவே முடியாது. பெற்றோரைத் தண்டிக்கவும் குற்றம் சுமத்தவும் ஏன் மிரட்டவும் கூட இந்த வீட்டுவேலையை ஒரு ஆயுதமாகக் குழந்தைகள் பயன்படுத்தத் தொடங்கி விடுவார்கள்.

குழந்தைகளின் வீட்டுவேலைகளில் உள்ள சின்னச் சின்ன விடயங்கள் குறித்துப் பெருமளவு சிரத்தையைக் காட்டாதிருப்பது பெருமளவு பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளவும் குடும்ப வாழ்வில் சந்தோஷத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது. பெற்றோர்கள் பெருஞ்சிரத்தை காட்டுவதற்குப் பதிலாக எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் உறுதியாக இவ்வாறு அவர்களுக்கு கூறலாம். "வீட்டுவேலை என்பது உங்களது பொறுப்புக்குட்பட்ட விடயம். எங்களுக்கு அதில் என்ன வேலை இருக்கிறது.?'

வீட்டுவேலைகளுக்கு ஆரம்ப வகுப்புக்களில் அளவுக்கு மீறிய பெறுமதி கொடுப்பது அவசியமற்றது. பெரும்பாலான நல்ல பாடசாலைகள் குழந்தைகட்கு வீட்டு வேலைகளை வழங்குவதில்லை. இந்த மாணவர்களும் கூட ஆறு ஏழு வயதுகளில் பெருமளவு வீட்டு வேலைகளுடன் மாரடிக்கும் குழந்தைகளைப் போல அதே அறிவும் திறமையும் உடையவர்களாக இருப்பதைக் காணலாம். வீட்டு வேலைகளின் முக்கியத்துவம் என்னவென்றால்,அவர்கள் சுயமாக தம்பாட்டில் தமது வேலைகளைச் செய்வதற்கு அது பயிற்சி தருகிறது என்பதேயாகும். ஆயினும், இந்தப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு வழங்கப்படும் வீட்டு வேலைகள் தரம் பிரிக்கப்பட்டு அவர்களது சக்திக்குட்பட்டதாக, பிறரது சிறிய உதவியுடன் செய்யப்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

நேரடியாக உதவி செய்வது குழந்தை தன்னால் தன்பாட்டில் எதையுமே செய்ய முடியாது என்று நம்புவதற்கு மட்டுமே உதவும். ஆயினும் மறைமுகமான உதவிகள் பயனுள்ளவையே. உதாரணமாக குழந்தைக்கு ஒரு தனிப்பட்ட மேசை, வேறு தேவையான புத்தகங்கள் ஆகியவற்றை வழங்குவது ஒரு மறைமுக உதவியாகும்.

பருவகால நிலைகளைப் பொறுத்து ஒரு குழந்தை வீட்டு வேலையைச் செய்ய உகந்த நேரம் என்ன என்று புரிந்து கொள்வதில் அதற்கு நாம் உதவி செய்யலாம். வேனில் கால மாலை நேரங்களில் வீட்டு வேலை செய்வதற்கு முதல் விளையாடவே குழந்தைகள் விரும்புவர். குளிர் காலங்களில் அல்லது மழை நாட்களில் வீட்டுவேலைகளை முதல் செய்து விட்டு ரி.வி.பார்த்தல் போன்றவற்றுக்குப் பிள்ளைகள் போகலாம்.
சில குழந்தைகள், வீட்டு வேலைகளைச் செய்யும் போது யாராவது ஒரு பெரியவர்



அருகில் இருப்பதை விரும்பக்கூடும். இவ்வேளைகளில் குசினியிலுள்ள ஒரு மேசையையோ சாப்பாட்டறையிலுள்ள மேசையையோ வீட்டு வேலை செய்ய உபயோகிப்பதற்கு அனுமதிக்கலாம். ஆயினும் இவ்வாறான சந்தர்ப்பங்களில், எப்படி இருப்பது, எப்படி ஒழுங்காக நடந்து கொள்வது, அங்குள்ள தளபாடங்கள் குறித்து எப்படிக் கவனமாக இருப்பது என்பது குறித்து நாம் ஒரு சில அபிப்பிராயங்களைத் தெரிப்பது தேவைப்படலாம்.

சில குழந்தைகள் பென்சிலைச் சூப்பும் போது, தமது தலையைச் சொறியும் போது அல்லது கதிரையில் (இரண்டு காலில்) ஆடும் போது தமது வேலைகளைச் சிறப்பாகச் செய்பவர்களாக இருக்கிறார்கள். இவை குறித்து எமது விமர்சனங்களும், இவற்றைத் தடுக்க முயலும், எமது நடவடிக்கைகளும் அவர்களை விரக்தியுறச் செய்வதுடன் அவர்களது மூளை வேலையையும் குழப்பி விடுகின்றன.

குழந்தைகளின் வீட்டு வேலைகள் இடையில் கேள்வி கேட்பதன் மூலமாகவோ பிழைகளை இடையில் சுட்டிக் காட்டுவதன் மூலமாகவோ குழப்பக்கூடாது. நாம் ஆதரவாகவும், உதவியாகவும் இருக்க வேண்டுமே ஒழிய அறிவுறுத்துபவர்களாகவும் திருத்த முனைபவர்களாகவும் இருக்கக்கூடாது. இவ்வாறான அபிப்பிராயங்களைச் சொல்லவே கூடாது.

'உனக்கு ஒழுங்கான புத்தியிருந்தால் உனது வீட்டுவேலை ஞாபகம் இருந்திருக்குமே. ஆசிரியர் படிப்பிக்கும் போது கவனித்திருந்தால் இப்போது வீட்டுவேலை செய்வது ஒன்றும் கஷ்டமாக இராது.'

எமது உதவி பகிர்ந்து கொள்ளப்படும் ஒன்றாகவும் ஆதரவுடன் செய்யப்படுவதாகவும் இருக்க வேண்டும். நாம் சொல்லிக் கொடுப்பதை விட அவர்கள் சொல்வதை அதிகம் கேட்க வேண்டும். நாம் பாதையை மட்டுமே காட்ட வேண்டும். குழந்தை தானே பாதையை தனது சொந்தப் பலத்துடன் நடந்து முடிக்க வேண்டும்.

பாடசாலையைப் பற்றியும் ஆசிரியரைப் பற்றியும் பெற்றோர் கொண்டிருக்கும் அபிப்பிராயம், குழந்தையின் வீட்டு வேலைகள் பற்றிய அக்கறையில் செல்வாக்குச் செலுத்தும். பெற்றோர் ஆசிரியரை சிறுமைப்படுத்தியோ, கண்டித்தோ பேசும் பழக்கம் கொண்டவர்களாக இருந்தால் குழந்தைகள் தெளிவான முடிவுக்கு வந்து விடுவார்கள். பெற்றோர், ஆசிரியரது வீட்டு வேலை தொடர்பான நிலைப்பாடு கருத்து என்பவற்றைப் பொறுத்து அவரது கருத்துக்கு ஆதரவாக இருக்க வேண்டும். ஆசிரியர் கண்டிப்பானவராக இருந்தால் பெற்றோர் குழந்தைகள் மீது ஆதரவாக இருக்க அது வாய்ப்பளிக்கிறது.

'இந்த வருஷம் உண்மையிலேயே லேசான வருஷமில்லை என்ன? நிறைய வேலை'
'ஆசிரியர் சரியான கண்டிப்பானவர் என்பது உண்மை தான்.'
'அவர் நிறைய வேலை வாங்குகிறார் என்று தான் கேள்விப்பட்டேன்.'
'அவர் வீட்டு வேலைகளில் சரியான கண்டிப்பானவர் தானாம். இந்த முறை நிறைய வேலை இருக்கும் எண்டு நான் நினைக்கிறேன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருநாளும் வீட்டு வேலைக்காக எரிந்து விழுவது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

'இஞ்ச பார் றெஜி, இப்பவிலை இருந்து இனி ஒவ்வொரு நாளும் பின்னேரம் நீ எழுத்துக் கூட்டல் பாடமாக்க வேண்டும். சனி ஞாயிறு நாட்களிலும் தான். இனி விளையாட்டோ ரி.வியோ ஒன்டும் பின்னேரங்களிலை கிடையாது.'

'இஞ்சபார்.உனக்கு வீட்டு வேலையை ஞாபகப்படுத்தி நான் களைத்துப் போனேன்.நீ என்ன செய்கிறாய் எண்டு அப்பா ஒருக்கால் பார்க்கத்தான் போகிறார்... ... எங்கடை குடும்பத்திலை எங்களுக்கு முட்டாள்கள் தேவையில்லை.'

மிரட்டல்களும், நச்சரிப்புக்களும் மிகவும் சாதாரணமாக நடக்கின்றன. ஏனெனில், இதன் மூலமாக எதையாவது செய்து விடலாம் என எல்லோரும் நம்புகிறார்கள். ஆனால் உண்மையில் அவை வெறுமனே பயனற்றவை மட்டுமல்ல மோசமானவையும் கூட... இவை ஒரு அசௌகரியமான சூழலையே உருவாக்குகின்றன. இவை எரிச்சலூட்டப்பட்ட பெற்றோர்களையும்,ஆத்திரமூட்டப்பட்ட குழந்தைகளையும் தான் உருவாக்குகின்றன.

## இசை அல்லது சங்கீத வகுப்புக்கள்

ஒரு குழந்தை இசைக்கருவி ஒன்றைப் பழகிக் கொண்டிருக்கும் காலங்களில் வழமையாகப் பெற்றோர்கள் கேட்கக்கூடிய ஒரு சங்கீதம் தான் 'எனக்குப் பழக விருப்பமில்லை... இனி நான் வகுப்புக்குப் போகமாட்டேன்' என்பது. இந்த முணுமுணுப்புச் சங்கீதத்தை ஒரு சரியான குறிக்கோளுடன் அணுகுவது என்பது ஒன்றும் இலேசான காரியம் அல்ல.

சில பெற்றோர் தமது சிறுபராயத்தில் தம்மீது திணிக்கப்பட்ட இசை வகுப்புக்களை ஞாபகப்படுத்திக் கொள்வதனால் தமது குழந்தைகளுக்கு ஏற்படும் நெருக்கடிகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். இசைக்கருவி வாசித்துப் பழகுவதோ பழகாமல் விடுவதோ அவர்களது பிரச்சினை அல்ல. அது குழந்தையின் பிரச்சினை ஆகும். இவ்விடயத்தில் வீட்டில் வாசித்துப் பழகுவதா அல்லவா என்பதை குழந்தை தானே தீர்மானிக்க அனுமதிக்கப்பட வேண்டும். அது தனக்கு விருப்பமான போது பழகுகிறது, விருப்பமில்லாத போது தமது வகுப்புக்களைத் தானே ரத்துச் செய்தும் கொள்கிறது. பணம் கொடுத்துப் படிக்கச் செல்லும் ரியூசன் வகுப்புக்களைத்தவிர (பெற்றோரின் கவனிப்பில் தங்கியுள்ளது) இசைக் கருவிகளை வாசித்துப் பயிற்சி செய்வது குழந்தையின் பொறுப்புணர்வுடன் சம்பந்தப்பட்டதாகும்.

தமது சிறுபராயத்து வாழ்க்கை அளவுக்கு மீறிய விட்டுக்கொடுப்பு நிறைந்ததாக இருந்ததால் பாழாகிப்போன தமது இசைக்கல்வி அனுபத்தையிட்டு வேறுசில பெற்றோர்கள் கழிவிரக்கம் கொள்பவர்களாக இருக்கின்றனர். இதனால்,என்ன நடந்தாலும் சரி, பிள்ளைகள் பயிற்சி செய்து தான் ஆக வேண்டும் என்று கருதுகிறார்கள். குழந்தை பிறப்பதற்கு முன்பே அது எந்த இசைக்கருவியைப் பழக வேண்டும் என்பதை அவர்கள் தீர்மானித்து விடுகிறார்கள். குழந்தை ஒரு புல்லாங்குழலை ஒழுங்காகப் பிடிக்கத் தெரிந்து கொண்டாதலோ அல்லது ஒரு பியானோவின் கட்டைகளை அழுத்தும் சக்தி பெற்றுவிட்டாலோ போதும் அவர்களுக்கு உடனே தாம் முன்மூட்டியே தீர்மானித்த



கருவியில் பயிற்சி செய்வதற்கான வேலையை தொடங்கி விடுகிறார்கள். குழந்தையின் கண்ணீரோ, அடம்பிடித்தலோ கணக்கெடுக்கப்படமாட்டா. அதன் எதிர்ப்புணர்வு அடக்கப்பட்டு விடும்.பெற்றோரின் செய்தி பலமாகவும் உறுதியாகவும் இருக்கும்: 'நாங்கள் காசு கொடுக்கிறோம், நீ பழக வேண்டும்.'

இத்தகைய நிலைமைகளின் கீழ் ஒரு குழந்தை இசைக்கல்வியில் ஆற்றல் பெறவும் கூடும். பெறாமல் விடவும் கூடும். ஆனால் இதனால் ஏற்படும் மொத்த விளைவுகள் மோசமானவை. இதன் முடிவு குழந்தைகட்கும் பெற்றோருக்குமிடையில் தொடர்ச்சியான அன்னியோன்னியமற்ற உறவை ஏற்டுத்துமானால் அது குழந்தை பெற்றுள்ள இசை ஆற்றலை விட அதிகளவுக்கு பெறுமதி வாய்ந்த ஒரு இழப்பாகும்.

இளமைக்கால இசைக்கல்வியின் பிரதான நோக்கம், குழந்தைகள் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு வினைத்திறன்மிக்க வழிமுறையை அவர்களுக்கு வழங்குவதாகும். குழந்தையின் வாழ்க்கையானது பெருமளவுக்கு கட்டுப்பாடுகளும் ஒழுங்குவிதிகளும் கொண்டதாகவும் விரக்தியூட்டுவதாகவும் இருப்பதால் அத்தகைய ஒரு ஊடகம் அவர்களது மன உணர்வை வெளிப்படுத்த அவசியமாயிருக்கிறது. இசை, மன உணர்வுகளை இலகுவாக வெளியிடச் சிறந்த ஒரு சாதனமாகும்.அது கோபத்தின் ஒலியை, சந்தோசத்திற்கு ஒரு வடிவை, மன அழுத்தங்களுக்கு விடுதலையை வழங்குகிறது. பெற்றோர்களோ, ஆசிரியர்களோ இசைக்கல்வியை பெரும்பாலும் இந்தக் கண்ணோட்டத்திற் பார்ப்பதில்லை. பெரும்பாலும் அவர்கள் இசைச் சுரங்களை மீள ஒப்பிக்கும் திறமை பற்றியே அதிக கவனம் செலுத்துகிறார்கள்.

இந்த அணுகுமுறை குழந்தையின் செயற்திறன் மற்றும் அதன் ஆளுமை என்பவை பற்றிய மதிப்பீட்டையும், விமர்சனத்தையும் உள்ளடக்குவதாயுள்ளது. இதன் விளைவு மிகவும் துயரம் தரும் விதத்தில் வெளிப்படுகிறது. குழந்தை வகுப்புக்களைக் கைவிட எத்தனிக்கிறது. ஆசிரியரைச் சந்திப்பதைத் தவிர்க்க முயல்கிறது. தனது இசை தொடர்பான ஈடுபாட்டையே விட்டுவிட முயல்கிறது. பெரும்பாலான வீடுகளில் மூலையில் வீசப்பட்டிருக்கும் ஒரு புல்லாங்குழலோ, தூசி பிடித்திருக்கும் ஒரு ஃபிடிலோ, அல்லது பூட்டி வைக்கப்பட்டிருக்கும் ஒரு பியானோவோ, இத்தகைய விரக்தி வாய்ந்த முயற்சிகளினதும், நிறைவேறாத நம்பிக்கைகளதும் கவலை தரும் சாட்சிகளாக இருப்பதைக் காணலாம்.

பெற்றோர்கள் என்ன செய்யலாம்? பெற்றோர்களின் வேலை என்னவென்றால், அக்கறையும் அன்பும் வாய்ந்த ஒரு ஆசிரியரை, இவற்றை மட்டுமல்ல தனது மாணவர்களையும் தெரிந்து கொண்டுள்ள ஒரு ஆசிரியரைக் கண்டு பிடிப்பதேயாகும். ஆசிரியர் தான் குழந்தையிடம் இசைக்கல்வி மீதான ஆர்வம் ஏற்படுவதற்கான திறவுகோலாக இருக்கிறார். அவருக்குத் தான் அதன் எதிர்கால வாய்ப்புக்களைத் திறக்கவோ மூடிவிடவோ முடியும்.

ஆசிரியரின் முக்கியமான கடமை என்னவென்றால் குழந்தையின் மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதாகும். அவர் அதில் தவறுவாராயின், அவர் தனது விளக்கங்களில் வெற்றி பெற முடியாது. தான் வெறுக்கும் ஒரு ஆசிரியரிடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையை விரும்புவதற்குக் கற்றுக் கொள்ள ஒரு குழந்தையால் முடியாது. ஆசிரியரின் உணர்வு பூர்வமான குரல், அவரது எல்லா இசைக்கருவிகளையும் விட பலமான எதிரொலியை எழுப்ப வல்லது.

தவிர்க்கப்படக்கூடிய பிரச்சினைகளைத் தடுப்பதற்கு ஆசிரியர், பெற்றோர், பிள்ளை ஆகிய மூவரும் சேர்ந்து கலந்தாலோசித்து சில அடிப்படை விதிகளுக்கு உடன்பட்டு வர வேண்டும்.
1. முன்கூட்டிய, ஆகக் குறைந்தது ஒரு நாளாவது முன்கூட்டிய அறிவிப்பு இல்லாமல் வகுப்புக்களை ரத்துச் செய்யக் கூடாது.
2. ஒரு ஆசிரியருடனான சந்திப்பு ரத்துச் செய்யப்பட வேண்டுமானால் அதைச் செய்வதற்கு ஆசிரியருடன் தொடர்பு கொள்ள வேண்டியது பெற்றோர் அல்ல. பிள்ளையே தான்.
3. இசைப்பயிற்சி செய்வதற்கான நேரத்தையும் இடத்தையும் தெரிவு செய்வதற்கு நடைமுறை சார்ந்த வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். இத்தகைய விதிமுறைகள் கடைசி நேரத்து மனஉந்துதலின் காரணமாக வகுப்பை ரத்துச் செய்யும் போக்கைக் குறைப்பதுடன் குழந்தையின் சுதந்திரம் மற்றும் பொறுப்புணர்வு பற்றிய உணர்வுகளை ஊக்குவிக்கிறது. அதே வேளை இந்த விதிமுறைகள், குழந்தைகள் இசையைக் கற்பதில் ஆர்வமாயுள்ளவர்கள் என்ற போதும் அதை விட அதிகளவு ஆர்வத்தை அதன் சொந்த உணர்வுகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாக நாம் கொண்டிருக்கின்றோம் என்ற செய்தியையும் குழந்தைக்கு வழங்குகின்றன.

பயிற்சி செய்வது தொடர்பாக ஒரு குழந்தை நச்சரிக்கப்படக் கூடாது.இசைக்கருவி எவ்வளவு விலை உயர்ந்தது என்பது பற்றியோ, அதனை வாங்குவதற்காக தகப்பனார் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறார் என்பதையோ ஒரு போதும் குழந்தைக்கு ஞாபகப்படுத்தக் கூடாது. இத்தகைய பேச்சுக்கள் குற்ற உணர்ச்சியையும் எதிர்ப்புணர்வையும் தோற்றுவிக்கின்றன. இத்தகைய பேச்சுக்கள் இசை உணர்வையோ ஆர்வத்தையோ உருவாக்கக் கூடியவையல்ல.
'நீ அவற்றைப் பயன்படுத்துவாயானால், உன்னுடைய திறமை அற்புதமாக இருக்கும்.'
'நீ கொஞ்சம் கவனமெடுத்தால், இன்னொரு லோனார்ட் பேர்ன்ஸ்ரீன் (Leonard Beinstein) ஆக வர முடியும்.'
இவ்வாறான சந்தர்ப்பங்களில், இத்தகைய அபிப்பிராயங்களை அப்படியே பேணுவதற்குரிய இலகுவான வழி அவற்றைப் பரீட்சித்துப் பார்க்காமல் இருப்பது தான் என்று குழந்தை முடிவு கட்டக்கூடும்.
குழந்தை இவ்வாறு நினைக்கக்கூடும்:
'நான் முயற்சி செய்யாவிட்டால் ஒரு போதும் தோற்றுப் போகமாட்டேன்.'
தனது கஷ்டங்கள் புரிந்து கொள்ளப்படுகின்றன, தான் பாராட்டப்படுகிறேன் என்று ஒரு குழந்தை கருதும் பட்சத்தில் அது நன்றாக ஊக்கமூட்டப்பட்ட உணர்வைப் பெறுகிறது.

ரோசலின் தனது மூன்றாவது பியானோ வகுப்பின் போது ஒரு புது விடயத்தைக் கற்க வேண்டியிருந்தது. தனது இரு கரங்களாலும் எட்டாவது சுரத்தைப் போட வேண்டியிருந்தது. ஆசிரியர் மிகவும் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் அவளுக்குச்



செய்து காட்டினார். 'பார் இது மிகவும் இலேசானது... இப்போது செய் பார்ப்போம்.' தயக்கத்துடனும், ஒழுங்கற்ற விதத்திலும் ரோசலின் தனது ஆசிரியரைப் பின்பற்ற முயற்சி செய்தாள். அது சரியாக வரவேயில்லை. விட்டிற்கு வரும் போது அவள் மிகவும் சோர்ந்து போயிருந்தாள்.

வீட்டில் பயிற்சி செய்கையில் 'ஒரு கையால் எட்டுச் சுரங்களையும் போடுவது சரியான கஷ்டம். இரண்டு கைகளால் செய்வது அதையும் விடக் கஷ்டமானது தான்' என்று அவளது தாய் கூறினாள். ரோசலின் அதை உடனே ஏற்றுக் கொண்டாள். மிகவும் ஆறுதலாக ரோசலின் சரியான சுரங்களைக் கண்டுபிடிக்க முயற்சித்தாள்.தாய் சொன்னாள் 'சரியான சுரம் எனக்குக் கேட்கிறது... நீ சரியான கட்டையில் விரலை வைக்கிறாய்... அப்படித்தான் ' என்றாள். உற்சாகமூட்டப்பட்டவளாய் திருப்தியுடன் ரோசலின் பதிலளித்தாள்.'இது சரியான கஷ்டம் தான்' என்று. அவள் வழமையை விட அதிகமான அளவு நேரம் பயிற்சி செய்தாள். அந்த வாரம் முழுக்க அவள் தனக்குள் திடசங்கற்பம் பூண்டவளாய் முழுமையாக கண்களை மூடியபடி எட்டுச் சுரங்களையும் வாசிக்கப் பழகும் வரை திருப்தி அடையவேயில்லை.
குழந்தை தன்னுடைய கஷ்டங்கள் மிகவும் ஆதரவுடனும் புரிந்துணர்வுடனும் அணுகப்படும் போது மிகவும் உற்சாகமூட்டப்பட்டதான உணர்வைப் பெற்றுக் கொள்கிறது. ஆலோசனை வழங்கல், புகழ்ச்சி, உடனடித்தீர்வு வழிமுறைகள் போன்றவற்றை விட அதிக உற்சாகத்தை இது கொடுக்கிறது.

## செலவுப்பணம்

நவீன குடும்பங்களில் குழந்தைகளுக்கு அவர்களும் குடும்பத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில் உணவு-உடை போன்றவற்றிற்கான பணம் (Allowance) வழங்கப்படுவதுண்டு. இந்தக் கொடுப்பனவு ஒரு குழந்தை நல்ல பிள்ளையாக நடந்து கொண்டதற்காக வழங்கப்படுகின்ற ஒரு பரிசுத்தொகையோ அல்லது அதன் சாதனைகட்கான ஒரு கொடுப்பனவோ அல்ல. இது குழந்தைக்கு கல்வியூட்டுவதற்கான ஒரு குறிப்பான நோக்கத்தைக் கொண்ட செயற்பாடாகும். அதாவது குழந்தைக்குப் பொருட்களைத தெரிவு செய்தல், பொறுப்புடன் நடந்து கொள்ளல் என்பவற்றினூடாக பணத்தைப் பயன்படுத்துவதில் அனுபவத்தை வழங்குவதற்கான ஒரு செயற்பாடே இதுவாகும். எனவே கொடுக்கப்படும் செலவுத் தொகை பற்றிய மட்டு மீறிய கண்காணிப்புச் செய்தல் அவசியமில்லை. இது இத்தொகையை வழங்கும் நோக்கத்தையே குலைத்து விடும்.

உண்மையில் செய்யப்பட வேண்டியது என்னவென்றால், செலவு செய்தல் பற்றிய பொதுவான அடிப்படைக் கொள்கை ஒன்றை உருவாக்கிக் கொள்வதும், அந்தக் கொடுப்பனவிற்குள் எந்தெந்த விடயங்கள் செய்யப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவிப்பதும் மட்டுமேயாகும். உதாரணமாக பாடசாலைக்குப் போவதற்கான பஸ் கட்டணம், மதிய போசனம், பாடசாலைக்குக் கொடுக்க வேண்டிய கொடுப்பனவுகள் போன்றவை. குழந்தை வளர வளர மேலதிகச் செலவுகளையும் பொறுப்புகளையும் இணைத்துக் கொள்வதற்காக இந்தத் தொகையை அதிகரிக்கலாம். அங்கத்துவப் பணம், பொழுதுபோக்குச் செலவீனம் உடுதுணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை இத்தகைய மேலதிகச் செலவீனங்களாகும். இந்தக் கொடுப்பனவு எமது வரவு செலவுக்குக் கட்டுப்படியானதாக இருக்க வேண்டும். அயல் வீட்டு கொடுப்பனவுகள் எப்படி இருப்பினும், நாம் எமது வரது செலவுக்குள் கொடுக்கப் படக்கூடிய தொகையை விட அதிகமாகக் கொடுக்க முயலக்கூடாது.

குழந்தை அதிகமாகத் தரும்படி கேட்குமானால், அதற்கு நாம் இவ்வாறு சொல்லலாம். 'உங்களுக்கு அதிகமாகத் தரத்தான் நாம் விரும்புகிறோம். ஆனாலும் எமது மாதாந்த வருமானம் இதற்கு மேல் தர அனுமதிக்கவில்லை.' இந்த அணுகுமுறை, குழந்தைக்கு இதற்கும் அதிகமாகப் பணம் தேவையில்லை என்று கூறி ஏற்றுக் கொள்ள வைக்க முயல்வதனைவிடச் சிறந்த அணுகுமுறையாகும்.

பணமும் அதிகாரத்தைப் போலவே, அனுபவம் அற்றவர்களால் மிகவும் சாதாரணமாகவே தவறாகக் கையாளப் படக்கூடிய ஒன்றாகும். கொடுப்பனவுகள் ஒரு போதும் குழந்தைகளால் சாமாளிக்க முடியாத அளவுக்கு அதிகமாக கொடுக்கப்படக் கூடாது. அளவுடன் ஆரம்பித்து அதை காலத்துக்குக் காலம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துச் செல்லலாம். பணத்தை எண்ணவும் மாற்றிக் கொள்ளவும் கற்றுக் கொண்டதும் அதிகமாக வழங்கப்படத் தொடங்கலாம். கொடுப்பனவுகளில் ஒரு விடயம் முக்கியமானதாகும். அதாவது வழங்கப்படும் கொடுப்பனவுகளின் நிலையான செலவுகள் போக எஞ்சும் சிறிய பகுதி குழந்தைக்குரிய பணமாகும். அதைச் சேமிப்பதற்கோ செலவு செய்யவோ குழந்தைக்கு உரிமை உண்டு.

## நண்பர்களும் விளையாட்டுத் தோழர்களும்

கோட்பாட்டு ரீதியில் சொல்வதானால், நாங்கள் எமது குழந்தைகள் தமது நண்பர்களைத் தாமே தேடிக்கொள்வதையே விரும்புகிறோம். நாம் சுதந்திரத்தை நம்புகிறோம்: அடக்குமுறைகளை எதிர்க்கிறோம். அத்துடன் ஜனநாயக சமூகத்தில் சுதந்திரமாக உறவு கொள்ளுவது ஒரு அடிப்படை உரிமை என்பதையும் நாம் அறிவோம். ஆனால், எமது குழந்தை அடிக்கடி வீட்டுக்கு அழைத்து வரும் 'நண்பர்கள்' எரிச்சலூட்டுபவர்களாக இருக்கிறார்கள். குழந்தைகள் சண்டித்தனம் காட்டுதலையோ ஏசுதலையோ நாம் விரும்பாமல் இருக்கலாம். ஆனால், அவர்களது நடத்தைகள் உண்மையாகவே மோசமானதாக எமக்குத் தோன்றாத வரை எமது குழந்தையின் விருப்பத் தேர்வு என்ன என்பதையும், அதைக் கவர்வது என்ன என்பதையும், புரிந்து கொண்ட பின்னர் அதன் நண்பர் தெரிவு தொடர்பாக நாம் தலையிடுவது சிறந்ததாகும்.

எமது குழந்தையின் நண்பர்கள் தெரிவு பற்றி மதிப்பிடுவதற்கு நாம் எந்த அளவு கோலைப் பயன்படுத்துவது? நண்பர்கள் மத்தியில் ஒருவருக்கொருவர் பயனுடையவர்களாகவும் ஒருவரை ஒருவர் திருத்தக்கூடிய செல்வாக்கை ஏற்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். ஒரு குழந்தைக்கு தனது சுபாவத்துடன் வேறுபடுகின்ற, ஒத்துப் போகின்ற சுபாவம் உள்ளவர்களுடன் பழகும் வாய்ப்புக்கள் தேவை. ஒதுங்கிப் போகும் சுபாவமுள்ள குழந்தைகளுக்குப் பொதுவாக விட்டுக் கொடுக்கின்ற சுபாவமுள்ள நண்பர்களின் நட்புத் தேவை. பெருமளவு கதைகளிலும், கற்பனைகளிலும் அளவுக்கதிகமான மிதக்கும் குழந்தைகட்கு கற்பனை வளமற்ற



குழந்தைகளின் செல்வாக்குத் தேவைப்படுகிறது. ஒரு சண்டை பிடிக்கும் சுபாவமுள்ள குழந்தையை அதைவிட பலமான ஆனால், சண்டை பிடிக்கப் போகாத விளையாட்டுத் தோழர்களுடன் விளையாட விட்டுப்பார்க்கலாம். எமது நோக்கமெல்லாம் குழந்தையின் பழக்க வழக்கங்களை, தனது சுபாவத்திற்கு நேரெதிராக சுபாவமுள்ளவர்களுடன் பழக விடுவதன் மூலமாக திருந்திக் கொள்வதற்கு உற்சாகப் படுத்துவதேயாகும்.

சில உறவுகள் அவசியமாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டியவை. குழந்தைத்தனமான குழந்தைகள் ஒன்றுக்கொன்று முதிர்ச்சியின்மையையே ஊட்டுவார்கள். சண்டைபோடும் குழந்தைகள் ஒருவருக்கொருவர் சண்டைபோடும் சுபாவத்தை வளர்த்து விடுவார்கள். ஒதுங்கிப்போகும் குழந்தைகள் போதியளவுக்கு விட்டுக் கொடுத்து வாங்கும் சமூகப் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ள மாட்டார்கள். குற்றமிழைக்கும் குழந்தைகள் மற்றவருடைய சமூகத்திற்கு எதிரான போக்குகளை மேலும் வளர்த்துவிடவே செய்வர். மற்றையவர்களிடம் ஆதிக்கம் செலுத்தக்கூடிய 'நண்பர்களிடம்' இருந்து குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கான செல்வாக்கைப் பெறுவதை தவித்துக் கொள்ள விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஏனென்றால், அவர்களுடைய 'அனுபவங்கள்' அவர்களைப் பாடசாலையிலும், அயலிலும் 'ஹீரோக்கள்' ஆக்கிவிடுவதால், அவர்கள் பிழையான வழிகாட்டும் மாதிரிகளாகி விடுகின்றனர். ஒரு குழந்தை தனக்குரிய நண்பர்களைத் தெரிவு செய்து கொள்ளும் பொறுப்புணர்வுக்குரியதாக வருவதற்கு அனுமதிப்பதற்கு ஒரு பொறுப்புக் கொடுத்துப் பார்க்கும் நடைமுறை தேவை. குழந்தையின் நண்பர் தெரிவு பயனுள்ளது என்பதை உறுதி செய்யும் பொறுப்பினை நாம் கொண்டிருக்கும் அதேவேளை குழந்தை இந்த நடைமுறைகளுடாக தனது நண்பர்களைத் தெரிவு செய்ய அனுமதிக்க வேண்டும்.

## செல்லப்பிராணிகளை வளர்த்தல்

ஒரு செல்லப் பிராணியை தான் பொறுப்பெடுத்துக் கொள்வதாக ஒரு குழந்தை கூறும் போது, அது வெறுமனே தனது நல்ல நோக்கத்தை வெளிப்படுத்துகிறது என்பது மட்டுமே அன்றி, அதனால், அது முடியும் என்பதற்கான எந்தச் சான்றுகளையும் அது தருவதாகக் கொள்ள முடியாது. குழந்தை ஒரு வளர்ப்புப் பிராணியை வைத்திருக்க விரும்பவோ, ஆசைப்படவோ கூடும்.

ஆனால் அதனால் அதற்கு அப்பிராணியை கவனமாகப் பாாத்துக் கொள்ளும் ஆற்றல் பெரும்பாலும் இல்லாமலே இருக்கும். ஒரு விலங்கின் உயிர் வெறுமனே குழந்தையின் தனித்த பொறுப்பில் விடப்படக்கூடிய ஒன்றல்ல. விரக்திக்கும் குற்றச்சாட்டுக்கும் ஆளாகாதிருக்க வேண்டும் என்றால், குழந்தைக்கான ஒரு வளர்ப்புப் பிராணி என்பது பெற்றோருக்கு ஒரு செல்லப்பிராணி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். குழந்தை ஒரு செல்லப் பிராணியை வைத்திருப்பதன் மூலமாகவும், அதனுடன் விளையாடுதல் அன்பு காட்டுதல் என்பவற்றின் மூலமாகவும் நிறையச் சந்தோசங்களைப் பெற்றுக் கொள்கிறது. அது பிராணியைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பில் பங்கெடுத்துக் கொண்டாலும், பிராணியின் வாழ்வுக்கும் அதன் நலன்களுக்குமான பொறுப்பு பெற்றோரையே சார்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரமான சொற்றொ_ர்கள்

ஒரு நல்ல பெற்றார், ஒரு நல்ல ஆசிரியரைப் போல குழந்தைகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக தான் தேவைப் படாத ஒருவராக தன்னை மாற்றிக் கொள்வார். அத்தகைய பெற்றோர்கள், குழந்தைகள் தமது சொந்த தெரிவுகளைச் செய்வதையும் தமது சொந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவதையும் உருவாக்கக்கூடிய ஒரு உறவைக் கொண்டிருப்பதில் திருப்தியடையவர். எமது உரையாடல்களின் மூலமாக, குழந்தைகட்குச் சரியான முடிவுகளை எடுப்பதற்கான தகுதி உண்டு என்று நாம் நம்புவதை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். எமது மனதில் அதன் கோரிக்கை ஒன்றிற்கு 'ஆம்' என்று பதில் சொல்லலாம் என்று தோன்றினால், நாம் அதனை குழந்தையின் சுயாதீனத் தன்மையைப் பலப்படுத்தக்கூடிய விதத்தில் சொல்லலாம். சில உதாரணங்கள் :

'நீ விரும்பினால் '
'அது தான் உண்மையாகவே உங்களது விருப்பம் என்றால்.'
'நீங்கள் முடிவு செய்யுங்கள்"
'அது உண்மையாகவே உங்களைப் பொறுத்தது'
' இது முழுக்க முழுக்க உங்களது தெரிவாகும்.'
'நீங்கள் என்ன முடிவெடுத்தாலும் எனக்குச் சந்தோஷம் தான்'

எங்களது 'ஆம்' என்ற பதில் பிள்ளைகளுக்கு நன்றியுணர்வை ஊட்டலாம். ஆனால், மற்றைய வசனங்கள் மேலதிக திருப்தியை அதற்கு ஏற்படுத்தும். அதாவது தனது சொந்த முடிவுகளை எடுப்பதில், நாம் அதன் மீது நம்பிக்கை வைத்திருப்பதை வெளிக் காட்டுவதால் ஏற்படும் திருப்தி.

தமிழில் – எஸ்.கே. விக்னேஸ்வரன்/

# 5.கட்டுப்பாட்டொழுங்கு: அனுமதிக்கக்கூடிய அளவும் அதன் எல்லையும்!

## நவீன நிச்சயமின்மையும் அதன் விளைவும்

கட்டுப்பாட்டொழுங்கு (discipline) தொடர்பாக குழந்தைகளுடனான எமது பாட்டன் பாட்டிமாரது அணுகுமுறைக்கும் எமது அணுகுமுறைக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன? பாட்டனார் எதைச் செய்தாலும் அதை ஒரு அதிகாரத்துடன் செய்தார். ஆனால் நாம் எதையாவது செய்யும் போது அதை ஒருவகைத் தயக்கத்துடன் செய்கிறோம். தவறு செய்கின்ற சந்தர்ப்பங்களில் கூட பாட்டனார்ககள் ஒருவகை உறுதியுடனும், நிச்சயத்துடனும் செயற்படுகிறார்கள். குழந்தைகள் தொடர்பான எமது இந்த நிச்சயமற்ற நிலை எங்கிருந்து வருகிறது? இப்போதெல்லாம் நாம் எல்லோரும் ஃபிராய்ட்டைப் பற்றி - அவரது மனோதத்துவ ஆய்வுகள் பற்றி கேள்விப் பட்டிருக்கிறோம். இவற்றூடாக மனச்சந்தோசமற்ற, கவலையூட்டுகிற இளமைப்பருவம் பிற்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய மோசமான விளைவுகள் பற்றி எல்லாம் நாம் கேள்விப்பட்டுள்ளோம். எனவே எமது குழந்தையைப் பழுதாக்கி விடக் கூடாது என்பதில் நாம் மிகவும் அக்கறை காட்டுகிறோம். கீழேயுள்ள ஒரு தாயின் கடிதம் இதைத் தெளிவாக விளக்குகிறது:

'என்னை மிகவும் ஆழமாகப் பாதிக்கின்ற விடயங்களைப் பற்றி வாய்மொழி மூலமாக என்னை வெளிப்படுத்துவது எனக்கு மிகவும் கடினமாக உள்ளது. எழுதும் போது ஒருவேளை என்னால் இதைத் தெளிவாக வெளிப்படுத்த முடியும் என்று நினைக்கின்றேன். நான் எதையாவது சொல்லாமல் விட்டிருந்தாலும் கூட அதையும் உங்களால் எனது வரிகளுக்கிடையே படித்துப் புரிந்து கொள்ள முடியும் என்று எனக்குத் தெரியும். எமது தேவாலயத்திற்கு வந்து, பெற்றோர்களுடன் கலந்துரையாடற் குழுக்களை நீங்கள் மிகவும் கருணை கூர்ந்து செய்திருந்தீர்கள். நான் குழந்தை வளர்ப்புப் பற்றிப் போதியளவு படித்தவளாக இல்லாததால் இந்தக் கலந்துரையாடல் எனக்கு அவ்வளவாகத் திருப்தியூட்டவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நீங்கள் அங்கு தெரிவித்த ஒரு கருத்து என்னை மிகவும் ஆட்கொண்டு விட்டது. அதாவது எந்த ஒரு பெற்றோரும் திட்டமிட்டுத் தமது குழந்தையின் உணர்வையோ, மனதையோ, நடத்தையையோ சீர்குலைக்கும் நோக்கத்துடன் எதையும் செய்வதில்லை. ஆனால் நாம் அவற்றை எம்மையறியாமலே செய்கிறோம். நான் யோசிக்காமற் சொன்ன சொற்களுக்காகவும், செய்த செய்கைகட்காகவும் அடிக்கடி என்னுள் அழுவதுண்டு. இத்தகைய செயலை இன்னொரு தடவை செய்து விடக்கூடாது என்று நான் ஆண்டவனை வேண்டிக் கொள்வேன். இச்செயல்கள் திரும்பச் செய்யப்படாமல் இருக்கலாம்.
ஆனால் அதேயளவு பாதிப்பைத் தரக்கூடிய இன்னொரு விடயம் பதிலுக்கு செய்யப்பட்டு விடுகிறது. எனது குழந்தையை வாழ்நாள் பூராவும் காயப்படும்படி செய்து விட்டேன் என்று நான் உணரும் வரை இது தொடர்கிறது.' இந்தத்தாயின் அர்ப்பணிப்பிலும் உண்மைத் தன்மையிலும் யாரும் சந்தேகப்பட முடியாது. ஆனால் இவள் தனது குற்றவுணர்வைக் குறைத்துக் கொண்டு செயல் நேர்த்தி உள்ளவளாக தன்னை மாற்றிக் கொள்வாளேயானால், மிகவும் பயனுள்ளவளாக இருக்க முடியும். இதை இன்னும் விளக்குவதாயின் கைமுறிந்த ஒரு நோயாளியைக் காணும் போது கதறுகின்ற அல்லது இரத்தத்தைக் கண்டதும் மயங்கி விழக்கூடிய ஒரு வைத்தியரால் எமக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என்று நாம் நம்ப முடியாது.

ஒரு வைத்தியரிடம் நாம் எதிர்பார்ப்பதெல்லாம், தொழில் ரீதியான திறைமையையும் கொஞ்சம் அனுதாபத்தையும் தான். உணர்ச்சி வசப்படுகின்ற சாதாரண ஒரு நபரை நாம் அவரிடம் எதிர்பார்ப்பதில்லை. அவ்வாறே குழந்தைகளின் முதிர்ச்சியின்மையை அணுகுவதற்குரிய தொழில் ரீதியான திறமையினை ஓரளவுக்குப் பெற்றோர்கள் கற்றுக் கொள்ள முடியும். பெருமளவுக்கு உணர்ச்சி வசப்படாமல் விடயங்கள் கையாளப்படும் போது பெரும்பாலான ஒழுக்கக் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகள் தீர்ந்து விடுகின்றன. மட்டுமீறிய உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கையாளும் போது பிரச்சினைகள் பெரும் பிரச்சினைகளாகி விடுவதுடன் பல காலங்களுக்குப் பெற்றோர்களையும் பிள்ளைகளையும் பாதிக்கவும் கூடும்.

## பெற்றோரின் தேவைகளும் குழந்தைகளின் கொடுங்கோன்மையும்

ஒரு பெற்றார் தனது குழந்தையை விரும்ப வேண்டும். ஆனால் ஒரு நாளில் ஒவ்வொரு நிமிடமும் குழந்தைகள் தன்னை விரும்ப வேண்டும் என்று அவர் ஒரு போதும் எதிர்பார்க்கக்கூடாது. தமது திருமணத்திற்கு நியாயம் காணவும் அல்லது தமது வாழ்விற்கு அர்த்தம் காணவும் குழந்தையின் அன்பை இழந்து விடுவோமோ என்ற அச்சத்தில் அவர்கள் குழந்தைக்கு எதையும் மறுப்பதில்லை. பெற்றோரின் அன்புப் பசியைப் புரிந்து கொள்கிற குழந்தை அதை நன்றாகவே இரக்கமற்ற விதத்தில் துஷ்பிரயோகம் செய்யக் கற்றுக் கொள்கிறது. அவர்கள் அன்புள்ள சேவகரிடம் ஆட்சி செலுத்துகின்ற கொடுங்கோன்மையாளராக மாறிவிடுகின்றனர்.

பெரும்பாலான குழந்தைகள் தாம் தம் விருப்பத்தை விட்டு விடுவதாகக் கூறி தாய்மாரை எப்படியெல்லாமோ மிரட்டுகிறார்கள். அவர்கள் கூறுவார்கள்:-'நீங்கள் அதைச்



செய்யாவிட்டால் நான் உங்களை விரும்பமாட்டேன்...' குழந்தையின் மிரட்டல் அல்ல இங்குள்ள சோகம். பெற்றோர்கள் இதற்கு மிரண்டு விடுவது தான் உண்மையில் பெரிய சோகமாகும். சில பெற்றோர்கள் குழந்தைகளின் சொற்களால் நன்றாகவே பாதிக்கப்பட்டு விடுகிறார்கள். இவர்கள் அழுதும் மன்றாடியும் தன்னை விரும்புமாறு குழந்தைகளிடம் கேட்கிறார்கள். அளவுக்குமீறிய விட்டுக் கொடுப்பின் மூலமாக அவர்கள் குழந்தைகளை அமைதிப்படுத்த முயல்கிறார்கள்.

## விட்டுக்கொடுப்பும் மட்டுமீறிய விட்டுக்கொடுப்பும்

விட்டுக்கொடுப்பு, மட்டுமீறிய விட்டுக்கொடுப்பு என்பவை எவற்றைக் குறிக்கின்றன? விட்டுக்கொடுப்பு குழந்தையின் குழந்தைத் தனத்தை ஏற்றுக் கொள்ளும் மனோபாவமாகும். இது 'பையன்கள் பையன்களாகத்தான் இருப்பார்கள்' என்று ஏற்றுக் கொள்வதாகும். அதாவது, குழந்தையின் உடம்பிலிருக்கும் ஒரு துவைத்த சுத்தமான உடை நீண்ட நேரம் அப்படியே சுத்தமாக இருக்காது, குழந்தைகள் நடப்பதற்குப் பதில் ஓடுவதையே தமது இயல்பாகக் கொண்டிருப்பார்கள். மரங்கள் இருப்பது ஏறுவதற்கும் கண்ணாடி இருப்பது முன்னால் நின்று, முகத்தை விதம் விதமாக நெளித்துப் பார்ப்பதற்கும் தான் என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்பதை ஏற்றுக் கொள்வதாகும்.

விட்டுக்கொடுத்தலின் அடிப்படையான உண்மை என்னவென்றால், குழந்தைகட்கும் எல்லாவிதமான விருப்பங்களையும் உணர்வுகளையும் கொண்டிருக்க உரிமை உண்டு என்பதனை ஏற்றுக் கொள்வதாகும். விரும்புவதற்கான சுதந்திரம் முற்றுமுழுதானதும் தடுக்கப்பட முடியாததுமாகும். எல்லாவிதமான சிந்தனைகளும் விருப்பங்களும் அவற்றின் உள்ளடக்கம் எதுவாக இருந்த போதிலும் ஏற்றுக் கொள்ளப்படவும் மதிக்கப்படவும் வேண்டும். அத்துடன் அவை பொருத்தமான குறியீடுகளினூடாக வெளிப்படுத்தப்படுவதை அனுமதிக்கவும் செய்யலாம். அழிவு ரீதியான பழக்கங்கள் அனுமதிக்கப்படக்கூடாது. அப்படி ஏதாவது நடக்கும் போது அவற்றில் பெற்றோர் தலையிட்டு அதனை வேறு விடயங்களை நோக்கித் திசை திருப்பி விட வேண்டும்.

இவ்வாறு திசை திருப்பக்கூடிய விடயங்களாக இலக்கை நோக்கிக் குறிபார்த்து ஈட்டி எறிதல், மரம் அரிதல், தன்னளவு உயரமுள்ள விளையாட்டுப் பொம்மையுடன் குத்துச்சண்டையில் ஈடுபடல், தமது கோபத்தில் எழுகின்ற எண்ணங்களை ஒலி நாடாவில் பதிவு செய்தல், ஆத்திர உணர்வை வெளிப்படுத்தும் கவிதைகளை ஒலி நாடாவில் பதிவு செய்தல், ஆத்திர உணர்வை வெளிப்படுத்தும் கவிதைகளை எழுதுதல், கொலைச் சம்பவங்கள் நிறைந்த கதைகளை எழுதுதல் போன்றவற்றைக் கொள்ளலாம். சுருக்கமாகச் சொல்வதானால் விட்டுக் கொடுத்தல் என்பது கற்பனா ரீதியானதும், குறியீட்டுத் தன்மை வாய்ந்ததுமான குழந்தைகளின் செயல்களை ஏற்றுக் கொள்வது தான்.

மட்டுமீறிய விட்டுக்கொடுப்பு என்பது நியாயமற்ற செயல்களுக்கும் அனுமதி வழங்குவதாகும். விட்டுக்கொடுப்பு மனத்துணிவை அளிப்பதுடன் மன உணர்வுகளையும், சிந்தனையையும் வெளிப்படுத்தும் ஆற்றலை வளர்க்கிறது. மட்டுமீறிய விட்டுக் கொடுப்போ ஒருவகை எதிர்பார்ப்புணர்வை ஏற்படுத்துவதுடன் கொடுக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத வாய்ப்பு வசதிகளைத் தொடர்ந்து கோருகின்ற தன்மையையும் வளர்த்து விடுகிறது.

## உணர்வுகளையும் நடவடிக்கைகளையும் கையாளுதல்

கட்டுப்பாட்டொழுங்கு குறித்த நவீன அணுகுமுறையின் அத்திவாரம் விருப்பங்களுக்கும் நடவடிக்கைகட்கும் இடையிலுள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்வதிலேயே தங்கியுள்ளது. நாம் நடவடிக்கைகட்கு ஒரு கட்டுப்பாட்டை விதிக்கிறோம்,எல்லைகளைப் போடுகிறோம். விருப்பங்கட்கு எல்லை போடுவதில்லை.

பெரும்பாலான கட்டுப்பாட்டொழுங்கு குறித்த பிரச்சினைகள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளன: கோப உணர்வுகளும், கோப நடவடிக்கைகளும். இந்த இரண்டும் வெவ்வேறு விதமாக அணுகப்படவேண்டும். உணர்வுகள் அடையாளம் காணப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும். ஆனால் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு எல்லைகள் போடப்படுவதுடன் திசைதிருப்பி விடப் படலாம். சில சந்தர்ப்பங்களில் குழந்தையின் உணர்வுகளை அடையாளம் காண்பதே பிரச்சினைகளை சுமுக்மாக்கப் போதுமானதாகும்.

தாய்: நீ நல்ல கோபமாக இருக்கிறாய் போலிருக்கிறது.
மகன்: ஆம்
தாய்: உனது மனதுக்குள்ளே என்னவோ செய்கிறது.
மகன்: சரியாகச் சொல்கிறீர்கள்.
தாய்: உனக்கு யார் மீதோ சரியான கோபம்.
மகன்: நீங்கள் சொல்லுவது சரி.
தாய்: எனக்கு யார் என்று சொல்லும்...
மகன்: நீங்கள் என்னை அந்த விளையாட்டுக்குக் கூட்டிப் போகவில்லை. பதிலுக்கு ஸ்ரீவ்வைக் கூட்டிப் போனீர்கள்.
தாய்: அது உனக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. நீ மனதுக்குள் என்னை விடவும் ஸ்ரீவின் மீது அம்மாவுக்கு அதிகம் விருப்பம் என்று சொல்லியிருப்பாய் என்பது நிச்சயம்.
மகன்: ஆம்
தாய்: சில வேளைகளில் நீ அப்படித்தான் யோசிக்கிறாய்.
மகன்: ஆம் அப்படித்தான்.
தாய்: மகனே. நீ எப்போதெல்லாம் அப்படி நினைக்கிறாயோ... அப்போதெல்லாம் என்னிடம் வந்து அதைச் சொல் மகனே.

ஆனால் வேறு விசயங்களில் எல்லைகள் போடப்பட வேண்டும். நான்கு வயதான சாம், தனது பூனையின் வாலை வெட்டி அதனுள் என்ன இருக்கிறது என்று பார்க்க விரும்புகிறான். இந்த வேளையில் தாயாரும் விழிப்புணர்வுடன் மகனது ஆர்வத்தினை ஏற்றுக் கொள்கிறாள். அதேவேளை மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் இவ்வாறு கூறினாள். 'எனக்குத் தெரியும். வாலின் உள்ளே என்ன இருக்கும் என்று நீ அறிய விரும்புகிறாய் என்று. ஆனால் வால் எங்கே இருக்க வேண்டுமோ அங்கேயே இருக்க வேண்டும். நாம் வாலின் உட்புறம் எப்படி இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள ஏதாவது படங்களைத் தேடிக் கொள்வோம்.'



ஐந்து வயதான ரெட் வீட்டின் வரவேற்பறைச் சுவரில் கிறுக்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும் தாய்க்கு முதலில் அவனை மொத்த வேண்டும் போல் தான் இருந்தது. ஆனால் அவனுக்கு அடிக்கக் கூடாது என்று தான் நினைத்திருப்பதால் அவள் சொன்னாள்:- 'இல்லை ரெட். சுவர்கள் படம் கீறுவதற்கானவையல்ல... அதற்குப் பேப்பர்கள் இருக்கின்றன. இதோ... பேப்பர் இதில் நீ படம் கீற முடியும்...' என்று கூறிவிட்டு அவனது கிறுக்கல்களை அழிக்க முனைந்தாள். மகன் மிகுந்த பெருமித உணர்வினால் உந்தப்பட்டிருக்க வேண்டும். அவன் சொன்னான். 'அம்மா... உங்கள் மீது எனக்கு நல்ல விருப்பம்.' இதே விடயம் வேறொருவிதமாக, நேரெதிரான முறையில் இன்னொரு வீட்டில் அணுகப்படுகிறது...'என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உனக்கு என்ன நடந்திட்டுது? உனக்குத் தெரியாதா சுவரை அசுத்தமாகக்கக்கூடாது என்று... கெட்டபிள்ளை... உன்னோடை என்ன செய்வதெனறே தெரியவில்லை. அப்பா வரட்டும். சொல்லி நல்லா வாங்கித்தாறன்...'

## கட்டுப்பாடொழுங்கு: பழையதும் புதியதும்

கட்டுப்பாடொழுங்கு குறித்த பழைய அணுகுமுறைக்கும் புதிய அணுகுமுறைக்கும் இடையில் பெரிய வேறுபாடு உண்டு. குழந்தையைக் கட்டுப்படுத்துவதில் பெற்றோர்கள் விரும்பத்தகாத செயல்களைச் செய்யாது நிறுத்தி விடுவதுண்டு. ஆனால் அத்தகைய விரும்பத்தகாத செயல்களைச் செய்வதற்கு ஏதுவாக இருந்த காரணிகளை அவர்கள் புறக்கணித்து விடுகின்றனர். கோபத்தின் மத்தியில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் பெரும்பாலும் பொருத்தமற்றவையாகவும், தொடர்ச்சியற்றவையாகவும் அமைந்து விடுவதுண்டு. தவிரவும் இத்தகைய கட்டுப்படுத்தல்கள் குழந்தைகள் அக்கறை காட்டத் தயாரற்ற நேரங்களில், குழந்தையிடம் எதிர்ப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வார்த்தைகளால் மேற்கொள்ளப்படுவதாகவே இருக்கின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், குழந்தைகள் தாம் செய்த குறிப்பிட்ட ஒரு தவறுக்காகத் தான் விமர்சிக்கப்படவில்லை, மாறாக தான் தனிப்பட்ட முறையில் கூடாதவன்/ள் என்பதற்காகவே விமர்சிக்கப்படுகிறேன் என்ற முடிவுக்கு வந்து விடுகிறது.

புதிய அணுகுமுறையானது குழந்தையின் உணர்வுகளையும் நடத்தைகளையும் குறித்து ஆதரவாக அணுகுகிறது. பெற்றோர்கள் குழந்தையை (எந்தெந்த நிபந்தனைகளின் கீழ் என்பதையும் பின்னர் பார்ப்போம்) தான் உணர்வதைப் பேச அனுமதிக்கிறார்கள். அதேவேளை செய்யத்தகாத செயல்களைக் கட்டுப்படுத்துகிறார்கள். இத்தகைய கட்டுப்பாடுகள் எழுந்தமானவையாகவோ, தடுமாற்றமுடையவையாகவோ இருப்பதில்லை. மாறாக கல்வியூட்டுபவையாகவும் குழந்தையின் இயல்புகளை உருவாக்குபவையாகவும் இருக்கின்றன.

கட்டுப்பாடுகள் வன்முறை மூலமாகவோ மட்டுமீறிய கோபத்துடனோ விதிக்கப்படுவதில்லை. இக்கட்டுப்பாடுகளை குழந்தை விரும்பாமலிருப்பது எதிர்பார்க்கப்படக் கூடியது மட்டுமல்ல புரிந்து கொள்ளப்படக் கூடியதும் கூட.... அப்படி விரும்பாததற்காக குழந்தை மேலதிகமாக ஒருபோதும் தண்டிக்கப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டொழுங்கு இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் போது தனது சில இயல்புகளில் மாற்றம் தேவைப்படுகிற குழந்தை தானாகவே கட்டுப்படவும், அதற்கு ஒத்துப்போகவும் செய்கிறது. இந்த விதத்தில் பெற்றோரது கட்டுப்பாட்டொழுங்கு முயற்சிகள் குழந்தையின் சுய கட்டுப்பாட்டொழுங்குக்கு இட்டுச் செல்கின்றன. பெற்றோரையும், அவர்கள் உருவாக்கிக் கொண்டுள்ள விழுமியங்களையும் புரிந்து கொள்வதன் மூலமாகக் குழந்தை தனது சுய ஒழுங்கு முறைக்கேற்ப நியமங்களைத் தனக்குத்தானே வகுத்துக் கொள்கிறது.

## கட்டுப்பாட்டொழுங்கின் மூன்று பிரதேசங்கள்

குழந்தைகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ள முடியாத நடவடிக்கைகள் என்பவை குறித்து தெளிவான வரைவிலக்கணத்தை எதிர்பார்க்கின்றன. அவர்கள் தாம் அனுமதிக்கப்படக் கூடிய எல்லைகளைத் தெரிந்து கொண்டிருக்கும் போது மிகவும் பாதுகாப்பாகவும் சௌகரியமாகவும் உணர்கின்றனர். டொக்டர் ஃபிரிட்ஷ் றெட்ல் (Fritz Redl) அவர்களது ஆய்வுமுறையின்படி குழந்தைகளின் பழக்கவழக்கங்கள் பச்சை, மஞ்சள், சிவப்பு என்ற மூன்று வகையான நிற வலயங்களைக் கொண்டுள்ளன. பச்சை நிறவலயத்தின் பழக்கவழக்கங்கள் தேவையானவைகளையும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவைகளையும் கொண்டது. இங்கே எமது 'ஆம்' என்ற பதில் விருப்பத்துடனும் இலகுவாகவும் தெரிவிக்கப்படுகிறது. மஞ்சள் வலயப் பழக்கவழக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை அல்லாவாயினும், சில குறிப்பிட்ட காரணங்களுக்காக சகித்துக் கொள்ளப்படக் கூடியவையாகும். உதாரணமாக இத்தகைய சில காரணங்களைக் கூறலாம்.

1.பயிலுனர் கால சலுகைகள்:
பயிலுனர் அனுமதிச் சீட்டுடன் வண்டி ஓட்டும் ஒருவர் வலது புறம் திரும்புவதான சமிக்ஞையைக் காட்டி விட்டு இடதுபுறம் திரும்புகிறார் என்பதற்காக அவருக்கு குற்றப்பணம் விதிக்கப்படுவதில்லை. இத்தகைய தவறுகளுக்கு, அவை பிறகு திருந்தும் என்ற எதிர்பார்ப்பின் காரணமாக தண்டனை வழங்கப்படுவதில்லை. இது போன்ற ஒரு காரணத்திற்கான சலுகைகள் பயிலுனர் கால சலுகைகள் ஆகும்.

2.நெருக்கடி கால சலுகைகள்:
விஷேச மன அழுத்தம் தரும் சந்தர்ப்பங்கள், விபத்து, சுகயீனம், புதிய இடங்களிற்கு இடம் மாறுதல், நண்பர்களிடமிருந்து பிரிதல், இறப்பு, குடும்பப் பிளவு போன்ற சந்தர்ப்பங்கள் இத்தகைய சலுகைக்குரியவை. நெருக்கடி காலத்தைப் புரிந்து கொள்வதன் காரணமாக இத்தகைய சலுகைகளை வழங்குகிறோம். புதிய மாற்றங்கட்கு இடமுண்டு என்று நம்புகிறோம். நாம் ஒரு போதும் இந்த நடவடிக்கைகளை அங்கீகரிப்பதில்லை எமது நடைமுறை மூலமாக அச்செயல்கள் இவ்வாறான விஷேட நிலைமை குறித்த காரணங்கட்காக மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுகின்ற என்பதை நாம் வெளிப்படுத்துகிறோம்.

சிவப்பு வலயத்தின் நடத்தைகள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதன மட்டுமல்ல, அவை நிறுத்தப்படவும் வேண்டும். குடும்பத்தின் சுகாதாரம், பொருளாதாரம், மற்றும் அதன்



பிற நலன்களைப் பாதிப்பதாக அமைகின்றன இந் நடவடிக்கைகள். சட்டம் அல்லது சமூக விழுமியம் மற்றும் ஒழுக்கம் அல்லது சமூக அங்கீகாரம் என்பவற்றைப் பாதிப்பவையும் கூட இந்தச் சிவப்பு வலயத்துள் அடங்கும். சிவப்பு வலய நடவடிக்கைகள் தடை விதிக்கப்படுவதும் பச்சை வலய நடவடிக்கைகள் அனுமதிக்கப்படுவதும் முக்கியமானதாகும். அனுமதிக்கப்படக் கூடாத நடவடிக்கைகள் அனுமதிக்கப்படுவதை குழந்தை தெரிந்து கொள்ளும் போது அதன் ஆர்வம் அதிகரிக்கிறது. ஓடிக் கொண்டிருக்கும் பஸ் வண்டியின் பின்புறம் தொங்கிக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்ட எட்டு வயதுக் குழந்தை ஒன்று பின்னர் தனது தாயாரைக் குற்றம் சாட்டியது. 'உனக்கு உண்மையாகவே என் மீது அக்கறை இருந்திருக்குமாயின் இவ்வாறு நான் தொங்கிக் கொண்டு சென்று கொல்லப்பட்டு விடுவதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொள்வதை நீ அனுமதித்திருக்க மாட்டாய்'

இன்னொரு சிறுவனோ தன்னை ஒரு சிறிய பேனாக் கத்தியை கொண்டு திரிய அனுமதித்த தனது தகப்பனுக்கு சரியான நியமங்கள் தெரிந்திருக்கவில்லை என்று நினைத்தான். தனது விஞ்ஞான ஆய்வு கூடத்தை தமது மோசமான விளையாட்டினால், பாழாக்கிய தனது நண்பர்களை கட்டுப்படுத்தவில்லை என்பதனால், தனது பெற்றோர் மீது இருந்த மதிப்பை இழந்து விட்டதாகக் கூறினான் ஒரு சிறுவன். இளம்பிள்ளைகளுக்கு சமூகத்தால் அனுமதிக்கப்படாத விடயங்களைச் செய்யாமல் இருப்பதில் சில நேர்மையான கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இந்த கஷ்டங்களில் இருந்து விடுபடுவதற்கு பெற்றோர் தான் குழந்தைகட்கு உதவ வேண்டும். எல்லை போடல்கள் சில மௌனமான செய்திகளைத் தெரிவிக்கின்றன. 'உனது ஆர்வங்கள் குறித்து நீ அஞ்ச வேண்டியதில்லை. நான் உன்னை அதிக தூரம் போகவிடமாட்டேன். அது தான் பாதுகாப்பானது.'

## கட்டுப்பாடுகளை விதிப்பது எப்படி?

### கட்டுப்பாடுகளை விதிக்கும் முறைமைகள்

கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் போது, விளைவுகள் எப்போதும் செயன்முறையில் தங்கியுள்ளன என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். ஒரு கட்டுப்பாடு மிகவும் தெளிவாக குழந்தைக்கு தெரிவிக்க வேண்டிய விடயங்கள் இரண்டு:
1.ஏற்றுக் கொள்ள முடியாத நடவடிக்கைகள் என்பவை எப்படிப்பட்டவை என்பது.
2.அவற்றுக்குப் பதிலாக எப்படிப்பட்டவை செய்யப்பட முடியும்.

'பாத்திரங்களை எறியக் கூடாது. தலையணைகளை எறியலாம் என்று அல்லது பாத்திரங்கள் எறிவதற்கானவை அல்ல. அதற்குத்தான் தலையணைகள் இருக்கின்றன. தம்பி குத்துச்சண்டை போடுவதற்குரிய ஆள் அல்ல, அதற்குத்தான் குத்துச்சண்டைப் பொம்மை இருக்கிறது...' என்ற விதத்தில் சொல்லலாம்.

கட்டுப்பாடுகள் எப்போதும் அரைகுறையாக விதிக்கப்படுவது நல்லதல்ல. அவை முழுதாக இருப்பது விரும்பத்தக்கது. உதாரணமாக 'அக்காவுக்குத் தண்ணீர் அடிப்பதா அடிக்கக் கூடாதா' என்ற விடயத்தில். 'அவளை அதிகமாக நனைக்காமல் அடிக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனபது போன்ற கட்டுபாடுகள் குழந்தையை ஒரு தெளிவான முடிவு எடுக்க முடியாத நிலைக்குத் தள்ளுகின்றன.

கட்டுப்பாடு மிகவும் தெளிவாகவும், ஒரேயொரு செய்தியை மட்டும் தெரிவிப்பதாகவும் இருக்க வேண்டும். 'இந்தக் கட்டுப்பாடு நிச்சயமானது. நான் கவனமாக இருக்க வேண்டும்' என்று குழந்தை கருதுவதை அது உறுதிப்படுத்த வேண்டும். ஒரு பெற்றோர் தனக்கு ஒரு குறிப்பிட்ட விடயம் தொடாபாக என்ன செய்யலாம் என்று நிச்சயமில்லாமல் இருக்கும் போது, அவர் பேசாமல் இருப்பதே நல்லது. பேசாமல் இருந்தபடி தான் என்ன செய்யலாம் என்று சிந்திப்பது பயன்மிக்கது. தனக்கு நிச்சயமில்லாத ஒரு விடயம் குறித்து கட்டுப்பாடுகளை விதிக்கும் போது அது முடிவற்ற விவாதங்களுக்கு இட்டுச் செல்வதுடன் எத்தகைய பயனற்ற ஒன்றாக மாறியும் விடுகிறது.

தடை செய்யும் விதத்திலேயே அவை குழப்பமானவையாகவும் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் குழந்தைகளுக்கு சவால் விடுபவையாகவும் அமைந்து விடுகின்றன. இது யாருமே வெல்லமுடியாத வீண் சண்டைகட்கு இட்டுச் செல்கிறது. கட்டுப்பாடுகள், மிகவும் குறைந்தபட்ச எதிர்ப்புணர்வைத் தோற்றுவிக்கக் கூடிய விதத்திலும் குழந்தையின் சுய கௌரவத்தைப் பாதிக்காத விதத்திலும் அறிவிக்கப்படுவது அவசியம். இதைத் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் முறை என்பது குழந்தைகட்கு அதிகாரத்தைக் காட்டுவதற்காக மட்டும் அமைய வேண்டுமேயொழிய அவர்களை அவமதிப்பதாக அமையக் கூடாது. கட்டுப்பாடு ஒருகுறிப்பிட்ட நிகழ்வு சம்பந்தப்பட்டதாக அமைய வேண்டுமே அன்றி ஒரு தொடர்ச்சியான வரலாறு சம்பந்தப்பட்டதாக இருக்கக்கூடாது. ஒரே கட்டுப்பாட்டின் மூலம் எல்லாத் தவறுகளையும் களைந்து விட எத்தனிப்பதும் கூட தவறான ஒரு அணுகுமுறையாகும். உதாரணமாக இந்தச் சம்பவத்தைப் பாருங்கள்:

எட்டு வயதான அன்னி தாயாருடன் கடையொன்றிற்குச் சென்றிருந்தாள். தாயார் சாமான் வாங்கிக் கொண்டிருக்கும் போது கடைக்குள் சுற்றிச் சுற்றி வந்த அன்னி விளையாட்டுச் சாமான்கள் வைக்கப்பட்டிருக்கும் பகுதிக்கு வந்தாள். தீப்பிடித்துக் கொண்டால் பாதுகாத்துக் கொள்ள நல்லது என்று தான் கருதிய மூன்று விளையாட்டுப் பொருட்களை அவள் அவற்றுக்குள்ளிருந்து தேர்ந்தெடுத்தாள். சாமான்கள் வாங்கி முடித்து வந்த தாயாரிடம் 'இவற்றுள் எந்த விளையாட்டுச் சாமான்களை நான் வீட்டுக்குக் கொண்டு போவது' என்று கேட்டாள். ஏற்கெனவே உடுப்பு வாங்கியதிலே நிறையப் பணத்தை செலவு செய்து விட்டிருந்த தாயாரோ, இந்த விளையாட்டுப் பொருட்கள் மகளுக்கு தேவை தானா என்பது பற்றிய நிச்சயமற்றவளாக இப்படிச் சீறினாள்:
'இன்னும் விளையாட்டுச் சாமான்களா? உன்னிடம் நிறைய விளையாட்டுச் சாமான்கள் இருக்கு... இதில் கனக்க சாமான்களில் என்ன செய்யலாம் என்றே உனக்குத் தெரியாது. பார்க்கிறதெல்லாம் உனக்குத் தேவை. உன்ர இந்த ஆவலாதிப் பழக்கத்தை கட்டுப்படுத்த நீ பழகிக் கொள்ள வேண்டும்...'

ஒருநிமிட நேரத்தின் பின், தான் இவ்வாறு ஆத்திரப்பட்டிருக்கக்கூடாது என்பதை அவள் உணர்ந்து கொண்டதும், மகளை தாஜா பண்ணுவதற்காக ஒரு கப் ஐஸ்கிரீமை வாங்கிக் கொடுத்தாள். ஆனால் குழந்தையின் முகத்திலிருந்த துன்பரேகைகள் முற்றாக மறையவே



இல்லை. குழந்தை கேட்கிற ஒரு விடயம் மறுக்கப்படத்தான் வேண்டுமென்றாலும் குறைந்த பட்சம் அதை கேட்டதற்கான திருப்தியையாவது நாம் வழங்க வேண்டும். அன்னியின் தாயார் இப்படிக் கூறிருக்கலாம்.

'உனக்குக் கொஞ்ச விளையாட்டுச் சாமான்களை வீட்டை கொண்டு போக விருப்பமாயிருக்கிறது என்ன? முழு விளையாட்டுச் சாமான்களையும் வீட்டுக்கு எடுத்துப் போக முடியுமானால் நல்லது என்று கூட நீ விரும்பியிருக்கலாம். ஆனால் விளையாட்டுப் பொருட்களுக்கு என்று நாம் இன்றைக்கு காசு ஒதுக்கியிருக்கவில்லை. ஆனாலும் ஒரு பலூன் அல்லது ஒரு பிசின் வாங்குவதற்காக கொஞ்சம் சில்லறையை உனக்குத் தரமுடியும். எதை வாங்க விரும்புகிறாய்? பலூனா பிசினா?'

சில வேளை அன்னி திருப்தியடைந்து பலூனையோ அல்லது பிசினையோ வாங்க ஒப்புக் கொண்டிருக்கலாம். 'இந்தா அன்னி பலூன் வாங்கப் பணம்' என்று தாயார் கூறுவதுடன் இந்தப் பிரச்சினை முடிந்திருக்கலாம். அல்லது அன்னி அழுதிருக்கலாம். எப்படியாயினும், தாயார் தனது மகள் விளையாட்டுச் சாமான்களில் ஆசைப்பட்டதை தான் விளங்கிக் கொண்டுள்ளதை தெரிவித்திருக்கலாம். ஆனால் அவள் தன் முடிவில் உறுதியாக இருக்க வேண்டும்.
'அந்த விளையாட்டுச் சாமான்களை வாங்கியிருக்க வேண்டும் என்று நீ விரும்புவது எனக்குத் தெரிகிறது. அவற்றைக் கட்டாயம் வாங்க வேண்டும் என்று நீ ஆசைப்படுகிறாய். ஆனாலும் கண்ணே, இன்றைக்கு விளையாட்டுச் சாமான்கள் வாங்க முடியாது.

குறிப்பான கட்டுப்பாடுகளை விதிப்பதில் பல்வேறு வழிமுறைகள் பயன்படுத்தப்படலாம். கீழேயுள்ள நான்கு படிமுறையிலான வழிமுறை வினைத்திறன் மிக்கதாக இருக்கக்கூடும்.
1.பெற்றோர் குழந்தைகளின் விருப்பங்களைப் புரிந்து கொண்டு, அவற்றை எளிமையான சொற்கள் மூலம் வெளிப்படுத்துதல். 'நீ இன்றைக்குப் படத்துக்குப் போகலாம் என்று ஆசைப்படுகிறாய்'
2.அவர் குறிப்பிட்ட ஒரு நடவடிக்கை தொடர்பான கட்டுப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்துகிறார். 'ஆனால் எங்கள் வீட்டிலுள்ள விதிமுறை... பாடசாலை நாட்களில் படம் பார்ப்பதில்லை என்று இருக்கிறது.'
3.இவர் குழந்தைகள் குறைந்தபட்சம் அவர்களது ஆசை ஓரளவாவது நிறைவேற்றப்பட்டுள்ளது என்று திருப்திப்படும்படியாக பேசுகிறார்: 'ஆனால் வெள்ளி இரவோ சனி இரவோ நீங்கள் படம் பார்க்கப் போகலாம்.'
4.கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் போது எழக்கூடிய எதிர்ப்புணர்வுகளை வெளிப்படுத்துவதில் குழந்தைக்கு அவர் உதவி செய்கிறார்.

'உனக்கு இந்த ஒழுங்கு விதி பிடிக்கவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகிறது'
'இப்படி ஒரு விதி இல்லாவிட்டால் எவ்வளவு நல்லது என்று நினைக்கிறாய்'
'ஒவ்வொரு நாளும் படம்' என்று ஒரு விதி இருந்தால் என்ன என்று நினைக்கிறாய்'
'நீ பெரிய ஆளாக வந்து, உனது வீட்டில் இருக்கும் போது நிச்சயம் இந்த விதியை மாற்றப் போகிறாய்...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா வேளைகளிலும் இவ்வொழுங்கு முறையிலேயே கூறுவது என்பது தேவையற்றதாகவோ முடியாமலோ இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் கட்டுப்பாடுகளை முதல் தெரிவித்து அது தொடர்பான உணர்வுகளை பின்னர் வெளிப்படுத்துவது தேவைப்படலாம்.

ஒரு குழந்தை தனது அக்காவுக்கு ஒரு கல்லை எறிய எத்தனிக்கும் போது, தாய் முதலில் 'அவளுக்கல்ல எறிவது, மரத்திற்கு. மரத்தைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் இதைத் தெளிவாகச் செய்ய முடியும். இதற்குப் பிறகு ஆறுதலாக உணர்வுகளைக் குறித்துப் பேசலாம்.
'முதலில் அக்காவுக்கு எறிய நீ விரும்பியதால் உனக்கு கோபமாக இருக்கும்'
'உனக்கு கோபமிருக்கலாம். உன் மனதுக்குள் நீ அக்காவை வெறுக்கலாம். ஆனால் யாரும் யாரையும் தாக்கக் கூடாது.'

'உனக்கு விரும்பமென்றால், நீ மரத்தை அக்கா என்று நினைத்துக் கொண்டு அதற்கு கற்களால் எறியலாம்'
'நீ விரும்பினால் உனது அக்காவின் முகத்தை ஒரு படமாகக் கீறி அதை மரத்தில் ஒட்டிவிட்டு அதனைக் கல்லால் தாக்கலாம்.'

கட்டுப்பாடுகளை விதிக்கும் போது, விதிக்கப் பாவிக்கப்படும் சொற்கள் குழந்தையின் சுயகௌரவத்தைப் பாதிக்கக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். கட்டுப்பாடுகள் பொதுப்படையானதாகவும் ஆட்சார்பற்றதாகவும் இருப்பது நல்லது.
'பாடசாலை நாட்களில் படங்கள் இல்லை' என்பது, 'பாடசாலை நாட்களில் நீ படத்துக்குப் போக முடியாது..' என்று கூறுவதை விடவும் குறைந்தளவு எதிர்ப்புணர்வையே கொடுக்கும்.

'இது படுக்கும் நேரம்' என்பது 'கனநேரம் விழித்திருக்கும் அளவுக்கு நீர் இன்னமும் வளரவில்லை. போய் படுக்கலாம்' என்பதை விடவும் இலகுவில் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒன்றாகும்.

'இன்றைய ரீ.வி பார்ப்பதற்கான நேரம் முடிகிறது' என்பது 'நீ வேண்டியளவு பார்த்தாய் விட்டது. ரீ.வியை நிறுத்து' என்பதை விடச் சிறப்பானது.

'ஓராளோடை ஓராள் கத்தாதீங்கோ' என்பது, 'நீ முதல் அவனிடம் கத்துவதை நிறுத்து' என்பதை விட இலகுவில் ஒப்புக் கொள்ளப்பட்டு விடும்.

கட்டுப்பாடுகள், ஒரு குறிப்பிட்ட பொருளின் தொழிற்பாடு குறித்து குறிப்பிடப்பட்டு சொல்லப்படும் போது விருப்புடன் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. 'கதிரை இருப்பதற்குத் தான்' என்பது 'ஏறி நிற்காதே' என்பதை விடச் சிறப்பானது.
'மரக்கட்டிகள் விளையாடவே அல்லாமல் எறிவதற்கல்ல' என்பது 'கட்டிகளை எறியாதே' என்பதையும் விடவும் ஏன் 'மன்னிக்க வேண்டும். நீர் எறிவதை என்னால் அனுமதிக்க முடியாது ஏன் என்றால் அது ஆபத்தானது' என்பதை விடவும் சிறந்ததாகும்.



## கட்டுப்பாட்டொழுங்குப் பிரச்சினைகளும், நடவடிக்கைகளும்

பெரும்பாலான கட்டுப்பாட்டொழுங்குப் பிரச்சினைகள் பிள்ளைகளது நடவடிக்கைகளை மட்டுப்படுத்த முனைவதிலிருந்து உருவாகின்றன. 'ஓடாதே! உன்னால் ஒரு சாதாரண பையனைப் போல நடக்க முடியாதா?'
'எல்லா இடமும் துள்ளிக் குதிக்க வேண்டாம்.'
'ஒழுங்காக இரு பார்ப்போம்.'
'ஏன் ஒற்றைக் காலிலை நிற்கிறாய், உனக்கு இரண்டு கால்கள் இல்லையா? விழுந்து காலை முறிக்கப் போகிறாய்' போன்ற கட்டுப்பாடுகள் இப்பிரச்சனைகள் உருவாகக் காரணமாகின்றன.

குழந்தைகளது இத்தகைய நடவடிக்கைகளை அளவுக்கு மீறி மட்டுப்படுத்தக்கூடாது. மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கு குழந்தைகள் ஓடுவது, சறுக்குவது என்பன அவசியமானவை. அவர்களின் இத்தகைய செயல்கள் வீட்டிலுள்ள தளபாடங்களை உடைத்து விடக்கூடும். அவற்றின் பாதுகாப்பும் முக்கியமானது தான். ஆனால் அவை குழந்தைகளின் ஆரோக்கியத்தை விட முக்கியமானவை அல்ல. குழந்தைகளின் இத்தகைய இயக்கங்களைக் கட்டுப்படுத்துவது அவர்களுடைய மன உணர்வுகள் மீதான அழுத்தத்தை அதிகரிக்கின்றது. இந்த மன உணர்வுகள் மீதான அழுத்தத்தை அவர்கள் மூர்க்கத்தனமாகவும், மோசமான விதத்திலும் வெளிப்படுத்துகின்றார்கள்.

உடல் ரீதியான நடவடிக்கைகள் மூலமாக சக்தியை வெளிப்படுத்துவதற்கு உரிய சூழ்நிலையை உருவாக்குவது சிறப்பான கட்டுப்பாட்டொழுங்கைப் பேணுவதற்காகப் பெற்றோர்கள் செய்ய வேண்டிய முக்கிய ஒரு விடயமாகும். பெற்றோருக்கும் இது வசதியானதும் கூட. ஆயினும் இது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கவனிக்கப்படுவதில்லை.

## கட்டுப்பாட்டொழுங்கை நடைமுறைப்படுத்தல்

குழந்தைகளுக்கான கட்டுப்பாடு குறித்து பெற்றோரது உணர்வு தெளிவானதாகவும், அது தாக்கத்தை எற்படுத்தாத வார்த்தைகளால் தெரியப்படுத்தப்படுவதாகவும் இருப்பின் குழந்தைகள் இயல்பாகவே ஏற்றுக் கொள்வர். ஆயினும் அவர்கள் இதை அடிக்கடி மீறவும் செய்வர். எமக்குள்ள கேள்வி இதுதான். சொல்லப்பட்ட ஒரு கட்டுப்பாட்டை ஒரு குழந்தை மீறும் போது என்ன செய்ய வேண்டும்? பெற்றோர் இந்த விடயத்தில் மிகவும் கனிவாகவும் அதே நேரத்தில் விதித்த கட்டுப்பாட்டில் உறுதியாகவும் இருக்க வேண்டும் என்றே குழந்தை உளவியற் கல்வி கூறுகின்றது.

பெற்றோர் தாம் விதித்துள்ள கட்டுப்பாடு எவ்வளவு நியாயமானது அல்லது நியாயமற்றது என்பது குறித்த கலந்துரையாடலுக்குப் போகக் கூடாது. அல்லது அந்த விதி தொடர்பாக நீண்ட விளக்கம் அளிக்கவும் தேவையில்லை. ஒரு குழந்தைக்கு அது தனது சகோதரியை/சகோதரனை ஏன் தாக்கக்கூடாது என்று பெரிய விளக்கம் அளிப்பது அவசியமில்லை. மனிதர்கள் அடிப்பதற்குரியவர்கள் அல்லர் என்ற ஒரு வார்த்தையே போதும். அல்லது, ஜன்னல் கண்ணாடியை ஏன் உடைக்க் கூடாது என்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கப்படும் எந்த விளக்கங்களையும் விட 'ஜன்னல் கண்ணாடி உடைக்கிற சாமான் இல்லை' என்ற ஒரு வார்த்தையே போதுமானது.

இத்தகைய ஒரு கட்டுப்பாட்டை மீறும் குழந்தை ஒரு சண்டையையும் தண்டனையையும் எதிர்பார்த்துப் பரபரப்படைகிறது. பெற்றோர் அதன் பரபரப்பை அதிகரிக்கும் விதத்தில் நடந்து கொள்ளக் கூடாது. அவர் இந்தச் சந்தர்ப்பத்தில் அதிகம் கதைப்பது அவரது பலவீனத்தையே காட்டும். அவர் அந்த நேரத்தில் தனது உறுதியைக் காட்ட வேண்டும். இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில், குழந்தை தான் அவமானப்படாமலேயே தன்னை சுதாரித்துக் கொள்வதற்கு ஒரு பெரியவரின் உதவியை எதிர்பார்க்கிறது. கீழுள்ள உதாரணம் ஒரு புரிதலுடன் கூடிய அணுகுமுறையைத் தெளிவுபடுத்துகிறது.

தாய்: (உரத்து) 'உன்னை ஏசாவிட்டால் நீ சரிவரமாட்டாய் போலிருக்கிறது என்ன?' என்றோ, அல்லது 'இன்னொரு தடவை எறிந்தாயோ உன்ரை கன்னம் மின்னும்... நான் என்ன செய்வேன் என்று அப்ப தான் விளங்கும்...'
இவ்வாறான மிரட்டலைச் செய்வதை விட தாய் தனது உண்மையான கோபத்தை மிகவும் வினைத்திறனுடன் இப்படி வெளிப்படுத்தலாம்.

'உதைப் பார்க்க எனக்கு விசர் வருது.'
'உதைப் பார்க்க எனக்குப் பத்திக்கொண்டு வருகுது.'
'எனக்குக் கெட்ட கோபம் வருகுது.'
'இவை எறியிற சாமான்கள் அல்ல... பந்து தான் எறியிற சாமான்...'
கட்டுப்பாட்டை அமுல்படுத்துவதற்காக, பெற்றோர் ஒரு சண்டையை உருவாக்குவது கூடாது. ஒருவரின் உறுதியை சவாலுக்கு அழைப்பதாக அது அமைவதைத் தவிர்ப்பது நல்லது.
உர்சலா (விளையாட்டு மைதானத்தில்) : 'எனக்கு இங்கே இருக்கவே விருப்பமாய் இருக்கிறது. நான் இப்ப வீட்டை போகமாட்டேன். இன்னும் ஒரு மணிநேரம் இங்கேயே இருக்கப் போகிறேன்.'
தகப்பன்: 'நீ சொன்னால் சரியா? நான் சொல்கிறேன் இப்ப போக வேண்டும்.'

இத்தகைய ஒரு பதில் இரண்டு விளைவுகளைத் தரலாம். ஒன்றில் தகப்பன் தோல்வியடைவார் அல்லது குழந்தை தோல்வியடையும். இரண்டுமே நல்லவையல்ல. குழந்தை தகப்பனின் அதிகாரத்தை மீறுகிறது என்ற கோணத்தில் இவ்விடயத்தைப் பார்க்காமல், அதன் விருப்பம் என்ன என்ற கோணத்தில் அதனை அணுகுவதே நல்ல அணுகுமுறையாகும். உதாரணமாக தகப்பன் இப்படிக் கூறலாம்.
'உனக்கு இங்கு இருப்பது விருப்பமாயிருக்கிறது என்று எனக்குத் தெரிகிறது. நீ ஒரு மணி என்ன 10 மணித்தியாலமும் இங்கே இருக்கலாம். ஆனால் இண்டைக்கு நேரம் போயிட்டுது. இப்ப நாங்கள் போகவேணும்'
இதற்குப் பிறகும் குழந்தை பிடிவாதமாக இருந்தால், குழந்தையைக் கையைப் பிடித்துத் தூக்கிச் செல்லாம். சின்னக் குழந்தைகளைப் பொறுத்தவரை வார்த்தைகளை விட செயல் அதிகம் பயன்பாடு மிக்கதாக இருக்கிறது.



## பெற்றோர்களை அடிக்கலாமா?

குழந்தைகள் பெற்றோரை அடிக்க அனுமதிக்கக் கூடாது. இத்தகைய தாக்குதல்கள் பெற்றோருக்கும் குழந்தைகட்கும் ஆபத்தானவை. இது குழந்தைகளைப் பரபரப்புக்கு உள்ளாக்குவதுடன், எதிர்த்தாக்குதல் குறித்து அச்சத்தையும் வளர்த்து விடுகிறது. பெற்றோரைக் கோபமும் வெறுப்பும் கொள்ள வைக்கிறது. அடிப்பதைத் தடை செய்வது குழந்தையின் குற்றத்தையும் பரபரப்பையும் பகிர்ந்து கொள்ளவும் பெற்றோர் குழந்தையிடம் தொடர்ச்சியாக அன்பான உணர்வைக் கொண்டிருக்கவும் அவசியமானதாகும்.

ஒரு தாயார் தனது கன்னத்தில் அடிக்கும் குழந்தையிடமிருந்து தான் தப்பித்துக் கொள்வதற்காக, தனது கையில் அடிக்குமாறு கேட்டுக் கொள்வதை அவ்வப்போது யாராவது கண்டிருக்கக்கூடும். ஒரு34 வயதான தாய் தனது 4வது பிள்ளையிடம் 'மெல்லமாக அடி.... நோக அடிக்காதே' என்று கேட்டு தனது கையை நீட்டி மன்றாடுவதைக் காணும் போது. 'அப்படிச் செய்ய வேண்டாம். குழந்தைக்கு அடிப்பது பரவாயில்லை' என்று சொல்ல வேண்டும் போல் இருக்கிறதல்லவா உங்களுக்கு? உண்மையில் தாய் இந்தத் தாக்குதலை உடனடியாக நிறுத்தியிருக்க முடியும்.
'அடிக்கிறேல்லை... நான் உன்னை அடிக்க விடமாட்டேன்..
'உனக்கு கோபம் என்றால் வாயால் சொல்லு'

பெற்றோருக்கு அடிப்பது தொடர்பான கட்டுப்பாடு எந்தச் சந்தர்ப்பத்திலும் மெருகு படுத்தப்படக் கூடியதல்ல. சிறப்பான வளர்ப்பு என்பது குழந்தையும் பெற்றோரும் ஒருவரை ஒருவர் மதிப்பதில் ஆரம்பிக்க வேண்டும். அது பெற்றோரின் பெரியவர்கள் என்ற காரணத்தினால் உருவாக்கப்பட்டதாக அமையக்கூடாது.

'அடி, ஆனால் நோக அடிக்காதே' என்பது குழந்தையை, அந்தச் செயலைத் திருத்தமாகச் செய்ய உபதேசிக்கிறதே ஒழிய அதை நிறுத்தவில்லை. தனக்கு விதிக்கப்பட்டுள்ள அடிப்பதற்கான தடையின் எல்லையை விளையாட்டுக்கு அடிப்பது எந்தளவு, தாக்குவதற்காக அடிப்பது எந்தளவு என்று பாகுபடுத்திப் பரிசோதித்துப் பார்ப்பதற்கான அனுமதியை இது குழந்தைக்கு வழங்கி விடுகிறது.

## அடித்தல்

குழந்தைகளை அடிப்பது, ஒரு மோசமான விடயமாக இருப்பினும், அவர்களை ஒழுங்குபடுத்தப் பயன்படும் ஒரு பிரபல்யமான முறையாக அது உள்ளது. எல்லா விதமான வழமையான முறைகளும் பயனற்றுப் போகின்ற போது இந்த வழிமுறை பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலும் இது திட்டமிட்டு நடப்பதில்லை. ஆனால் ஆத்திரம் மேலிடும் போது, நாம் எமது பொறுமையை இழந்து விடுகையில் இது நடக்கிறது. இது அந்தக் கணத்தில் நிலைமையைத் தீர்த்து வைக்கிறது. பெற்றோரது உணர்ச்சிக் கொந்தளிப்பைத் தணிக்கிறது. சிலர் சொல்வது போல அது நிலைமையை உடனடியாகச் சீராக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்பது இவ்வளவு வினைத் திறனுள்ள ஒரு செயலாக இருக்குமானால் இதைச் செய்கையில் நாம் ஏன் அதிகளவு அசௌகரியத்தை உணர வேண்டும்? உள்ளூர உள்ள அடித்தல் தண்டனையின் நீண்ட காலத் தாக்கங்கள் தொடர்பான சந்தேகங்கள் எம்முள் எழவே செய்கின்றன. அடிக்கும் போது நாம் எமக்குள்ளேயே சங்கடப்படுகிறோம். 'இதற்கு வேறேதாவது நல்ல வழி இருக்கலாம்' என்று கூறிக்கொள்கிறோம்.

அடித்தலில் உள்ள தவறு என்னவென்றால், அது குழந்தைக்குக் கற்றுத் தரும் பாடம் தான். அதாவது 'உனக்கு எரிச்சல் வரும் போது சரியற்ற வழி முறைகளையும் நீ கடைப் பிடிக்கலாம்' என்று அது போதிக்கிறது. குழந்தைகட்கு விரக்தியைக் கையாளுவதற்கு ஒரு தவறான வழியைக் காட்டித் தருகிறது. அடித்தல் அவர்களுக்குச் சொல்வது இதைத்தான்: 'உனக்குக் கோபம் வந்தால்-அடி!' உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான நாகரீகமான வழிமுறைகளைக் கடைப் பிடிக்க விரும்பும் நாம் அதற்குப் பதிலாக இதன் மூலம் ஒரு அநாகரிக வழி முறையைக் குழந்தைகட்குக் கற்றுக் கொடுக்கிறோம்!
இத்தகைய உடல்ரீதியான தண்டனையின் இன்னொரு மோசமான பக்கவிளைவு என்னவென்றால், அது குழந்தையின் உணர்வுபூர்வமான வளர்ச்சியைக் குழப்புகிறது. வழங்கப்படும் தண்டனை குற்ற உணர்விலிருந்து குழந்தையை விடுவித்து விடுகிறது. தான் செய்த தவறுக்குத் தண்டனை கிடைத்ததன் மூலம் தான் விடுவிக்கப்பட்டு விட்டதாக அது உணர்கிறது. எனவே அதே தவறை திருப்பிச் செய்ய எந்த வித தயக்கமும் கொள்ள வேண்டியதில்லை என்று அது நினைக்கிறது. செல்மா ஃபயர் பாரிக் சொல்வது போல் குழந்தைகள் இத்தண்டனை குறித்து ஒரு 'கணக்குப் பதிவு' அணுகுமுறையைத் தம்முள் வளர்த்துக் கொள்கின்றனர். தாம் தவறுகளைச் செய்து அவற்றைக் கணக்குச் செய்து அவற்றை கணக்குப் பதிவேட்டில் வரவு வைத்துக் கொள்கின்றனர். தண்டனை கிடைக்கும் போது வாராந்தம் அல்லது மாதாந்தம் அதை செலவுப் பக்கத்தில் பதிவு செய்து தம்மை சமப்படுத்திக் கொள்கின்றனர். சில வேளைகளில் அடி வாங்குவதற்காகவே பெற்றோரை அவர்கள் சீண்டுவதுண்டு. அல்லது சிலவேளைகளில் தம்மைத் தண்டிக்குமாறு தாமாகவே அவர்கள் கோருவதும் உண்டு என்கிறார்கள் பெற்றோர்கள்.

தன்னைத் தண்டிக்குமாறு கோரும் ஒரு குழந்தை தனது குற்ற உணர்வுக்கும் கோபத்துக்கும் இடையில் தன்னைச் சமப்படுத்திக் கொள்ள உதவி கோருகிறதே ஒழிய தண்டனையை அல்ல. சில சந்தர்ப்பங்களில் குற்றங்களை மனந்திறந்து கலந்துரையாடுவதன் மூலம் கோபத்தையும் குற்ற உணர்வையும் தவிர்த்துக் கொள்ள முடியும். வேறு சில சந்தர்ப்பங்களில், குழந்தையின் விருப்பங்கள் விமர்சனமில்லாமல் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். ஆனால் அதன் நடவடிக்கைகளுக்கு எல்லைகள் போடப்பட வேண்டும். குழந்தையின் விருப்பங்கள் வேறு ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய வழிவகைகளை நோக்கி திருப்பி விடப்படலாம். குழந்தை தனது குற்ற உணர்வையும் கோபத்தையும் வெளிப்படுத்த வேறு வழிகளைக் கண்டு கொள்ளுவதுடன் பெற்றோரும் கட்டுப்பாடுகளை விதிப்பதிலும் நடைமுறைப் படுத்துவதிலும் புதிய வழிமுறைகளைப் புரிந்து கொள்ளும் போது, அடித்தல் போன்ற உடல் ரீதியான தண்டனைகளுக்கான தேவை குறைக்கப்படமுடியும்.



# 6. குழந்தையின் வாழ்வில் ஒரு நாள்

நாகரீகம் பெற்றோர்களுக்கு ஒரு 'சட்டாம்பிள்ளை'யின் பாத்திரத்தை வகிக்கும்படி செய்துள்ளது. குழந்தையின் பெரும் சந்தோசங்களில் பலவற்றிற்கு 'வேண்டாம்','இல்லை', 'கூடாது' போன்ற மறுப்புக்களைத் தெரிவிப்பது அவர்களது கடமையாகி விட்டுள்ளது. 'பெருவிரல் சூப்பிறேல்லை', 'ஆணுறுப்பில், தொடக்கூடாது', 'மூக்குத் தோண்டக்கூடாது', 'கக்கா(மலம்)வுடன் விளையாடக்கூடாது', 'சத்தம் போடக்கூடாது' போன்ற உத்தரவுகளை சில உதாரணங்களாக கூறலாம். சிறுகுழந்தைகளைப் பொறுத்தவரை நாகரீம் என்பது மிகவும் கொடுமையானதாகும். மிகவும் மென்மையான தாயின் மார்பகத்திற்குப் பதில் அது ஒரு கடினமான 'கப்'பை (Cup) வழங்குகிறது. சுதந்திரமான கழிவகற்றலுக்குப் பதிலாக அது சூடான கழிவு தாங்கக்கூடிய உள்ளாடையை (Diapers) வழங்குகிறது. அல்லது ஒரு கழிவறையை வழங்கி சுயகட்டுப்பாட்டுக்கு நிர்ப்பந்திக்கிறது!

குழந்தை ஒரு சமூகப்பிராணியாக இருக்கவேண்டுமாயின் சில கட்டுப்பாடுப்பாடுகள் தவிர்க்க முடியாதவை. ஆனாலும் பெற்றோர்கள் ஒரு பொலிஸ்காரனின் பாத்திரத்தை ஏற்று இந்த விடயத்தில் அளவுக்கதிகமாகச் செயற்படக்கூடாது. தவிர்க்கக்கூடிய வெறுப்பையும் சச்சரவையும் உருவாக்குவதில் அவர்கள் ஈடுபடக்கூடாது.

## காலை வணக்கம்

பாடசாலைக்கு போகும் ஒரு குழந்தையை ஒவ்வொரு காலையிலும் துயிலெழுப்புவர் தாயாக இருக்கக் கூடாது. தனது தூக்கத்தையும் அதன் கனவுகளையும் குழப்பும் ஒரு தாயையிட்டு குழந்தை எரிச்சலடைகிறது. தனது அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே வரும் தாயார் தனது போர்வையைப் பிடித்து இழுப்பதையும், 'எழுந்திரு நேரமாயிட்டுது' என்று கூறுவதையும் அது வெறுக்கிறது. ஒரு மணிக்கூட்டு 'அலாம்' (Alam) ஓசைமூலம் துயிலெழச்செய்வது, 'அலாம்' அடிப்பது போல வந்து தாயார் எழுப்புவதை விட சிறப்பானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜிவோனிக்கு வயது எட்டு. அவளுக்குக் காலையில் படுக்கையை விட்டு எழுந்திருப்பது என்பது மிகவும் கஷ்டமான ஒரு காரியம். ஒவ்வொரு நாளும், முடிவேயில்லாமல் ஒரு சில நிமிடங்களுக்குப் படுக்கையில் படுத்திருக்கவே அவள் விரும்பினாள். தாயார் இனிமையாக இருந்தாலும் சரி, கடுமையாக இருந்தாலும் சரி ஜிவோனி தொடர்ந்தும் அதிக நேரம் படுக்கையிலிருப்பதையே விரும்பினாள். ஆறுதலாக எழுந்தாள், காலைச் சாப்பாட்டில் சந்தோசமாக இல்லாமல் இருந்தாள், பாடசாலைக்குக் காலம் தாழ்த்தியே போனாள். நாளாந்தம் எழும் வாக்குவாதங்களால் தாய் களைப்பும் எரிச்சலும் அடைந்தாள்.

ஆனால், தாயார் கொடுத்த ஒரு எதிர்பாராத பரிசுப்பொருள் அவளில் ஆச்சரியப் படத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. அப்பரிசு வேறொன்றுமில்லை, மின்சாரத்தில் இயங்கும் ஒரு 'அலாம்' மணிக்கூடு. அந்தப் பரிசுப்பொருள் இருந்த பெட்டியில் தாயாரின் பின்வரும் குறிப்பு ஒன்று இருந்தது:

'அதிகாலையில் தன்னை யாரும் எழுப்புவதை விரும்பாத ஜிவோனிக்கு, இப்போது உனக்கு நீயே அதிகாரி, உன்னை நீயே எழுப்பிக் கொள்ளலாம். -அன்பு அம்மா.'

ஜிவோனி ஆச்சரியமும் சந்தோசமும் ஒருங்கே பெறப்பெற்றவளாகக் கேட்டாள். 'யாரும் எழுப்புவது எனக்குப் பிடிக்காது என்று எப்படி உங்களுக்குத் தெரியும்?'
'நான் ஊகித்தேன்'- தாயார் புன்னகையுடன் கூறினார்.
' அலாம்' மணிக் கூடு மறுநாட்காலை அலறிய போது தாயார் சொன்னார்: 'இது சரியான வெள்ளண.. இன்னும் கொஞ்ச நேரம் நீ தூங்கலாம் குஞ்சு'
படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்தபடி ஜிவோனி சொன்னாள்:
'இல்லை... எனக்குப் பள்ளிக் கூடத்திற்கு 'லேற்றாப்' போம்!'

அதிகாலையில் எழுப்ப முடியாத ஒரு குழந்தையை நாம் சோம்பேறி என்று அழைக்கக் கூடாது. உடனடியாக எழுந்து தாயாரகாதற்காக, அதற்கு இவ்வாறு பட்டம் சூட்டவும் கூடாது. அதிகாலையில் எழுந்து மகிழ்ச்சியாக இயங்கத் தொடங்குவதற்குக் கஷ்டப்படும் குழந்தைகளை நாம் சிறுமைப் படுத்தக்கூடாது. அவர்களுடன் சண்டைக்குப் போவதை விட அவர்களுக்குப் பொன்னான இன்னொரு 10 நிமிட தூக்கத்தையோ பகற் கனவையோ அனுமதிப்பது நல்லது. அலாம் மணிக்கூட்டை ஒரு பத்து நிமிடங்கள் முன் கூட்டியே அடிக்குமாறு செய்வதன் மூலம் இதனைச் சுலபமாகவே செய்து விடமுடியும். குழந்தையின் தூக்கம் தொடர்பான எனது சொற்கள் ஆத்திரத்துடனோ, ஏளனத்துடனோ அல்லது அதன் உடல் நலம் சம்பந்தப்பட்டதாகவோ வருவதைவிட இதற்கு அனுதாபம் காட்டுவதாக அமைய வேண்டும்.
'காலையில் எழுந்திருப்பது கஷ்டம் தான்!'
'இன்னொரு ஐந்து நிமிடங்கள் எடுத்துக் கொள்'
இத்தகைய சொற்கள் காலை வேளையைச் சந்தோசமுள்ளதாக்கி விடும். அவை சுமூகமானதும் சந்தோசமானதுமான ஒரு சூழ்நிலையை தோற்றுவிக்கின்றன. மாறாக கீழேயுள்ள சொற்கள் எரிச்சலும் புகைச்சலும் நிறைந்த ஒரு சூழலை உருவாக்கிவிடும்.

'எழும்பு.... சோம்பேறி மாடு.



'உடனடியாக படுக்கையை விட்டு எழும்பியிட வேணும்'
'கடவுளே...... நீ இன்னொரு கும்பகர்ணன்'
இது போலவே, 'ஏன் இன்னமும் படுக்கையில் இருக்கிறாய்.... சுகமில்லையா உனக்கு..உனக்குப் பல் வலிக்கிறதா? தலையிடியா? நாக்கைக் காட்டு பாப்பம்....'
போன்ற கேள்விகளும் கூட நல்லவை அல்ல. படுத்திருப்பதற்கான வாய்ப்பைச் சுகயீனமாக இருப்பதன் மூலம் பெற்றுவிடலாம் என்ற எண்ணத்தை அது குழந்தைக்கு ஏற்படுத்துகிறது. அத்துடன் தாயார் சொல்லும் இவற்றில் ஏதாவது ஒன்று தனக்கு இல்லையென்று சொன்னால் அது தாயாரை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கிவிடுமோ என்று குழந்தையை எண்ணத் தூண்டுகிறது. தாயாரைச் சமாளிப்பதற்காக குழந்தை தனக்குச் சுகயீனம் தான் என்று சொல்லி விடுகிறது.

## அவசரமான நேரம்

குழந்தையை அவசரப்படுத்தினால், அது அதிக நேரத்தை எடுக்கின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெரியவர்கள் 'கெதியா, கெதியா' என்று அவசரப்படுத்துவதை எதிர்ப்பதற்காகவே அது தனது வேலைகளை ஆறுதலாகச் செய்கின்றது. குழந்தைக்காக நாம் போட்டிருக்கும் அதற்குச் சம்பந்தமற்ற ஒரு நேர அட்டவணைக்காக அதனை நாம் அவசரப்படுத்தும் போது, அது வேகமாகச் செய்கிற காரியம் என்னவென்றால் வேகமற்ற முறையில் இயங்குவதுதான்!
குழந்தையை நாம் அவசரப்படுத்துவது கூடாது. பதிலாக அதற்கு நியாயமான அளவு நேரத்திற்குள் தயாராகி விடுகின்ற சவாலை எதிர்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

'பாடசாலைக்குப் போகும் பஸ் இன்னமும் 10 நிமிடத்தில் இங்கு வந்துவிடும்.'
'படம் தொடங்குகிறது இரண்டு மணிக்கு. இப்ப நேரம் ஒன்றரை'
'இரவுச் சாப்பாடு எட்டு மணிக்கு வழங்கப்படும். இப்ப நேரம் ஏழரை'
'உன்னுடைய விருந்தினர் இன்னமும் 15 நிமிடத்தில் இங்கு வந்து விடுவார்.'
இத்தகைய சுருக்கமான வசனங்களின் நோக்கம் என்னவென்றால், அந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குள் அக்குழந்தை தயாராகி விடவேண்டும் என்ற எமது எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் தான்.

## காலைச்சாப்பாடு

காலைச்சாப்பாட்டு நேரம் குழந்தைக்கு அறிவு புகட்டுவதற்கான அல்லது ஒழுங்கு முறைகளையும் மேசை நாகரிகத்தையும் போதிப்பதற்கான நேரம் அல்ல. எங்கள் வீடும், அடுப்படியும், சாப்பாட்டறையும் மிகவும் சந்தோசமான சூழலையும் நல்ல சாப்பாட்டையும் கொண்ட ஒன்றாகும் என்பதைப் புரியவைக்கிறதற்கு உகந்த நேரம் இதுவாகும். பொதுவாகக் காலைச்சாப்பாட்டு நேரம் நீண்ட உரையாடலுக்குரிய நேரமும் அல்ல. பெரும்பாலும் பெற்றோரோ குழந்தைகளோ தூக்கம் கலையாதவர்களாகவும் திருப்தி அற்றவர்களாகவும் இருக்கக் கூடும். இந்த நேரத்து வாக்குவாதங்கள் பெரும்பாலும் பெரும் வெறிகொண்ட சண்டைக்கு இட்டுச்சென்று விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில குடும்பங்களில் பெற்றோர்களுக்கும் குழந்தைகட்கும் இடையில் சாப்பாத்து 'லேஸ்' (shoe string) காரணமாக நாளாந்தம் சண்டை நடப்பதுண்டு. ஒரு தகப்பனார் சென்னார்: 'எனது மகனின் சப்பாத்து லேஸ் கழன்றிருப்பதைக்காண்கிறபோது எனக்குப் பத்திக்கொண்டு வருகிறது. அவனைச் சப்பாத்து 'லேஸை'க் கட்டுவதற்கு வற்புறுத்துவதா அல்லது 'லேஸ்' இல்லாமலே சளக்சளக் என்று நடக்க அனுமதிப்பதா என்பது எனக்கு விளங்கவில்லை. அவன் விரும்புகிறமாதிரியே அவனுக்குப் பொறுப்புணர்வை சொல்லித்தராமல் இருக்கவேண்டுமா?'

சப்பாத்து லேஸைக் கட்டுவதோடு பொறுப்புணர்வைப் போதிப்பதை இணைக்காமல் இருப்பதே நல்லது. வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டுமமென்றால், ஒன்றில் 'லேஸ்' கட்டாத சப்பாத்துகளை வாங்கிக் கொடுக்கலாம். அல்லது எந்த விதமான அபிப்பிரயமும் சொல்லாமல் 'லேஸை'ப் பிடித்துக் கட்டிவிடலாம்.

குழந்தைகள் பாடசாலைக்கு ஒரு குட்டிப் பிரபுவைப் போல் செல்ல வேண்டியதில்லை. அவர்கள் தமது ஆடை சுத்தமாகப் பேணப்பட வேண்டும் ஏன்பதுபற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. குழந்தைகளின் ஓடுதல், குதித்தல் பந்து விளையாடல் என்பவற்றிற்கான சுதந்திரம் உடுப்பைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பது போன்ற கட்டுப்பாடுகளால் பாதிக்கப்படுகிறது. குழந்தை அழுக்கான உடையுடன் வீடு திரும்பும் போது தாய் சொல்லவேண்டியது:

'இன்டைக்கு நல்ல விளையாட்டுப் போலை.... உனக்கு மாற்ற வேறு உடுப்பு இருக்கிறது..' குழந்தை எவ்வளவு ஒழுங்கற்று அழுக்காக இருக்கிறது என்பது பற்றியோ, அவற்றை தோய்ப்பதில் எனக்கு எவ்வளவு கஷ்டம் என்றோ சொலவது எந்தப் பயனும் அற்றது. ஒரு யதார்த்த பூர்வமான அணுகுமுறை, குழந்தைகளின் விளையாட்டுத்தனத்தை விடவும் ஆடைகளைச் சுத்தமாக வைத்திருப்பது மேலானது என்று அக்கறைப்படுவதில்லை. பதிலாக அது குழந்தைகளின் உடைஅதிக நேரம் சுத்தமாக இராது என்பதை விளங்கிக் கொள்கிறது. மலிவான தோய்த்துப் பாவிக்கக்கூடிய ஒரு டசின் உடைகள் பெருமளவுக்கு குழந்தைகளின் உள ஆரோக்கியத்திற்கு உதவி செய்யும்.! அழுக்கடையாமல் பாவிப்பது பற்றி போதிப்பதைவிட இது மிகவும் சிறப்பானதாகும்!

## பாடசாலைக்குப் போதல்

பாடசாலைக்குப் புறப்படும் அவசரத்தில் குழந்தைகள் தங்களது புத்தகங்களில் சிலவற்றையோ, சாப்பாட்டுப் பெட்டியையோ, தனது கண்ணாடியையோ மறந்து விட்டுப் புறப்படக்கூடும். இத்தகைய நேரங்களில் அதன் பொறுப்பீனத்தைச் சாடுவதாக ஏதாவது சொல்வதைத் தவிர்த்து, அது மறந்துவிட்ட பொருட்களை எடுத்துக் கொடுப்பதே நல்லது. 'இதோ உனது கண்ணாடி' என்று கண்ணாடியை மறந்து விட்டு செல்லும் பிள்ளையிடம் அதை எடுத்துக் கொடுப்பது, 'நீ எப்ப தான் உன்ரை கண்ணாடியை மறக்காமல் போட்டுக் கொண்டு போகப்போகிறாய் என்று கூறுவதை விடப் பிள்ளைக்கு மிகவும் உதவியாக இருக்கும்.
'இதோ உனது சாப்பாட்டுப் பெட்டி' என்று சாப்பாட்டுப் பெட்டியை எடுத்துக் கொடுப்பது, 'உனக்கு எப்பவும் ஒரே ஞாபக மறதிதான்.. உன்ரை கழுத்திலை உன்ரை தலையை ஒட்டி வைத்திருக்காவிட்டால் நீ அதையும் மறந்து போய் விடுவாய்' என்ற 'நக்கலை' விடவும் மிகவும் உதவியான ஒன்றாகும். சாப்பாட்டுக்கான காசை மறந்துவிட்டுச் செல்ல எத்தனிக்கும் பிள்ளையிடம், 'இந்தா சாப்பாட்டுக்காசு' என்று கொடுப்பது, 'உன்ரை சாப்பாட்டை என்னத்தைக் குடுத்து வாங்கப்போகிறாய்?' என்பது போன்ற கேலிச் சொற்களை விட பிள்ளைகளால் அதிகம் வரவேற்கப்படும்.

பாடசாலைக்குப் புறப்படும் முன்பாக குழந்தைக்கு ஆலோசனைகள், எச்சரிக்கைகள் என்று ஒரு பட்டியலைப் போட்டுச் சொல்லக் கூடாது. பிரிவதற்கு முன்பாக, 'சந்தோசமாக போயிட்டுவா' என்று கூறுவது 'அங்கை போய் குழப்படி செய்யிறதில்லை' என்று கூறுவதை விடவும் பயனுள்ள ஒரு வசனமாகும். 'சரி, பிற்பகல் இரண்டு மணிக்கு நாம் சந்திப்போம்' என்று கூறுவது, 'பள்ளிக்கூடம் முடிஞ்சவுடன் அங்கை இங்கை அலையாமல் நேரை வீட்டை வந்திடவேணும்' என்பதை விட எவ்வளவோ பயனுள்ள ஒரு அறிவுறுத்தலாகும்.

## பாடசாலையிலிருந்து திரும்புதல்

குழந்தை வீட்டுக்கு வரும் போது தாயார் வீட்டில் இருந்தாரானால், அக்குழந்தையை வாழ்த்தி வரவேற்பது நல்லது. ஒற்றை வரியில் எரிச்சலுடன் பதிலளிக்குகம் விதத்திலான கேள்விகளை கேட்பதற்குப் பதில் (எப்பிடி இண்டைக்கு ஸ்கூல்? - பரவாயில்லை. என்ன இண்டைக்கு செய்தீர்கள்? - ஒன்றுமில்லை) தாயார் அன்று பாடசாலையில் நடந்திருக்கக் கூடிய விடயங்கள் குறித்த தன் புரிதலை வெளிப்படுத்தும் விதத்தில் பேசுவது நல்லது! 'இன்டைக்கு நாள் சரியான கஸ்டமான நாள் போல இருக்கிறது?'

'பள்ளிக்கூடம் முடியும் மட்டும் உனக்கு பொறுமையாக இருக்கவே முடியவில்லை இண்டைக்கு' வீட்டுக்கு வரும் போது, தாயார் வீட்டில் இல்லை என்றால், தான் எங்கே இருக்கிறேன் என்ற ஒரு செய்தியை அங்கு விட்டுச் சென்றிருப்பது நல்லது. பாடசாலையால் வரும் குழந்தைகட்காக எழுதிய செய்திகளை சில பெற்றோர் குழந்தைக்கும் தமக்குமிடையிலான உறவை ஆழப்படுத்தும் ஒன்றாகப் பயனபடுத்தவதும் உண்டு. குழந்தைகட்குத் தமது அன்பையும் பாராட்டையும் எழுத்தில் வைப்பது பெற்றோருக்கு மிகவும் சுலபமானதாகும்.

சில பெற்றோர் சிறிய ஒலிப்பேழையில் தமது செய்தியை விட்டுச் செல்வதுமுண்டு குழந்தைக்கு தாயின் வார்த்தைகளைத் திரும்பத்திரும்பக் கவனிக்க இது வாய்ப்பளிக்கிறது. இது பெற்றோருக்கும் பிள்ளைக்கும் இடையில் பயனுள்ள தொடர்பாடல் ஏற்படுவதை ஊக்குவிக்கக் கூடிய ஒரு நடைமுறையாகும்.

## தகப்பனின் வருகை

தகப்பனார் மாலையில் வேலையிலிருந்து வீடு திரும்பி வந்தவுடன் சிறிது நேர அவகாசம் அவருக்கு அவசியம்: வெளி உலகத்திலிருந்து குடும்பத்தின் தேவைகளுக்குள் நுழைவதற்குரிய ஒரு மாறுதற் கட்டத்திற்கான அவகாசம் அது. வீட்டு வாசலுக்கு வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதே குறை சொல்வதும், எதையாவது வாங்கித் தருமாறு வேண்டுகோள் விடுவதும் ஏற்கப்படக்கூடியதல்ல. வேலையால் வந்தவுடன் ஒரு பானமோ அல்லது குளியலோ அல்லது அன்று வந்த கடிதங்களோஅந்த அடைக்காலத்தை வழங்கக் கூடும். இந்த 'கேள்வி கேட்கப்படக்கூடாத' நேரம் நிலையமையைச் சுமூகமாக்கி, குடும்ப வாழ்வுக்கு சிறப்பையும் இனிமையையும் கொடுக்கும். (இதே விடயம் தாயார் வேலைக்குச் செல்பவராக இருப்பின் அவருக்கும் பொருந்தும்).

குழந்தைகள், அப்பா வந்தாலும் அவருக்கு சில நிமிடங்கள் அமைதியும், வசதியும் தேவை என்பதைக் கற்றுக்கொள்வார்கள். இரவுச் சாப்பாடு மறுதலையாக ஒரு உரையாடுதலுக்கான நேரமாக இருக்க வேண்டும். சாப்பாட்டில் அதிகமான கவனம் செலுத்துவதை விட பேச்சிலும் சிந்தனையிலும் கூடக் கவனம் செலுத்துவது நல்லது. குழந்தை சாப்பிடும் முறை பற்றி, அதன் நடத்தை பற்றி சில விடயங்களைப் பேசலாம்.

## தூங்கும் நேரம்

பெரும்பாலான குடும்பங்களில் படுக்கைக்குப் போகும் நேரம் படுக்கை அடிபோடும் நேரமாக இருக்கின்றது. இது தாய்க்கும் பிள்ளைகளுக்கும் இடையில் பரஸ்பர விரக்தியைத் தோற்றுவிக்கின்றது. குழந்தைகள் முடிந்தளவு அதிக நேரம் விழித்திருக்க விரும்புகின்றன. தாயாரோ நேரத்திற்கு அவர்கள் படுக்க வேண்டும் என்று விரும்புகிறார். இந்த நேரங்கள் பொதுவாக தாய்மார்களிற்கு ஒரு நச்சரிக்கின்ற நேரமாகவும், குழந்தைகள் அதற்குள் பிடிபடாமல் நழுவுகிற நேரமாகவும் உள்ளது.

பாடசாலை போகத் தொடங்காத குழந்தைகள் தாயாருடனோ அல்லது தகப்பனாருடனோ ஒண்டிக் கொண்டிருக்கவே விரும்புவார்கள். ஒவ்வொரு குழந்தையுடனும் நெருக்கமாக உரையாடுவதன் மூலமாகப் படுக்கை நேரம் பகிர்ந்து கொள்ளப்படலாம். அதன் பின் அவர்கள் படுக்கை நேரத்தை எதிர்பார்க்கத் தொடங்குவார்கள். அவர்கள் தாயாருடனோ அல்லது தகப்பனாருடனோ அதிக நேரம் தனியாகப் படுத்திருக்க விரும்புவார்கள். பெற்றோர் பொறுமையாக குழந்தையின் கோரிக்கையைக் கவனிப்பார்களானால் குழந்தை தனது பயம், நம்பிக்கை, விருப்பம் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளப் பழகி விடும். இத்தகைய நெருக்கமான உறவு குழந்தைக்குத் தவிப்பை நீக்கி சந்தோஷமான தூக்கத்தை வழங்குகின்றது.

சில வளர்ந்த குழந்தைகளும் பெற்றோர்களுடன் சேர்ந்து தூங்க விரும்புவார்கள். அவர்களது விருப்பங்களும் மதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். அவர்களது கோரிக்கைகள் அவமதிக்கப்படவோ விமர்சிக்கப்படவோ கூடாது. 'குழந்தைப் பிள்ளைக்கு நிற்கிறாய்' என்று கூறுவது தவறானது. வளர்ந்த குழந்தைகட்கு படுக்கை நேரம் நெகிழ்வுள்ளதாக இருக்கவேண்டும். 'உனது படுக்கை நேரம் 8க்கும் 9க்கும் இடையில் (அல்லது 9க்கும் 10க்கும் இடையில்) நீ எப்போது படுக்க விரும்புகிறாய் என்பதை நீயே தீர்மானித்துக் கொள்ளலாம்.'

படுக்கைக்குப் போன குழந்தை, தான் குளியலறைக்கு போக மறந்து விட்டதாகக்



கூறுவதற்காகவோ, அல்லது தனக்கு கொஞ்சம் தண்ணீர் தருமாறு கேட்பதற்காகவோ அதனுடன் சண்டைக்குப் போவது நல்லதல்ல. தனது படுக்கைக்கு வருமாறு தாயாரை ஒரு குழந்தை தொடர்ந்து கூப்பிட்டுக் கொண்டிருந்தால் 'எனக்குத் தெரியும் உன்னோடு இன்னும் கொஞ்ச நேரம் நான் இருக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாய்.ஆனால் நான் அப்பாவுடன் இருக்க வேண்டிய நேரம் இது' என்று சொல்லலாம். சில உறவுகளும், நிலைமைகளும் தம்மை விலக்கி வைக்கும் அவசியத்தைக் கொண்டிருக்கும் என்பதை அவர்கள் புரிந்து கொள்வது அவசியமாகும்.

## களியாட்டத்திற்கு அனுமதிச்சீட்டு அவசியமில்லை

சில குடும்பங்களில் பெற்றோர்களது வருயையையும் போதலையும் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் குழந்தைகளிடம் இருக்கிறது. ஒரு மாலை நேரம் வெளியே போவதற்கான அனுமதியைப் பிள்ளைகளிடம் கேட்கும் பெற்றோர்களும் இருக்கிறார்கள். சில தாய்மார் குழந்தை வீட்டில் இருப்பதன் காரணமாகவே படத்திற்கோ அல்லது நாடகத்திற்கோ போவதைத் தவிர்த்துக் கொள்கின்றனர்.

பெற்றோர் தாம் எப்படி வாழ்வது என்பது குறித்துக் குழந்தைகளிடம் ஆலோசனை கேட்கத் தேவையில்லை. தகப்பனும், தாயும் மாலை நேரத்தில் வெளியே போகிறார்கள் என்பதற்காக ஒரு குழந்தை அழுதால், அக்குழந்தையின் பயத்தை மட்டம் தட்டத் தேவையில்லை. ஆனால் அதற்காக அதன் விருப்பங்களை நிறைவேற்றவதும் அவசியமில்லை. தகப்பனையும் தாயையும் விட்டு பிரிந்திருக்க விரும்பாத குழந்தையின் விருப்பத்தை விளங்கிக் கொள்ளவும் அனுதாபப்படவும் முடியும். ஆனால் அதற்காக களியாட்டத்திற்கு செல்வதற்கான அனுமதியை அதனிடம் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அழுகின்ற குழந்தைக்கு நாம் இப்படிக் கூறலாம். 'உனக்கு நாம் உன்னுடன் இருப்பது விருப்பம் என்று எமக்குத் தெரியும். ஆனால் உனது அப்பாவும் நானும் இன்று ஒரு படத்திற்குப் போவதாகத் தீர்மானித்திருக்கிறோம்.'

குழந்தையின் மறுப்பு, வேண்டுகோள் அல்லது மிரட்டல் என்பன கணக்கெடுக்கப்படத் தேவையயில்லை. எங்களது பதில் அன்புடனும் சினேக பூர்வமான விதத்திலும் இப்படி அமையலாம்:

'நாம் இங்கே உன்னோடு இருப்பதையே நீ விரும்புகிறாய் என்று எங்களுக்குத் தெரிகிறது. ஆனால் நாம் இன்று வெளியே போய் இந்த மாலை நேரத்தை இருவருமாகச் சேர்ந்து சந்தோசமாகக் கழிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்திருக்கிறோம்.'

## தொலைக்காட்சி

குழந்தையின் ஒரு நாள் வாழ்க்கை பற்றிய எமது இது வரையான கலந்துரையாடல், தொலைக்காட்சி அவர்களது பெறுமானங்கள், நடத்தைகள் எல்லாவற்றிலும் ஏற்படுத்தும் செல்வாக்குக் குறித்துப் பேசாமல் முற்றுப்பெற முடியாது. குழந்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியைப் பார்ப்பதில் மிகவும் ஆர்வம் உடையவர்களாக உள்ளார்கள். புத்தகம் படிப்பதை விடவும், இசையைக் கேட்பதை விடவும், உரையாடலில் ஈடுபடுவதை விடவும் அவர்கள் அதை விரும்புகிறார்கள்.

தொலைக்காட்சியில் காட்சிகளை காண்பிப்பதற்காகப் பணரீதியான ஆதரவினைத் தருபவர்களைப் பொறுத்தவரை சிறுவர்களே அவர்களது முழுமையான பார்வையாளர்களாவர். சிறுவர்கள் விரைவில் ஒரு விடயத்தை ஏற்கச் செய்யப்படவும் நம்பச் செய்யப்படவும் கூடியவர்கள். அவர்கள் ஓசை நயம் வாய்ந்த சொற்றொடர்களை மிகவும் சிறப்பாகக் கற்றுக் கொள்கிறார்கள். இவற்றை ஒலிபரப்புச் செய்யும் அறிவிப்பாளரை அப்படியே பிரதி செய்து சத்தமிட்டுச் சுலோகங்களைப் போலச் சொல்லிக்காட்டிப் பெற்றோரைத் தொந்தரவுக்கு உள்ளாக்குகின்றனர். அத்துடன் அவர்கள் நிகழ்ச்சிகளில் வருபவற்றில் மிகச் சிறிய பகுதியையே கேட்கிறார்கள்.

இதற்குச் சுயசிந்தனையோ கலைத்துவமோ அவசியமில்லை. குதிரைகளும் துப்பாக்கி ஏந்திய மனிதர்களும் அவர்களுடைய கவனத்தைப் பெரிதும் ஈர்க்கின்றன. ஆக, மணிக் கணக்காக நிகழ்ச்சிகளை முடியும்வரை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் நாளுக்கு நாள் வன்முறையையும் கொலையையும் அவர்கள் எதிர் கொள்கிறார்கள் - இடையில் கலந்து வரும் ஓசைகளையும் விளம்பரங்களையும் சேர்த்து.

பெற்றோர் தொலைக்காட்சி தொடர்பாக இரு விதமான உணர்வுகளுக்கு ஆட்படுகின்றனர். குழந்தைகள் குழப்படி இன்றி அமைதியாக இருந்து தொலைக்காட்சி பார்க்கின்றார்கள். இதனால் பெற்றோரின் தொல்லை குறைகிறது என்ற உண்மையை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் அதேவேளை அவர்கள் குழந்தைகளின் கண்களுக்கும் மனதுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்பையும் பற்றி கவனமாக இருக்கின்றார்கள். ஆனால்,உண்மையில் நீண்ட நேரம் பார்த்தாற் கூடப் பார்வையயில் பெரியளவு பாதிப்பு ஏற்படுவதில்லை என்று நிபுணர்கள் கூறுகின்றார்கள்*. அதேவேளை தொலைக்காட்சி குழந்தைகளின் ஆளுமையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து நிபுணர்களிடையே மாறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.1.தொலைக்காட்சி குழந்தைகளுக்கு நல்லதல்ல. அது ஆர்வத்தையும், மனித அவஸ்தைகள் குறித்து எத்தகைய உணர்வுமற்ற போக்கையும் உருவாக்கி விடுகின்றது.

2.தொலைக்காட்சி குழந்தைகட்கு நல்லது. நாடக பாணியிலான வன்முறை நடிப்புகள் குழந்தைகளை அச்ச நிலையிலிருந்து விடுபட உதவுகிறது.
3.தொலைக்காட்சி குழந்தைகளிடையே தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. ஆளுமையும், பெறுமானங்களும் பெற்றோராலும் சகாக்களாலும் வடிவமைக்கப்படுகின்றதே அன்றி திரையில் தோன்றும் உருவங்களால் அல்ல.

ஒரு விடயத்தை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ள முடியும். தொலைக்காட்சி குழந்தையின் நேரத்தில் பெரும் பகுதியை உறிஞ்சி விடுகின்றது. தகப்பன் அல்லது தாயுடன் குழந்தைகள் செலவிடும் நேரத்தை விட அதிகமான நேரம் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் செலவழிக்கப்படுகிறது. இவர்களைப் பொறுத்தவரை பாலியல்



தொடர்பான விடயங்களும் சரி, மிலேச்சத்தனமான காட்சிகளும் சரி, வெறும் சாதாரண முசுப்பாத்தி நிகழ்வுகளே என்ற போதிலும் அவை குழந்தைகளை பல பயனுள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இருந்து விலக்கி வைக்கிறது. சில குடும்பங்களில் குழந்தைகள் தொலைக்காட்சியைப் பார்க்க வார இறுதி நாட்களில் மாத்திரம் அனுமதிக்கப்படுகிறார்கள். வேறு சில குடும்பங்களில் அவர்கள் சில குறிப்பிட்ட நேரங்களில் பெற்றோரது அனுமதியுடன் சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை மட்டும் பார்க்க அனுமதிக்கப் படுகிறார்கள். இப் பெற்றோர்கள் தொலைக்காட்சியை மருந்து வழங்குவது போன்று குறிக்கப்பட்ட நேரத்தில் குறிக்கப்பட்ட அளவே வழங்க வேண்டும் என்று கருதுகிறார்கள்.

பெருமளவு பெற்றோர்கள் எந்தெந்த நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவது என்பதைத் தீர்மானிப்பதனை முழுமையாக குழந்தைகளின் பொறுப்பில் விடக் கூடாது என்று கருதுகிறார்கள். அவர்கள் கொலைகாரர்களும் வன்முறைக் குண்டர்களும் தங்களது குழந்தைகளை தமது செல்வாக்குக்கு உட்படுத்திவிடக் கூடாது என்று கருதுகிறார்கள்.

பெற்றோருக்கு தமது குழந்தைகளைக் கீழ்த்தரமான பாலியல் விடயங்களிலிருந்தும் பளிச்சிடும் வன்முறையிலிருந்தும் பாதுகாக்கும் உரிமை உண்டு. குழந்தைகள் எல்லா விதமான சோகங்களிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் இல்லை என்றாலும் கூடக் குழந்தைகள், மனிதரை மனிதர் இம்சிக்கின்ற சோகங்களைப் பார்த்து ரசிப்பதை அனுமதிக்கக் கூடாது.

*களைத்துப் போன குழந்தைகள்' என்ற தலைப்பில் 'ரைம்' (Time) சஞ்சிகையில் - நவம்பர் 6,1964-வெளியான அறிக்கை ஒன்று இந்தக் கருத்தை மறுக்கிறது. இரண்டு விமானப் படைத்தளத்தைச் சேர்ந்த குழந்தை வைத்திய நிபுணர்கள், மூன்று முதல் பன்னிரண்டு வயது வரையிலான பெரிய எண்ணிக்கையிலான குழந்தைகள் கடுமையான சோர்வு, தலையிடி, நித்திரையின்மை, வயிற்றுக் கோளாறு, வாந்தி என்பவற்றால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டு ஆச்சரியமடைந்தார்கள். இந்த அறிகுறிகளுக்கு எத்தகைய மருத்துவக் காரணிகளும் கண்டு பிடிக்கப்படவில்லை. பின்பு பெற்றோருடனான தொடர்ச்சியான உரையாடலின் பின், இக்குழந்தைகள் தொலைக்காட்சிகளின் ஆளுகைக்குட்பட்டவர்களாக (Adicted) உள்ளார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் கிழமை நாட்களில் மூன்று முதல் ஆறுமணி நேரங்கள் வரையும் வார இறுதி நாட்களில் ஆறு முதல் ஒன்பது மணி நேரம் வரையும் தொலைக் காட்சியைப் பார்ப்பவர்களாவும் இருந்திருக்கின்றார்கள்.இவர்களுக்குச் செய்யப்பட்ட வைத்தியம் மிகவும் புரட்சிகரமானதாகவும் பயன்விளைவுள்ளதாகவும் அமைந்திருந்தது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தொலைக்காட்சி பார்த்தல் அவர்களுக்கு முற்றாகத் தடை செய்யப்பட்டது. இந்தக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிததவர்களின் நோய் அறிகுறிகள் மறைந்து போயின.ஏனையோர்கட்கு அந்த அறிகுறிகள் அப்படியே இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. பொறாமை

## துயரமான பாரம்பரியம்

சகோதரர்களுக்கிடையே பொறாமை நிலவுவது ஒரு பழைமை வாய்ந்த பாரம்பரியமாக உள்ளது. பரிசுத்த வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் முதலாவது சகோதரப் படுகொலையாகப் பதிவுசெய்யப்பட்டிருப்பது காயின் தனது சகோதரனான ஆபேலைக் கொன்ற சம்பவமாகும். இந்தக் கொலைக்கான காரணம் தாயாதிச் சண்டையாகும். ஜாக்கோப் தனது சகோதரனான ஈசாவின் கையால் கொல்லப் படுவதிலிருந்தும் தப்பிக் கொண்டார். அதுவும் வீட்டை விட்டு வெளியேறி ஒரு அந்நிய நாட்டில் ஒழிந்து



வாழ்தன் மூலமே அவரால் தப்பிக் கொள்ள முடிந்தது. ஜாக்கோப்பின் புத்திரர்களோ தங்கள் இளைய் சகோரனான ஜோசேப்பின் அதிர்ஷ்டம் குறித்துப் பொறாமை கொண்டவர்களாக அவன் மீது விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனை, ஆயுட் தண்டனையாக மாற்றப்பட்டு, பாலைவனத்தில் போய்க் கொண்டிருந்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்து விடுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அதற்கு முன்பாக பாம்புகள் நிறைந்த கிணற்றினுள் அவனை வீசினார்கள்.

பொறாமையின் இயல்பு, தோற்றம் என்பவை குறித்து பைபிள் என்ன சொல்கிறது? இச்சம்பவங்கள் ஒவ்வொன்றிலும் பொறாமையானது ஒரு குறிப்பிட்ட குழந்தைக்கு மட்டும் அதிகளவு ஆதரவை ஒரு பெற்றார் காட்டியதன் அடியாக உருவாகியிருப்பதைக் காணலாம். காயின் தனது சகோதரனான ஆபேலின் பரிசை கடவுள் ஏற்றுக் கொண்டு தன்னுடையதை ஏற்காதன் காரணமாக எழுந்த பொறாமையில் அவனைக் கொன்றான். தகப்பனாரது ஆசீர்வாதத்தைப் பெறுவதில் ஜாக்கோப்பிற்குத் தாயார் உதவியதைக் கண்டபோது ஈசாவுக்குப் பொறாமை வெடித்தது. அதேபோல்தான், மற்றெல்லோரையும் விட அதிகமாக தனது தகப்பனால் யோசேப் அன்பு காட்டப்படுகிறார் என்பதே மற்றவர்களுடைய பொறாமைக்குக் காரணமாக இருந்தது. தகப்பனார் அவனுக்கு பல வர்ணக் கோட் ஒன்றைப் பரிசளித்ததுடன் அவன் தவறுகள் செய்யும் போது அவனைக் கண்டிக்காமலும் இருந்தார்.

குழந்தைகள் வரலாற்று சம்பவங்களை, இழப்பு, பழிவாங்கல் என்பன குறித்த வரலாறுகளைக் கேட்கவும் படிக்கவும் விரும்புவர். இக்கதைகளின் போக்கு அவர்களை உற்சாகப்படுத்துவதுடன், அவர்களது மனங்களைத் தொட்டும் விடுகிறது. இதில் உள்ள கவனிப்புக்குரிய விடயம் என்னவென்றால் எல்லா நேரங்களிலும் அவர்களது அனுதாபம் பாதிக்கப்படுபவர்களின் பக்கத்தினை நோக்கிச் செல்வதில்லை என்பதுதான்.

## அவ்வளவாக ஆசீர்வதிக்கப்படாத நிகழ்ச்சி

பெற்றோர்களைப் போல் அன்றி குழந்தைகள் குடும்பத்தில் பொறாமை நிலவுவதை கேள்விக்கு உட்படுத்துவதில்லை. அவர்கள் அதன் அர்த்தத்தையும், தாக்கத்தையும் நன்றாகவே அறிவார்கள். அவர்கள் எவ்வளவு தயார் செய்யப்பட்டிருந்தாலும், ஒரு புதிய குழந்தை குடும்பத்துள் வரும் போது அவர்களிடம் பொறாமை ஏற்படவே செய்கிறது: பாதிப்பு உருவாகவே செய்கிறது. கணவனின் எத்தகைய விளக்கங்களும், வீட்டுக்கு புதிதாகக் கூட்டிவரும் அவனது ஆசைநாயகி குறித்து அமைதியாக இருக்கும் நிலையை மனைவிக்கு வழங்கிவிடப் போவதில்லை. பொறாமை, எரிச்சல் மற்றும் போட்டிப் போர் என்பவை அங்கு தவிர்க்க முடியாமல் வந்தே சேரும். இவற்றை எதிர்பாராமல் இருப்பதோ, இவ்வாறான நிகழ்ச்சிகளால் அதிர்ச்சி அடைவதோ அறியாமையாகும்.

இரண்டாவது குழந்தை வருவது என்பது ஒரு இளம் பிள்ளையின் வாழ்வின் முதற்கட்ட நெருக்கடியாகும். அதன் கட்டற்ற வாழிடம் திடீரென மாறுதலடைகிறது. அதற்கு இதனைப் பழகிக் கொள்ளவும் இப்புதிய வாழ்க்கையை ஓட்டவும் உதவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படுகிறது. வெறும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துபவர்களாய் இல்லாமல் அதற்கு உதவியாக இருப்பதற்கு நாம் எம்மையும் அக்குழந்தையின் உணர்வுகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

குழந்தை பிறப்பது போன்ற ஆசீர்வதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் வீட்டிலுள்ள பிள்ளைக்கு பெரிய விளக்கம் அளிப்பதை தவிர்த்துக் கொள்வது நல்லது. அதுமட்டுமல்லாமல் குழந்தைக்கு, 'நாங்கள் உங்களை மிகவும் நேசிக்கிறோம். நீங்களும் ஒரு அருமையான பிள்ளைதான். இப்போது நாங்கள் உங்களைப் போல் இன்னொரு குழந்தையைக் கொண்டுவர நினைக்கிறோம்.

நீங்களும் அந்தக் குழந்தையை விரும்புவீர்கள். அது உங்களது குழந்தையும் தான். அதையிட்டு நீங்கள் பெருமைப்படுவீர்கள். உங்களுக்கு எந்த நேரமும் விளையாட ஒரு பிள்ளை கிடைக்கப் போகிறது' போன்ற தவறான வாக்குறுதிகளை வழங்கக்கூடாது. இத்தகைய விளக்கம் நேர்மையானது அல்ல என்பது மட்டுமல்லாமல், இது குழந்தையை இப்படித்தான் சிந்திக்கத் தூண்டும். 'இவர்கள் உண்மையாக எங்களில் அன்புவைத்திருந்தால் இன்னொரு குழந்தையை ஏன் கொண்டு வருகிறார்கள். நான் அவ்வளவு சரியில்லை. அதனால் தான் இன்னொன்றை எனக்குப் பதிலாகக் கொண்டு வருகிறார்கள்.'

தாயின் அன்பைப் பங்கு போட்டுக்கொள்வது மனதைப்பாதிக்கும் ஒருவிடயமாகும். குழந்தைகளின் மனசைப் பொறுத்தவரை பகிர்தல் என்பது குறைவாகப் பெறுதலாகும். ஒரு அப்பிளை அல்லது மிட்டாயைப் பகிர்ந்து கொள்வது போல அம்மாவின் அன்பைப் பகிர்வது மிகவும் கவலையூட்டும் ஒரு விடயமாகும். ஆனால் நாமோ அதன் தர்க்கவியலுக்கு அப்பால் போய் குழந்தை மகிழ்ச்சி அடைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

தாயின் வயிற்றிலுள்ள கர்ப்பம் வளர வளர குழந்தையின் சந்தேகமும் அதிகமாக வளர்கிறது. பிறக்கப் போகும் குழந்தை வருவதற்கு முன்பே தாயின் வயிற்றில் இடம் பிடித்து விட்டதாக அது கருதுகிறது. குழந்தையின் வழமையான தாயுடனான விளையாட்டுக்கள் குறைகின்றன. தாய் குழந்தையுடன் சேரும் நேரம் குறைகிறது. அவள் சுகயீனமாகக் கட்டிலில் படுத்திருப்பாள். அல்லது இளைத்துப் போய் ஓய்வெடுப்பாள். அவளது மடியில் உட்காரவே சாத்தியம் இல்லாமல் போகிறது. இவையெல்லாம் இன்னும் வெளிவராத ஒரு அந்நிய உயிரினால் ஏற்படுவதாக அது கருதுகிறது.

## 'அந்நியரை' அறிமுகம் செய்தல்

குழந்தைக்கு எத்தகைய முஸ்தீபுகளும் இன்றி ஒரு குழந்தையின் வருகை குறித்து தெரிவிக்கலாம். 'நாம் எங்கள் குடும்பத்திற்கு ஒரு புதிய குழந்தையைக் கொண்டுவரப் போகிறோம்' என்ற அறிவிப்பு மட்டுமே போதுமானதாகும். குழந்தையின் உடனடி எதிர்வினை எப்படி இருப்பினும், அதன் மனதில் ஆயிரம் கேட்கப்படாத கவலைகள்



உருவாகும் என்பதையும் நாம் அறிவோம். இத்தகைய நெருக்கடியான நிலைகளை எதிர்கொள்வதில் குழந்தைக்கு நாம் உதவ வேண்டும். புதிய குழந்தை, ஏற்கெனவே உள்ள குழந்தையின் பாதுகாப்புக்கு ஒரு மிரட்டல் தான் என்ற உண்மையை எந்த விடயங்களும் மாற்றி விட முடியாது. எமது புத்திசாதுரியம், செயற்றிறன் என்பதைப் பொறுத்தே அக்குழந்தையின் தன்மை அல்லது இயல்பு நன்றாய் வருவதும் பாழாய்ப்போவதும் தங்கியுள்ளது. புதிய குழந்தை பற்றிய ஒரு மோசமான அறிவிப்பு இப்படி அமையலாம்.

'ஜோன் பிறந்த போது எனது தகப்பனார் என்னை அவனைப் பார்ப்பதற்காக அழைத்துச் சென்றார். அம்மாவின் கைகளில் இருந்த அந்தச் சிவப்பு நிறக்குழந்தையை நான் பார்த்தபடி இருந்த பொழுது அப்பா இப்படிச் சொன்னது இன்னமும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. 'இப்போது நீ இன்னும் அதிகளவு கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் இப்போது எமக்கு ஒரு புதிய குழந்தை வந்திருக்கிறது. இப்ப நீ மட்டுமில்லை. இப்பவிலிருந்து இன்னும் ஒருவர்-உனது தம்பிப் பாப்பாவும் இருக்கிறான். நீங்கள் இப்போது இருவர். முன்பென்றால் ஒருவர்தான்..நான் நினைக்கிறேன் அன்றிலிருந்து எனது வாழ்க்கை எனது தம்பியையிட்டு கவனமாக இருப்பதற்காகவே அர்ப்பணிக்கப்பட்டதாய்..... எனது வாழ்க்கையை அவனுக்காக நரகமாக்குவதாய் ஆகிவிட்டது..'(வேர்ஜினியா எம்.எக்சலீன்) இதற்கு நேர்மாறாக கீழ்வரும் உதாரணம் ஒரு பயனுள்ள அறிமுகமாக அமைகிறது.

வேர்ஜினியா, ஐந்து வயதாக இருக்கும் போது தாய் கர்ப்பமாக இருப்பதைக் கண்டுபிடித்தாள். அவள் இதை மிகவும் சந்தோசமாக வரவேற்றாள் அவள் றோசா மலர்கள் பூத்த காலை நேரத்தை தனது தம்பியுடனான வாழ்வாக சித்திரிக்கும் படியாக வரைந்தாள். தாய் இத்தகைய வாழ்க்கையைச் சுற்றி ஒரு பக்கப் பார்வையை ஊக்குவிக்கவில்லை. அவள் சொன்னாள்: 'சில வேளைகளில் அவன் சந்தோசம் தரலாம். சில வேளைகளில் கஷ்டம் கொடுக்கலாம். சில வேளைகளில் எங்கள் எல்லோருக்கும் அவன் ஆய்க்கினையாகக் கூட இருக்கலாம். அவன் கீழாடையை நனைக்கலாம்: சட்டையுடன் 'கக்கா' கழிக்கலாம், சில வேளைகளில் அவன் நாற்றமும் கொடுக்கலாம். அம்மா அவனைக் கழுவவேண்டும், அவனைக் கவனமாகப் பார்க்கவேண்டும். உங்களுக்கு அம்மா உங்களை விட்டு இருப்பதாக தோன்றக் கூடும். சில வேளைகளில் பொறாமையாவும் இருக்கலாம். நீங்கள் சிலவேளை 'அம்மாவுக்கு என்னில் விருப்பமில்லை. இந்தக் குழந்தையில் தான் விருப்பம்' என்றும் நினைக்கலாம். அப்படி நீங்கள் உணரும் போது என்னிடம் வந்து சொல்ல வேண்டும். உங்களுக்கு நான் மேலதிகமாக அன்பைத் தருவேன். எனவே நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை, உங்களுக்கு, நான் உங்களை விரும்புகிறேன். என்பது தெரியவரும்....'

சில பெற்றோர்கள் அத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கத் தயங்குகிறார்கள். குழந்தைகளின் மனதில் 'பயங்கரமான' எண்ணங்களைப் போடுவதற்கு அவர்கள் பயப்படுகிறார்கள். இந்தப் பெற்றோர்கள் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய எண்ணங்கள் குழந்தைகட்குப் புதிது அல்ல. எமது இவ்வாறான சொற்கள் அவர்களுக்குத் தீமையை அல்ல நன்மையையே செய்கின்றன. இது குற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்விலிருந்து குழந்தை தன்னைத் தடுத்துக் கொள்ளவும் உதவுகிறது. ஒரு குழந்தை புதிய குழந்தையையிட்டு கோபப்படவும், எரிச்சலடையவும் உரித்துடையது. அது தனது கோபத்தை உரத்துச் சொல்ல அனுமதிப்பது அது இரகசியமாக அவற்றை வெளிப்படுத்துவதை விடச் சிறப்பானதாகும்.

## பொறாமையை வெளிப்படுத்துதல்

குழந்தைகள் தமது பொறாமை உணர்ச்சியை அடக்க முயலும் போது, அது அறிகுறிகளாகவும் குளப்படியாகவும் பூடகமாக வெளிப்படுகிறது. தனது சகோதரனை வெறுக்கும் ஒரு குழந்தை, தனது வெறுப்பை வெளிக்காட்டுவது, அவனை ஒரு பத்துமாடிக் கட்டிடத்திலிருந்து தள்ளி வீழ்த்துவதாகக் கனவு காணக்கூடும். இப்படிக் கனவு காணும் குழந்தை தூக்கத்தில் திடுக்கிட்டுப் பயந்து அழுது கொண்டே விழிப்படையக்கூடும். அது சில வேளை இரவு நேரத்தில் எழுந்து தனது சகோதரனது படுக்கையை நோக்கி ஓடிப்போய், அவன் இன்னமும் அங்கு படுத்திருக்கிறானா என்று பார்க்கவும் கூடும். தனது சகோதரன் எந்த விதமான பாதிப்புமில்லாமல் படுத்திருப்பதைப் பார்த்து அது தன் மனதைச் சாந்தப் படுத்திக் கொள்வதைப் பெற்றோர்கள் தனது சகோதரன் மீதான அன்பு மிகுதியால் குழந்தை இப்படிச் செய்வதாக தவறாக நினைக்கக்கூடும்.

தான் சொற்களால் சொல்ல அஞ்சுவதை ஒரு குழந்தை கனவுகளின் மூலமாகச் சொல்கிறது. குழந்தைகள் இவ்வாறு உணர்வுகளை கனவுகளில் வெளிப்படுத்துவதை விட வார்த்தைகளாற் சொல்ல அனுமதிப்பது மிகவும் நல்லது.
ஐந்து வயதான வாரனுக்கு, சகோதரி பிறந்ததையடுத்து தொடர்ச்சியான இழுப்பு நோய் வரத்தொடங்கியது. அவனது பெற்றோர்களே வாரன் தனது சகோதரியை உயிருக்கு மேலாக நேசிப்பதாக நம்பினார்கள்: தனது சகோதரியையிட்டு அவன் மிகவும் கவனமாக இருப்பதாக நினைத்தார்கள். வைத்தியரால் வாரனது இழுப்பு நோய்க்கு எந்த உடற்கூற்றியல் அடிப்படைகளையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவனது ஆஸ்துமா நோயை அவ்வைத்தியர் ஒரு மனோதத்துவ வைத்திய நிலையத்தில் காட்டுமாறு சொன்னார். அங்கு காட்டினால், அவன் தனது பொறாமையையும் கோபத்தையும் இழுப்பு நோயின் மூலம் வெளிப்படுத்துவதற்குப் பதில் வார்த்தைகளால் வெளிப்படுத்தக் கற்றுக் கொள்வான் என்று அவர் கருதினார்.

சில குழந்தைகள் தமது பொறாமையை வார்த்தைகளால் அல்லாமல் இருமல், தோற்சொறி நோய் போன்றவற்றினூடாக வெளிப்படுத்துகிறார்கள். வேறு சிலர் படுக்கையில் சலம் கழிப்பதன் மூலமாகக் காட்டுகிறார்கள். அதாவது தமது உணர்வை ஒன்றின் மூலமாகக் காட்டமுடியாத போது வேறொன்றில் வெளிப்படுத்துகிறார்கள். வேறு சில குழந்தைகள் அழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாக மாறுகிறார்கள். அவர்கள் தமது வெறுப்பை வெளிப்படுத்துவதற்குப் பதில் பாத்திரங்களை உடைக்கிறார்கள். வேறு சில குழந்தைகள் நகம் கடிப்பதையும் தலைமுடியை வெட்டுவதையும் செய்கிறார்கள் தமது சகோதரர்களை வெட்டுவதையும், கடிப்பதையும் தாம் விரும்புவதை மறைக்க அவர்கள் இப்படிச் செய்யக்கூடும். எல்லாக் குழந்தைகளுக்கும் தமது உணர்வுகளை வார்த்தைகளினூடாக வெளிப்படுத்துவதே



இத்தகைய அறிகுறிகளினூடாக வெளிப்படுத்துவதை விடவும் அவசியமாக உள்ளது. குழந்தைகள் இத்தகைய உணர்விலிருந்து விடுபட உதவுவதில் பெற்றோர்களின் பங்கு முக்கியமானது.

## பொறாமையின் பல முகங்கள்

வெளிப்படையாக, கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், பெற்றோர் தமது குழந்தைகளிடையே பொறாமை இருக்கவே செய்யும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பொறாமை பல முகங்களைக் கொண்டதாகவும், மறைந்திருப்பதாகவும், இருக்க முடியும். அது தொடர்ச்சியான போட்டியாகவும் இருக்க முடியும். அல்லது எந்தப் போட்டியாகவும் வெளிப்படலாம். அல்லது எந்தப் போட்டிகளையும் ஒதுக்கி விடுவதாகவும் இருக்கலாம். பிரபல்யத்துக்காகத் தேடி அலைவதாக இருக்கலாம். அல்லது ஒரு சுவரோவியம் போல அமைதியாக இருந்தும் விடலாம். அது ஒரு அக்கறையற்ற பெருந்தன்மையாகவோ அல்லது இரக்கமற்ற பேராசையாகவோ வெளிப்படலாம். தீர்க்கப்படாத சிறுபராயத்துப் போட்டிகளின் கசப்பான அனுபவங்கள் வாழ்வு பூராவும் வெளிப்படுவதை நாம் அவதானிக்கலாம்.

எத்தகைய காரணகாரியத் தொடர்புமற்று வீதியில் போய்க் கொண்டிருக்கும் ஒவ்வொரு வாகனத்துடனும் போட்டிச் சவாலிவிடும் ஒரு மனிதரிடம் ஒரு சாதாரண பிங்-பொங் வினையாட்டில் வரும் தோல்வியைத் தாங்க முடியாத ஒரு மனிதரிடம், தனது அபிப்பிராயத்தை உறுதிப் படுத்துவதற்காகத் தனது வாழ்வையும், அதிர்ஷ்டத்தையும் பந்தயமாக வைக்கக் கூடிய ஒருவரிடம் அல்லது ஒரு பணச்சேர்ப்புக்கான பட்டியலில் தனது சக்திக்கு மீறிய தாயினும் மற்றவர்களை விட அதிகமாகக் கொடுக்க விரும்பும் ஒருவரிடம் இவற்றுக்கான உதாரணங்களைக் காணமுடியும்.இது போலவே எல்லாப் போட்டிகளையும் தவிர்த்துக் கொள்பவர், போட்டி தொடங்க முன்பே தான் தோற்றுவிடுவேன் என்று கருதுபவர், எப்போதும் எவ்விடத்திலும் பின்னால் உள்ள ஆசனத்தில் அமரவே தயாராக இருப்பவர், தனது சட்டபூர்வ உரிமைகட்காகக் கூட எழுந்து நிற்கத் தயங்குபவர்கள் எல்லோரும் இத்தகைய சிறுபராயத்தின் தீர்க்கப்படாத போட்டிகளின் வெளிப்பாடுகளே.நாம் புரிந்துகொள்வதை விடவும் இவை அதிகளவுக்கு ஒரு குழந்தையைப் பாதிக்கின்றன. இவை ஒருவருடைய இயல்பின் மீது மிகவும் அழுத்தமான முத்திரையைப் பதிப்பதுடன் அவரது நடத்தையையுயம் பாழாக்கிவிடக்கூடும்.

## பொறாமையின் தோற்றம்

தனது தாயாரின் 'மிகவும் நேசிக்கப்படும்' ஒரே குழந்தையாகத் தான் மட்டுமே இருக்க விரும்புவதிலிருந்தே இது ஆரம்பிக்கிறது. இந்த விருப்பம் மிகவும் உடமைத்தன்மை வாய்ந்ததாக இருப்பதால் அது எந்தப் போட்டியாளர்களையும் சகித்துக் கொள்வதில்லை. சகோதர சகோதரிகள் பிறக்கும் போது, குழந்தை தாய் தந்தையரது முற்று முழுதான அன்புக்காக அவர்களுடன் போட்டியிடுவது ஆரம்பிக்கிறது. பொறாமை குறித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரின் அணுகு முறையைப் பொறுத்து இந்தப் போட்டி வெளிப்படையாவோ, மறைமுகமாகவோ அமையலாம்.

சில பெற்றோர், சகோதரப் போட்டிகளைச் சகிப்பதில்லை. அவர்கள் எத்தகைய ஒரு வெளிப்படையான ஒரு போட்டி நடவடிக்கைக்கும் தண்டனை வழங்குகிறார்கள். வேறு சில பெற்றோர்கள் இவற்றைக் கண்டும் காணாதது போல் இருந்து விடுவதன் மூலம் பொறாமைக்கான காரணத்தைக் கண்டுகொள்ளாமல் தவிர்த்து விடுகிறார்கள். அவர்கள் தமது குழந்தைகள் எல்லோர் மீதும் ஒரே அளவான அன்பையே தாம் கொண்டிருப்பதால், பொறாமைப்பட வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவிக்கிறார்கள். பரிசுகள், பாராட்டுக்கள், விடுமுறைகள், உதவிகள், உடைகள், சாப்பாடு என்பவை எல்லோருக்கும் சமத்துவத்துடனும் நீதியாகவும் வழங்கப்படவேண்டும்.
ஆயினும் இத்தகைய எந்த அணுகு முறைகளும் சகோதரர்கட்கிடையிலான போட்டி, பொறாமையிலிருந்து முற்றுமுழுதாக விடுதலையைத் தந்துவிடப் போவதில்லை. சமமான தண்டனையோ, சமமான புகழ்ச்சியோ முற்றுமுழுதான அன்புக்கான விருப்பத்தினை சாந்தப்படுத்தி விடப்போவதில்லை. இத்தகைய ஒரு விருப்பம் ஒரு போதும் நிவர்த்திக்க முடியாத ஒன்று என்பதால், பொறாமை, முற்றாக அகற்றப்பட்டுவிட முடியாத ஒன்றாகும். ஆனால் இப்பொறாமை உணர்வு பாதுகாப்பாக வெடிக்கிறதா அல்லது பயங்கரமாகப் பற்றி எரிக்குமா என்பது இது தொடர்பான எமது மனப்பான்மையிலும் நடவடிக்கையிலுமே தங்கியிருக்கிறது.

## பொறாமையை வளர்க்கும் மனப்பாங்கு

சகோதரர்களுக்கிடையே, சாதாரண நிலைமைகளில், பால், வயது, வித்தியாசங்கள் பொறாமை எழக்காரணமாக இருக்கின்றன. வயது வந்த சகோதரனுக்கு அதிகளவு வசதிகளும் சுதந்திரமும் இருப்பதால் அவன் மீது பொறாமை உண்டாகலாம். இளைய சகோதரன் மிகவும் அக்கறையாகக் கவனிக்கப்படுவதால் மூத்தவனுக்கு அவன் மீது பொறாமை எற்படலாம். ஒரு பெண் குழந்தை தனது சகோதரனான ஆண் குழந்தை மீது பொறாமைப் பட அக்குழந்தையின் ஆண் குறி காரணமாகலாம். ஆண் குழந்தைகட்கு விசேட சுதந்திரம் இருப்பதாகச் சொல்லப்படுவது கூட பொறாமையை ஏற்படுத்தலாம். தனது சகோதரிக்கு விஷேட கவனிப்புக்கள் நடப்பதாக ஒரு பையன் பொறாமை அடைகிறான்.

பெற்றோர்கள் எந்தத் தேவையுமில்லாமல் வயதுக்கும், பாலுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து நடக்கும் போது தான் ஆபத்து ஆரம்பமாகின்றது. ஒரு சின்னக் குழந்தைக்கு, அது சின்னதாக இருப்பதால் அதற்கு இருக்கக்கூடிய இயலாத்தன்மை காரணமாக, ஒரு ஆறு வயதுச் சிறுவனுக்கு உள்ள சுதந்திரத்தை விட அதிக முக்கியத்துவம் கொடுக்கும் போது பொறாமை அதிகரிக்கின்றது. இதே மாதிரித்தான் ஒரு குழந்தையின் பால், அதன் தோற்றம், கெட்டித்தனம், இசைஆற்றல், மற்றும் பிற செயற் தேர்ச்சிகள் காரணமாக அதற்கு அளவுக்கு மீறிய பெறுமானம் வழங்கப்படும் போதும் பொறாமை உருவாகிறது. ஒருவரை விட ஒருவர் சிறந்தவர் என்று கூறுவது கூட பொறாமையை வளர்க்கலாம். ஆனால் குறிப்பிட்ட விடயத்திற்கு ஒரு வரை விட இன்னொருவருக்கு



அதிமாகப் பாராட்டுதல் அல்லது பரிசு வழங்குதல் குழந்தைகளிடையே முடிவற்ற போட்டிச் சண்டையை உருவாக்கிவிடும்.

இப்படிச்சொல்லும் போது பெரிய குழந்தைகளும் சின்னக் குழந்தைகளும் ஒரே மாதிரி நடாத்தப்பட வேண்டும் என்று அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. மாறாக, வயது, புதிய வசதிகளையும் புதிய பொறுப்புகளையும் கொண்டுவரத்தான் வேண்டும். வளர்ந்த குழந்தைகளுக்கு, செலவுப் பணம் அதிகமாக இருப்பது, நேரம் செல்லப் படுக்கைக்குப் போக அனுமதிக்கப் படுவது, வீட்டுக்கு வெளியே சிறிய குழந்தையை விட அதிக நேரம் அனுமதிப்பது போன்றவை கிடைக்கத்தான் வேண்டும். இந்த விடயங்கள் வெளிப்படையாகவும், சந்தோஷமாகவும் வழங்கப்பட வேண்டும். அப்போது தான் குழந்தைகள் தாம் விரைவாக வயதாக வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இதனை ஏற்றுகொள்வார்கள்.

இளைய குழந்தை, மூத்த சகோதரத்திற்கு இருக்கும் விசேட சலுகைகள் காரணமாகப் பொறாமைப்படக் கூடும். அக்குழந்தையின் உணர்வுகளைத் தேற்றுவதில் நாம் உதவி செய்யலாம். இதனை உண்மைகளை நிலைநாட்டுவதன் மூலம் செய்வதல்ல மாறாக, அதன் உணர்வுகளைப் புரிந்து கொள்வதன் மூலமாக செய்யலாம்:
'உங்களுக்கு இரவில் நீண்ட நேரம் விழித்திருக்க விருப்பமாயிருக்கும், என்ன?'
'பெரியவனாக இருந்தால் என்ன என்று இருக்கு என்ன?'
'உங்களுக்கு இப்ப ஆறு வயதுக்குப் பதில் ஒன்பதாக இருந்தால் எவ்வளவு நல்லது என்று நினைக்கிறீர்கள் என்ன?'
'எனக்குத் தெரியும்.. ஆனால் இப்ப உங்கடை படுக்கை நேரம் வந்து விட்டது....'

பெற்றோர் சாதுரியம் அற்ற முறையில் நடப்பதன் மூலமாக குழந்தைகளிடையே தங்களை அறியாமலே பொறாமையை வளர்த்து விடுகிறார்கள். ஒரு குழந்தையை இன்னொரு குழந்தைக்காக தியாகம் செய்யுமாறு கோரும்போது இது நடக்கிறது.

'சின்னப் பிள்ளைக்கு உங்களது தொட்டில் தேவைப்படுகிறது. நீங்கள் சோபாவிலே தூங்கலாம்'
'இந்த முறை உங்களுக்குப் புதிய சறுக்கு வண்டி வாங்க முடியாது.. சின்னப் பிள்ளைக்கு குளிர்கால உடுப்புகள் கொஞ்சம் வாங்க வேண்டும்.'

இதிலுள்ள ஆபத்து என்னவென்றால், குழந்தை ஒரு விதமான பாதிக்கப்பட்ட மன நிலைக்கு உள்ளாகின்றது என்பதுதான். இது வெறுமனே அந்தப் பொருள் கிடைக்காமல் அல்லது இல்லாமல் போவதால் வருவது மட்டுமல்ல, அப்பொருளை இன்னொருவருக்குக் கொடுக்கச் சொல்லும் போது பெற்றோருக்கு உள்ள விருப்பம் - அந்த மற்றொருவர் மீதான அன்பு-காரணமாகவும் எழுகின்றது. இத்தகைய ஒரு கோரிக்கை முன் வைக்கப்படவேண்டுமானால் அவை பாராட்டு, அன்பு காட்டல் என்பவற்றுடன் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறாமையைக் கையாளுதல்

சின்னப்பிள்ளைகள் தமது பொறாமையைத் தேர்ச்சி நயமற்ற விதத்தில் வெளிப்படுத்துகிறார்கள். அவர்கள் இப்படிக் கேட்கக் கூடும்: '(இப்போது பிறந்துள்ள) இந்தக் குழந்தை எப்போது சாகும்?' என்றோ அல்லது, 'இதை எடுத்துப் போய் திரும்பவும் ஆஸ்பத்திரியிலுள்ள குப்பைத் தொட்டியில் வீசிவிடுவோம்' என்று பிரேரிக்கவோ கூடும். வேறுசில தீவிரமான பிள்ளைகள், புதியவருக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளில் கூட இறங்கி விடுவதுண்டு. அவர்கள் புதிய குழந்தையை இரக்கமற்றுத் துன்புறுத்தக்கூடும்: 'அவர்கள் ஒரு மலைப்பாம்பின் பாணியில் இறுக்கி அணைக்கக்கூடும், தள்ளிவிடுவது, குத்துவது, முஷ்டியால் இடிப்பது போன்ற தாக்குதல்களில் ஈடுபடக்கூடும். வேறுசில அதிதீவிரமான பிள்ளைகளின் பொறாமையானது மீளத்திருத்த முடியாத பாதிப்புக்களைத் தரவல்ல தாக்குதல்களைக் கூட மேற்கொள்ள வைத்து விடுகிறது.

பெற்றோர்கள் என்ற முறையில் நாம் தனது தம்பியையோ, தங்கையையோ ஒரு குழந்தை மிரட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. பிறரைத் துன்புறுத்துவதில் இன்பம் காணக் கூடிய நடவடிக்கைகள், அவை வாய்மொழி மட்டத்தில் இருந்தால் என்ன உடல் ரீதியானதாக இருந்தால் என்ன நாம் அனுமதிக்கக்கூடாது. ஏனென்றால் இது தாக்கியவரையுங் கூடப் பாதிக்கிறது. அத்துடன் இவ்விரு பிள்ளைகளுக்கும் எமது அரவணைப்பும் அதிகாரமும் தேவைப் படுகின்றன. அதிர்ஸ்டவசமாக,சின்னப் பிள்ளையின் உடற் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நாம் பெரிய பிள்ளையின் உணர்வுகளின் பாதுகாப்பைத் தாக்க வேண்டியது அவசியமில்லை.

ஒரு மூன்று வயதுப்பிள்ளை தனது இளைய சகோதரியையோ,சகோதரனையோ தாக்கும் போது, அதனை நாம் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். அதேவேளை அதன் நோக்கம் என்னவென்பதை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்.
'உனக்கு அந்தக் குழந்தையைப் பிடிக்கவில்லை'
'உனக்கு அதன் மீது கோபம்'
'உனக்கு எவ்வளவு கோபம் எண்டு எனக்குக் காட்டு பார்ப்போம்.நான் பார்க்க! '

அந்தப் பிள்ளைக்கு ஒரு பெரிய பொம்மையைக் கொடுத்து அதன் கோபத்தை அதில் காட்டுமாறு சொல்லலாம். அது பொம்மையை அடிக்கலாம்.அல்லது அதன் கண்ணில் விரலால் குத்தலாம்.அல்லது அதன் மேல் ஏறி நின்று குதிக்கலாம்.
நாம் அந்தப் பிள்ளைக்கு இதைச் செய் இதைச் செய்யக்கூடாது என்று சொல்லக்கூடாது.

எமது கடமையெல்லாம் ஒரு நடுநிலையான கண்ணுடனும் அனுதாபமுள்ள நாவுடனும் நடப்பதை அவதானித்துக் கொண்டிருப்பது மட்டுமே. நாம் அந்தப் பிள்ளையின் கோபத்தையிட்டோ அல்லது அது தாக்கும் விதத்தின் குரூரத்தையிட்டோ அதிர்ச்சி அடையக்கூடாது. இந்த உணர்வுகள் நேர்மையானவை. தாக்குதலும் ஆபத்தற்றது. பிள்ளை தனது கோபத்தை இவ்வாறு ஒரு கற்பித உருவத்தின் மீது குறியீட்டு வடிவத்தில் காட்டுவதன் மூலமாக வடிய விடுவது, நேரடியாக ஒரு உயிர் மீதோ அல்லது அறிகுறிகள் வடிவில் தன் மீதோ வெளிப்படுத்துவதை விடவும் எவ்வளவோ நல்லதாகும்.



எமது அபிப்பிராயங்கள் சுருக்கமாகவும் இலகுவானதாவும் அமைய வேண்டும்.
'நீ எவ்வளவு கோபமாக இருக்கிறாய் என்பதை எனக்குக் காட்டுகிறாய்'
'இப்ப அம்மாவுக்குத் தெரியும்'
'உனக்கு கோபம் வரும்போது எனக்கு வந்து சொல்லு'
இத்தகைய அணுகு முறை பொறாமையைக் குறைப்பதில் மிகவும் பயன்மிக்கதாகும். ஒரு தண்டனையையோ அல்லது அவமதிப்பையோ விட இந்த அணுகுமுறை மிகவும் சிறந்தாகும்.

பதிலாக பின்வரும் அணுகுமுறை பயன்படுத்தப்படுவது பயனற்ற ஒன்றாகும்:
தனது சின்னத் தம்பியை வால்ட்டன் என்ற நாலு வயதுப் பிள்ளை காலில் பிடித்து இழுத்துச் செல்வதைக் கண்ட தாயார் இவ்வாறு கத்தினாள்.
'உனக்கு என்ன நடந்தது? அவனைக் கொல்லப் போகிறாயா? உன் சொந்தத்தம்பியையே நீ கொல்லப் போகிறாயா? உனக்குத் தெரியவில்லையா நீ உனது தம்பியை வாழ்நாள் பூராவும் முடமாக்கி விடுவாய் என்று?, உனக்கு அவன் நொண்டுவது விருப்பமா? எத்தனை தடவை உனக்கு சொல்லியிருக்கிறேன். தம்பியை அவன்ரை தொட்டிலிலிருந்து எடுக்காதே எண்டு. இனி நீ அவனிலை தொடக்கூடாது. இனி ஒரு நாளும் தொடக்ககூடாது அவனிலை.'
வளர்ந்த பிள்ளைகளையும் கூட அவர்களது பொறாமை உணர்வுகளுடன் சேர்த்தே நாம் அணுகவேண்டும். அவர்களுடன் அதிகளவு வெளிப்படையாகப் பேசுவது சாத்தியமாகும்.
'அந்த குழந்தையை உனக்குப் பிடிக்கவில்லை என்பது தெளிவாகவே அறியக் கூடியதாக இருக்கிறது'
'அவன் இல்லாவிட்டால் நல்லது என்று நீ விரும்புகிறாய்'
'உனக்கு நான் முழுக்க முழுக்க உன்னுடையவளாகவே இருப்பதையே நீ விரும்புகிறாய்'
'நான் அவனுடன் கூடுதலாகப் பேசுவதைக் காணும் உனக்குக் கோபம் வருகிறது'
'உனக்கு நான் உன்னோடு இருப்பதே விருப்பம'
'உனக்குச் சரியான கோபம் அது தான். குழந்தையை அப்படிஅடித்தாய். நீ இப்படி அடிப்பதை என்னால் அனுமதிக்க முடியாது. ஆனால் உனக்கு அப்படியான உணர்வு வரும்போது எனக்குச் சொல்லு....'
'நீ தனிமையாக இருக்கும் போது நான் அதிக நேரத்தை உனக்காக செலவளிப்பேன். அப்போது நீ தனிமையை உனக்குள் உணரமாட்டாய்'

## அன்பு-ஒரே மாதிரியானதா, தனித்தன்மை வாய்ந்ததா? தரச்சிறப்பானதா அல்லது சமத்துவமானதா?

எல்லாப் பிள்ளைகளுக்கும் அளவுக்கதிகமாகச் சமமாக இருக்க விரும்பும் பெற்றோர் பொரும்பாலும் எல்லாப் பிள்ளைகளுடனும் எரிந்து விழுவதிலேயே போய் முடிகின்றனர். நியாயத்தன்மையை அளவு செய்து வழங்குவது போல் தோல்வியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகிற விடயம் வேறொன்றுமில்லை. ஒரு தாய் தனது ஒரு குழந்தைக்கு ஒரு பெரிய அப்பிளையோ, அல்லது ஒரு இறுக்கமான அணைப்பையோ கொடுக்க முடியாவிட்டால் அதைவிட நரகம் வேறில்லை. உணர்வுகளை வெளிப்படுத்துகையில் ஏதாவது ஒரு பொருளைக் கொடுக்கும் போது அதைச் சமமாக அளந்து கொடுக்க வேண்டும் என்பதற்காக எடுக்கும் முயற்சி யாரையும் களைப்புக்கும், கோபத்துக்கும் உள்ளாக்கிவிடும். குழந்தைகளும் சம அளவான அன்புக்காக ஒரு போதும் கொட்டாவி விடுவதில்லை, அவர்கள் தாம் தனித்துவமாக அன்பு காட்டப்பட வேண்டும் என்றே விரும்புகிறார்கள். சமமாக அல்ல. எமது அழுத்தம் தரத்தில் இருக்க வேண்டுமே ஒழிய சமத்துவத்தில் அல்ல.

நாம் எமது எல்லாக் குழந்தைகள் மீதும் ஒரே மாதிரியாக அன்பு கொள்ளவதில்லை. நாம் ஒவ்வொரு குழந்தை மீதும் தனித்துவமான அன்பைக் கொண்டிருக்கிறோம். அதை மறைப்பதற்கு நாம் கஷ்டப்பட வேண்டியதில்லை. நாம் கவனமாக இருக்க வேண்டியதெல்லாம், பாராட்பட்சமாக இருப்பதைத் தவிர்ப்பதற்குத்தான்: சமத்துவமற்றுத் தாம் நடத்தப்படுவதாக குழந்தைகள் நினைக்கும் வகையில் நடக்காதிருப்பது தான். விரும்பியோ விரும்பாமலோ தம்மிடம் ஒரேமாதிரியாக நடக்காதவர் என்ற குழந்தைகளின் உலகப் பொதுவான குற்றச்சாட்டிலிருந்து எம்மைத் தற்காத்துக் கொள்பவர்ளாக நாம் இருக்க வேண்டியுள்ளது உண்மையே.

நாம் குழந்தைகளின் இந்தப் பிரச்சாரத்தால் பாதிக்கப்படாதிருப்போமாக. நாம் பிரச்சினைகளைப் பெரிதாக்கிக் கொள்ளவோ அல்லது ஏதுமறியாதவர்கள் என்று கூறிக் கொள்ளவோ அல்லது அவர்களது குற்றச்சாட்டுக்களைப் பிழை என நிரூபிக்க முயலவோ தேவையில்லை. இவ்வாறான, சமமாக நடத்துகிறார், நடத்தவில்லை என்ற அவர்களது முடிவே அற்ற விவாதங்களில் அள்ளுப்படாமல் இருந்தாலே போதுமானது. அத்துடன் சமமான தன்மையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக எமது அன்பைப் பங்கிடும் பணியில் நாம் இறங்கவும் தேவையில்லை.

ஒவ்வொரு குழந்தைக்கும் நாம் எமது தனித்துவமான உறவைத் தெரிவிப்போம். நியாயத்தன்மையையோ அல்லது சமத்துவத்தையோ அல்ல.

எமது குழந்தைகளில் ஒன்றுடன் நாம் சில கணங்களையோ, மணிகளையோ செலவளிக்கும் போது அதை முழுதாகவே அதனுடன் செவளிக்க வேண்டும். அந்த நேரத்தில் அந்தப்பிள்ளை தான், மட்டுமே எமது ஒரே குழந்தையுடன் வெளியே செல்லும் போது மற்றக் குழந்தைகள் பற்றிய மன அலைக்களிப்புகளுடன் இருக்காதிருப்போமாக. மற்றவர்கள் பற்றிப் பேசாதிருப்போமாக. அந்தக் கணம் குழந்தையின் மனதில் எப்போதும் ஞாபகத்திலிருக்கக் கூடியதாக எமது கவனம் முற்று முழுதாக அந்தக் குழந்தையிடமே இருக்கட்டும். அது தான் மட்டுமே தமது பெற்றோரின் ஒரே குழந்தை என்ற உணர்வை அனுபவிக்கட்டும்.



# 8.குழந்தைகளின் பரபரப்புக்கான சில ஏதுக்கள்

ஒவ்வொரு குழந்தையும் தனக்கென பயங்களையும், கவலைகளையும் கொண்டிருப்பதை எல்லாப் பெற்றோரும் அறிவர். ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகளின் மனப்பரபரப்பை அல்லது சஞ்சலத்தை உருவாக்குவதற்கான ஏதுக்கள் எவை என்பதை அறிந்திருப்பதில்லை. அவர்கள் அடிக்கடி இப்படிக் கேட்கிறார்கள்:

'ஏன் எங்கடை பிள்ளை இப்பிடிப் பயப்பிடுகுது... அதுக்கு இப்பிடிப் பயப்பிட ஒரு காரணமும் இல்லையே'.

தனது குழந்தையின் பரபரப்பைப் பார்த்த ஒரு தகப்பனாருக்கு இப்படிச் சொல்ல வேண்டியிருந்தது.

'உந்த அலட்டலை நிப்பாட்டு... உனக்குத் தெரியும். நீ சந்தோசமாக இருக்கிறாய் எண்டு'

குழந்தைகளின் பரபரப்பான மனோநிலைக்கு அல்லது சஞ்சலத்திற்குக் காரணமாக இருக்கக் கூடிய சில ஏதுக்களை விபரிப்பதும் அதை எப்படிக் கையாளலாம் என்று சில வழிகளைத் தெரிவிப்பதும் அவர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும்.

## கைவிடப்பட்டு விடுவேனோ என்ற பயங்கரமான சஞ்சலம்

ஒரு குழந்தையின் மிகப்பெரிய பயம், தான் தனது பெற்றோரால் கைவிடப்பட்டு விடுவேனோ, அன்புக்குரியவரல்லவாகி விடுவேனோ என்பது தான். ஜோன் ஸ்ரேன் பெக்கின் அழகிய வார்த்தைகளிற் சொல்வதானால் 'ஒரு குழந்தை எதிர்நோக்கக்கூடிய மிகப் பெரிய பயங்கரம் தான், தான் அன்பு காட்டப்படவில்லை என்று அது உணர்வதாகும். புறக்கணிப்பை நரகத்தைப் போல் அவர்கள் அச்சத்துடன் உணர்கிறார்கள்.'

புறக்கணிப்பினால் கோபமும், கோபத்துடன் ஒரு வகைப் பழிவாங்கும் உணர்வும் ஏற்படுகின்றன. தான் யாசிக்கும் அன்பு மறுக்கப்பட்ட ஒரு குழந்தை பூனையை அடிப்பதன் மூலமாகத் தனது குற்ற உணர்வை மறைத்துக் கொள்கிறது. இன்னொன்று பணத்தைத் திருடுகிறது. பணம் தன்மீது பிறரை அன்பு செலுத்த வைக்கும் என்று அது நம்புகிறது. இன்னொரு மூன்றாவது குழந்தை உலகத்தையே வெற்றி கொள்கிறது, அதேவேளை எப்போதும் குற்ற உணர்வு, பழிவாங்கல் மேலும் அதிக குற்ற உணர்வு... என்று தொடர்கிறது.

குழந்தைகள் ஒரு போதும் கைவிடப்பட்டு விடுவோம் என்ற பயத்துக்கு ஆளாகக் கூடாது. வேடிக்கைக்காகவோ கோபத்திலோ ஒரு குழந்தை அவ்வாறான பயத்துக்கு உள்ளாக்கப்படக் கூடாது. கடைத் தொகுதிகளிலோ சந்தடியான இடங்களிலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக்குப் பார்த்தபடி இழுபடும் குழந்தைகளிடம் 'சரியா, சொன்னபடி என்னுடன் வராவிட்டால், இங்கேயே விட்டிட்டுப் போய்விடுவேன்...' என்று கத்துகின்ற தாய்மார்களின் குரலை நாம் அடிக்கடி கேட்கிறோம். இத்தகைய ஒரு கூற்று குழந்தைக்கு ஒரு நாளும் மாறாத, தான் கைவிடப்பட்டு விடுவேன் என்கிற அச்சத்தை ஏற்படுத்துகிறது. இது தட்டத்தனியனாக இந்த உலகத்தில் கிடப்பது போன்ற ஒரு அச்ச உணர்வுக்குத் தூபமிடும் கூற்றாகும். அளவுக்கு மீறிப் பொழுதை வீணாக்கும் விதத்தில் பராக்குப் பார்த்தபடி நிற்கும் ஒரு குழந்தைக்கு இப்படி வார்த்தைகளால் மிரட்டும் விதத்தில் சொல்வதை விட கையைப் பிடித்து இழுத்துச் செல்வது சிறந்ததாகும்.

தாங்கள் பாடசாலையால் வரும் போது வீட்டில் தாயார் இல்லாது விட்டால் சில குழந்தைகள் பயப்படுகிறார்கள். இவர்களுக்கு, தாம் கைவிடப்பட்டு விட்டோமோ என்ற ஒரு பரபரப்பு அந்தக் கணமே ஏற்படுகிறது. நாம் ஏற்கெனவே விபரித்தது போன்று ஒரு சிறு தகவற் குறிப்பை எழுதி வைத்து விட்டோ அல்லது ஒரு ஒலிப்பதிவு நாடாவில் தாம் செல்லுமிடம் பற்றிச் சொல்லிப் பதிவு செய்து வைத்து விட்டோ செல்வது நல்லது. ஒலிப்பதிவு செய்யப்பட்ட செய்தி குழந்தைகளைப் பொறுத்தவரை மிகவும் பிரயோசனமான ஒன்றாகும். பெற்றோரின் அன்பும் பரிவும் கலந்த அமைதியான பேச்சு அவர்களை, தமது தற்காலிக பிரிவை பெரியளவு சஞ்சலம் இன்றித் தாங்கிக் கொள்ள உதவுகிறது.

எமது வேலைகள் காரணமாக நாம் பிள்ளைகளைப் பிரிந்து போக வேண்டி ஏற்படும் போது, அந்தப் பிரிவுக்கு முதல் போதியளவு தாயாரிப்பு வேலைகள் செய்யப்பட வேண்டும், சில பெற்றோருக்கு இப்படி ஒரு செய்தியை - விடுமுறைக்காகவோ, வேலை நிமித்தமோ அல்லது ஏதாவது சமூக விடயம் தொடர்பாகவோ வெளியே போவதை - சொல்லவே முடிவதில்லை. குழந்தைகளின் எதிர்வினைக்குப் பயந்து அவர்கள் இரவிலோ அல்லது பாடசாலையில் இருக்கும் போதோ போய் விடுகிறார்கள். யாராவது உறவினர்களோ, சகோதரியோ இதைப் பிள்ளைகட்கு விளக்க வேண்டும்.

மூன்று வயதான இரட்டைக் குழந்தைகளின் தாய் ஒருவருக்கு ஒரு சத்திர சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. வீட்டில் இதன் காரணமாக ஒரு பதட்ட நிலையும், அச்சமும் நிலவியது. ஆனால் குழந்தைகட்கு எதுவுமே சொல்லப்படவில்லை. சத்திரசிகிச்சை நடக்க இருந்த அன்று, தாயார் கடைத்தெருவுக்குப் பொருட்களை வாங்கச் செல்வது போலக் காட்டிக் கொள்வதற்காக கையில் ஒரு பையுடன் புறப்பட்டுச் சென்றார். அன்று போன அவர் மூன்று வாரங்களாகத் திரும்பி வரவில்லை.

இந்த இடைக்காலத்துள் குழந்தைகள் வாடி வதங்கிப் போய் விட்டார்கள். தகப்பனாரின் எந்த விளக்கமும் அவர்களுக்கு எத்தகைய ஆறுதலையும் தரவில்லை. அவர்கள் உறங்குவதற்காக ஒவ்வொரு நாளும் அழுதார்கள். பகல் முழுவதும் ஜன்னற் கம்பிகளைப் பிடித்தபடி தாயின் வரவைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

உண்மையில் குழந்தைகள் முன் கூட்டியே தயார் செய்யப்பட்டால், பிரிவை இலகுவாகவே ஏற்றுக் கொண்டு விடுவார்கள். அர்த்தமுள்ள தயாரிப்பு என்பது சாதாரண வாய்மொழி விளக்கங்களை விடவும் சற்று அதிகமான கவனத்துடன் செய்யப்பட



வேண்டிய ஒன்றாகும். இது குழந்தைகளுக்கே உரிய விளையாட்டு மற்றும் பொம்மைகளின் மொழியினூடாகச் சொல்லப்பட வேண்டும்.

இதைக் கவனியுங்கள்: வைத்தியசாலைக்கு செல்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் தாயார் தனது மூன்று வயது மகள் ஜீற்றியிடம் தான் வைத்தியசாலைக்குப் போகப் போவது பற்றிக் கூறினாள். குழந்தை அவ்வளவு ஆர்வத்தைக் காட்டவில்லை. ஆனால் தாய் தன் குழந்தை இவ்வளவு அக்கறையற்றிருக்கிறாளே என்று முட்டாள்தனமாக யோசிக்கவில்லை. அவள் சொன்னாள்: 'அம்மா ஆஸ்பத்திரிக்குப் போற விளையாட்டு விளையாடுவோம்' அவள் இதற்காகவே ஒரு தொகுதி பொம்மைகளைக் கொண்டு வந்தாள். அவை ஒரு வைத்தியர், ஒரு தாதி, மற்றும் குடும்ப உறுப்பினர்களைக் குறிப்பதாகக் குழந்தைக்குக் கூறப்பட்டது. அந்தப் பொம்மைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் அவர்களுக்காகத் தாய் பேசினாள்: 'அம்மா வருத்தம் சுகமாவதற்காக ஆஸ்பத்திரிக்குப் போகிறாள். ஜீற்றி அம்மா எங்கே எங்கே என்று தேடுகிறாள். ஆனால் வீட்டில் அம்மாவைக் காணவில்லை. அவள் அடுப்படியிலும் இல்லை. ஹோலுக்குள் போய்ப் பார்த்தால் அங்கேயும் இல்லை. அவள் ஆஸ்பத்திரியில் ஒரு வைத்தியரைப் பார்க்கப் போயிருந்தாள். ஜீற்றி கத்துகிறாள்... எனக்கு அம்மா வேணும்... எனக்கு அம்மா வேணும்... ஆனால் அம்மா ஆஸ்பத்திரியில் - தான் சுகம் பெறுவதற்காகப் போய் விட்டார். அம்மாவுக்கு ஜீற்றி மீது நல்ல விருப்பம். இதனால் தான் அவளும் ஜீற்றியைக் காணாமல் தவிக்கிறாள். ஜீற்றியும் அம்மாவைக் காணாமல் தவிக்கிறாள். பிறகு அம்மா சுகமாகி வீட்டுக்கு வருகிறாள். ஜீற்றி சந்தோசப்படுகிறாள்.'

இந்தப் பிரிவும் மீள் சேர்க்கையும் சம்பந்தப்பட்ட நாடகம் திரும்பத் திரும்ப தாயாலும் மகளாலும் விளையாடப்படுகின்றன. முதலில் தாய்தான் அதிகமாகப் பேசினாள். ஆனால் விரைவிலேயே மகளே வேண்டிய பொம்மைகளை எடுத்து வைத்துக் கொண்டு பேசத் தொடங்கினாள். அவள் வைத்தியருக்கும் தாதிக்கும் அம்மாவைக் கவனமாகக் கவனிக்கும்படியும் விரைவாகவே அவளை சுகமாக்கி அனுப்பி விடும்படியும் கூறத் தொடங்கினாள். தாய் வைத்தியசாலைக்கு புறப்படும் முன் ஜீற்றி தாயிடம் ஒரு தடவை சொன்னாள். 'அம்மா கவலைப் படாமல் போய் வாங்கோ. நான் நீங்கள் வரும் வரை இங்கே இருக்கிறேன்.'

போவதற்கு முன்பாக தாய் பல பயனுள்ள செயல்களைச் செய்தாள். அவள் ஜீற்றிக்கு ஒரு புதிய வீட்டுப் பணியாளை அமர்த்தினாள். அவள் தனதும் மகளதும் பெரிய படம் ஒன்றை மகளின் அலங்கார மேசை மீது வைத்தாள். அத்துடன் அவளுக்கு ஒலிநாடாவில் ஒரு அன்பான செய்தியையும் பதிவு செய்து வைத்தாள். தவிர்க்க முடியாத தனிமை நேரங்களில் தாயின் படமும், ஒலிநாடா வசனங்களும் தாயின் அருகாக தான் இருப்பதாக ஜீற்றியை உணர வைத்தது.

## குற்ற உணர்வு காரணமான பரபரப்பு அல்லது மனச்சஞ்சலம்

தெரிந்தோ தெரியாமலோ, பெற்றோர்கள் சிறுவர்களிடம் குற்ற உணர்வை ஏற்படுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். குற்ற உணர்வு, உப்பைப் போல் வாழ்வைச் சுவையுள்ளதாக்கக்கூடிய ஒரு விடயம் தான். ஆனால், அதுவே வாழ்வின் பிரதானமான அம்சமாக இருக்கக்கூடாது. ஒரு குழந்தை ஒரு சமூக ஒழுங்குவிதியை அல்லது விழுமியங்களின் பாற்பட்ட நடத்தையை மீறி நடக்கும் போது அங்கு ஏற்றுக் கொள்ளாமைக்கும், குற்ற உணர்வுக்கும் ஒரு இடம் இருக்கவே செய்கிறது. ஆனால் ஒரு குழந்தை எதிர்மறையான உணர்வுகளை உணர்வதற்குத் தடை செய்யப்படும் வேளையில் அது தவிர்க்க முடியாத விதத்தில் அதிகளவான குற்ற உணர்வுக்கும் சஞ்சலத்திற்கும் உள்ளாகிறது.

இத்தகைய அதிகப்படியான குற்ற உணர்விற்கு ஒரு குழந்தை ஆட்படாமல் இருக்க வேண்டுமானால், அது தவறிழைக்கும் வேளையில் பெற்றோர் ஒரு நல்ல கார் திருத்தும் மெக்கானிக் ஒருவருடைய மனோநிலையுடன், அதனை அணுக வேண்டும். கார் திருத்துபவர் ஒரு போதும் காரின் சொந்தக்காரரில் தவறு காண்பதில்லை. மாறாக, அந்த காரில் திருத்தப்பட வேண்டிய விடயத்தை மட்டும் குறிப்பிடுகிறார். அவர் அந்தக் கார் கிறீச்சிடுவது பற்றியோ அல்லது கடகடப்பது பற்றியோ குறிப்பிட்டு அதைத் திட்டுவதில்லை. அவர் அவற்றை, காரின் குறைபாட்டை விளங்கிக் கொள்வதற்கான அறிகுறிகளாகவோ சமிக்ஞைகளாகவோ காண்கிறார். அவர் தனக்குள்ளேயே இப்படிக் கேட்டுக் கொள்கிறார்.

'இப்படிச் சத்தம் போடுவதற்கும் ஆடுவதற்கும் என்ன காரணமாக இருக்கும்?'
தமது பெற்றோர்களது அன்பையோ, அனுமதியையோ இழந்து விடாமல் தாம் விரும்பியபடி சுதந்திரமாகச் சிந்திப்பதற்குத் தனக்குச் சுதந்திரம் இருப்பதாக ஒரு குழந்தையால் உணரமுடியுமானால், அதைவிட அதற்குச் சந்தோசமான விடயம் எதுவுமில்லை. பின்வரும் வாக்கியங்கள் பயனுள்ளவை:

'நீ ஒரு விதமாக உணர்கிறாய். நான் வேறுவிதமாக உணர்கிறேன். இந்த விடயத்தில் நீ வேறு விதமாக உணர்கிறாய்'
'உன்னுடைய அபிப்பிராயம் உனக்குச் சரி போல இருக்கிறது. எனது அபிப்பிராயம் வேறுபட்டது. நான் உனது அபிப்பிராயத்தை மதிக்கிறேன். ஆனால் எனக்கு வேறு அபிப்பிராயம் இருக்கிறது.'
தமக்குத் தெரியாமலே, பெற்றோர்கள் பிள்ளைகட்கு அதிகளவு விளக்கங்களை வழங்குவதன் மூலமாகவும் அதிக வார்த்தைகளைப் பாவிப்பதன் மூலமாகவும் அவர்களிடத்தில் குற்ற உணர்வை ஏற்படுத்திவிடல் கூடும். இது பெரும்பாலும் 'நவீன' பெற்றோர்களிடம் காணப்படுகிறது. அவர்கள், சிக்கலானதும், பூரணமற்றதுமான விடயங்களில் கூட ஒத்த கருத்தைக் கொண்ட நிலையை உருவாக்க வேண்டும் என்று நம்புகிறார்கள்.

ஐந்து வயதான ஷச்சரி தனது பாலர் பாடசாலை ஆசிரியை மீது மிகுந்த கோபமாக இருந்தான். ஏனென்றால், இரண்டு வாரங்களாக அவர் சுகவீனமாக இருந்ததால் பாடசாலைக்கு வரவில்லை. சுகமுற்று அவர் பாடசாலைக்கு வந்த தினம் அவன் அவரது தொப்பியைப் பிடுங்கிக் கொண்டு பாடசாலை வளவுக்குள் ஓடி விட்டான். ஷச்சரியின் தாயும், ஆசிரியையுமாக அவனைத் தொடர்ந்து வெளியே போனார்கள்.
'அது என்னுடைய தொப்பி...அதை என்னிடம் கொடுத்துவிடு' என்றார் ஆசிரியை.



'ஷச்சரி... உனக்கு நன்றாகத் தெரியும், அந்தத் தொப்பி உனதல்ல என்று. நீ அதை வைத்திருந்தால் மிஸ் மார்டாவுக்கு திரும்பவும் குளிரால் வருத்தம் பிடித்து விடும். அவ ஏற்கெனவே இரண்டு வாரம் வருத்தமாயிருந்து இன்றைக்குத் தான் வந்திருக்கிறா. இல்லையா மிஸ்...? ஷக்கரி உன்னுடைய மிஸ் திரும்பவும் வருத்தக்காரியா வாறது உனக்கு விருப்பமா?'

இப்படியான ஒரு விளக்கம் ஷக்கரிக்கு தனது ஆசிரியையின் சுகயீனம் குறித்த குற்ற உணர்வையும் அதற்கான காரணம் என்ன என்ற உணர்வையும் ஏற்படுத்தி விடுகிறது என்பது தான் இதிலுள்ள ஆபத்து. இந்த நீண்ட விளக்கம் சம்பந்தமற்ற ஒன்று என்பது மட்டுமல்லாமல் தீங்கானதும் கூட. அந்தக்கணத்தில் தேவைப்பட்டதெல்லாம் அந்தத் தொப்பியைத் திரும்பப் பெற்றுக் கொள்வது மட்டுமே. பாடசாலை வளவுக்குள் நின்று கொண்டு இருவருமாக நீண்ட விளக்கம் அளிப்பதை விட தொப்பியை கையில் எடுத்துக் கொள்வதே சிறந்ததாகும். சிலவேளைகளில் ஆசிரியை பிறகு தான் வராமையால் அவனுக்கு ஏற்பட்டிருக்கும் கோபத்தைப் பற்றிப் பேசி வேறு விதத்தில் அவனுடன் ஒத்துப் போயிருக்க முடியும்.

## சுயாதீனம் அல்லது தகுதியை மறுப்பதனால் ஏற்படும் சஞ்சலம்

ஒரு குழந்தை தான் செய்யத் தயாராக இருக்கும் ஒரு வேலையில் ஈடுபடுவதை அல்லது ஏற்கத் தயாராக இருக்கும் ஒரு பொறுப்பை எடுப்பதை மறுப்பது அதற்கு அதிருப்தியையும் கோபத்தையும் ஊட்டுகிறது. கோபம், குற்றஉணர்வை அல்லது எதிர்விளைவு குறித்த பயத்தை ஏற்படுத்தக்கூடிய பழிவாங்கல் நடவடிக்கைகட்கு அதனை இட்டுச் செல்லக்கூடும். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் குழந்தைக்குச் சஞ்சலமே ஏற்படுகிறது. சின்னப்பிள்ளைகள் வேலைகளை திருத்தமாகச் செய்யப் பழகிவிடுவதில்லை. அவர்கள் தமது சப்பாத்து நாடாவை முடிவதற்கோ அல்லது தமது சட்டைத் தெறியைப் போடுவதற்கோ நீண்ட நேரம் எடுக்கிறார்கள். கதவுப்பிடியைத் திருக்கித் திறக்க நீண்ட நேரம் எடுக்கிறது. நாம் செய்யக்கூடிய உதவியெல்லாம் பொறுமையாக அவர்கள் செய்யும் வரை பார்த்துக் கொண்டிருப்பது தான். ஏதாவது சொல்ல வேண்டுமாயின் 'அதைச் செய்வது மூடியைக் கழற்றுவது கொஞ்சம் கஷ்டமான வேலை தான்' என்று மட்டும் சொல்லாம்.

இத்தகைய அபிப்பிராயத்தைக் கூறுவது குழந்தை தனது முயற்சியில் வெற்றி பெற்றாலும் சரி, தோற்றாலும் சரி அதற்கு உதவியாக இருக்கிறது. அது வெற்றி பெற்றால் ஒரு கஷ்டமான வேலையைச் செய்த திருப்தி அதற்கு ஏற்படும். தோற்றாலும், அது உண்மையில் கஷ்டமான வேலைதான், தனது பெற்றோருக்கே அது தெரியும் என்று அதனால் தன்னைச் சாந்தப்படுத்திக் கொள்ள முடியும். இரு சந்தர்ப்பங்களிலும் குழந்தை பரிவையும், ஆதரவையும் பெறுகிறது. இது அதற்குப் பெற்றோர்களிடம் அன்பையும் நெருக்கத்தையும் ஏற்படுத்துகிறது. தான் தோற்றுப் போனதாக, தன்னால் அதைச் செய்ய முடியாது என்று அது உணரப் போவதில்லை.

குழந்தைகளின் வாழ்வை வளர்ந்தோருடைய வினைத்திறனுக்கான அளவீடுகளினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிடக் கூடாது என்பது மிகவும் முக்கியமாகும். வினைத்திறன் என்பது குழந்தைப் பிள்ளைத் தனத்தின் எதிரி என்று சொல்லலாம். குழந்தைகளின் உணர்வு என்ற பொருளாதாரத்தில் அது மிக அதிகமான விலையுயர்ந்த விடயமாகும். இது குழந்தைகளின் எல்லா வளங்களையும் வழிந்தோட வைத்து விடுகிறது! வளர்ச்சியைத் தடுக்கிறது. ஆர்வத்தைக் குறைக்கிறது. உணர்வு வறுமை நிலைக்கு குழந்தைகளை இட்டுச் செல்கிறது.

## பெற்றோருக்கிடையே எழும் சச்சரவுகளினால் ஏற்படும் சஞ்சலம்

பெற்றோர்கள் தம்முன் சண்டையிடும் போதும் குழந்தைகள் சஞ்சலம் அடைகிறாகள். ஒரு வகைக் குற்ற உணர்வின் பாற்பட்ட சஞ்சலம் இது. தமது குடும்பத்தின் சமூக நிலை பாதிக்கப்படுவதினாலும் இச்சண்டையின் போது தமது உண்மையான அல்லது கற்பனா ரீதியான பாத்திரம் என்ன என்பது தொடர்பாக எழும் குற்ற உணர்வினாலும் இச் சஞ்சலம் ஏற்படுகிறது. நியாயமானதோ, இல்லையோ குழந்தைகள் இம்மாதிரியான சண்டைகட்குத் தாமே காரணம் என்று நினைக்கிறார்கள்.

குடும்பத்தில் நடைபெறும் 'சிவில் யுத்தத்தின்' போது குழந்தைகள் பக்கச்சார்பற்று இருப்பதில்லை. அவர்கள் ஒன்றில் தகப்பனாருடனோ, அல்லது தாயுடனோ தமது சார்பு நிலையைக் காட்டிக் கொள்கிறார்கள். இதன் விளைவு என்னவென்றால், அவர்களது மனோரீதியான வளர்ச்சியும், இயல்பு அல்லது நடத்தை வளர்ச்சியும் பாதிக்கப்படுவது தான். ஒரு குழந்தை தாயையோ அல்லது தகப்பனையோ நிராகரிக்கும் போது குழந்தைகள் ஒரு மாதிரி அடையாளத்தைக் காண முடியாதவர்களாகவே இருந்து விடுகின்றனர். நிராகரிப்பு என்பது சிறப்புகளை அடையாளம் காண்பதன் மூலமாக வரும் வெறுப்பின் காரணமாக வெளிப்படுகிறது. அல்லது விழுமியங்களைப் பின் பற்றுவதனாலும் நடத்தைகளை அப்படியே பிரதியீடு செய்வதன் காரணமாகவும் ஏற்படலாம். மிகவும் மோசமான சில சந்தாப்பங்களில் அது ஒருவகைக் குழம்பிய பாலியல் சார்ந்த அடையாளம் காணலாலும் ஒருவர் இல்லாமல் வாழ முடியாத இயலாமை காரணமாகவும் எழலாம். ஒரு ஆண் குழந்தை தாயையும் பெண்குழந்தை தந்தையையும் நிராகரிக்கும் போது அந்தக் குழந்தை எதிர்ப்பால் குறித்த சந்தேகங்கள் நிறைந்த ஒன்றாக வளரக்கூடும்.

பெற்றோர்கள், தமது குழந்தையின் அன்பைப் பெறுவதற்காகப் போட்டியிடும் போது, அவர்கள் அடிப்படைக் கற்பித்தல் நெறிமுறைக்கு விரோதமான முறையில் அதைச் செய்கிறார்கள். லஞ்சம் கொடுத்தல், முகஸ்துதி செய்தல், பொய் சொல்லுதல் போன்றவை இவற்றுள் அடங்கும். இதனால் குழந்தைகள் மாறுபட்ட கீழ்ப்பணிவுடன் வளர்வதுடன், ஒரு விடயம் குறித்து இரு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களாகவும் தம்மை உருவாக்கிக் கொள்கின்றனர். ஒரு பெற்றாரை மற்றவரிடம் இருந்து பாதுகாக்கும் தேவையும் ஒரு நிரந்தர வடுவை ஏற்படுத்தி விடுகிறது. சிறு பராயத்திலிருந்தே அவர்கள், பெற்றோர்களிடையிலான போட்டியில் தாம் ஒரு முக்கியமான ஆள் என்பதை அளவுக்கதிகமாக உணரத் தொடங்குவதுடன், தம்மைக் குறித்து மிகப் பெரிய முக்கியத்துவத்தையும் கொடுக்கத் தொடங்குகிறார்கள். அவாகள சாதுரியமாக செயல்களை உருவாக்கவும் (manipulate), இரகசியங்களை வெளிப்படுத்தப் போவதாக மிரட்டவும் (blackmail), வேவு பார்க்கவும் அரட்டை அடிக்கவும் கற்றுக் கொள்கிறார்கள். இணைந்து வாழ்வது என்பது ஒரு வகை (அவசியமற்ற) கடப்பாடு எனவும், நேர்மை என்பது ஒரு தடை எனவும் உணர்கின்ற உலகத்தில் அவர்கள் வாழப் பழகிக் கொள்கிறார்கள். இந்த உலகம் பைத்தியமாக்கக்கூடிய நடத்தைகளை ஊக்குவிப்பதும் வளர்த்து விடுவதுமான ஒரு உலகமாகும்.



## உடல் சார்ந்த நடவடிக்கைகளுக்கு ஏற்படும் இடையூறுகளால் வரும் சஞ்சலம்

பெரும்பாலான நவீன வீடுகளில் குழந்தைகள் ஓடிவிளையாட இடமின்மை காரணமாக விரக்தியுறுகிறார்கள். சிறிய தொடர் மாடி வீடுகளும், விலையுயர்ந்த தளபாடங்களும் அவர்களுக்கு இயல்பாகவே எழுகின்ற ஏறுதல், குதித்தல், ஓடுதல் போன்ற நடவடிக்கைகளுக்கான ஆர்வத்தைக் கட்டுப்படுத்துகின்றன. அதிலும் இக் கட்டுப்பாடுகள் குழந்தைகளின் மிக இளம் வயதிலேயே தொடங்கி விடுகின்றன. சிறு குழந்தை தனது வண்டியில் ஏற அனுமதிக்கப்படுவதில்லை. தத்தி நடக்கும் குழந்தைக்குப் படிகளில் ஏற அனுமதி கிடைப்பதில்லை. நடக்கும் குழந்தைக்கு வசிப்பறைக்குள் (Living Room) ஓடித்திரிய அனுமதி கிடையாது!
இவ்வாறு விரக்திக்குள்ளாகும் குழந்தைகளின் மனதில் அழுத்தம் வலுக்கிறது. இது சஞ்சலத்துக்கு ஏதுவாகிறது. இதற்கான தீர்வு, இப்பிரச்சினையைச் சொல்லும் போதே தெளிவாகி விடுகிறது. இளம் பிள்ளைகட்கு தமது மன அழுத்தத்தைக் குறைக்க உடல் சார்ந்த நடவடிக்கைகள் அவசியமாகும். ஓடித்திரியப் போதியளவு இடமும், விளையாடக்கூடிய நிலப்பரப்பும் அவர்களுக்கு உளரீதியான பாதுகாப்பை வழங்க அவசியமாகும்.

## மரணம் காரணமான சஞ்சலம்

பெரியவர்களைப் பொறுத்தவரை இறப்பின் காரணமான துயரம் மரணத்தின் மீளப்பெறமுடியாத தன்மையிலிருந்து எழுகிறது. மரணம் எல்லா நம்பிக்கைகளினதும் முடிவு. அது இறுதியானதும், சாசுவதமானதும் கூட. இதன் காரணமாக மரணம் தனிப்பட்ட முறையில் ஒருவரால் நினைக்கப்படக் கூடியதாகவோ தனது முடிவு தனது உடலில் அழிவு என்பன குறித்து ஒருவரால் கற்பனை செய்தல் சாத்தியமானதாகவோ இருப்பதில்லை. நாம் ஒவ்வாருவரும் கடந்த காலம், எதிர்காலம் என்பவை குறித்த நினைவுகளையும் நம்பிக்கைகளையும் கொண்டவர்கள். எதிர்காலம் பற்றிய எண்ணங்கள் அற்றவர்களாக எம்மால் இருக்க முடியாது. இந்த எல்லைக்குள் தான் எமது நம்பிக்கைகள் காரணமான ஆறுதலை நாம் பெறுகிறோம். எமது இந்தத் தெளிவு எமக்கு ஒரு எதிர்காலத்தைத் தருகிறது. நாம் அமைதியாக வாழ்ந்து மடிகிறோம்.
பெரியவாகளையே மரணம் திகைப்படைய வைக்கக்கூடிய ஒன்றென்றால், குழந்தைகள் எம்மாத்திரம்? அது அவர்களுக்கு மர்மங்கள் நிறைந்த ஒரு புதிராகவே இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் என்பது நிரந்தரமானது, தனது பெற்றோர்களாலோ, தனது வழிபாடுகள் மூலமாகவோ இழந்தவரைப் பெற முடியாது என்பதை அவர்களால் விளங்கிக் கொள்ள முடிவதில்லை. அவர்களது மந்திரவித்தைக் கொப்பான விருப்பங்கள் மரணத்தின் முன் பயனற்றவையாகப் போவது அவர்களுக்கு மிகவும் பெரிய தாக்கத்தைக் கொடுக்கிறது.

கெட்டித்தனமாக நடப்பதன் மூலமாக எதையும் செய்யக் கூடிய சக்தி தன்னிடம் உள்ளது என்ற குழந்தையின் நம்பிக்கை இங்கே சிதறுகிறது. இது அதனைப் பலவீனத்துக்கும் சஞ்சலத்துக்கும் உள்ளாக்குகிறது. குழந்தை, தனது அழுகை, தனது எதிர்ப்பு நடவடிக்கைகள் எல்லாவற்றையும் மீறித் தனக்கு விருப்பமான ஒரு பிராணியோ, ஒரு மனிதரோ இனித்தன்னுடன் இல்லையென்பதைக் கண்கூடாகக் காண்கிறது. இதன் காரணமாக குழந்தை தான் கைவிடப்பட்ட ஒன்றாகத் தன்னை நினைத்துக் கொள்கிறது. குழந்தைகளின் இத்தகைய உணர்வு அவர்கள் பெற்றோரிடம் அடிக்கடி கேட்கும் இது போன்ற கேள்விகளில் வெளிப்படும்: 'நீங்கள் செத்த பிறகும் என்னை விரும்புவீர்களா?'

சில பெற்றோர்கள் குழந்தை பெரிதும் விரும்பிய ஒருவரின் அல்லது ஒன்றின் மறைவைக் குறித்து துயரத்தை அது அனுபவிக்கக்கூடாது என்று அதைப் பாதுகாக்க முயல்கின்றனர். குழந்தையின் வளர்ப்பு மீனோ அல்லது ஆமையோ இறந்தால் உடனடியாக அதற்குப் பதிலாக வேறொன்றினைக் கொண்டு வந்து வைப்பதன் மூலம் அதை மறைக்கப் பார்க்கிறார்கள். குழந்தை இதைக் கவனிக்க மாட்டாது என்ற நம்பிக்கையுடன் அதன் பூனையோ நாயோ இறந்தால் உடனடியாக அதைவிட அழகான விலையுயர்ந்த ஒன்றைக் குழந்தைக்கு வழங்குகிறார்கள். இத்தகைய திடீர் இழப்புகளும் உடனடிப் பதில் மாற்றீடுகளும் குழந்தையின் மனதில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன?

தன் விருப்பத்துக்குரியதாக இருந்த ஒன்று பெரிய விடயமல்ல. அன்பு இலகுவாக ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றப்படக் கூடியது தான் என்பதே குழந்தை இதன் மூலம் அறிந்து கொள்ளும் பாடமாகும்.

உண்மையில், இவ்வாறான சந்தர்ப்பங்களில் கவலைப்படுவதற்கும், துக்கத்தை அனுஷ்டிப்பதற்குமான அதன் உரிமை மறுக்கப்படக் கூடாது. அது இழந்து போன தனது அன்பிற்குரியவர் குறித்துக் கவலைப்பட அனுமதிக்கப்பட வேண்டும். அதன் மூலமாக குழந்தையின் மனிதாபிமானம் வளர்கிறது. அதன் நடத்தை பண்புடையதாக அமைகிறது. அடிப்படையான விடயம் என்னவென்றால் குடும்பத்தின் சந்தோஷங்களிலும் துக்கங்களிலும் இருந்து குழந்தைகள் வெளியொதுக்கப்படக்கூடாது என்பது தான். ஒரு இறப்புக் குறித்துக் குழந்தைக்கு தெரியப்படுத்தாது போனால், அது தனக்குள்ளேயே இனந்தெரியாத சஞ்சலங்களை வளர்த்துக் கொள்கிறது. அல்லது மிகப்பயங்கரமானதும் குழப்பகரமானதுமான தனது சொந்த விளக்கங்களை அது உருவாக்கிக் கொள்கிறது. அது தானே இந்த இறப்புக்குக் காரணம் என்று நினைப்பதுடன், இறந்தவரிடமிருந்து மட்டுமல்லாமல் இருப்பவர்களிடமிருந்தும் கூட தன்னை ஒதுக்கிக் கொள்ளக்கூடும். இழப்புக்களை எதிர்கொள்வதற்கு குழந்தைகட்கு நாம் உதவ வேண்டும். இதற்கான முதற்படி அவ்விழப்புக் குறித்த அதன் உணர்வுகளைப், பயத்தை, கலவரத்தை பூரணமாக வெளிப்படுத்த அனுமதிக்க வேண்டும்.



ஆறுதலையும், அமைதியையும் அதன் உணர்வுகளை ஆறுதலாகக் கேட்டுப் பகிர்ந்து கொள்ளும் ஒருவராலேயே வழங்க முடியும். குழந்தை தனது உணர்வுகளை வெளிப்படுத்தத் தடுமாறும் வேளைகளில் பெற்றோர்கள் சில வார்த்தைகளை அதற்காகச் சொல்ல முடியும். தனது அன்புக்குரிய பாட்டி இறந்த பின் வருந்தும் ஒரு குழந்தைக்குப் பெற்றோர் இப்படிக் கூறலாம்.

'உங்களுக்கு பாட்டி இல்லாதது தவிப்பாக இருக்கிறது என்ன?'
'உங்களுக்கு அவவை நிறையத் தேவை போல இருக்கிறது'
'நீங்கள் அவவை நல்லா விரும்பினீங்கள்...'
'அவவும் உங்களில் சரியான விருப்பமா இருந்தா'
'அவ எங்களோடை இருந்தா நல்லா இருக்கும் எண்டு நினைக்கிறீங்கள்...'
'இப்பவும் அவ உயிரோடு இருந்தால் எவ்வளவு நல்லது எண்டு இருக்கு என்ன?'
'அவ செத்ததெண்டு நம்பவே முடியவில்லை'
'அவ எங்களோடை இல்லை எண்டு நம்பவே முடியவில்லை'
'அவவை உங்களுக்கு நல்லா ஞாபகமிருக்கும்...'

இத்தகைய வார்த்தைகள் குழந்தைக்கு தனது உணர்வுகள் குறித்து தனது பெற்றோர்கள் அக்கறையாக இருக்கிறார்கள் என்று உணர வைக்கும். இது குழந்தைக்கு தனது உணர்வுகளைப், பயத்தை, கலவரத்தை பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள உதவும். அது மரணம் குறித்த சில கேள்விகளைக் கேட்கக்கூடும். மரணம் நோவை ஏற்படுத்துமா என்று அது கேட்கலாம். 'செத்தவர் திரும்பி வருவாரா? நான் எனது அப்பா அம்மா எல்லோரும் கூட சாவோமா?' என்று கேட்கக்கூடும். பதில்கள் சுருக்கமாகவும் உண்மையாகவும் அமைய வேண்டும்:
' சாகும் போது ஒருவரது உடலுக்கு நோவு ஏற்படுவதில்லை. செத்தவர் ஒரு போதும் திரும்பிவரமாட்டார். வயது போய் கிழப்பருவம் அடைந்த பின் ஒருவர் சாவது இயற்கை தான்.'
சாவு பற்றிக் குழந்தைகளுடன் பேசும் போது ஒழித்து மறைத்துப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். அத்துடன் இடக்கரடக்கற் சொற்களைத் தவிர்த்து நேரடிச் சொற்களைப் பாவிப்பது சிறப்பானது. உதாரணமாக இறந்து போன பாட்டனார் தனது 'நித்திய உறக்க நிலைக்குப் போய் விட்டார்' என்று ஒரு நாலு வயதுக் குழந்தைக்குக் கூறுவது பயனற்றது. அது சில வேளை 'அவர் தனது உடுப்பையும் போர்வையையும் எடுத்துப் போனாரா' என்று கேட்கவும் கூடும். அது மட்டுமல்ல பாட்டனார் தன்னுடன் கோபமாக இருந்ததால் தான் தனக்கு இரவு வணக்கம் கூறி முத்தமிட்டு விட்டுத் தூங்கப் போகவில்லை என்றும் நினைக்கக்கூடும். பாட்டி சொர்க்கத்திற்குப் போய் 'தேவதையாக மாறிவிட்டார்' என்று ஒரு ஐந்து வயதுக் குழந்தைக்குச் சொன்னால், தாம் எல்லோரும் உடனேயே இறந்து சொர்க்கத்திற்குப் போக வேண்டும் என்று அது பிரார்த்திக்கவும் கூடும். ஒரு குழந்தை, அன்பான அணைப்புடனும் பார்வையுடனும் நேர்மையான உண்மையை எளிமையான வார்த்தைகளிற் சொல்லும் போது அதை ஏற்றுக் கொள்கிறது. வாழ்க்கை பற்றிய இறப்புப் பற்றிய யதார்த்தங்களைப் புரிந்து கொண்ட பெற்றோர் இவ்வாறு நடந்து கொள்வதே சிறப்பானதாகும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால், வார்த்தைகளை விட எமது நடவடிக்கையும் மனப்பாங்கும் அதிகம் பேசுகின்றன என்பதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9.பாலியற் கல்வி

பெரும்பாலான பெற்றோர்கள் பாலியற் கல்வியை ஒரு உரையாடலென்றே கருதுகின்றனர். அவர்கள் பிள்ளைகளின் வாலிப அல்லது யௌவனப் பருவத்திற்கு முந்திய நிலையைப் பற்றிக் கவலையற்றவர்களாக 'இந்தப் பருவத்தில்' அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று தாம் கருதுகின்ற 'வாழ்க்கை பற்றிய உண்மைகளை' அவர்களுக்குச் சொல்கிறார்கள். பையன்களுக்குப் பாலியல் நோய்கள் பற்றியும் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் பாலியற் கல்வி அதற்கு முன்பாகவே ஆரம்பமாகி விடுகிறது.

## பெற்றோரது சொந்த உடலுணர்வு

பாலியற் கல்வி, பெற்றோர்களது சொந்தப் பாலியல் உறுப்புக்கள் தொடர்பான உணர்வுகள், மனப்பாங்குகளுடன் தொடங்கி விடுகிறது. அவர்கள் தமது உடலின் தோற்றத்தை, அதன் மணத்தை, உணர்வை விரும்புகிறார்களா அல்லது அவற்றில் அநாகரிகமானவை, அசிங்கமானவை, அழகற்றவை என்று சில விடயங்கள் இருப்பதாக நம்புகிறார்களா? அவர்கள் தமக்குள் ஒருவர் மற்றவரது நிர்வாண நிலை குறித்து சந்தோசமடைகிறார்களா அல்லது வெட்கத்தால் கண்ணை மூடிக்கொள்ளவோ, துணியால் உடலை மூடிக்கொள்ளவோ செய்கிறார்களா? அவர்கள் தமது அல்லது துணைவரின் பால் தொடர்பாக வெறுப்போ எரிச்சலோ கொண்டவர்களாக இருக்கிறார்களா? அல்லது அதை விரும்புகிறார்ளா? அவர்கள் ஒருவரையொருவர் புரிந்துணர்வற்றவராக பயன்படுத்திக் கொள்பவராகக் கருதுகிறார்களா? அல்லது சந்தோசமூட்டும் இன்பத்தைப் பகிர்ந்து கொள்ள உதவுபவராகக் கருதுகிறார்களா?... என்பன பிள்ளைகளின் பாலியற் கல்விக்கு அடிப்படையாகி விடுகின்றன.

பெற்றோரது உணர்வுகள் எப்படி இருப்பினும், அவை பிள்ளைகட்குக் கடத்தப்பட்டு விடும். அவர்களது பேச்சு பறவைகள் பற்றியோ, வண்டுகள் பற்றியோ, அல்லது பூனையைப் பற்றியோ இருக்கலாம். ஆனால் பெற்றோர்களது பேசப்படாத உணர்வுகள்



பிள்ளைகட்குக் கடத்தப்பட்டு விடும். இந்தக் காரணத்தினால் தான் பிள்ளைகளது பாலியல் தொடர்பான கேள்வி ஒன்றிற்கு எப்படிப் பதிலளிப்பது என்ற பெற்றோரின் பிரச்சினைக்குச் சரியான பதில் கொடுக்க முடியாதிருக்கிறது. முதலில் பெற்றோர்களது இவ்விடயம் குறித்த உணர்வுகள் புரிந்து கொள்ளப்பட்டு அவர்களது கவலைகளும் சங்கடங்களும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

## பாலியல் உணர்வுகளின் தொடக்கம்

தாயின் வயிற்றிலிருந்து பிறந்த நாள் முதல், குழந்தைகள் உடல் உணர்வு இன்பத்தை அனுபவிக்கத் தொடங்குகிறார்கள். அவர்கள் வளர்ச்சியோடு சேர்ந்து பாலியல் மனப்பாங்கு அவர்களை உருவாக்குவதில் பங்கு வகிக்கிறது. வளர்ந்த ஒருவரைப் போல இல்லாவிட்டாலும், தனது உடலதும் உடலின் இயக்கங்கள் குறித்ததுமான குழந்தையின் சந்தோசங்கள் இயல்பில் பாலியல் (Sexual) தன்மை வாய்ந்தவையே. குழந்தை கொஞ்சம் வளர்ந்து அதற்கு இயலும் பருவம் வந்ததும் அது உடலை ஆராயத் தொடங்குகிறது. சீண்டப்படுவதை, தழுவப்படுவதை விரும்புகிறது. இந்த ஆரம்பகால தொடுகை உணர்வே அதன் ஆரம்பகால பாலியற் கல்வியாகும். இவற்றின் மூலமாக அது அன்பைப் பெற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்கிறது.

குழந்தைகளை அணைப்பதும், விளையாடுவதும் கூடாது என்று தாய்மார் தடுக்கப்பட்ட ஒரு காலம் இருந்தது. இது குழந்தைகளைப் பழுதாக்கிவிடும் என்பதால் இப்படிச் சொல்லப்பட்டது. ஆயினும் இதைப் பெரும்பாலான தாய்மார் அர்த்தமுள்ளதாக ஏற்றுக் கொள்ளவில்லை. தாய்மார் தாம் குழந்தைகளுடன் விளையாடாதிருப்பதே அவர்களைப் பழுதாக்கும் என்பதை இயற்கையாகவே அறிவார்கள். ஆனால் இப்போது குழந்தைக்கு அணைப்பு, ஆதரவு, தொடுகை உணர்வும் மிகவும் அவசியம் என்பதை நாம் அறிவோம்.

ஒரு குழந்தை, வாய் மூலமான சந்தோசத்தைத் தருகிறதைக் கண்டு பிடிக்கிற போது, அதற்குச் சாத்தியமாகிற, அசையக்கூடிய எல்லாப் பொருட்களும் அதன் வாய்க்குள் செல்கின்றன. பெருவிரல், போர்வை, விளையாட்டுப் பொருட்கள் எல்லாமே அதன் வாய்க்குள் போகின்றன. உறிஞ்சுதல், சூப்புதல், கடித்தல் என்பன சந்தோசமான உணர்வை, அவை சாப்பிட உகந்ததல்லாத பொருட்களாக இருப்பினும், தருகின்றன. இந்த வாய் இன்பம் ஒரு போதும் நிறுத்தப்படக் கூடாது. ஆனால் ஒழுங்குபடுத்த வேண்டும். வாய்க்குள் போவது சுத்தமான பொருளா என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். சில குழந்தைகள் சாப்பிடுவதன் மூலம் தமது வாய் இன்பத்தை அனுபவிக்கிறார்கள். வேறு சிலருக்கோ மேலதிகமான உறிஞ்சுதலும் தேவைப்படுகிறது. இவை இயல்பாகவே வழங்கப்பட வேண்டும். குழந்தைகளின் முதலாவது வயதில், அது உலகத்தைக் காணும் கண்ணாடி அதன் வாய் தான். அது ஒரு சந்தோசமான பிம்பத்தைக் காண அனுமதிக்கப்பட வேண்டும்.

இந்த உறிஞ்சல் தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அவை மறையப் போவதில்லை. மாறாக அவை மெல்லியதாகவோ பெரியதாகவோ மாறுபட்ட விதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுகின்றன. ஒரு குழந்தை தொடர்ந்தும் விரல் சூப்பக்கூடும். வளர்ந்த ஒரு பிள்ளை தனது இரேசரை (அழிக்கும் இறப்பர்) சூப்பக் கூடும். வளர்ந்த ஒருவர் சிகரட் அல்லது சுருட்டை உறிஞ்சக் கூடும். குழந்தைகள் எல்லாப் பொருட்களையும் கடிப்பதும் சிறுவர்கள் நகம் கடிப்பதும், வளர்ந்தோர் பேசும் சொற்களைப் பேசுவதும் கூடும்.

## பால், கழிப்பறை குறித்த பயிற்சி

பால் உறுப்புகளும் கழிவகற்றும் உறுப்புகளும் அருகருகாக இருப்பதால், கழிப்பறைப் பயிற்றுவிப்பு, பாலியல் வளர்ச்சியிலும் ஒரு வித பாதிப்பை ஏற்படுத்துகிறது. இரண்டாவது வயதுக் காலத்தில் குழந்தை மலம் கழித்தலின் போதான சுகத்தில் அதிகம் கவனம் செலுத்துகிறது. அதைப்பொறுத்தவரை அதற்கு அருவருப்பூட்டும் எதுவும் தெரிவதோ, நாற்றமடிப்பதோ இல்லை. நாம் குழந்தைக்கு கழிவகற்றும் பழக்கங்களை கற்றுத்தரும் போது, அதனது உடலிலிருந்து வெளியேறும் கழிவோ, அதன் உடற்பகுதியோ அருவருப்பானது என்ற உணர்வு அதற்குத் தொற்றும் விதத்தில் செயற்பட்டு விடக் கூடாது என்பதில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். எமது அவசரமான, இறுக்கமான நடவடிக்கைகள் குழந்தைக்கு தமது உடலின் இப்பகுதிகளின் செயல்கள் சந்தோசத்துக்குரியவை அல்ல. மாறாக அச்சத்திற்குரியவை என்று கருத வைத்து விடுகின்றன.

அமைதியற்ற பயிற்றுவிப்பு சுய தோல்வியிலேயே முடிவடையும். குழந்தைகள் இரண்டு வயது வரும் வரை மலம் கழிக்கும் பாத்திரத்திற்கு (bowl) கட்டுப்படத் தயாராக இருப்பதில்லை. மூன்று வயது வரை சிறுநீர் கழிப்பதில் கட்டுப்பாடு இருக்காது. அடிக்கடி 'விபத்து'க்கள் நடக்க வாய்ப்புண்டு! ஐந்து வயது வரை இவற்றுக்கு 'வரி' விலக்கு அளிக்கப்பட வேண்டும்.

பயிற்சியின் ஆரம்ப காலங்களின் போது, குழந்தைகட்கு அவர்களது உடலிலிருந்து வெளியேறுபவைகளை அளையாதிருக்கப் பழக்க வேண்டும். ஆனால் இது அவர்களது விருப்பத்தைத் தடை செய்வதாக அமையக் கூடாது. அவ்வாறு செய்வது அவசியமானதோ விரும்பத்தக்கதோ அல்ல. அவர்களுக்கு விலக்கப்பட வேண்டிய ஆசைகளை வேறு வழிகளிற் செய்ய அனுமதிக்கலாம். மண், கலர், சேறு, களி (அது கபில நிறமாக இருப்பது நல்லது!) என்பவற்றைப் பிசைய அனுமதிப்பதன் மூலம் அவர்களது மன விருப்பை நிறைவு செய்ய முடியும். இவ்வாறு செய்வது மிகவும் பயனுள்ள ஒன்றாகும். அவர்களது உள்மனதில் இவ்வாறான களித்தன்மையான, பிசையக்கூடிய பொருட்கள் எல்லாம் அவர்கள் விரும்பும் உண்மையான பொருட்களின் பிரதி விம்பங்களாகத் தொழிற்படும். இவ்வாறு செய்வதன் மூலம் அவர்களுக்குப் பதிலான ஒரு சந்தோசத்தை எம்மால் வழங்க முடியும். இது அவர்களது அசல் சந்தோசத்திற்குப் பதிலாக அவர்களுக்கு வேண்டிய திருப்தியை வழங்கும்.

பயிற்சியைக் குறைவாக வழங்குவதும் கூட சுயதோல்விக்கு இட்டுச் செல்கிறது. குழந்தை கவனிப்பின்றி விடப்படும் போது அது தன்னை நனைத்துக் கொண்டும், அளைந்து



கொண்டும் நீண்ட நேரம் இருக்கிறது. குழந்தைக்கு இது சந்தோசத்தை அளிப்பதாக இருக்கலாம்.ஆனால் இதைச் செய்வதால் கிடைக்கின்ற முடிவு அது எதிர்பார்க்கிற ஒன்றைச் செய்து முடித்த சந்தோசத்தைத் தருவதில்லை. குழந்தை தயாராகும் போது அதற்கு அன்பாகவும் தெளிவாகவும் நாம் அதனிடம் எதை எதிர்பார்க்கிறோம் என்று சொல்லிவிட வேண்டும்.

'நீங்கள் சின்னக் குழந்தையாக இருக்கும் போது அப்படிச் செய்வது முகப்பாத்தியாக இருக்கும். உங்களது உடுப்புக்குள் சூடான உணர்வு ஏற்படுவதை நீங்கள் விரும்பக்கூடும். ஆனால் இனி நீங்கள் அதை அந்தப் பாத்திரத்தினுள் (potty) செய்ய வேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம்.

பயிற்சிக் காலங்களின் போது குடலை சுத்தம் செய்யும் அல்லது குதவழியாக வெப்ப நிலையை அளவிட வேண்டிய நிலைவந்தால் விஷேட கவனத்துடன் செய்ய வேண்டும். கடுமையான அல்லது தொடர்ச்சியான இவ்வாறான செயற்பாடுகள் குழந்தைகளை மிகவும் பயத்துக்குள்ளாக்கி விடுகிறது. இது பிற்காலத்தில் பெரிதாக வளர்ந்த பின்னும் உட்புகுத்துதல் குறித்து அச்ச உணர்வுள்ளவர்களாக்கி விடும்.

அடிக்கடி கையால் அடித்தல் கூடப் பால் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது. பால் உறுப்புக்கள் அருகருகாக இருப்பதால், பிட்டப்பகுதியில் அடிக்கும் போது அது குழந்தையைப் பாலியல் ரீதியான தூண்டுதலுக்கு உள்ளாகி விடக் காரணமாகின்றது. இது, இவ்வாறு அடிவாங்குவதற்காகவே தவறான செயல்களில் ஈடுபடும் நிலைக்கு அவர்களைத் தூண்டக் கூடும். அன்புக்கு அடி ஒரு முன் நிகழ்வாக அமைய வேண்டும் என்று அது கருதத் தொடங்குகிறது. இது வளர்ந்த பின்னும் தொடர்ந்து நிலைக்கும் ஒன்றாகும். பல வளர்ந்த சோடிகளுக்கு, இனிய இரவுக்கு ஒரு நல்ல சண்டை தேவைப்படுகிறது!

## பிறப்புறுப்புடன் சார்ந்த இன்பங்கள்

குழந்தைகள் உடல்ரீதியாவும், மனோரீதியாகவும் வளர்ச்சியடைந்து வரும் போது, தமது பிறப்புறுப்புகளில் மிக அதிகமான இன்பமூட்டும் கிளுகிளுப்பு உணர்வுகளை உணரத் தொடங்குகிறார்கள். இவ்விடத்திலும் நாம் குழந்தைகள் எந்த வித குற்றவுணர்வுக்கும் ஆட்படாது தமது உடல் ரீதியான உணர்வுகளைக் கொண்டிருக்க அனுமதிக்க வேண்டும். உண்மையில் இந்தக் காலத்தில் தான் முன்னெப்போதையையும் விட அதிகளவுக்கு எமது அன்பான வழிகாட்டல் அவசியமாகும். குழந்தையின் இன்பமூட்டும் உணர்வுகள், உளவியல் ரீதியில் ஆபத்தாக அமையாமலிருக்க எமது அன்பான வழிகாட்டல் அவசியமாகும்.

ஒரு பெண்குழந்தை தனது பெண் குறியின் மேடான பகுதியை (Clitoris) தனது தாயாருக்குக் காட்டி 'இது தான் எனக்கு மிகவும் அதிக உணர்ச்சியை ஊட்டும் பிரதேசமாக உள்ளது.' என்று கூறும் போது தாயார் மிகுந்த நிதானமாகவும், புத்திசாதுரியத்துடனும், உண்மையாகவும் பதிலளிக்க வேண்டியது அவசியம். 'ஐயோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடதே அதிலே ' என்ற கத்துவது கூடாது. மாறாக, உண்மையில் குழந்தை சாதாரணமான வளர்ச்சியை அடைந்து விட்டது, வாய் மூலமானதாகவோ, அல்லது மலவாசலுடன் சம்பந்தப்பட்டதாகவோ அல்லாமல் அதன் இன்ப உணர்வு பிறப்புறுப்புகளுடன் சம்பந்தப்பட்டு வருகிறது என்பதை அது தெரிந்து கொண்டிருப்பது சரியானதே என்ற உண்மையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## பால் வேறுபாடுகள்

குழந்தைகள் பால் வேறுபாடுகளை நிலையானவையாக எடுத்துக் கொள்வதில்லை. இவை அவர்களுக்குக் கணநேர மர்மங்களாகவே இருக்கின்றன. அவர்கள் தமக்குள் இதற்கான பல்வேறு விசித்திரமான விளக்கங்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். நாம் எவ்வளவு தெளிவாக விளங்கப்படுத்தினாலும் குழந்தைகள் சிலவேளைகளில் ஒவ்வொருவருக்கும் ஒரு (ஆண்) குறியைக் கொண்டிருக்க உரிமையுண்டு என்று முடிவு செய்யவும் பிரகடனம் செய்யவும் கூடும்.

ஒரு பெண்குழந்தை தனது ஆண் குறி தொலைந்து விட்டதாகவோ அல்லது தன்னைத் தண்டிப்பதற்காக எடுக்கப்பட்டு விட்டதாகவோ கருதக்கூடும். சிலவேளை தான் நல்லபிள்ளையாக நடந்தால் அல்லது இன்னும் கொஞ்சம் வயது வர தனக்கும் அது முளைக்கும் என்று நினைக்கக்கூடும்.

ஒரு ஆண்குழந்தை, ஒரு பெண்குழந்தை தன் ஆண் குறியைத் தொலைத்தது போல தானும் தொலைத்துவிடக் கூடும் என்று கலவரப்படக்கூடும். பெற்றோர்கள் இவ்வாறான பயங்களை வெறும் பகிடிக்குரிய பயங்களாக எடுத்துப் பிறருடன் சிரித்து மகிழ்வதற்கான விடயங்களாக உபயோகிக்கக்கூடாது. இத்தகைய பயங்கள் அக்கறையுடனான அணுகுதலுக்கும், பரிகாரம் காணப்படுவதற்கும் உரிய முக்கியமான பயங்களாகும். உடலியல் சார்ந்த வேறுபாடுகள் குறித்த குழந்தைகளது கற்பனைகளை வெளியே கொண்டு வருவதற்குக் குழந்தைகட்கு நாம் உதவ வேண்டும். நாம் எமது பெண் குழந்தைக்கு இப்படிக் கூறலாம்: 'சில வேளைகளில் சில பெண்பிள்ளைகள் தமக்கு ஒரு (ஆண்) குறி இல்லாதிருப்பதை அறியும் போது அப்படி ஒன்று இல்லாதிருப்பது குறித்துப் பயந்து போய் யோசிப்பதுண்டு. நீங்களும் அப்படி நினைப்பதுண்டா?'

சில வேளைகளில் ஒரு பையன் நினைக்கலாம். அவளுக்கு அப்படி நடந்திருப்பதால் அப்படி எனக்கும் நடக்கக்கூடும்... ஆனால் பெண்பிள்ளைகளும் ஆண்பிள்ளைகளும் வேறு வேறானவர்கள். அவர்கள் அப்படித்தான் பிறந்திருக்கிறார்கள். அதனால் தான் ஆண்பிள்ளைகள் அப்பாவாகவும் பெண்பிள்ளைகள் அம்மாவாகவும் வருகின்றனர்.'

சில பெற்றோர்கள், பெண் பிள்ளைகளுக்கு அவர்களது 'தொலைந்து விட்டது' பற்றிய கவலையை சமாளிக்க பால் வேறுபாட்டை இல்லையென்றளவுக்கு சிறிய வித்தியாசமே இருப்பதாகக் காட்ட முயல்கின்றனர். அவர்கள் அழும் மகளுக்கு இப்படிச் சொல்லக்கூடும். 'அந்த ஒரேயொரு குட்டிச்சாமானைத் தவிர மற்றெல்லா விதத்திலும் நீயும் உன்ரை தம்பியும் ஒரே மாதிரித் தான். எனவே நீ அழ வேண்டாம்.'



ஒரு தாயார் இந்தச் சிக்கலைச் சமாளிக்க தனது மகளுக்கு சீனக் களியால் செய்யப்பட்ட ஒரு (ஆண்) உறுப்பை தான் தரலாம் என்று கூறினாளாம். இத்தகைய ஒரு தற்காலிகத் தீர்வு, பிற்காலத்தில் பலத்த பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும்.

ஒரு குழந்தை, ஆண் குழந்தைகட்கும் பெண் குழந்தைகட்கும் உள்ள உடலியல் வேறுபாட்டை கண்டு பிடித்து விட்டால், வேறுபாட்டினைப் பற்றி விளக்கமாகப் பேச வேண்டும். வேறுபாடுகளை அளவுக்கதிகமாகக் குறைத்துப் பேசுவது நல்லதல்ல.

'ஓமோம் பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்கு. உனக்கு ஒரு ஆண்குறி இருக்கிறது. ஆகவே நீ ஒரு பையன். நீ வளரும் போது ஒரு தகப்பனாக வருவாய்'

'நீங்கள் ஒரு பெண்பிள்ளை. உங்களுக்கு இருப்பது பெண்குறி (யோனி) நீங்கள் வளரும் போது ஒரு அம்மாவாக வருவீர்கள். பெண்கள் ஒரு விதமாகவும் ஆண்கள் ஒரு விதமாகவுமே படைக்கப்படுகின்றனர் என்பதை நீங்கள் அறிந்து கொண்டது எனக்கு மிகவும் சந்தோசம்.
செய்தி தெளிவாகவும், உறுதியாகவும் இருக்க வேண்டும்.பால்ரீதியான அடையாளங் காணலில் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்க இப்படியான தெளிவான செய்தி முக்கியமாகும்.

ஒரு போதகர் ஒருவர் தமது எல்லைக்குட்பட்ட ஒரு புல்வெளிப் பிரதேசத்தில் உள்ள தேவாலயமொன்றிற்கு தனது முதலாவது போதனையைச் செய்வதற்காக வந்திருந்தார். ஆனால் ஒரு மாட்டுக்காரனைத் தவிர வேறு யாரும் போதனையைக் கேட்பதற்காக வந்திருக்கவில்லை. தனது பிரசங்கத்தை ஆரம்பிப்பதா இல்லையா என்று தெரியவில்லையே என்று அவர் வாய்விட்டுச் சொன்னார். மாட்டுக்காரன் இவ்வாறு பதிலளித்தான்.

'நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குச் சொல்ல முடியாது. நான் ஒரு சாதாரண மாட்டுக்காரன். ஆனால் நான் மாடுகளுக்குத் தீனி போடுவதற்காக வந்தேனேயானால், ஒரு மாடு வந்திருந்தாலும், நான் அதற்கு உணவளிப்பதா வேண்டாமா என்று யோசிக்கவே துணிய மாட்டேன்.'
போதகர் அவனுக்கு நன்றி கூறிவிட்டு மணிக் கணக்காகப் பேசுவதற்கெனத் தான் தயாரித்து வந்திருந்த தனது பிரசங்கத்தை நடத்தி முடித்தார். அவர் அதை முடித்த பின், அவனுக்கு தனது பேச்சு பிடித்ததா என்று கேட்டார். பதில் இவ்வாறு அமைந்திருந்தது.

'எனக்கு இத்தகைய பிரசங்கங்கள் பற்றி அதிகம் தெரியாது. நான் ஒரு சாதாரண மாட்டுக் காரன். ஆனால் நான் எனது மாடுகளுக்குத் தீனிபோடுவதற்காக வரும் வேளையில் ஒரு மாடு மட்டுமே அங்கு நிற்குமானால், அதற்கு எல்லா மாடுகட்குமாகக் கொண்டு வந்த முழு உணவையும் கொடுக்கத் துணியமாட்டேன்...'

'பாலியற் கல்வியிலும் விரைவிலேயே நிறையக் கற்றுக் கொடுத்துவிட வேண்டுமென்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் சுமத்திவிட வேண்டும் என்றும் கருதும் மனநிலையில் இருந்து நாம் விடுபட வேண்டும். பாலியல் தொடர்பான குழந்தைகளின் கேள்விகட்குப் பதிலளிக்காமல் விட எந்தக் காரணமும் இல்லை என்ற போதும், எமது பதில் குழந்தை பிறப்பது தொடர்பான முழுத் தகவல்களையும் தெரிவிப்பதாக அமைய வேண்டியதில்லை. அவை சுருக்கமாக ஓரிரு வரிகளில் சொல்லப்படுவதாக இருந்தாற் போதும். நீண்ட பெரிய அத்தியாயம் அத்தியாயமாக பந்தி பந்தியாக விபரிக்கப்பட வேண்டியதில்லை.

குழந்தைக்குப் பாலியல் தொடர்பான விடயங்களைத் தெரிவிக்க வேண்டிய சரியான வயது, குழந்தை அது பற்றிக் கேட்கத் தொடங்குகின்ற வயது தான். ஒரு இரண்டு அல்லது மூன்று வயதுக் குழந்தை தனது பிறப்புறுப்பைச் சுட்டிக் காட்டி இது என்ன என்று கேட்டால், குழந்தைக்கு அது தான் உனது 'ஆண்குறி' அல்லது 'பெண்குறி' என்று சொல்வதற்கான சரியான சந்தர்ப்பமாகும். குழந்தைகள் ஆண்குறியை பீப்பீ, மணி என்று ஏதாவது பெயரைச் சொல்லி அழைக்கக்கூடுமாயினும், பெரியோர்கள் அதற்குரிய சரியான சொல்லைப் பயன்படுத்த வேண்டும். *(தமிழில் இவற்றுக்கு சாதாரண பாவனையில் ஒரு சொல் இல்லை. ஆங்கிலத்தில் Penis, Vegina என்ற சொற்களுக்கு சமமான அர்த்தத்தில் பேச்சுவழக்கில் அதன் அர்த்தத்தை தரும் ஆண்குறி, பெண்குறி (அல்லது யோனி) என்ற சொற்கள் பாவிக்கப்படுவதில்லை என்பது நம் கவனத்திற்குரியது. ஆண்குறி, பெண்குறி male organ, female organ என்பவற்றின் தமிழ் வடிவமே அன்றி அவற்றின் உண்மைப் பெயர் அல்ல. பேச்சுவழக்கில் உள்ள சொற்கள் தூஷண வார்த்தைகளாகவே அர்த்தப்படுத்தப் படுகின்றன. நமது மொழி பற்றிய அக்கறை உடையவர்கள் கவனத்திற்கு இது சமர்ப்பணம் - (மொ-ர்)*

ஒரு குழந்தை, குழந்தைகள் எங்கிருந்து வருகின்றன என்று கேட்கும் போது அவை வைத்தியரின் பையில் இருந்து, அல்லது கடையிலிருந்து என்று நாம் சொல்லக் கூடாது. நாம் அது அம்மாவின் உடம்பிலுள்ள ஒரு பகுதியுள் வளர்வதாகச் சொல்லலாம். கர்ப்பப்பை பற்றிக் கூறுவது, முதற் தடவையில் தேவையாகவோ தேவையற்றதாகவோ இருக்கலாம்.

பொதுவாகக் குழந்தைகள் சிறுபராயத்திலிருந்தே தமது உடலுறுப்பின் பெயர்களையும் அவற்றின் செயல்களையும் அறிந்து கொள்ளுவது அவசியமாகும். அத்துடன் பால் ரீதியான உடலியல் வேறுபாடுகளையும் அவர்கள் தெரிந்திருக்க வேண்டும். விளக்கங்கள் மிருகங்களையும், தாவரங்களையும் உதாரணம் காட்டுபவையாக அமையக் கூடாது. அலிஸ் பிளெயின்ட் (வாழ்வின் தொடக்க காலங்கள்-ஒரு மனோதத்துவ ஆய்வு) தனது நூலில், ஒரு சிறுவன் அவனது தாயார் இன்னொரு குழந்தைப் பேற்றுக்கு தயாராகிக் கொண்டிருக்கையில், ஒரு பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டது பற்றிக் கூறுகிறார் அவன் திரும்பி வந்த பின்னர் தகப்பனாரிடம் இப்படிக் கேட்கிறான்.
'எனக்கு எல்லாம் புரிந்து விட்டது. ஆனால் அப்பா எனக்கு ஒரு விடயத்தைச் சொல்லுங்கோ. அம்மா எருதிடம் போவாவா அல்லது எருது அம்மாவிடம் வருமா?'

அனேகமாகப் பாடசாலைக்குப் போகத் தொடங்காத எல்லாப் பிள்ளைகளிடமும் இரண்டு கேள்விகள் எழுகின்றன. எப்படி ஒரு குழந்தை உருவாகத் தொடங்குகிறது. அது எவ்வாறு வெளியே வருகிறது. இது தொடர்பான குழந்தையின் சொந்தக் கற்பனைகளையும், கருத்துக்களையும் நாம் எமது கருத்தைச் சொல்ல முன்பாகக் கேட்பது நல்லது. குழந்தையின் பதில் எப்போதும் சாப்பிடுவதும் கழிவகற்றுவதும் போன்ற ஒன்றாகவே அமையும். ஒரு புத்திசாலிப் பிள்ளை இப்படிக் கூறியது:
'நல்ல பிள்ளைகள் நல்ல சாப்பாட்டிலிருந்து வருகின்றன. அவை அம்மாவின் வயிற்றிலிருந்து தொப்புளின் ஊடாக வருகின்றன. கூடாத குழந்தைகள் கூடாத சாப்பாட்டினால் உருவாகி அவை கழிவுடன் (மலத்துடன்) வெளி வருகின்றன.'

எமது விளக்கம் எப்போதும் சரியான தரவுகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். ஆனால் அவ்விளக்கம் உடலுறவு பற்றிய விபரங்களை உள்ளடக்கியிருக்கத் தேவையில்லை. ஒரு மாதிரி விளக்கம் வருமாறு:
'ஒரு தகப்பனும் தாயும் பிள்ளையை உருவாக்க விரும்பும் போது தகப்பனின் உடலிருந்து ஒரு கலம் தாயின் உடலிலிருந்து ஒரு கலத்துடன் போய்ச் சேர்கிறது. குழந்தை பெரிதாக வந்ததும் தாயின் பெண்குறி வழியாக அது வெளியே வருகிறது.'

சில வேளைகளில் ஒரு குழந்தை தான் வெளிவந்த பகுதியைப் பார்க்க ஆசைப்பட்டுக் கேட்கலாம். இத்தகைய அந்தரங்க விடயங்களைக் காட்டாமல் இருப்பது நல்லது. பதிலாக நாம் படம் வரைந்தோ, ஒரு பாவையை வைத்தோ இதை விளக்கலாம்.
எமது பதில்கள் குழந்தைகளை ஒரு சில நிமிடங்களுக்கு மட்டுமே திருப்திப்படுத்துவதாக அமையலாம். அவர்கள் திரும்பவும் அதே அல்லது அது போன்ற மேலதிக கேள்விகளுடன் வரக் கூடும். ஒரு பிள்ளை 'குழந்தை பிறப்பது எப்படி?' என்று திரும்பவும் கேட்குமாயின், நாம் சற்று விரிவான ஒரு பதிலைக் கொடுக்கலாம்.
'அம்மாவின் உடம்பில் குழந்தை வளர்வதை தகப்பனார் உருவாக்குகிறார். தகப்பனாரின் உடலிலிருந்து விந்து எனும் ஒரு பாயி போன்ற திரவம் - அது பல உயிர் அணுக்களைக் கொண்டது - வருகிறது. அதிலுள்ள ஒரு உயிரணு தாயின் உடலிலுள்ள முட்டைக் கருவுடன் சேர்ந்து ஒரு குழந்தையின் உருவாக்கம் ஆரம்பமாகிறது.'

குழந்தையின் அடுத்த கேள்வி பெரும்பாலான பெற்றோர்களுக்கு அச்சமூட்டுகிற கேள்வியாக இருக்கலாம். 'தகப்பனாரின் உயிரணு அம்மாவின் உடம்பினுள் எப்படிப் போகிறது? இதற்கான பதிலளிக்கப்படுவதற்கு முன்பாக நாமே பிள்ளை இதை எப்படிக் கருதுகிறது என்று கேட்கலாம். நாம் 'விதைகளை நடுதல்' போன்ற (அப்பா அம்மாவின் உடலினுள் ஒரு விதையை நடுகிறார்) கருத்துக்களை அவர்களிடமிருந்து கேட்கக்கூடும். 'விதைகளை உண்ணுதல்' (அம்மாவிற்கு உண்ணுமாறு ஒரு பழத்துண்டை அப்பா கொடுத்தல்), 'விதைகள் பரம்புதல்' (அம்மாவின் உடலுள் காற்றினால் விதைகள் பறந்து வந்து சேருதல்) 'சத்திரசதிச்சை மூலம்' (வைத்தியர் அம்மாவின் உடலை வெட்டி அதனுள் ஒரு விதையை வைப்பது) என்ற பல கருத்துக்களை அவர்கள் கூறக்கூடும்.

குழந்தையின் இந்த விளக்கங்களுக்குப் பிறகு அதற்குச் சுருக்கமாக இப்படிப் பதிலளிக்கலாம். 'விந்து தகப்பனாரின் ஆண்குறியிலிருந்து வருகிறது. அது அம்மாவின் பெண்குறியில் சேர்க்கப்படுகிறது.' இந்த நேரமே சிறுநீரையும், விந்தையும் வேறு[illegible] விளக்குவதற்கு உகந்த நேரமாகும். 'சிறுநீர்' என்பது உடம்பின் ஒரு கழிவுப்பொ[illegible]. ஆனால் விந்து என்பது உயிரணுக்களைக் கொண்ட ஒரு பாயம் ஆரும்.'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை அடுத்து இன்னொரு கேள்வி எழலாம். 'எப்போது நீங்களும் அப்பாவுமாக குழந்தைகளை உருவாக்குவீர்கள்?' இந்தக் கேள்வியின் தொனி வெளிப்படுத்தும் அர்த்தத்தில் அல்ல இது கேட்கப்படுகிறது. இதற்கு மிகவும் சாதாரணமான ஒரு பதிலே போதும். 'அப்பாமாரும் அம்மாமாரும் தமக்கு வசதியான, தனியாக இருக்கிற நேரங்களில் அதைச் செய்வார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள். அவர்களுக்கு அன்பு செய்ய ஒரு குழந்தையும் தேவைப்படுகிறது' இந்த இடத்தில் தாய் தகப்பன் ஒன்றாக இருப்பதும் ஒருமித்து செயற்படுவதும் அவர்களது தனிப்பட்ட அந்தரங்கமான விடயம் என்பது வலியுறுத்தப்படுவது அவசியமாக இருக்கலாம்.

சில ஆண் பிள்ளைகள், ஏன் தகப்பனார் குழந்தை பெறக்கூடாது என்று நினைக்கக்கூடும். அவ்வாறு அவர் பெறுவதை அவர்கள் விரும்பவும் கூடும். அவர்கள் 'ஏன் அம்மாவின் முட்டை அப்பாவின் உடலுக்குள் போகக்கூடாது?' என்று கேட்கலாம். இதற்குப் பெண்களின் உடம்பில் குழந்தைகள் வளர்வதற்கென கர்ப்பப்பை என்று ஒரு உறுப்பு இருக்கிறது. ஆண்களுக்கு அது கிடையாது என்று கூறலாம். இதற்கு ஏன் என்ற கேள்வி எழும். 'ஏனென்றால் ஆணினதும் பெண்ணினதும் உடல்கள் வேறுவேறு விதமாகவே உருவாக்கப்பட்டுள்ளன' என்பதே இதற்கான பதில். குழந்தைகளுக்கு அன்பு செய்யவும், பாதுகாக்கவும் ஒரு தகப்பனார் அவசியம் என்பதை இந்த ஆண் குழந்தைகட்கு உறுதி செய்வது அவசியமான ஒன்றாகும்.

## நிர்வாண உடல்

சில வீடுகள் நிர்வாணமான குடியிருப்புக்களைப் போல் இருக்கின்றன. பெற்றோரும் பிள்ளைகளும் தாமே உருவாக்கிக் கொண்ட தமது (ஆதாம்-ஏவாளின்) சுவர்க்கத்தில் நிர்வாணமாகத் திரிகிறார்கள். ஆனால் இந்தச் சுதந்திரத்தின் மத்தியில் வளர்க்கப்படும் குழந்தைகளும் கூட மனித உடல் குறித்த கவலைகளிலோ குற்ற உணர்வுகளிலோ இருந்து விடுபட்டவர்களாக இருப்பதில்லை. நேரடியாகப் பார்ப்பது மட்டும் அவர்களது இரகசியங்களை அறியும் ஆவலை திருப்தி செய்துவிடுவதில்லை. அத்துடன் இது சில இரகசிய, நிறைவேற்ற முடியாத விருப்பங்களைப் பற்றிய ஏக்க உணர்வை வளர்த்துவிட காரணமாகியும் விடுகிறது.

நாலு வயது நிரம்பிய பீட்சி, தனது தகப்பனாருடன் குளியறையுள் குளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தாள். அவள் அவரைப் பார்க்கவும், அவரது உடலைப் பார்க்கவும் விரும்பினாள். அது அனுமதிக்கப்பட்டது. ஆனால் அவள் அவரது ஆண்குறியைத் தொடுவதற்கு விருப்பம் தெரிவித்த போது, தகப்பனாரது சுதந்திர மனப்பான்மை தரை மட்டமாகியது. உண்மையில் அது ஒரு அதிர்ச்சியாக மாறியது.

கைக்குழந்தைப் பருவத்தில் தாயின் மார்பங்களைத் தொடுவதும் பார்ப்பதும், பால் உறிஞ்சுவதற்கான நோக்கத்துடன் செய்யப்படுவதால் அது இலகுவாக நிறைவேற்றப்படலாம். ஆனால் பிள்ளைப் பருவத்தில் நிர்வாணமான அம்மாவின் அப்பாவின் உடலைப் பார்ப்பது, பிறப்புறுப்புக்களில் அதிர்வுகளையும், பாலியல் விருப்பங்களையும் தூண்டக்கூடுமாதலால் அவை நிறைவேற்றப்பட முடியாதவையாகும்.



இதன் அர்த்தம் விக்டோரியன் தூய்மைவாத நடத்தைகளை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதா? இல்லை. ஆனால், இதன் அர்த்தம் என்னவென்றால் எமக்கு அந்தரங்கம் அவசியம். அவை எமது அமைதிக்காக மட்டுமல்ல, குழந்தைகளது இயல்பான வளர்ச்சிக்கும் இது அவசியமாகும். உடையணியும் போதும், குளிக்கும் போதும் எப்பவாவது இருந்து விட்டு பிள்ளைகள் எமது உடலைப் பார்ப்பதை சகித்துக் கொள்ளலாம். ஆனால் இப்பழக்கங்களை நாம் ஊக்குவிக்கக் கூடாது.

நாம், குழந்தைகள் எம்மைப் பார்ப்பதை விரும்புகிறோம் என்று அவர்கள் நினைப்பதற்கு வாய்ப்பளிக்கும் விதத்ததில் நாம் நடக்கக் கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். நாம் நிர்வாணமாக உடற்பயிற்சி செய்கையிலோ, சூரிய ஒளியில் குளிக்கும் போதோ குழந்தைகள் இருப்பது அனுமதிக்கப்பட்டால், அவர்கள் தாம் அங்கு வெறுமனே இருக்க மட்டுமல்ல, எங்களுக்கு ஏதாவது உதவி செய்து சந்தோசப்படுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எண்ணிக், குழப்பமடைந்தவர்களாகப் பயனற்ற வினோதங்களில் ஈடுபடுபவர்களாக மாறி விடுகிறார்கள்.

நாம், குழந்தைகள் மனித உடல் குறித்து அறியும் தீவிர ஆர்வம் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்கிறோம். அவர்களுக்கு பெண் குழந்தைகளுக்கும், ஆண் குழந்தைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை அவதானிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அத்துடன் அவர்களுக்கு எப்போதாவது எங்களைப் பார்க்கவும் வாய்ப்பு இருந்திருக்கிறது. அத்துடன் இன்னமும் அதிகமாக எம்மைப் பார்க்க விம்புகிறார்கள். அவர்களது இந்த ஆர்வத்தை வெளிப்படையாகப் புரிந்து கொள்வது நல்லது. ஆனால் எமது அந்தரங்கம் குறித்து வலியுறுத்த வேண்டும்.

'நான் குளியலறையில் எப்படி இருப்பேன் என்று பார்க்க நீ விரும்புகிறாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் குளியலறையில் நான் தனியாக இருக்கவே விரும்புகிறேன். வளர்ந்தவர்கள் எப்படி இருப்பார்கள் என்று நான் சொல்லித் தருகிறேன். நீ கேள். நான் சொல்கிறேன்'

இத்தகைய அணுகுமுறை குழந்தையின் ஆர்வத்தைத் தடைசெய்யவோ, தாக்கவோ மாட்டாது. பதிலாக அது விடயத்தை சமூகத்தில் அங்கீகரிக்கப்படக் கூடிய வழிகளை நோக்கித் திருப்பி விடுகிறது. பார்ப்பதற்கும், தொடுவதற்கும் பதில் அவர்களது இந்த ஆர்வம் இப்போது சொற்களால் வெளிப்படுத்தப்படுகிறது.

## படுக்கைகளும், படுக்கை அறைகளும்

பிள்ளைகள் பெற்றோருடன் படுக்கைகளையும் படுக்கை அறைகளையும் பகிர்ந்து கொள்ளுதல் நிச்சயமாக நல்லதல்ல. குழந்தைகள் நாம் நினைப்பதை விட அதிகமாகப் பார்க்கவும் கேட்கவும் கூடியவர்கள். நடப்பது என்ன என்பதை அவர்களால் விளங்கிக் கொள்ள முடியாவிட்டாலும், காட்சிகளும், ஓசைகளும் அவர்களுக்கு அச்சமாகவும், கனவுகளாகவும் திரும்பவும் தோன்றக் கூடும். ஆபத்துத் தெளிவானது: பிள்ளைகள் செவிடர்களோ குருடர்களோ அல்லர். அவர்கள் தூங்கும் போதோ அல்லது தூங்குவதாகத் தோன்றும் போதோ கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வீடுகளின் கட்டிட அமைப்பினைப் பொறுத்தவரை அவை பாலியல் சார் நடவடிக்கைகளுக்கு எதிரான தன்மையுடையவை. சில நவீன வீடுகள் பாலியல் சார் அந்தரங்கத்துக்கு உரிய பாதுகாப்புக் கொண்டவை. சுவர்கள் மெல்லியவை. குழந்தைகள் அருகில் இருப்பார்கள். எமது சட்டபூர்வமான காதலின் ஓசை கூட மிகவும் மெல்லியதாக இருக்க வேண்டும் என்பது ஒரு துயரமான நிலை தான்.

## பயனற்ற காதல்

எல்லா ஆண்குழந்தைகளின் வாழ்விலும் (மூன்றுக்கு ஐந்துக்கும் இடைப்பட்ட வயதில்) தாய் தனக்கு மட்டுமே வேண்டும் என்று கருதும் ஒரு காலம் இருக்கிறது. அது தான் அவனது முதலாவது 'காதல்'. அவன் வேறு எவருக்கும் அவளை விட்டுக் கொடுக்க மாட்டான். பெண்குழந்தையும் தனது 'காதலை' தகப்பனுடன் காட்டுகிறாள்.

இந்தக் 'காதல்' வேறு எவரையும் அனுமானிக்காத ஒரு இறுக்கமான உரிமை பேணும் 'காதலா'க இருக்கும். இத்தகைய 'காதல்' ஒரு போதும் வார்த்தைகளாலோ, செயல்களாலோ அனுமதிக்கப்படக் கூடாது. சும்மா கூட ஒரு தாயால் அவளது மகன் 'எனது பலசாலி மனிதன்' என்றோ, 'எனது குட்டிக் காதலன்' என்றோ ஒரு போதும் ஒரு ஆண்குழந்தை அழைக்கப்படக் கூடாது. இவ்வாறே தகப்பனால் ஒரு பெண் குழந்தை அழைக்கப்படக்கூடாது.

இவைதான் பிள்ளைகள் தமது வாழ்வில் தாம் ஏற்றுக் கொள்ள வேண்டியவை எனக் கருதும் பாத்திரங்கள். இவை கட்டாயமாக அவர்களால் கைவிடப்பட வேண்டிய பாத்திரங்கள். எவ்வளவு விரைவாகவோ அவ்வளவுக்கு நல்லது. நாம் அவர்களது பயனற்ற நம்பிக்கையை அனுமதிப்பதன் மூலம் அவர்களது விரக்தியை அதிகரிக்கக் கூடாது. பெற்றோரும், தாதிமாரும் (வாயில் முத்தமிடல், பிறப்புறுப்புகளில் சீண்டுதல் போன்றவற்றிற்கு) விட்டுக் கொடுத்தல் மூலம் பிள்ளையை சந்தோசப்படுத்தலாம். ஆனால், இது பிள்ளைக்கு திருப்திக்குப்பதில் குற்ற உணர்வையே ஏற்படுத்துகிறது. பாலுணர்வு சம்பந்தப்பட்ட விட்டுக் கொடுப்புக்கள், அவை தொடுகை சம்பந்தப்பட்டவையாகவோ, வார்த்தைகள் சம்பந்தப்பட்டவையாகவோ எப்படியிருப்பினும் அவை பிள்ளையின் பெற்றோர்களுடன் அதை தவறான முறையில் பிணைந்து விடுவதுடன், காதல், பாலியல் என்பன குறித்த இயல்பான வளர்ச்சிக்குத் தடையாகவும் அமைந்து விடுகின்றன.

## கைமைதுனம்

### சுய இன்பமா சுய துஷ்பிரயோகமா?

சிறுவயதுக் கைமைதுனப் பழக்கம் சிறுவர்களுக்கு சந்தோசத்தை அளிக்கலாம். ஆனால் அது நிச்சயமாக பெற்றோர்களுக்கு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. சிறுவர்கள் தாம் தனிமையில் இருக்கும் போது இதை சுய காதலாகவும், சலிப்படையும் போது செயலில் ஈடுபடுவதாகவும், நிராகரிக்கப்படும் போது சுய ஆறுதலாகவும் இதைக்



காண்கிறார்கள். பெற்றோர்களுக்கோ இது ஒரு வகை வெற்றுப் பரபரப்பையும், வெளிப்படையான அக்கறைக்குரியது என்ற உணர்வையும் ஏற்படுத்துகிறது. தனது ஐந்து வயது மகன் தன் ஆண்குறியைக் கையிற் பிடித்தபடி ஆட்களுக்கு மத்தியில் நடந்து திரிந்தால் அது எந்த ஒரு முற்போக்கான தாய்க்கும் தர்மசங்கடத்தையும், மனவருத்தத்தையும் தரக்கூடிய ஒன்று தான். பெற்றோர்களிற் பலர் 'கைமைதுனம் ஒன்றும் ஆபத்தானதல்ல, சுகாதாரக் கேட்டையோ, மலட்டுத்தன்மையையோ அல்லது ஆண்மைக் குறைவையோ ஏற்படுத்தக் கூடியதல்ல' என்றெல்லாம் படித்தும் கேள்விப்பட்டும் இருப்பார்கள்.

சில வேளைகளில் அவர்களுக்கு இவை உண்மை தான் என்ற சொந்த அனுபவம் கூட இருக்கும். ஆனால் இந்த உறுதியளிப்பே அவர்களுக்குப் பரபரப்பை ஏற்படுத்தி விடுகிறது. ஒருவர், நச்சுத்தன்மைகளைப் பட்டியலிட்டு இவை எவையும் இந்த உணவுப் பதார்த்தத்தில் இல்லையென்று குறிப்பிடும் ஒரு பதார்த்தத்தை வாங்க எப்படித் தயங்குவாரோ, அல்லது ஒருவன் தான் இந்த இந்தக் குற்றங்களை எல்லாம் செய்பவன் அல்ல என்று சில குற்றங்களைப் பட்டியலிட்டுச், சொல்லும் போது அவனை, நம்பத் தயங்குகின்றோமோ அது போன்றதே இதுவும்.

அறிவு பூர்வமாக, சிறுவர்களது கைமைதுனப் பழக்கம் பாலுணர்வு வளர்ச்சியின் ஒரு இயற்கையான கட்டமே என்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்கின்றனர். ஆயினும் உணர்வு பூர்வமாக அவர்களால் அதை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. அதேவேளை, கைமைதுனத்தை அனுமதிக்க மறுப்பதில் பெற்றோர்கள் முற்று முழுதாக தவறிழைப்பதாகவும் கொள்ள முடியாது.

சுய இன்பம் காணல், சிறுவர்கள் தமது சகபாடிகளதும், பெற்றோர்களதும் செல்வாக்குக்குட்படுவதைக் குறைக்கக்கூடும். திருப்திக்கான இத்தகைய குறுக்கு வழிகளை ஒரு சிறுவன் நாடும் போது, அவன் தனது சந்தோசத்திற்காக யாரிடமும் தங்கியிருக்க வேண்டிய தேவையில்லாமல் போகிறது. பெரிய முயற்சிகள் எதுவுமில்லாமல், மற்றவர்களது உதவியும் இல்லாமல், முழு உலகமும் அதன் சந்தோசங்களும் அவனது கையில் வந்து விடுகின்றன. எனவே தான் 'கைமைதுனத்தில் உள்ள குறைபாடு என்னவென்றால் அவன் இந்த வழி மூலம் சுவாரஸ்யமான மனிதர்களைச் சந்திக்க முடியாமல் போவது தான்' என்ற முதுமொழியில் ஓரளவு உண்மை இருக்கிறது என்கிறார்கள்.

தொடர்ச்சியான கைமைதுனம், விபத்துகட்கும், தோல்விகட்குமான உடனடிப் பரிகாரமாகவும், முயற்சிக்கும், சாதனைக்கும் ஒரு இலகுவான பதிலீடாகவும் மாறிவிடக்கூடும்.

நாகரிக வாழ்வை நோக்கிய சிறுவர்களது நுழைவானது, அவர்கள் தமது பெற்றோரதும் (பிற்காலத்தில்) சமூகத்தினதும் அங்கீகாரத்தைப் பெறக்கூடிய நீண்ட காலச் சந்தோசங்களை அனுபவிப்பதற்காகத் தமது உடனடிச் சந்தோசங்களைத் தாமதித்தல் அல்லது கைவிடுதல் என்பதில் தங்கியிருக்கிறது. பெற்றோரது அன்பும், ஆதரவும் குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுவது மட்டுமல்லாமல் சிறுவர்களிடம் அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்புடமை என்பவற்றின் தேவையை உருவாக்குபவையும் கூட. எனவே அன்பை என்னவென்று அறிந்த சிறுவர்களே, தமக்குப் பரிச்சயமான உணர்வுகள் மற்றும் உதவிகளுடன் பரிமாறிக் கொள்ளவும், அவற்றை எதிர்பார்க்கவும் ஏற்றவிதத்தில் தமது பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ள அதிகம் விரும்புவார்கள்.

பெற்றோர்கள் சுயஇன்பத்திற்கு எதிரான ஒரு மெல்லிய அழுத்தத்தைக் காட்டலாம். இக்கண்டிப்பு, இது உடலியல் சம்பந்தப்பட்ட ஒன்று என்பதற்காக அல்ல. மாறாக, முற்போக்கானதல்ல என்பதற்காகவே செய்யப்பட வேண்டும். ஏனென்றால் இத்தகைய சுயஇன்ப நடவடிக்கை சமூக உறவுகளுக்கோ, தனிப்பட்ட ஒருவரின் ஆளுமை வளர்ச்சிக்கோ உதவப் போவதில்லை. பெற்றோர்கள் வழங்கும் அமுக்கம் மிகவும் மெல்லியதாகவே இருக்க வேண்டும். அல்லது போனால் பலத்த பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். சிறுவர்களது திருப்திக்கு சுயஇன்பம் மட்டுமே ஒரே வழியாக இருக்கிறது என்ற உணர்வு ஏற்படா வண்ணம் அவர்களை எனது அன்புள்ளும் வெளியுலகு பற்றிய ஆர்வத்துள்ளும் ஈடுபட வைத்தலே இப்பிரச்சினைக்குரிய தீர்வாகும். சிறுவர்களின் பிரதான சந்தோசம் அவர்களது தனிப்பட்ட உறவுகளாலும், சாதனைகளாலும் வர வேண்டும். அப்படி அது அமையுமானால் அதன் பின் சிறுவர்களிடையே காணப்படும் சுய இன்பம் காணல் ஒரு பிரச்சினையே அல்ல என்று ஆகிவிடும். உண்மையில் அது இன்னொரு தீர்வு மட்டுமே.

## தடுக்கப்பட்ட விளையாட்டுக்களும் பாலியல் விளையாட்டுக்களைக் கையாள்தலும்

சிறு குழந்தைகள் தமது உடல் பற்றி அறிய விரும்புகிறார்கள். கொஞ்சம் வளர்ந்த சிறுவர்களோ ஒருவரை ஒருவர் முழுமையாக ஆராய விரும்புகிறார்கள். அறிவுக்கான இந்தத் தாகத்தை இலகுவாக மூழ்கடித்து விடமுடியாது. உடற்கூறு தொடர்பான வேறுபாடு அவர்களைக் குழப்புவதுடன், தம்மிடம் இருக்கும் உறுப்பு தவறானதல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே அடிக்கடி பிறரை ஆராயும் விருப்பையும் அது அவர்களிடம் தோற்றுவிக்கிறது.

உண்மைகள் புரிய வைக்கப்பட்டு, அவர்களது உணர்வுகள் புரிந்து கொள்ளப்பட்ட பின்பும் கூட, சிறுவர்கள் தமக்குள் பரஸ்பர ஆராய்ச்சிலும், கிளர்வூட்டுதலிலும் ஈடுபடக்கூடும். அவர்கள் 'டொக்டர்' விளையாட்டு அல்லது 'வீடு' போன்ற ஏதாவது ஒரு விளையாட்டைக் கண்டு பிடிக்கக்கூடும். இத்தகைய விளையாட்டுக்கள் அவர்களது ஆராய்ச்சிக்கு ஒருவகை 'சட்டபூர்வத்தன்மை'யைக் கொடுத்து விடுகின்றன. அவர்கள் தமக்குள் பேசி உடன்பாடு கண்டு கொண்டு ஒழித்துப் பார்த்து விளையாட்டை விளையாடக்கூடும். சில துணிச்சலுள்ள சிறுவர்கள் சில பெரிய விளையாட்டுக்களிலும் ஈடுபடக் கூடும். தமக்குள் கலந்து பேசிக்கொண்டு, அவர்கள் தமது பிறப்புறுப்புக்களை ஆராயவோ, உடலுறவில் ஈடுபடவோ கூடும்.

இத்தகைய தர்மசங்கடமான நிலைமைகளில் பெற்றோர்கள் தம்மை இழந்தவர்கள் ஆகின்றனர். அவர்கள் எதிர்காலத்தில் நடக்கக்கூடிய இதன் தொடர்ச்சிகள் பற்றி



அளவுக்கதிகமாகப் பயப்படுகிறார்கள். தமது வீடுகளிலேயே காம வெறியர்கள் வளர்ந்து வருகிறார்களோ என்கிற அளவுக்கு அவர்கள் அஞ்சுகிறார்கள்.

பாலியல் விடயங்கள் தொடர்பாக அறிவுடைய பெற்றோர்களுக்குக் கூட, உணர்ச்சி வசப்படாமல் இத்தகைய நிலைமைகளைச் சமாளிக்க முடியாமற் போய் விடுகிறது. அவர்கள் பிள்ளைக்கு அடிக்காமலோ அல்லது அதை அவமானப்படுத்தாமலோ இருக்கலாம். ஆனால் இதற்கு எப்படி ஒரு நேர்ப்படியான எல்லைப்பாட்டை விதிப்பது என்பதை அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். சிறுவர்களது எதிர்கால பாலியல் வாழ்வைப் பாழாக்கிவிடும் என்பதற்காகவே, அவர்களது இத்தகைய நடவடிக்கைகளில் தாம் தலையிடலாமா என்றும் சில பெற்றோர்கள் நினைக்கிறார்கள்.

இரகசியப் பாலியல் விளையாட்டில் உள்ள தவறு என்ன? இது பிள்ளையைக் குற்ற உணர்வுக்குள்ளாக்கி வருத்துகின்றது. ஆனால் அது அதன் தேவைகளைத் திருப்தி செய்வதில்லை. ஒரு இரண்டு வயதுப் பெண் குழந்தை, ஒரு சிறுவன் எப்படிச் சிறுநீர் கழிக்கிறான் என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்றால், அது வெறுமனே உடற்கூறு சம்பந்தப்பட்ட ஒன்றே என்று நாம் கருதலாம். ஒரு பாலர் பள்ளியில் ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் ஒன்றாக மலசல கூடத்தைப் பாவிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களது ஆர்வம் நேரடிப் பார்வை மூலம் தீர்க்கப்படலாம்.

ஆனால் முதலாம் வகுப்புக்கு வரும் போது ஒரு குழந்தை இவற்றைப் போதியளவு அறிந்து வைத்திருக்கிறது என்றே நாம் கருத வேண்டும். இந்த வயதுக்குப் பிறகும் நடக்கும் ஒழித்துப் பார்த்தல், ஆராய்தல் என்பனவற்றை வெறும் பால்நிலை வேறுபாடு பற்றி அறியும் ஆர்வத்தால் செய்யப்படுபவையாகக் கொள்ள முடியாது. இத்தகைய செயல்கள் மூலம் அந்தக் குழந்தை இவற்றை அறிவதில் ஆர்வமாக இருக்கிறது, அதற்கு உதவி தேவைப்படுகிறது என்பவற்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதனை இச்செயல்களுக்கு அனுமதிப்பதை விட அதைப் புரிந்து கொள்வது மிகவும் அவசியமானதாகும். ஒரு குடிகாரனது தேவைகள், குடிப்பதன் மூலமாக நிறைவேற்றப்பட முடியாதது போலவே இந்தக் குழந்தையின் உண்மையான தேவைகளும் எதையும் பார்ப்பதாலோ, தொடுவதாலோ பெற்றுக் கொள்ளப்பட முடியாதவையாகும். ஒழித்து அல்லது கள்ளத்தனமாகப் பார்க்கும் சிறுவர்களுக்கு உடனடியாகவும், அதி முக்கியமாகவும் தேவைப்படுவது, இத்தகைய நடவடிக்கைக்கு அன்பான முறையிலும் நியாயமான முறையிலும் எல்லைகளைப் போடுதல் தான்.

ஒரு சிறுவனும், சிறுமியும் தமது உடைகளை அகற்றி விட்டு அணைத்துக் கொண்டிருப்பார்களானால் நாம் அவர்களை நோக்கி 'என்ன செய்கிறீர்கள்' என்று கேட்கக் கூடாது. (இப்படிக் கேட்கும் போது, அவர்கள் முழு உண்மையான ஒரு பதிலைச் சொன்னால் எவ்வளவு சங்கடமாக இருக்கும்?) குழந்தைகள் அவமானப் படுத்தப்படவோ திட்டப்படவோ கூடாது. அதேவேளை, அவர்கள் இலகுவான ஒரு மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பளிப்பதோ அல்லது 'இந்தக் குளிருக்குள் இப்படி உடுப்பே இல்லாமல் இருக்கலாமா?' என்பது போன்ற பொய்யான கேள்விகளைக் கேட்பதோ கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாக அவர்கள் உடை அணிந்து கொள்ளுமாறு சொல்லப்பட வேண்டும். அத்துடன் வேறு ஏதாவது விளையாட்டு விளையாடுமாறு கூறப்படலாம். மற்றைய சிறுமியோ அல்லது சிறுவனோ போன பின், இந்த விடயம் தொடர்பாக பெற்றோர் உறுதியாகவும், தெளிவாகவும் பேச வேண்டும். மிரட்டல்களோ, விசாரணைகளோ இன்றி தெளிவான வார்த்தைகளிற் சொல்ல வேண்டும்.

'நீயும் பென்னியும் ஒருவர் உடையை ஒருவர் கழற்றிக் கொண்டிருந்தீர்கள். இது அனுமதிக்கப்பட முடியாது. நீ அவளுடைய பெண்குறியை தொட்டுக் கொண்டாய். இதுவும் அனுமதிக்க முடியாதது. சின்னப் பிள்ளைகள் இதைச் செய்கிறார்கள் ஏனென்றால், அவர்களுக்கு ஆண்பிள்ளைகட்கு ஆண்குறி இருக்கிறது. பெண் குழந்தைகட்கு அப்படி ஒன்று ஏன் இல்லை என்று அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். உமக்கும் இந்த விடயத்தில் சந்தேகம் இருந்தால் எங்களைக் கேட்கலாம். இவற்றை நாம் உமக்குப் புரிய வைப்போம். ஆனால் யாரும் யாருடைய உடுப்பையும் கழற்ற முனையக் கூடாது.'

அவர்களைத் திட்டாத இவ்வாறான அமைதியான எமது அணுகுமுறையினால் குழந்தைகளின் பாலியற் பரிசோதனைகளுக்கு ஒரு எல்லை விதிக்கப்படுகிறது. இது குழந்தைகளின் பாலியல் மற்றும் காதலில் உள்ள ஆர்வத்தைப் பாதிக்காத விதத்தில் அவர்கள் செயல்களை மட்டுப்படுத்துவதாக உள்ளது.

## ஊத்தைப் பேச்சுக்கள்

எந்த ஒரு பெற்றோரும் தமது குழந்தை அதன் வயதுப் பிள்ளைகளால் உச்சரிக்கப்படும் ஊத்தைப் பேச்சுகள் குறித்து எதுவும் தெரியாதவர்களாக இருப்பதை விரும்புவதில்லை. இந்தச் சொற்கள் தடை செய்யப்பட்டவையாகவும், காரமானவையாகவும், வெளிப்பாட்டுச் சிறப்பு மிக்கவையாகவும் இருப்பதால் இவற்றைச் சிறுவர்கள் மிகவும் பெரிய விடயமாகவும், முக்கியமானதாகவும் கருதுகிறார்கள். ஒரு இரகசிய இடத்தில் நின்று இத்தகைய கெட்ட வார்த்தைகளைப் பேசுகையில் அவர்கள் தமது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்வதாக உணர்கிறார்கள்.

இந்த இரண்டெழுத்து, மூன்றெழுத்துச் சொற்கள் பேசப்படுவதற்கு சில இடங்கள் இருக்கின்றன என்பதைச் சிறுவர்களுக்குத் தெளிவாகச் சொல்ல வேண்டும். இது தொடர்பான தமது அபிப்பிராயத்தை உறுதியாகப் பெற்றோர் தெரிவிக்க வேண்டும்.

தகப்பனார் சொல்லலாம்: 'இது பெண்கள் மத்தியிலோ பலர் மத்தியிலோ பேசும் விடயமல்ல. 'ஜோர்ஜ்... இது ஆண்கள் மத்தியில், உனது சகபாடிகள் மத்தியில் பேசப்பட வேண்டிய பேச்சு'

தாயார் சொல்லலாம்: 'பையன்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் எனக்கு அவற்றைப் பேசுவது பிடிப்பதே இல்லை. எனக்கு அவற்றைப் பேசவே பிடிக்காது. வேறெங்காவது இவற்றை வைத்துக் கொள். இங்கே அவை தடை செய்யப்பட்டுள்ளன.



# 10. பாலியற் பாத்திரமும் சமூகச் செயற்பாடும்

## அடையாளம் காணலும் உயிரியல் விதியும்

உயிரியல் விதியினை நிறைவு செய்வதற்கு ஆண்பிள்ளைகள் தமது தகப்பன்மாருடனும், பெண்பிள்ளைகள் தமது தாய்மாருடனும் அடையாளம் காணப்படுவது அவசியமாகும். பெண் பிள்ளைகள் பெண்களாகவும், ஆண் பிள்ளைகள் ஆண்களாகவும் வளரும் வளர்ச்சிப் போக்கில் இவ்வாறு அடையாளம் காணப்படுதல் ஒரு முக்கியமான படிமுறையாகும். சிறுவர்களுடனான உறவு மதிப்பையும், அன்பையும் அடிப்படையாகக் கொண்டாதாக அமைகையில் இந்த அடையாளம் காணப்படலுக்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. குழந்தைகளின் அன்பைப் பெறுவதில் வெற்றி கொள்வதன் மூலம், எமது பாலியல் தொடர்பான பாத்திரத்தைச் சரிவர ஆற்றுவதற்கான அவர்களது விருப்பையும் வெற்றி கொள்ள முடிகிறது. ஆயினும் பெரும்பான்மையான பெற்றோர்கள் தாம் ஆற்றவேண்டிய பாலியல் பாத்திரம் என்ன என்பதை அறியாதவர்களாகவே உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தைமை அல்லது தாய்மைக்கான மாதிரிகள்

பெரும்பாலான சமூகங்களில் தகப்பனின் செயற்பாடுகளை விட தெளிவான விதத்தில் தாயாரின் செயற்பாடுகள் வரையறை செய்யப்படுகின்றன. தாய்மை என்பது, பாராமரித்தல், கட்டித்தழுவுதல், உடைமாற்றி விடுதல், அன்பு செய்தல், அக்கறை காட்டல், புன்னகை செய்தல், உரையாடுதல், விளையாடுதல் என்பவற்றை உள்ளடக்கியதாகும். தாயின் பிள்ளைப் பராமரிப்பு என்பது உயிரியல் ரீதியாகத் தீர்மானிக்கப்படுகிறது. இத்தகைய தாய்மைப் பராமரிப்பில் குறை ஏற்படும் போது அது குழந்தையின் உள ஆரோக்கிய நிலையை அது பாதிப்பதுடன் அதன் வாழ்க்கையை நெருக்கடிக்குள்ளாக்கவும் செய்கிறது. இதற்கு நேரெதிராகத் தந்தைமை என்பது, இயற்கை சார்ந்ததாக அல்லாமல் கலாசாரம் சார்ந்ததாக உள்ளது. உயிரியல் ரீதியாகக் கூறுவதானால், தகப்பனாரது பங்களிப்பானது குழந்தை பிறக்க முன்னரே தொடங்கி முடிந்து விடுகிறது. ஏனைய விடயங்கள் எல்லாம் சமூக ரீதியாவே தீர்மானிக்கப் படுகின்றன. ஆயினும், சில சமூகங்களில், ஆண்பிள்ளைகளில் மட்டுமே தகப்பன்மார் ஆர்வம் காட்டுகின்றனர். பெண் குழந்தைகள் குறைந்த பட்சம் பிள்ளைகளாகக் கூட ஏற்றுக் கொள்ளப்படுவதே இல்லை. வேறு சில சமூகங்களில் தகப்பன்மார் ஒரு பொறுமை வாய்ந்த ஆசிரியனின் பணியை ஆற்றுகின்றனர். குழந்தை வளர்ப்பு முழுக்க முழுக்கத் தாயாரிடமே விடப்பட்டு விடுகிறது. இன்னும் சில சமூகங்களில் குழந்தைகளை தகப்பன்மார் ஒரு சர்வாதிகாரியைப் போலக் கட்டி ஆளுகின்றனர்.

எமது சமூகத்தில் தகப்பன் பெரும்பாலும் பெயரளவுக்கே ஒரு குடும்பத் தலைவன் என்ற பெயரைக் கொண்டவராகிறார். குடும்பத்தில் அவரது அந்தஸ்து என்ன என்பதோ, அவரது கடமைகள் என்ன என்பதோ பெரும்பாலும் வரையறை செய்யப் பட்டிருக்கவில்லை. அமெரிக்கத் தந்தை ஒரு மறைந்திருக்கும் உதவியாளராகவே கருதப்படுகிறார். காலையில் அவசரமாகப் போகிறார். பகல் முழுவதுமே நிற்பதில்லை. இரவில் களைத்துப்போய் வீடு திரும்புகிறார். வார இறுதிகளில் அவர் விளையாடுவதில்லை. தொலைக் காட்சியைப் பார்ப்பார் அல்லது முற்றத்துப் புல்லை மட்டமாக வெட்டிக் கொண்டிருப்பார். தகப்பனாருடன் பயனுள்ள விதத்தில் அவருடன் சேர்ந்து அவரது செயற்பாடுகளில் பங்காற்றவோ, உரையாடலில் ஈடுபடவோ பிள்ளைகட்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை.

இதன் விளைவாக, தாயாரே குடும்பத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஒருவராக, முற்றாக இல்லாவிட்டாலும் பிரதானமான பொறுப்பாளராக, கட்டுப்பாட்டொழுங்குக்குப் பொறுப்புள்ளவராக அமைகின்றார். இத்தகைய ஒரு நிலை தாயாரின் நீண்ட காலமாக இருந்து வரும் பாத்திரத்தை ஆபத்துக்குள்ளாக்குகிறது. முன்னைய காலங்களில் தாயார் அன்பையும், இரக்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துபவராகவே இருந்தார். குழந்தைகள் குறிப்பாக ஆண்குழந்தைகள் தமது புரிதல்களை பெரும்பாலும் அவரிமிருந்தே பெற்றுக் கொள்கின்றனர். தகப்பனார் குறித்த சர்வதேச மயப்படுத்தப்பட்ட பிரதிமை ஆனது அவர்களை துர்நடத்தைகளை நோக்கிய தூண்டுதலுக்கு எதிராக எச்சரிப்பதாகவும், ஆக்கிரமிப்பு நடைமுறைகட்கு எதிராகத் திட்டுவதாகவும் அமைந்துள்ளது. இதனால்



தகப்பன் ஸ்தானம் அவர்களைப் பொறுத்தவரை குடும்பத்துக்கும் புற உலகுக்கும் இடையிலான ஒரு பாலமாக அமைகிறது.

நவீன குடும்பங்களில், தகப்பனது பாத்திரம் தாயினது பாத்திரம் என்பவை பெருமளவுக்கு தனித்துவமானவையாக இருப்பதில்லை. பெரும்பாலான பெண்கள் வெளியிலே வேலை செய்கின்றார்கள். குடும்பத்துக்கு வெளியே உள்ள 'ஆணின் உலகத்தை' நோக்கி அவர்கள் செல்கிறார்கள். அத்துடன் பெரும்பாலான ஆண்கள் வீட்டிலே பிள்ளைப் பராமரிப்பு வேலைகளில் குழந்தைகட்கு உணவூட்டல், உடைமாற்றல், குளிக்கவார்த்தல் போன்றவைகளில் ஈடுபடுகிறார்கள்.

சில ஆண்கள் இந்தப் புதிய சந்தர்ப்பங்களை, குழந்தைகளுடன் பெருமளவுக்கு நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள உதவுகின்றன என்பதால் அவற்றை வரவேற்கின்றார்கள் என்ற போதும், குழந்தை ஒரு தாயினதும், ஒரு தகப்பனினதும் குழந்தையாக இருப்பதிற்குப் பதில் இரண்டு தாய்மாரின் குழந்தையாக ஆகிப்போகும் ஒரு ஆபத்தும் இருக்கிறது என்பது உண்மையே.

## தகப்பனின் பாத்திரம்

தனது பாத்திரத்தை ஏற்றுக் கொள்ளும் ஒரு தகப்பனாரின் தேவை ஒவ்வொரு குழந்தைக்கும் இருக்கிறது. ஆண்தன்மை என்பது ஒரு பாடத்திட்டத்தைப் படிப்பதன் மூலமாக பெற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல. அது, நாளாந்த வாழ்க்கையின் போது தகப்பனின் மாதிரியினூடாகவே கற்றுக் கொள்ளப்படுகிறது. ஃபிராய்ட் சொன்னார்: சிறுபராயத்தில் தகப்பனாரது பாதுகாப்பு போன்ற வலுவான பாதுகாப்பு வேறு எதுவுமில்லை."

குழந்தைக்கு மூன்று ஆபத்தான சந்தர்ப்பங்களில் தகப்பனாரது வழிகாட்டல் தேவைப்படுகிறது. வெளியுலக மிரட்டல்களிலிருந்து பாதுகாப்பு குழந்தைக்குத் தேவைப் படும் போதும், அதன் உள் மனதின் பயங்களிலிருந்து பாதுகாப்பு தேவைப்படும் போதும், தாயாரின் அளவுக்கதிகமான பாதுகாப்புணர்வு நடவடிக்கைகளின் போதும் இது தேவைப்படுகின்றது. வெளியுலகம் குழந்தைக்கு ஆபத்தானதாகும். குழந்தைகட்கு, வீட்டிலுள்ள ஆபத்தான நவீன சாதனங்கள், அயல்வீடுகளிலுள்ள பழைய காலத்து நடைமுறைகள் என்பவற்றிலிருந்து பாதுகாப்பு வழங்கப்படுவது அவசியம். பல்வேறு விடயங்கட்கு மத்தியில் குழந்தை ஒரு வாகனத்துடன் விபத்துக்குள்ளாகாமல் பாதையை குறுக்கறுத்துப்போகவும், மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகாமல் மின்சார உபகரணங்களைப் பயன்படுத்தவும் பழகிக் கொள்ள வேண்டும்.

குழந்தைக்கு தனது கோபத்தில் வரும் விருப்பங்களையும், பயம் காரணமாக எழும் ஆர்வங்களையும் கையாள தகப்பனாரது உதவி தேவைப்படுகிறது. ஒவ்வொரு இளம் பையனும் தனது தாய் தனக்கு மட்டுமே சொந்தமானவளாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்றான். இதற்கெதிரான எவரையும் அவனால் சகிக்க முடிவதில்லை.

அத்துடன் தனது சகோதரனையும், தூக்கியெறிந்து விடுகின்ற கட்டற்ற செயல்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஈடுபட்டிருக்கக்கூடும். அல்லது கனவுகளில் அவர்களை ஒதுக்கிக் கொள்ளக் கூடும். இத்தகைய தூக்கியெறிகின்ற கட்டற்ற செயற்பாடுகள் வன்முறை சார்ந்ததாகவும் இருக்கக்கூடும். அவர்களை ஒதுக்கி விடுகின்ற கனவுகள், இரவில் பயந்து அழுவது, எழுந்து நடமாடுவது போன்ற தன்மைகளை உள்ளடக்கியிருக்கலாம். குழந்தையால் இன்னமும் தனது விருப்பங்கட்கும் உண்மை நிலைக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதால், அது மிகவும் அதிமாகப் பயப்படுகிறது. இக் குழந்தையால் தனது விருப்பங்கள் நிஜமாக முடியாது என்று தெரிந்து கொள்ள முடிவதில்லை. இப்படியான சந்தர்ப்பங்களில் தகப்பனாரது பாத்திரம் இரண்டு அம்சங்களைக் கொண்டது. ஒன்று குழந்தையின் விரக்தி, கோபம், பயம் என்பவற்றை அனுதாபத்துடன் அணுகுதல், அதேவேளை அமைதியான உறுதியுடன் பிள்ளைக்கு தைரியமூட்டும் விதத்தில் இச்செய்தியைத் தெரிவிக்க வேண்டும். 'கவலைப்பட வேண்டாம் மகனே... நீ பயப்படுகின்ற உன்னுடைய விருப்பங்களைச் செய்ய நான் விடமாட்டேன்.'

* ஆண்களை விட பெண்கள் உடற்பலம் குன்றியவர்கள் என்ற கருத்தை விஞ்ஞான பூர்வமற்றது என்று பெண்ணியலாளர்கள் கூறுகின்றனர். ஆயினும் இவ்விடத்திலும் இதன் பின்னால் வருபவற்றிலும், நூலாசிரியர் இக்கருத்தை ஏற்றுக் கொண்டே எழுதியுள்ளார். நூலாசிரியரிடம் பெண்ணிலைவாதக் கருத்துக்களின் தாக்கம் எதுவும் இருந்துள்ளதாகத் தெரியவில்லை. மொழியைக் கையாள்வதிலும் உதாரணங்களைப் பொதுமைப்படுத்தும் போதும் இது அவதானிக்கப்படக் கூடியதாக உள்ளது. மொழிபெயர்ப்பில் இவை முடிந்தவரை திருத்தப்பட்டுள்ளன. - மொழிபெயர்ப்பாளர்)

சில பெற்றோர், தமது குழந்தைகளது அழிவுத்தன்மை வாய்ந்த, முறை தவறிய நடவடிக்கைகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதை அறியாமல் இருக்கிறார்கள். சில இல்லங்களில் பெற்றோரது படுக்கை அறை இரவோ பகலோ எந்த நேரத்திலும் ஆக்கிரமிக்கப்படக் கூடியதாக இருக்கின்றது. சில வீடுகளில், அளவுக்கதிகமாக இடங்கொடுக்கும் தகப்பன் முன், தாயை வார்த்தைகளாலோ அல்லது கைகளாலோ குழந்தைகள் தாக்குவதைக் காணலாம். இத்தகைய நடவடிக்கைகள் சகிக்கப்படுவது நல்லதல்ல. இவை குழந்தைகளிடையே குற்ற உணர்வு வளரவும், பெற்றோர் அவமானப்படவும் இடமளிக்கின்றன.

தவறான நடத்தையுள்ள பிள்ளையிடமிருந்து தாயைப் பாதுகாக்கின்ற அதேவேளை, அளவுக்கதிகமாகப் பாதுகாப்புக் குறித்து அக்கறை காட்டும் தாயிடமிருந்தும் பிள்ளையைப் பாதுகாப்பது தகப்பனது கடமையாகும். இப்படி நான் சொல்லும் போது, அது தாய்மார் எல்லோரும் அளவுக்கு மீறிய பாதுகாப்புணர்வு கொண்டவர்கள் என்று சொல்வதாக கொள்ளப்படத் தேவையில்லை. ஆனால் சில தாய்மார் வயது வந்த பின்னும் கூட பிள்ளைகளைக் குழந்தைகளாக நடத்துவதைக் காணலாம். வெறுமனே வசதியாகவும், அன்புடனும் வளர்ப்பது மட்டுமல்ல. குழந்தையை விடுதலை பெறச் செய்வதும் தகப்பனது பொறுப்பாகும்.

தாயாருடைய அன்பு குழந்தைக்கு தான் விரும்பப்படுகிறேன் என்று சொல்லுகிறது என்றால், தகப்பனாரது உறுதி குழந்தைக்கு தான் தகுதி வாய்ந்தவன் தான் என்று தெரிவிக்கிறது. தகப்பன்மாரது சொந்த வளர்ப்பில் பெருமளவுக்கு பாரம்பரிய தாக்கங்கள்



இல்லாதிருப்பதால் அவர்களுக்கு தாய்மாரை விட இலகுவாக குழந்தைகள் சுதந்திரத்தை அனுபவிக்க அனுமதிப்பது இலகுவாக உள்ளது. குழந்தைகளின் புது முயற்சிகளை தகப்பன்மார் ஆதரிக்கத் தயாராக இருக்கும் போது அவர்கள் தேவையற்ற குற்ற உணர்வுகள் அற்றவர்களாக வளர்கிறார்கள்.
தகப்பனார் நம்பிக்கையையும், துணிச்சலையும் ஊட்டுவதற்கு உரிய சந்தர்ப்பங்கள் எவை என்பது அவ்வளவு முக்கியம் அல்ல. இத்தகைய செயல்கள் எங்கும் எப்போதும் எவ்விடத்திலும் செய்யப்படலாம். இச்செயல்கள் விளையாட்டில் விசேட திறமையையோ அல்லது, பொழுது போக்கு நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதையோ, கட்டாயம் கொண்டிருந்தால் மட்டும் செய்யப்பட வேண்டும் என்பதில்லை. இதற்குத் தேவையானதெல்லாம் உறுதியான வழி காட்டியாகவும், நட்புள்ள பாதுகாவலனாகவும், செயற்பட உள்ள தயார் நிலை மட்டுமேயாகும்!

## பெண்பிள்ளைகட்கும் ஆண்பிள்ளைகட்குமான நியமங்கள்

பெண் பிள்ளைகளும் சரி, ஆண் பிள்ளைகளும் சரி, இரு பாலாருக்குமே தத்தமக்கேயுரிய உயிரியல் விதிக்கமைய முன்னேறிச் செல்வதற்கு உதவி தேவைப்படுகிறது. பெற்றோர்கள் இருபாலாரிடமும் ஒரே மாதிரியாக நடத்தை நியமங்களை எதிர்பார்க்கக் கூடாது.* ஆண்பிள்ளைகள் அதிகமாக ஓடித்திரிவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். அவர்களிடம் காணப்படும் அதிகளவு சக்தியும், சமுதாயம் அவர்கள் மிகவும் உறுதியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதுமே இதற்குக் காரணமாகும்.

தாய்மார்களும் சரி, ஆசிரியர்களும் சரி, ஆண்பிள்ளைகளிடம் பெண்மைத் தன்மை வளர்க்கப்படுவதை ஊக்குவிக்கக்கூடாது. ஆண்பிள்ளைக்கு பெண்பிள்ளைகளின் பெயர்களை இடுவதோ, உடைகளை அணிவதோ, பெண்பிள்ளைகளைப் போல தலைமுடிவளர்ப்பதோ கூடாது. அவர்கள் பெண்பிள்ளைகளைப் போல நேர்த்தியாகவும் அடக்கமாகவும் இருக்க வேண்டும் என்றோ, அல்லது ஒரு சீமாட்டி போல இருக்க வேண்டும் என்றோ எதிர்பார்க்கப்படக் கூடாது.

தங்களுக்கு ஒரு பெண் குழந்தை இல்லையென்பதற்காக தமது மகனை பெற்றோர் பெண் குழந்தையாக வளர்க்க முயலக்கூடாது. அழகான கூந்தலுள்ள ஒரு பையன், உறவினர்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடும். ஆனால் அவன், அவனது விளையாட்டுத் தோழர்கள் மத்தியில் (அப்படி யாராவது இருந்தால்) 'பெட்டை' யாகவே கருதப்படுவான். இது அவனது சிறுபராய பிம்பத்தைப் பாதிக்கச் செய்யும். அத்துடன் அவனது குழுவுக்குள் அவனது அந்தஸ்தையும் குறைக்கும்.

இவ்வாறே பெண் குழந்தைகளும், தமக்கு ஆண்குழந்தை இல்லையென்ற பெற்றோரின் குறைக்கு மருந்தாகி விடக்கூடாது. ஒரு ஆண்குழந்தை பெண்குழந்தையாக வளர்க்கப்படும் போது அது எதிர்கொள்ளும் கிண்டல்களை விட ஒரு பெண்குழந்தை ஆண்குழந்தையாக வளர்க்கப்படுகையில் எதிர்கொள்வது குறைவாகவே இருக்குமாயினும், அக்குழந்தை பெண்மையியல்புகளுடன் வளர அனுமதிக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். பெண்ணாக இருப்பதிலும், பெண்மையைக் கொண்டிருப்பதிலும் பெருமையும் பெருமிதமும் அடையும் விதத்தில் அது வளர்க்கப்பட வேண்டும். பெண் பிள்ளைகள் தாம் பெண் பிள்ளையாக இருப்பதுவே தமக்குச் சிறப்பு, பெருமை என்று கருத வேண்டும். தான் பெண்ணாக இருப்பதை விரும்பும் தாய் இதனைப் பிள்ளைகட்கு ஊட்ட வேண்டும். பெற்றோர்கள் இருவரும் தமது பிள்ளைகளின் ஆண்தன்மை, பெண்தன்மை இரண்டும் பண்படுத்தப்படும் தேவை குறித்து தெளிவாக அறிந்திருக்க வேண்டும்.

தனது மகளது தோற்றம், உடை, அவளது பெண்ணியல்புகள் என்பன குறித்து தகப்பனார் விதந்துரைப்பது பொருத்தமாக இருக்கும். தகப்பன் அவளைக் கடினமான விளையாட்டுக்களில், தலையணையில் குத்தி விளையாடும் குத்துச்சண்டை போன்றவற்றுக்கு ஊக்குவிக்கக் கூடாது. இது, தான் ஒரு பையனாகப் பிறந்திருந்தால் தனது தகப்பனுக்கு அதிகளவுக்கு தன்னில் ஆசை இருந்திருக்கும் என்று அந்தப் பிள்ளையை நினைக்க வைக்கிறது.

குடும்ப வாழ்க்கை, ஆண்களுக்கும், பெண்களுக்கும் உரிய எளிய வெவ்வேறு விதமான பாத்திரங்கள் குறித்தும், அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவரைப் பராமரிப்பது குறித்தும் உரிய அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொள்ள நிறையவே வாய்ப்பைத் தருகிறது.

## ஆண்மை, பெண்மை

ஆண்மை, பெண்மை என்பவற்றுக்கான கல்வி, வாழ்வின் மிக ஆரம்பக் கட்டதிலேயே தொடங்கி விடுகிறது. ஆயினும் குழந்தைகளிடம் மிகத் தொடக்க காலத்திலேயே பால் ரீதியான பாத்திரங்கள் குறித்து வலியுறுத்தக் கூடாது. ஆரம்பப் பாடசாலை வயதில் குழந்தைகள் பெரும்பாலும் பொம்மைகளுடன் - அது பெண் குழந்தைகளாயினும் சரி, ஆண் குழந்தைகளாயினும் சரி, தாயைப் போல தம்மைப் பாவனை செய்து விளையாடுவதை விரும்புகிறார்கள். இந்த வயது ஆண்குழந்தைகளை ஆண்களுக்குரிய குத்துச் சண்டை விளையாட்டுக்கு இழுத்துவிடும் வேலையில் தகப்பன்மார் ஈடுபடக் கூடாது. இந்த வயதுக் குழந்தைகள் அனுமதி கிடைக்காது என்ற அச்சமின்றி ஆண் அல்லது பெண் விளையாட்டுகளில் ஈடுபடக்கூடியதாக இருக்க வேண்டும்.

பாடசாலைப் பருவத்தில் பால் வேறுபாடுகள் வலியுறுத்தப்படுகின்றன. ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் வெவ்வேறு விருப்பங்களும், ஆர்வங்களும் கொண்டவர்களாக வளர்வது எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்கள், ஆண்களுக்குரிய நடவடிக்கைகளில் பெருமிதத்தையும், பெண்கள் பெண்களுக்குரிய செயல்களில் பெருமிதத்தையும் பெற வேண்டும். கலாசார ரீதியாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் ஆண், பெண் தன்மைக்குரியவையென வேறுபடுத்தப்பட்ட விருப்புகள், நடவடிக்கைகள் என்பவற்றினால் பால் வேறுபாடுகள் பலமூட்டப்படுகின்றன.

பாடசாலைக் காலம் தான் தகப்பனாருடன் மகனும், தாயாருடன் மகளும் கொண்டுள்ள உறவு வலுப்பெறுவதற்கான ஒரு நல்ல காலமாகும். பெண் பிள்ளைகள், சமைக்க,



வெதுப்ப (BAKING) எளிய சாப்பாடுகளை தயார் செய்ய, தைக்க, பிள்ளை வீட்டைக் கவனித்துக் கொள்ள பழக முடியும். குப்பையாகவும், ஒழுங்கற்ற விதத்திலும் வேலை செய்வதற்கு அவர்களுக்கு நிறைய இடம் தரப்படலாம். எமது வலியுறுத்தலெல்லாம் வீட்டை ஒழுங்குபடுத்தும் செயலிலுள்ள சந்தோசம் பற்றி அமைய வேண்டுமே ஒழிய, நேர்த்தியாகச் செய்யப்படுகிறதா என்பது பற்றியதாக அமையக் கூடாது. ஒரு பெண்ணாக, மனைவியாக, தாயாக இருப்பதில் உள்ள தனது திருப்தியை ஒரு தாய் வெளிப்படுத்துவதற்கான உரிய காலம் இதுவேயாகும்.

தகப்பனாரும், தன்னைப் போல செயற்படப், பேச, நடக்கத் தனது மகனுக்குள்ள ஆர்வத்தை வரவேற்க வேண்டும்.

இத்தகைய போலச் செய்தல்களை அவமதிக்கக்கூடாது. அவை ஊக்குவிக்கப்பட வேண்டும். மொழியையும் இயல்பையும் போலச் செய்தல், ஆர்வத்தையும் பெறுமானங்களையும் பின்பற்றுவதற்கு இட்டுச் செல்கிறது. நெருக்கமாக உள்ள வேளையில், ஒரு குடும்பத்திலும், சமூகத்திலும் ஒரு ஆணாக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதை தகப்பனார் மகனுக்குப் புரிய வைக்கலாம். தகப்பனாரது திறமை, முயற்சி, அர்ப்பணிப்பு என்பவற்றைத் தமது வீட்டுக்கு வெளியே காணும் போது மிகவும் பெருமையுடன் அதை அவர்கள் அவதானிக்கிறார்கள். தகப்பனாரது வேலை ஸ்தலத்திலும் அவரது சமூக, அரசியல் நடவடிக்கைகளின் போதும் கூட இருப்பது அவர்களுக்கு ஒரு ஆண் தனது வேலையின் போதும் தனது சமூகத்திலும் என்ன செய்கிறான் என்பதை ஆர்வத்துடனும் பெருமையுடனும் அறிய வைக்கிறது.

## வெவ்வேறு குடும்ப மாதிரிகள்

அடையாளப்படுத்தலுக்கான மிகச்சிறந்த மாதிரி, பெற்றோர் தமது சொந்தப் பால் ரீதியான பாத்திரங்களையும், மற்றவரது பால் ரீதியான பாத்திரங்களையும் கௌரவித்தலேயாகும். பெற்றோரது அன்றாட சாதாரண நடைமுறைகளின் ஊடாக, குழந்தைகளுக்கு ஆண், பெண் தன்மைகள் மதிக்கப்படுகின்றன என்ற விடயம் கொண்டு செல்லப்படுகிறது.

ஒரு ஆணின் வாழ்க்கையின் குறிக்கோள் என்பது அவன் தன்னை இந்த உலகில் பதிய வைத்துக் கொள்வதும், காலத்தினைக் கடந்து நிற்கும் விதத்தில் தன்னைப் பற்றிய தடயங்களை உருவாக்கிவிட்டுச் செல்வதும் தான் என்ற செய்தியை சில குடும்பங்களில் உள்ள குழந்தைகள் பெற்றுக் கொள்கிறார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலை கலை, விஞ்ஞானத்துறைகளில் ஆய்வுக்கும், கண்டுபிடிப்புக்கும், சாதனை படைப்புக்குமான கனவுகளை உருவாக்குவதற்குக் காரணமாக அமைகிறது. பெண்களும் கூட குடும்பத்தை நடாத்துவதற்கு அப்பால் சமூகத்துக்கு பங்களிப்பு நல்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய ஒரு கண்ணோட்டம், தகப்பனும், தாயும் தமது பாத்திரங்களை திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், ஒருவரது பாத்திரம் குறித்து மற்றவர் பாராட்டுதல்களை தெரிவிப்பவராகவும், மற்றவர்களது சாதனைகள் குறித்த ஆர்வங்களைப் பகிர்ந்து கொள்பவராகவும் இருக்கும் பட்சத்தில், மிகவும் வெற்றிகரமான ஒரு கண்ணோட்டமாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில குடும்பங்களிலோ, குழந்தைகள் வேறுவிதமான செய்திகளைப் பெறுகிறார்கள். பெண் குழந்தைகளைப் பராமரிப்பதிலும், வீட்டைப் பராமரிப்பதிலும் சலிப்புற்று இருக்கும் போதோ, ஒரு பெண் தாயாகவும், மனைவியாகவும், இருப்பதன் காரணமாகத் தனக்குள்ளும் விவேகமாக நடந்து கொள்வதை கணவன் பாராட்டாமல் இருக்கும் போதோ, குழந்தைகள் பெண்களின் பாரம்பரிய பாத்திரங்களை எதிர்நிலைப்பாட்டுடன் நோக்குகிறார்கள். இத்தகைய குடும்பங்களிலுள்ள சிறுமிகள் போட்டி போடுபவர்களாகவும் பையன்களை வெல்ல வேண்டும் என்று எண்ணுபவர்களாகவும் வளர்கிறார்கள். இது பிறகு ஆண்களுடனான போட்டியாக வளர்கிறது.

இன்னும் சில குடும்பங்களிலிருந்து இன்னும், ஒரு விதமான செய்தி வருகிறது. குடும்பங்களில் பால் சார்ந்த பாத்திரங்கள் தலை கீழாக்கப்பட்டிருக்கின்றன. பெண்ணே அங்கு எல்லாவற்றிலும் அதிகாரம் பண்ணுபவளாகிறாள். அவள் அந்தக் குடும்பத்தின் பிரதான வருவாயை தருபவளாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவளோ அக்குடும்பத்தின் அனைத்து தேவைகளிலும் முடிவெடுப்பவளாக இருப்பாள். ஒரு கணவன் குறிப்பிட்டது போல 'நான் பெரிய விடயங்களில் தீர்மானம் எடுக்கிறேன். சீனாவை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்க்கலாமா, டி.வி.ஏ. நிறுவனத்தை தனியொருவருக்கு விற்கலாமா என்பன போன்ற விடயங்களில் தீர்மானங்கள் எடுப்பது போல எனது மனைவியும் சிறிய விடயங்கள் குறித்து முடிவெடுக்கிறாள். எந்தக் காரை நாம் வாங்க வேண்டும், எந்த வீட்டில் இருக்க வேண்டும், எந்தப் பாடசாலைக்குக் குழந்தைகளை அனுப்புவது போன்ற விடயங்களில் அவள் முடிவெடுக்கிறாள்.'

இத்தகைய குடும்பங்களில் உள்ள தகப்பன்மார்கள் தாம் குடும்பத்தலைவனாக இருப்பதை தவிர்க்கிறார்கள். அவர்கள் தாமே தமது மனைவியை வீட்டின் தலைவியாக வெளிப்படையாக கூறுகிறார்கள். குழந்தைகள் ஏதாவது முடிவு செய்யும் பொறுப்பைத் தகப்பனாரிடம் கொடுக்கும் போது அவர் 'அம்மாவிடம் கேளுங்கள்' என்ற பதிலைத் தருகிறார்.

இத்தகைய குடும்பங்களில், குழந்தைகள் ஆண்களை மதிக்காதவர்களாக, அவர்கள் மீது குறைந்தளவு விருப்பையே காட்டுகின்றவர்களாக வளர்கிறார்கள். ஆண் குழந்தைகளும் சரி, பெண் குழந்தைகளும் சரி தகப்பனாரை தாயாரின் கண்களினூடாகவே பார்க்கிறார்கள். ஒரு நல்ல கலவையாக, ஒரு கேலிச்சித்திரமாகவே அவர் அமைகிறார்.

ஆண்குழந்தைகளும் சரி, பெண்குழந்தைகளும் சரி ஒரு பலவீனமான தகப்பனும், அதிகாரமிக்க தாயுமுள்ள குடும்பத்தில் வளரும் போது பாதிப்புக்குள்ளாகிறார்கள். ஆண் குழந்தைகள் மட்டுமீறிய தன்மையுடையவர்களாக மாறி குடிப்பவர்களாகவும் ஒழுங்கற்றவர்களாகவும், கட்டுப்பாடற்றவர்களாகவும் பெண்களுக்கு எதிரான வக்கிர இயல்புடையவர்களாகவும் வளர்கிறார்கள். பெண்குழந்தைகள், தமது குடும்பத்தின் நிலையை, தமது கணவன்மார்களுடனும் தொடர்பவர்கள் ஆகின்றார்கள். இதன் மூலம் தமது, பாத்திரங்களைத் தலை கீழான முறையில் இன்னொரு சந்ததிக்கும் வழங்குகிறார்கள்.



## பால் ரீதியான பாத்திரங்களும், சமூக நடைமுறையும்

மகன்/மகள் என்ற இரு தனியாட்களையும் வளர்த்து வருவதில் உள்ள முக்கியத்துவமானது மகன் ஆண் என்பதையும், மகள் பெண் என்பதையும் அவர்களுக்கேற்ற விதத்தில் அவர்கள் வளர்க்கப்பட வேண்டும் என்பதையும் மறந்து விடக் காரணமாக இருந்து விடக்கூடாது.

பால் ரீதியான சமத்துவத்தில் எமக்கிருக்கும் விருப்பம், சில உயிரியல் ரீதியான நடவடிக்கைகள் சமப்படுத்தப்பட முடியாதவை என்பதையும் அவற்றுக்கு சில உளவியல் மற்றும் சமூகத் தொடர்ச்சிகள் உண்டு என்பதையும் மறப்பதற்கு ஏதுவாக அமைந்து விடக்கூடாது. சமூகப் பாத்திரங்கள் வெறுமனே பால் ரீதியான கடப்பாடுகளின் அடிப்படையிலான குறுகிய கண்ணோட்டத்துடன் மாதிரிகளாக்கப்படக் கூடாது. என்பது உண்மையே, ஆயினும் இது முற்றுமுழுதாக பால்ரீதியான கடப்பாடுகளிலிருந்து பிரிந்ததாகக் கொள்ளப்படக் கூடாது. பெரும்பாலான பெண்கள் மனைவிகளாகவும், தாய்மார்களாகவும் இருப்பதால், அவர்களது பொதுக் கல்வியும், தனிப்பட்ட எதிர்பார்ப்புகளும் அவர்களை இத்தகைய பாத்திரங்கள் மூலமாக ஆழமான திருப்தியடைய உதவுகின்றன.

உண்மையில் சில தனிப்பட்ட பெண்கள் சில வேறுவிதமான பாத்திரங்களை ஆற்ற முடிவு செய்கிறார்கள் தான். அவர்கள் இயந்திரங்களைப் பழுதுபார்ப்பவர்களாக, கப்பலோட்டிகளாக, விண்வெளிப் பிரயாணிகளாக, தொழிலதிபர்களாக, வெகுஜன ஸ்தாபனங்களை நடத்துபவர்களாக இருக்க விரும்பலாம். இத்தகைய விதத்தில் ஒரு தனிநபர் - அவர் எந்தப் பாலைச் சேர்ந்தவராயினும் சரி, தமது தனிப்பட்ட, அரசியல் தெரிவுகளின்படி இயங்க வசதிகள் இருக்க வேண்டும் என்பது அவசியமே. அதேவேளை ஆண்களும், பெண்களும் ஒருவருக்கொருவர் எதிராகவும், போட்டி போடுபவர்களாகவும் இல்லாதிருக்கும் போதே வாழ்வு இலகுவானதாக அமையும் என்பதையும் கவனிக்க வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. நிபுணத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள்

பெருமளவு பாதிப்புக்குள்ளாகாத குழந்தைகள், மன அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளிலும், தமது உள் மனதில் ஏற்படும் போராட்டங்களின் போதும், தாறுமாறான கொந்தளிப்புகளுடன் தமது எதிர்வினையைக் காட்டுகிறார்கள். அவர்கள் பயப்படுவார்கள்: இரவுகளில் கனாக்கண்டு திடுக்கிட்டு எழுவார்கள். தமது நகங்களைக் கடிப்பார்கள்: சகோதர சகோதரிகட்கு தூண்டில் போட்டு வம்புக்கு இழுப்பார்கள்: வலிப்பு நோய் அல்லது திடீரென்று வெறிவந்தது போல செயற்படும் நிலைக்குள்ளாவார்கள், இன்னும் இது போன்ற பல்வேறு விதமான குறியீட்டு வடிவிலான எதிர்வினைகளைக் காட்டுவார்கள். பெரும்பாலும் இவர்கள் நல்ல குடும்பங்களைச் சேர்ந்த நல்ல நோக்குடன் அவர்களை வளர்க்கின்ற பெற்றோர்களின் பிள்ளைகளாக இருப்பார்கள். இப் பெற்றோர்கள் தமது நல்ல நோக்கின் காரணமாக, அளவுக்கு மீறிய பாதுகாப்புணர்வைக் கொண்டு செயற்படுபவர்களாக, அல்லது அளவுக்கு மீறிய செல்லம் கொடுப்பவர்களாக, அல்லது அவர்களை அளவுக்கதிகமாக கட்டுப்பாடு செய்வர்களாக இருப்பார்கள். இத்தகைய பிள்ளைகட்கும் பெற்றோர்க்கும் இத்துறைசார் நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது. இவ்வுதவியால் இவர்கள் அதிக பயன் பெறுவார்கள்.

சில குழந்தைகள் பெருமளவு பாதிப்புக்குள்ளாகிறார்கள். அவர்கள் பொறாமை காரணமாக கொலைகாரத்தனம் கொண்டவர்களாகவும், தாம் அச்சுறுத்தப்படுகையில் வன்முறையை வெளிப்படுத்துபவர்களாகவும் இருக்கிறார்கள். தமது பாலியல் சார்ந்த விடயங்களைப் பொறுத்தவரை, கருணையற்ற விதத்தில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். இவர்கள் வளர்ந்து நற்பிரஜைகளாக வரவேண்டுமானால் இவர்களுக்கு மனோவியல் உதவி வழங்கப்படுவது அவசியமாகும்.

இக்குழந்தைகளை நாம் இரண்டு வகையினராகப் பிரிக்கமுடியும். ஒன்று, உளவியல் மருத்துவம் மிகவும் அவசியமாகத் தேவைப்படும் குழந்தைகள். இரண்டு, உளவியல் மருத்துவ முறையால் உனடியாக பலனைப் பெறக்கூடியவர்கள்.



## உடனடியாக உளவியல் மருத்துவம் தேவைப்படும் குழந்தைகள்

### அடிக்கடி சகோதரப் போட்டிச் சண்டையிலீடுபடும் குழந்தைகள்

அடிக்கடி மிகவும் அதிகமாகச் சகோதர சகோதரிகளுடன் சண்டையிடும் பிள்ளைகளுக்கு அவசியம் உதவி தேவைப்படுகிறது. இந்தக் குழந்தைகளின் பொறாமை உணர்வானது அவர்களது முழு வாழ்விலும் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. அவர்களது ஆளுமை விருத்தியினை ஊறுபடுத்தி விடுகிறது. அவர்கள் அதிகப்படியான கவனம் கொண்டவர்களாகவும், தமது போட்டியாளர்களைக் காணும் போது அவர்களை அழித்துவிட வேண்டும் என்று விரும்பும் தன்மை கொண்டவர்களாகவும் காணப்படுவர். தமது சகோதரர்களையும், சகோதரிகளையும் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் புண்படுத்தும் விதத்தில் நடந்து கொள்கிறார்கள். அத்துடன் தமது பெற்றோரோ, ஆசிரியரோ, அல்லது சாரணர் இயக்கத் தலைவரோ யாராவது ஒரு பெரியவருடனான தமது அன்பினைத் தமது சகோதரர்களுடன் பங்குபோட்டுக் கொள்ளத் தயாரற்றவர்களாக உள்ளனர். அவர்கள் 'நல்லவைகள்' என்று கருதும் எவற்றையும் பிறருடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்க மாட்டார்கள். வீட்டிலோ, விருந்துகளின் போதோ, தமக்கு அதிகளவு ஐஸ்கிரீமை, கேக்கை, விளையாட்டுப் பொருட்களை எடுத்துக் கொள்ளத் தயங்க மாட்டார்கள். தாம் பாவிக்க முடியாதவைகளைக் கூடப் பகிர்ந்து கொள்வதற்குப் பதில் மறைத்து வைக்கவே விரும்புகிறார்கள்.

இவர்கள் மட்டுமீறிய போட்டியாளர்களாக இருப்பதால்,தமக்கு வரும் போட்டிகளை எப்படியாவது இல்லாமல் செய்யும் வேகம் அவர்களுக்கு ஏற்படுகிறது. தமது போட்டிகளில் தம்மால் நேர்மையாக வெல்ல முடியாவிடில், நேர்மையீனமாகவேனும் வெல்லவே அவர்கள் விரும்புகிறார்கள். போட்டி போடுவதே அவர்களது வாழ்க்கை முறையாக மாறி விடுகிறது. அத்துடன் எப்போதும் மற்றவர்களை மிஞ்சி இருப்பதே அவர்களது வாழ்வின் குறிக்கோளாக மாறிவிடுகிறது. குழந்தைப் பராயத்திலிருக்கும் இந்தப் பொறாமை உணர்வு பிள்ளைப் பருவம் முடிகையில் மாறாவிட்டால் அவர்கள் தமது வாழ்க்கை முழுவதும் சந்திக்கும் ஒவ்வொருவரையும் சகோதரச் சண்டைக்கானவர்களாகவே காணத் தலைப்படுவர். வாழ்வுக்கும், சாவுக்குமான போட்டியில் மூழ்கியிருக்கும் இவர்கள் விளையாட்டிலோ, வியாபாரத்திலோ ஏற்படும் ஒவ்வொரு தோல்வியிலும் தமது தகுதிக்கு இழுக்கு ஏற்பட்டதாகவே கொள்வர். வாகனங்களை ஓட்டும் போது தாமே முந்திக் கொண்டு செல்ல வேண்டும் என்று கருதுவார்கள். வெல்ல முடியாத போது தோல்வி மனோபாவத்திற்கும், மனவழுத்தத்திற்கும் உள்ளாவார்கள். அவர்கள் தமது சகோதரர்களை மிகவும் தெளிவாகத் தெரிந்து கொண்டே வெறுப்பார்கள். அத்துடன் அவர்களை வாழ்நாள் முழுவதும் அவமானப்படுத்துவதில் ஈடுபடுவார்கள்.

சாதாரண சிறுவர்கள் கூட சகோதர சகோதரிகளிடம் பொறாமை கொள்வார்கள் தான். ஆனால் அந்தப் பொறாமை ஒரு மன நிலைப் பிறழ்வு சார்ந்ததாகவோ, அவர்களது வாழ்வில் ஆதிக்கம் செலுத்தும் ஒன்றாகவோ இருப்பதில்லை. அவர்கள் தமது சகோதரர்கள் அதிகளவு அன்பைப் பெறுவதாக உணரக்கூடும். இதனால் அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்காகப் போட்டியிடவும் கூடும். ஆனால் அவர்களுக்கு அன்பு கிடைக்கும் போது அவர்கள் திருப்தியடைந்து விடுவார்கள். அவர்களும் போட்டி போடுவார்கள் தான். ஆனால் அவர்கள் சந்தோசத்திற்காக மட்டுமே போட்டியிடவும் விளையாடவும் கூட விரும்புவார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் தோல்வியைப் பெரியளவு துயரமும் கஷ்டமும் இன்றி ஏற்றுக் கொள்ளவும் செய்கிறார்கள்.

### பால் விடயங்களில் அதிக நாட்டம காட்டும் குழந்தைகள்:

சில சிறுவர்கள் முதிர்ச்சியுறாத விதத்தில் ஆனால் தொடர்ச்சியாக பாலியல் சார்ந்த விடயங்களில் தமது கவனத்தைக் குவித்திருப்பார்கள். அவர்கள் பாலியல் விடயங்கள் தொடர்பாகச் சிந்திக்கிறார்கள். கனவு காண்கிறார்கள். இது பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் பகிரங்கமாகவோ, மறைவாகவோ கைமைதுனம் செய்கிறார்கள். அத்துடன் பாலியல் விடயங்கள் தொடர்பாக சகோதர சகோதரிகளுட்பட பிற சிறுவர்களுடன் 'ஆராய்ச்சி' செய்கிறார்கள் - அவர்கள் மறைந்திருந்து பார்க்க, துவாரங்கள் வழியாக ஒட்டுப் பார்க்க விரும்புவார்கள். தமது பெற்றோர்களின் பாலுறவு நடவடிக்கைகளையும் கூட 'கையும் மெய்யுமாகப் பிடிக்க' முயல்கிறார்கள்.

இத்தகைய சிறுவர்கள் பால் ரீதியான தூண்டுதலுக்கு உள்ளானவர்களாக உள்ளனர். இவர்கள் பெற்றோர்களது படுக்கையறையில் படுத்திருக்கக்கூடும். பெற்றோரின் படுக்கையைப் பகிர்ந்திருக்கக்கூடும். எப்படியோ பாலியல் விடயங்கள் அவர்களது மனதில் அதி விரைவாகவும், அதிகப்படியாகவும் குடி புகுந்திருக்கிறது. இத்தகைய, முழுக்கவனமும் பாலியல் விடயங்களில் குவிக்கப்பட்டிருக்கும் தன்மையானது, உளவியல் ரீதியான பிறழ்வு நிலை வளர்ச்சியடைவதையே காட்டுகின்றது. இவர்கள் உடனடியாக எந்தத் தாமதமும் இன்றி சிகிச்சையளிக்கப்பட வேண்டியவர்களாவர்.

சாதாரண சிறுவர்கள் கூட பாலியல் விடயங்களில் ஆர்வம் காட்டுவார்கள். அவர்கள் எதிர்ப்பாலார்களைக் கிண்டல் செய்வார்கள். ஆண் நண்பர்கள், அல்லது பெண் நண்பர்கள் குறித்து கிளுகிளுப்படைவார்கள். அல்லது திருமணம் செய்வது பற்றி, குழந்தைகள் பெறுவது பற்றிப் பேசுவார்கள். அவர்கள் தமது பாலுணர்வு பற்றிச் சந்தோசமாகப் புரிந்து கொண்டிருப்பார்கள். எப்பவாவது கைமைதுனமும் செய்வார்கள். ஆயினும், பாலியல் நடவடிக்கை அவர்களது வாழ்வின் ஒரு அம்சம் மட்டுமாகவே இருக்கும்.

அளவுக்கதிகமாக அடக்கமாக இருக்கும் குழந்தைகளுக்கு நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது. இந்தச் சிறுவர்கள் தாம் நிர்வாணமாக இருப்பதை மற்றவர்கள் பார்க்கிறார்கள் என்பதை அறியும் போது கலவரமடைகிறார்கள். அவர்கள் தமது உடல் பற்றி மிகவும் அதிகளவு சுய அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் உடற்பயிற்சி வகுப்புகளிலும் சரி, மருத்துவப் பரிசோதனை வேளைகளிலும் சரி, வைத்தியர் அதே பாலைச் சேர்ந்தவராக இருப்பினும் கூட மிகவும் அசௌகரியப் படுகிறார்கள். சாதாரண சிறுவர்கள் கூட, உடை களையப்படுவதை - ஒரு உடற்பரிசோதனையின் போது விரும்புவதில்லை. அவர்கள் மறுக்கவோ, தயங்கவோ கூடும். ஆனால் அவர்கள் கலவரமடைவதில்லை.



## மட்டு மீறிய முரட்டுத்தனமான பிள்ளைகள்

அதிகம் பகைமை பாராட்டும் சிறுவர்களுக்கு நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது. அவர்களது பகைமையின் அர்த்தங்கள் நிதானமாக மதிப்பிடப்பட்டு புரிந்து கொள்ளப்பட வேண்டும். இப்பகைமை உணர்வானது பல்வேறு காரணங்களினாலும் ஏற்படலாம் என்பதால் ஒவ்வொரு முரட்டுத் தனமான செயலுக்குமான காரணம் என்ன என்பதை தனித்தனியே கண்டறிவது அவசியமாகும். அப்போது தான் ஒவ்வொரு பிரச்சினைக்கும் அதற்கான காரணத்திற்கும் உரிய பராமரிப்பை வழங்க முடியும்.

தமது முரட்டுத்தனத்தை வெளிப்படுத்துவதுடன் அமைதி கொள்ளாத சிறுவர்களை நாம் அடிக்கடி கண்டிருக்கிறோம். அவர்களுடைய செயல்களின் அழிவுத்தன்மைகள் எப்போதும் வெளிப்படையான ஒரு குற்ற உணர்வுடன் சம்பந்தப்பட்டதாக இருப்பதும் இல்லை. இவர்களில் சிலர் எத்தகைய பரபரப்போ கழிவிரக்கமோ இன்றி மிகவும் மட்டுமீறிய கொடுமைகளில் கூட ஈடுபடுவர். இரக்கம் என்பது இவர்களிடம் மிகவும் குறைவாகவே காணப்படும். மற்றவர்களுடைய நலன்கள் குறித்து எத்தகைய அக்கறையும் அற்றவர்களாகவே அவர்கள் இருப்பர். இச்சிறுவர்களை எதுவுமே ஈர்ப்பதில்லை. அவர்களைக் கட்டுப்படுத்துவதும், விமர்சிப்பதும் பெரிய தாக்கத்தை அவர்களுக்கு ஏற்படுத்துவதில்லை. ஏனென்றால், மற்றவர்கள் தம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது அவர்களுக்கு முக்கியமில்லாத ஒன்றாகும். தண்டனைகளும், நோகச் செய்தல்களும் கூட அவர்களைத் திருத்தி விடுவதில்லை. இத்தகைய சிறுவர்களுக்கு மிகவும் தேர்ச்சி மிக்க நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது.

இன்னும் சில சிறுவர்கள் முரட்டுத்தனமான செயல்களில் வெறும் பகுதி நேரவேலையாகவே ஈடுபடுகின்றனர். அவை பெரும்பாலும் வீட்டில் நடக்கலாம். ஆனால் வெளியில் நடப்பதில்லை. அல்லது மாறி வெளியிலே முரட்டுத்தனமாகவும், வீட்டிலே அமைதியாகவும் இருக்கக்கூடும். இந்த மாதிரியான இயல்பை எதிர்ப்புத் தெரிவிக்கிற பகைமை என்று சொல்வர். சண்டை போடல், கொடுஞ்செயல்களில் ஈடுபடல், பாடசாலைக்குச் செல்ல மறுத்தல், பொதுவான அழிவுச் செயல்களில் ஈடுபடல் என்பவை பெற்றோரது தவறான பராமரிப்பின் காரணமாக, அல்லது அவ்வாறு நினைப்பதன் காரணமாக ஏற்படுபவையாகும். ஏனென்றால், இவர்கள் தம்பெற்றோர் தம்மை கவனிக்காமல் விட்டுவிட்டார்கள் என்று உணர்கிறார்கள். இதனால் அவர்கள் எல்லா வளர்ந்தோர் மீதும் சந்தேகப்படுகிறார்கள். அவர்கள் பெரியவர்களுக்குப் பயப்படுகிறார்கள். அவர்களது இரக்க சுபாவத்தை நம்ப மறுக்கிறார்கள். அவர்களது உதவிகளை நிராரிக்கிறார்கள். இத்தகைய சிறுவர்களுடன் ஒரு உறவை ஏற்படுத்திக் கொள்வது அவ்வளவு இயல்பான காரியம் அல்ல.

இவர்களைப் பராமரிக்கும் உளவியல் நிபுணர்கள், இவர்களுடன் உறவை ஏற்படுத்திக் கொள்ளவும் அதற்கு அடிப்படையான பரஸ்பர மதிப்பை வளர்த்துக் கொள்ளவும் முடியும் போது தான் இத்தகைய வரலாறுடைய சிறுவர்கள் பயன் பெறுகிறார்கள்.

சாதாரண சிறுவர்கள் கூட சில வேளைகளில் அழிவுத் தன்மையான வேலைகளில் ஈடுபடுவதுண்டு. இவற்றில் பெரும்பாலானவை மட்டுமீறிய ஆர்வத்தாலும் அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி காரணமாகவும் ஏற்படுபவையாகும். ஒரு சில விரக்தியாலும் கவலையாலும் ஏற்படுவதுமுண்டு. இவர்கள் கோபம் அல்லது ஆர்வம் காரணமாக தமது சொந்த விளையாட்டுப் பொருட்களை உடைக்கக்கூடும். ஆனால் அவர்கள் மற்றைய சிறுவர்களுடைய பொருட்கள் குறித்துக் கவனமாக இருப்பார்கள். சாதாரண சிறுவர்கள் பொருட்களைத் தம்மகத்தே வைத்திருப்பதில் மட்டுமீறிய ஆர்வம் காட்ட மாட்டார்கள். அவர்கள் தமது பொருட்களை விளையாடிய பின் அப்படியே விட்டுவிடவோ, விட்டுவிடாமலோ இருக்கக்கூடும். ஆனால் அவர்கள் தமது பொருட்களுடன் மற்றைய சிறுவர்கள் விளையாடுவதை அவை உடைந்து விடுமே என்ற பயமேதுமின்றி அனுமதிப்பார்கள். ஒரு விளையாட்டுப் பொருள் உடையும் போது அதற்காக அவர்கள் பெரியதாகக் கவலைப்பட்டுக் கொள்வதில்லை. அவர்கள் அதை மறந்து விட்டு இன்னொரு பொருளைத் தேடி விளையாடத் தொடங்கி விடுகிறார்கள். அவர்கள் தமது அறையைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று தம்மைக் கட்டாயப்படுத்திக் கொள்வதில்லை. உண்மையில் அவர்கள் தமது விளையாட்டின் பின், தாம் தமது அறையை எவ்வளவு குப்பையாக இருக்கிறது என்பதைப் பற்றித் திரும்பிக் கூடப் பார்க்காமலேயே போய் விடுவார்கள்.

## இயல்பாகிப் போய்விட்ட களவுப் பழக்கம்

களவெடுத்தலை நீண்ட நாட்களாகத் தொடரும் சிறுவர்களுக்கும் நிபுணர்களின் உதவி தேவைப்படுகிறது. தொடர்ச்சியான களவு மிகவும் கடுமையான ஒரு அறிகுறியாகும். இது பொதுவாக அதிகாரத்தை எதிர்த்த, தீவிரமான கோபத்தை வெளிப்படுத்துவதாக அமைகிறது. இவர்களின் சிலர் பிறர் சொத்துக்களைக் கொண்டிருப்பதற்கான உரிமையை ஏற்றுக் கொளள முற்றாக மறுக்கிறார்கள். அவர்கள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் சிறுசிறு களவுகளில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் வீட்டில், பாடசாலைகளில், சுப்பர் மார்க்கட்களில், அயல்வர்கள் வீடுகளில் எல்லாம் களவெடுக்கிறார்கள். இவர்களுக்கான வைத்தியம் என்பது ஒரு நீண்ட செயல் முறையாகும். ஏனென்றால் இத்தகைய, கனவு போன்ற ஆழமான உணர்வுகள் இலேசில் அகற்றப்பட முடியாதவையாகும்.

வீடுகளில் மட்டும் களவு செய்யும் சிறுவாகள் இந்தப் பிரிவிற்குள் அடங்க மாட்டார்கள் தாயாரின் பணப்பையிலிருந்து திருடுவது, அவருடனான அன்பின் காரணமாகவோ அல்லது தான் சரியாக கவனிக்கப் படவில்லையென்று நினைப்பதாலோ செய்யப்படும் பழிவாங்கலாக இருக்கலாம். தான் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்ற இந்த நினைப்பு உண்மையாகவும் இருக்கலாம், அல்லது தானே செய்து கொண்ட கற்பிதமாகவும் இருக்கலாம். சாதாரண சிறுவர்களும் கூட எப்போதாவது வீட்டுக்கு வெளியேயும் சிறு சிறு களவுகளில் ஈடுபடுவதுண்டு. அவர்கள் பழங்களையோ, உணவுப் பொருட்களையோ எடுக்கக்கூடும். அல்லது 'கடன் வாங்கிய'தையோ, 'கண்டெடுத்த'தையோ திருப்பிக் கொடுக்காமல் இருக்கக்கூடும். கசெல் (Gesell) அவர்களின் 'குழந்தைகளின் நடத்தை' என்ற நூலில் வரும். சக வேலையாட்களான பிரான்சிசும் லூயிசும் இப்படிக் கூறுகின்றார்கள்:

'ஐந்து வயதில் அரை டொலரை விட சில்லறைகளையே குழந்தை அதிகம் விரும்பும். ஆறுவயதில் அது அழகான பொருள்களாற் கவரப்படும். எல்லோர் முன்னிலையிலும்



அது அவற்றைத் தனக்காக எடுத்துக் கொள்ளும். எடுத்ததைப் பற்றி யாராவது குறைகூறினால், அது தான் எடுக்கவில்லையென்று சாதிக்கும். ஏழு வயதில் அதன் ஆர்வங்கள் பென்சில், இறேசர் என்பவற்றின் மீது அதிகமாக இருக்கும். முடிந்தளவிற்கு - தனது கைக்குக் கிடைக்கக் கூடியளவுக்கு அதிகமாக அவற்றை வைத்திருக்க விரும்பும். எட்டு வயதில் வீட்டின் ஏதாவது மூலையிலிருக்கும் சில்லறைக்காசு, அதன் மனத்திலும் கைகளிலும் துருதுருப்பை ஏற்படுத்தும். ஏனென்றால் இப்போது தான் அது பணத்தைப் பற்றியும் அதன் மூலம் எதையெல்லாம் வாங்கலாம் என்று அறியத் தொடங்குகிறது... களவு பிடிபட்டுவிட்டால் அது தண்டிக்கப்படுகிறது. அப்படித் தண்டிக்கப்படும் போது அது 'நான் அப்பிடி நினைக்கவில்லை' என்று கூறி தன்னைத்தானே சரிப்படுத்திக் கொள்கிறது. தான் இனிமேல் ஒரு போதும் இவ்வாறு செய்யமாட்டேன் என்று அடித்துக் கூறுகிறது. ஆனால் மறுதினம் அல்லது போனால் இன்னொரு தினம் இன்னொரு களவு."

எப்படியோ இத்தகைய நடத்தை ஒரு மாறுதல் கால நடவடிக்கையே ஆகும். அத்துடன் அது ஒரு சிறிய காலத்துக்கு மட்டுமே நீடிக்கும் ஒரு நடவடிக்கையும் ஆகும். பிள்ளை வளர வளர அது ஒவ்வொருவருக்கும் பொருட்களை சொந்தமாக வைத்திருக்கும் உரிமை இருப்பது பற்றி அறியத் தொடங்குகிறது. அத்துடன் அவ்வுரிமையை மதிக்கவும் பழகிக் கொள்கிறது.

## திடீர்க் காயங்கள்

திடீரென நடைபெறுகின்ற மாறுதல்கள் அவர்களது ஆளுமையில் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் அமையாவிட்டாலும் கூட பலத்த அறிகுறிகளை அவர்களிடமிருந்து வெளிப்படுத்துகின்றன. ஒரு குழந்தை வீடு தீப்பிடிக்கும் போதோ, ஒரு கார் விபத்தின் போதோ அல்லது தெரிந்த ஒருவரின் மரணத்தின் போதோ மட்டுமீறிய பதகளிப்பைக் காட்டலாம். இதனால் அது விசித்திரமான அறிகுறிகளை வெளிப்படுத்தக்கூடும். இவற்றுக்கு உடனடியாக சரியான வைத்தியம் அவசியம். ஒரு திடீர் அழிவு காரணமாக ஏற்படும் பதகளிப்பானது புரிந்துணர்வு கொண்ட பெரியவர் ஒருவர் அருகில் இருப்பதன் மூலமாக இல்லாமல் செய்யப்படலாம். அப்போது குழந்தை அச்சம்பவத்தையும், நினைவுகளையும் தனது விளையாட்டுப் பொருட்களுடன் சேர்த்து சொற்களால் மீள நிகழ்த்திக் காட்டக் கூடியதாக இருக்கும்.

அன்னா ஃபிராய்ட் 'போர்க்காலக் குழந்தைகள்' என்ற தமது புத்தகத்தில், லண்டனில் நடந்த குண்டுவீச்சின் போது குழந்தைகளும் பெரியவர்களும் தமது எதிர்வினைகளைக் காட்டிய விதத்தின் வேறுபாடுகளைப் பற்றிக் கூறுகிறார். குண்டு வீச்சுக்குப் பிறகு பெரியவர்கள் தமது அனுபவத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வதற்கு உந்தப்பட்டார்கள். இதே அனுபங்களுடன் இருந்த சிறுவர்களோ மிகவும் அரிதாகவே இதைப் பற்றிப் பேசினார்கள். அவர்களது அச்சமும், பரபரப்பும் அவர்களது விளையாட்டுக்கள் மூலமாக வெளிப்பட்டன. அவர்கள் தாம் கட்டிய வீடுகளின் மீது குண்டுகளைப் போட்டார்கள். அவர்களது விளையாட்டுக்களில் சைரன்கள் ஊதின, தீப்பிடித்து எரிந்தது. அம்புலன்ஸ் வண்டிகள் காயப்பட்டவர்களை ஏற்றிச் சென்றது. கிட்டத்தட்ட ஒருவார காலத்திற்கு அதிர்ச்சியும் பயங்கரமும் கலந்த உணர்வுகளுடன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடினார்கள். இவ்வாறான குறியீட்டு ரீதியிலான அவர்களது நீண்ட நாள் விளையாட்டுக்குப் பிறகு தான் அவர்கள் அவற்றைப் பற்றிப் பயமோ பரபரப்போ இன்றிப் பேசத் தொடங்கினார்கள்.

மிகவும் அவசியமான உதவி தேவைப்படும் இந்த நேரத்தில், உளவியற் சிகிச்சையானது, பொருத்தப்பாடான ஒழுங்கமைப்பையும், பொருத்தமான பொருட்களையும், அனுதாபத்துடன் செயற்படவல்ல ஒரு வளர்ந்தவரையும் வழங்குகிறது. சிகிச்சையாளர் குழந்தையை ஆறுதல் பெறச் செய்கிறார். விளையாட்டுக்கள் மற்றும் சொற்களின் மூலமாக அந்த அச்சமூட்டும் சம்பவத்தை குழந்தைகள் இயல்பாக தம்முள் செரித்துக் கொள்ளவும் பதகளிப்பு அற்றவர்களாக மாறவும் உதவுகிறார்.

## வகைமாதிரியற்ற குழந்தை

ஒரு குழந்தை நம்பமுடியாத இயல்புகளை வெளிப்படுத்துகிறதாயின், அப்போது குழந்தை உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறதா என்று பரீட்சித்துப் பார்ப்பதற்கான நிபுணத்துவ கலந்தாலோசிப்பு அவசியமாகும். மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட குழந்தை மற்றக் குழந்தைகளிடமிருந்து பளிச்செனத் தெரியும் விதத்தில் மாறுபட்டிருக்கும். அது முற்றாகப் பின்வாங்கும் இயல்புடையதாகவும், தன்னைச் சுற்றி கவசமிட்டுக் கொண்டதாகவும் இருக்கும். அது தனது சொந்த வீட்டிலேயே ஒரு அந்நியரைப் போல் நடந்து கொண்டிருக்கும். அது தான் ஒரு விடயத்திற்காக யாரையும் அணுகாமல் தன்னை யாராவது அணுகினால் கூட கோபத்துக்கோ, நட்புக்கோ எந்த வித்தியாசமும் காட்டாததாக இருக்கும். அதனுடைய கவனமற்று இருத்தலில் எந்த மாற்றமும் இருக்காது. எதையும் ஆர்வத்துடன் கவனிக்காது. சந்தோசத்தில் வெறும் புன்னகையைக் கூட காட்டாமல் இருக்கும். தனது துயரம் குறித்து ஒரு வித வெளிப்பாடுகளையும் அது வெளிப்படுத்தாது.

தாயாரிடமிருந்து பிரிக்கப்படும் போது அது உணர்ச்சி அற்றதாக தனது கையைப் பிடித்துக் கொண்டு செல்பவரோடு அவர் யாராக இருப்பினும் அமைதியாகப் பின் தொடரும். அல்லது எல்லைமீறிய அச்சதுடன் தாயாரைக் கட்டிக் கொள்ளும். தாயாரிடமிருந்து பிரிப்பதை என்னவோ கொல்லக் கொண்டு போவதைப் போல அது தனது அச்சத்தை வெளிக்காட்டும். மற்றச் சிறுவர்களும் அழக்கூடும். ஆனால் அந்த அழுகை தட்டிக் கொடுத்து அணைக்கும் போது குறைந்து விடும். வகைமாதிரியற்ற குழந்தையின் அழுகை கட்டுப்படுத்த முடியாததாக வித்தியாசமான அணுகுமுறைகளால் அது பாதிப்படையாததாக இருக்கும்.

வகைமாதிரியற்ற குழந்தை தன்னைச் சூழவுள்ள உலகம் குறித்து எந்த ஞாபகமும் அற்றதாக இருக்கும். அது ஒரு குறிப்பிட்ட நிலையிலேயே நீண்ட நேரத்திற்கு தொடர்ந்தும் இருக்கும். அல்லது முன்னும் பின்னுமாக கதிரையில் ஆடிக் கொண்டிருக்கும். அதன் பிரதான கவனமானது அதன் உடல் பற்றியதாகவே இருக்கும். எத்தகைய வெட்கத்தையும் காட்டாமல் அது பலர் முன்னிலையில் சலம் விடலாம். கைமைதுனம் செய்யலாம். இவற்றால் அது எந்தவிதமான தர்மசங்கடத்திற்கும்



உள்ளாவதில்லை. அது தனது மூக்குச் சளியை சாப்பிடவோ, தன் மீதோ பிறர் மீதோ அழுக்கைப் பூசிக் கொள்ளவோ கூடும். அது சாப்பிடக்கூடிய, சாப்பிடத்தகாத பொருட்கள் என்ற வேறுபாட்டைக் காண முடியாமல் இருக்கும். எந்த வேறுபாடும் இன்றி எல்லாவற்றையும் வாயினுள் போடும். அது மண்ணை வாரிச் சாப்பிடக்கூடும். அல்லது குப்பைகளை அள்ளிவாயில் போட்டுக் கொள்ளக்கூடும். மற்றைய சிறுவர்களும் சோக்கை, களியை வாயிற் போட்டு பரீட்சித்துப் பார்ப்பதுண்டு. ஆனால் அவர்கள் அதைத் தொடர்ந்து செய்வதில்லை.

இத்தகைய வகைமாதிரியற்ற குழந்தை ஒரே வேலையை திரும்பத் திரும்ப பல மணி நேரங்களாகச் செய்து கொண்டிருக்கக் கூடும். அது ஒரு துண்டு நூலைத் திரும்பத் திரும்ப சுற்றிக் கொண்டோ, மேசை இழுப்பறையைத் திரும்பத் திரும்ப திறந்து மூடிக் கொண்டோ, தனது தலைமுடியை சுருட்டிக்கொண்டோ தனது காதைப் பிடித்து இழுத்துக் கொண்டோ அல்லது சுவர் வெடிப்பொன்றினுள் தனது விரலைத் தொடர்ச்சியாகப் புகுத்திக் கொண்டோ இருக்கும்.

ஒரே மாதியான அலுப்பூட்டும் வேலைகளில் அது ஆர்வத்துடன் ஈடுபடும். ஒரு சில்லைச் சுற்றிக் கொண்டும், ஆளியை (Switch) திரும்பத் திரும்பப் போடுவதும், நிறுத்துவதுமாகச் செய்து கொண்டிருக்கும். அல்லது கதவின் கைப்பிடியைப் பின்னுக்கும், முன்னுக்குமாக ஆட்டிக் கொண்டிருக்கும். அது 'பில்டிங் புளொக்குகள்' (Building blocks) சிறு விதை மணிகள் என்பவற்றுடன் விளையாடுவதை அதிகம் விரும்பும். அத்துடன் அவை ஒரே ஒழுங்கிலும் வடிவிலும் திருத்தமாக அடுக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் தீவிரமாக இருக்கும். அதற்குத் தன்னுடைய விளையாட்டுப் பொருட்கள் எங்கே இருக்கின்றன என்பது குறித்து ஒரு அசாதாரண ஞாபகசக்தி இருக்கும். அவை தொலைந்து போனாலோ, உடைந்தாலோ அது மிகவும் அதிமான கவலைக்குள்ளாகும். பொருட்கள் பழைய நிலைக்குக் கொண்டு வரப்படும் போது அதன் அழுகையும் வெறியும் திடீரென்று நின்று விடும்.

ஒரு வகை மாதிரியற்ற குழந்தை தன் உடல் ரீதியான உபாதைகட்கு புது விதமான எதிர்வினைகள வெளிப்படுத்துகிறது. அது எந்தவிதமான முறைப்பாடும் செய்யாமல் தனக்குத் தானே மிகவும் மோசமான காயங்களை ஏற்படுத்தும். தனது தலையை சுவருடன் மோதியோ, தனது விரலை கதவிடுக்குக்குள் வைத்து நெரித்தோ அல்லது சூடான 'ரேடியேற்றர்' மீது இருந்தோ அல்லது இரத்தம் வரும்வரை தனது கையை வெட்டியோ, தன் எதிர்வினையைக் காட்டுகிறது. தனது உபாதைகளுக்கான அதன் ஒரே எதிர்வினை ஒரு விசித்திரமான பல்லிளிப்பாகவோ அல்லது வெற்றுச் சிரிப்பாகவோ இருக்கும். அதன் மீது அனுதாபம் காட்ட எடுக்கும் முயற்சிகட்கும் அது எந்த விதமான கணிப்பையும் வழங்க மாட்டாது.

இக் குழந்தை பேசப் பழகிக் கொள்கின்ற போதும் அது மற்றவர்களுடன் பேசுவதில் ஆர்வமற்றிருக்கிறது. பேசும்போதும் கூட சம்பந்தா சம்பந்தமற்ற விதத்தில் நிலைமைக்குச் சற்றும் பொருத்தமில்லாததாக சொற்றொடர்களைப் பாவிக்கும். நேரடியாகக் கேள்வி கேட்கப்படும் போது குழந்தை கிளிப்பிள்ளையைப் போல கேள்வியைத் திரும்பத் திரும்பச் சொல்வதாகவே இருக்கும். அல்லது அந்தப் பேச்சுக்களையும் பேசாததாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவித தூண்டுதல்களையோ எந்த எதிர்வினையையோ வெளிப்படுத்தாததாக இருக்கக்கூடும்.

## நிபுணத்துவ உதவி மூலம் உடனடிப் பயன்பெறக்கூடிய குழந்தைகள்

### மட்டுமீறிய நல்லதனமாக இருத்தல்

சில குழந்தைகள் யதார்த்த நிலைமைக்கு அப்பாற்பட்டு மட்டுமீறிய நல்ல பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவர்கள் கீழ்ப்பணிவுள்ளவர்களாக, சொன்னபடி கேட்பவர்களாக திருத்தமானவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தாயின் உடல் நலத்தைப் பற்றி, சின்னச் சகோதரியைக் கவனிப்பது பற்றிக் கவனம் செலுத்துகிறார்கள். அவர்களது முழு வாழ்க்கையும் பெற்றோரைச் சந்தோசப்படுத்துவதாகவே அமைந்திருக்கிறது. அவர்கள் தம்பிராயப் பிள்ளைகளுடன் விளையாடுவதில் சொற்பளவுக்கே சக்தியைச் செலவழிக்கிறார்கள்.

பாடசாலையிலும், அயலிலும் அவர்கள் தமது நல்லபிள்ளைக் குணத்தைத் தொடர்கிறார்கள். அவர்கள் பணிவும் நற்பண்பும் வாய்ந்தவர்களாகவும், தாம் பயப்படும் ஆசிரியரை அமைதிப்படுத்துவதில் அதிக நேரத்தையும், சக்தியையும் செலவிடுபவர்களாகவும் உள்ளனர். அவர்கள் ஆசிரியருக்கு அப்பிள்களைக் கொண்டு வந்து தரவோ, அவருக்காகப் படங்களை வரையவோ, கரும்பலகையைத் தானே துப்புரவு செய்யவோ செய்கின்றனர். இவர்கள் முதல் நாளிலிருந்து தமது ஆசிரியர் எவ்வளவு நல்லவர் என்றும், அவர் மீது தங்களுக்கு எவ்வளவு விருப்பம் என்றும் கூறிக் கொள்ளக்கூடும். இந்தப் பாராட்டுரைகளும், அன்புப் பிரகடனங்களும் பெறுமதி மிக்கவையாகக் கருதப்பட முடியாது. இத்தகைய சிறுவர்கள் இதே சொற்களை ஒரு அன்னியருக்கும் சில வேளைகளில் தமது வகுப்பில் அதிகாரம் பண்ணும் ஒருவருக்கும் சொல்லக் கூடும். இத்தகைய இனிய வார்த்தைகளை அவர்கள் வெளிப்படுத்துவது, அவர்கள் தாம் கொண்டிருக்கும் பகைமை உணர்வு பற்றி எவ்வளவு தூரம் பயமடைந்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தும் ஒரு வடிவமாக இருக்கக் கூடும்.

இவ்வாறான குழந்தைகளிடம் அடிக்கடி அவதானிக்கப்படக்கூடிய ஒரு அறிகுறி தான் தொடர்ச்சியான மனச்சோர்வு ஆகும். பல 'நல்லபிள்ளை' முகமூடிக்குப் பின்னால் பல 'மோசமான' தாக்கங்கள் மறைக்கப்பட்டிருக்கும். தமது பகைமை உணர்வுத் தாக்கத்தை ஒரு நற்பண்புள்ள நடத்தையாக மாற்றியமைப்பதற்குத் தேவையான பெருமளவான விழிப்புணர்வைக் கொண்டிருப்பதானது இந்தச் சிறுவர்களின் ஆற்றலையும், வாழ்க்கையையும் பெருமளவுக்கு விழுங்கி விடுகிறது. அவர்கள் களைப்பாகவும் தேய்வுற்றவர்களாகவும் இருப்பதில் ஆச்சரியமில்லை.

மருத்துவம் இத்தகைய நல்ல தனத்தை சீராக்கிச் சரிப்படுத்துவதில் பயனுள்ள பங்கை ஆற்றுகிறது. மருத்துவம் அவர்களது அடிமைத்தனப் போக்கை கைவிடச் செய்து, சாதாரண உறுதிப்பாட்டை ஏற்றுக் கொள்ளச் செய்கிறது அவதானிப்பின் மூலமாகவும் அனுபவத்தினூடாகவும் அவர்கள் பிறரின் நன்மதிப்பைப் பெறுவதற்காகவும் தன்னை



மறைத்துக் கொள்வதற்காகவும் முயல்வதற்கு எந்த அவசியமும் இல்லையென்று புரிந்து கொள்வார்கள். அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தமது உணர்வுத் தாக்கங்களைக் கண்டு கொள்ளவும், தமது சொந்த உணர்வுகளை அறிந்து கொள்ளவும் தமது அடையாளத்தை நிறுவவும் புரிந்து கொள்வர்.

### முதிர்ச்சியடையாச் சிறுவர்கள்

இந்தத் தலைப்பின் கீழ்வரும் சிறுவர்கள் குழந்தைகளைப் போல் அன்பு காட்டப்பட வேண்டியவர்களாக தமக்கென சொந்த விருப்பும் தேவையும் கொண்ட வளர்ந்து வரும் தனி நபர்களாக அல்லாமல் எப்போதும் தட்டிக் கொடுக்கப்பட வேண்டியவர்களாக உள்ள சிறுவர்களாவர். இத்தகைய மட்டுமீறிய செல்லமும், அதிகளவு பாதுகாப்பும் கொடுக்கப்பட்ட சிறுவர்கள் தமது குடும்ப எல்லைக்கப்பால் யதார்த்த நிலைமைகளை ஏற்றுக் கொள்ளத் தயாரற்று இருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களது தேவைகளையும், உணர்வுகளையும் விளங்கிக் கொள்ளும் வாய்ப்புக் குறைந்தவர்களாக உள்ளனர். அத்துடன் அவர்கள் தமது உடைமைகளைப் பகிர்ந்து கொள்ள முடியாதவர்களாகவும், திருப்தி காண்பதற்கு நீண்ட நேரம் எடுப்பவர்களாயும் இருக்கின்றனர்.

அவர்கள் தாம் விரும்புவதை விரும்பும் நேரத்திலேயே பெற்றுக் கொள்ள விரும்புவர்களாக பழுதாக்கப்பட்டவர்களாக இருப்பர். அவர்கள் தமது பெற்றோர், சகோதரர்கள், சக தோழர்கள் ஆகியோரில் பெரிதும் தங்கியிருப்பவர்களாகவும், தம்மீதான உத்தரவு என்பவற்றிற்கான தொடர்ச்சியான கோரிக்கைகளின் மூலம் மற்றவர்களை பெரிதும் இடைஞ்சல் படுத்துபவர்களாயும் இருப்பர். அவர்கள் தாம் முயற்சி செய்வதற்குப் பதிலாக, தமக்கு எல்லாம் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பர். தமக்கு உடை அணிந்து விடப்பட வேண்டும் என்றோ, தமக்காக மற்றவர்கள் காத்திருக்க வேண்டும் என்றோ, தமக்கு ஊட்டிவிட வேண்டும் என்றோ அவர்கள் எதிர்பார்க்கக் கூடும். இவ்வாறு தொடர்ந்தும் 'எடுக்குக் குழந்தை'களாக இருப்பவர்கள் முரண்பாடுகளுக்கு உள்ளாகிறார்கள். அவர்கள் வீட்டில் மனச்சுமையையும் பாடசாலையில் குழப்பத்தையும், அயலில் சண்டையையும் ஏற்படுத்துபவர்களாக உள்ளனர்.

கவனமாக தெரிவு செய்யப்பட்ட குழுக்களின் வடிவில் இச்சிறுவர்களுக்கு மனோ வைத்தியம் செய்யப்படும் போது குறிப்பிடத்தக்க பயன் கிடைக்கிறது. இந்தக் குழுக்கள் ஊக்குவிப்பையும், வளர்ந்து வருவோருக்கான ஆதரவையும் வழங்குவதுடன், அவர்களுக்குப் புதிய நடத்தை முறையைப் பரீட்சித்துப் பார்ப்பதற்குரிய பாதுகாப்பான ஒரு இடத்தையும் வழங்குகின்றன. இந்தக் குழுவில், அவர்கள் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத தமது பழக்க வழக்கங்கள் எவை, எத்தகைய பழக்கங்கள் தம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்றன, இதன் விளைவாக, தமது சக வயதாளிகளுடைய தரத்திற்குத் தம்மைச் சரிசெய்து கொள்ள அவர்கள் முயற்சி எடுக்கிறார்கள். இந்தக் குழுவில் அவர்கள் பொருட்களைப் பகிர்ந்து கொள்ளல், போன்ற முக்கியமான நுட்பங்களைப் படிக்கிறார்கள். சண்டையிடவும், சமாதானமடையவும், தமது தேவைக்காகப் பேரம் பேசவும், சமரசம் செய்யவும் பழகிக் கொள்கிறார்கள். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பங்கள் இத்தகைய சிறுவர்களை தமது சகபாடிகளுடன் சம தளத்தில் நின்று எதிர்கொள்ளத்தக்க விதத்தில் தயார் செய்கின்றன.

## ஒதுங்கிப்போகும் சிறுவர்கள்

இவர்களை வெட்கம், அச்சம் கீழ்ப்படிவு, ஒதுங்கிப் போதல், தனித்துப் போதல், அமைதி, கீழ்ப்பணிவு என்பவற்றைக் கொண்டவர்கள் என்று சொல்லலாம். அவர்களுக்குத் தமது சாதாரணமான உணர்வுகளையோ, அன்பையோ வெளிப்படுத்துவதில் சிரமம் தெரிகிறது. அவர்களுக்கு சொற்ப நண்பர்களே இருப்பர். அத்துடன் சமூக அல்லது கூட்டு விளையாட்டுக்களையும் விளையாடுதலையும் தவிர்த்துக் கொள்வர். அவர்கள் எப்போதும் மற்றவர்களே முதலில் நட்பைத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புவார்கள். அப்படித் தெரிவித்த போதும் அவர்கள் கண்டும் காணாதது போல இருப்பர்.

ஒதுங்கிப் போகும் சிறுவர்கள், பாடசாலையில் ஆசிரியர்கள் அல்லது விளையாட்டுத் திடலில் உள்ள மாணவர்கள் ஆகியோருடன் உரையாடுவதில் சிரமப்படுவர். அவர்கள், ஒரு கேள்விக்கான பதிலை உரத்துக் கூறுமாறு கேட்கப்படும் போது தாம் அவமானப் படுத்தப்பட்டதாக நினைக்கின்றனர். அவர்கள் 'ஓம்' அல்லது 'இல்லை' என்ற வார்த்தைகளுடன் மட்டும் தமது கருத்துப் பரிமாறலைச் செய்யக்கூடும். அல்லது அதையும் சொல்லாமல் விடலாம். அவர்கள் சும்மா வானத்தை எந்த நோக்கமும் அற்றவர்களாக வெறித்துப் பார்த்தபடி அமைதியாக இருப்பதன் மூலம் நீண்ட நேரத்தைச் செலவு செய்வர். எந்த நோக்கமும் இன்றி அலைந்து திரிவர். அவர்கள் விளையாடும் போது அவ்விளையாட்டில் சமூகத்தில் கொடுத்து வாங்க அவசியமில்லாத அமைதியான ஒரு பங்கைத் தமக்கு தெரிவு செய்து கொள்வர். அவர்களுக்கு சமூகத் தொடர்புகள் பலவந்தமாக ஏற்படுத்தப்படும் போது அவர்களது பதகளிப்பு, பயந்து அரற்றும் அளவுக்கு வெளிப்படுகின்றது.

இவ்வாறான ஒதுங்கிப்போகும் சிறுவர்கள், மனோவைத்தியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும். நட்புணர்வுள்ள பெரியவர்கள், அதிகளவு மகிழ்வூட்டும் வசீகரமான பொருட்கள், சமூகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட குழுக்கள் போன்றவைகளுடனான தொடர்பு அவர்கள் தமது கூட்டுக்குள்ளேயே அடங்கியிருந்து விடுவதை இயலாமல் செய்து விடுகின்றன. இந்த ஒழுங்குமுறை தனித்துப் போவதிலிருந்து மீண்டு வருதலைத் துரிதப்படுத்துவதுடன் விளையாடுவதிலும் பிற சிறுவர்களுடன் உரையாடுவதிலும் சுதந்திரத்தைக் கொண்டிருக்கவும் உதவுகின்றது.

## பயங்கொண்ட சிறுவர்கள்

அரைத்த இறைச்சியும் முட்டையும் உணவில் சேர்ந்தே உள்ளது போல சிறுவர்களுடன் பயமும் சேர்ந்தே இருக்கின்றது. 90% மான சிறுவர்களிடம் ஒருசில குறிப்பிட்ட பயங்கள் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது அவதானிக்கப்பட்டுள்ளதாக ஆய்வொன்று கூறுகிறது. 3 வயதுச் சிறுவர்கட்குப் பிரதானமாக நாயும், நான்கு வயதுச் சிறுவர்கட்கு



இருட்டும் பிரதானமாகப் பயமூட்டுபவையாக உள்ளன. இத்தகைய பயங்கள் வயது வரவரக் குறைந்து, 8 வயதாகும் போது இல்லாமற் போய் விடுகின்றன. சாதாரண சிறுவர்களிடம் அவதானிக்கப்பட்ட பிற பயங்கள் - பூமியதிர்ச்சி, ஆட்கடத்தல், வேகமாக வாகனமோட்டுதல், பாம்புகள், உயரமான இடங்கள் போன்றவற்றால் வருபவையாகும். சில சிறுவர்கள் ஓரளவான அச்சத்துக்குள்ளாகினர் என்ற போதும், பெற்றோர்களில் ஒருவர் அருகிலிருக்கும்போது அவ்வளவாக நிலைமைகளிலிருந்து பின்வாங்கி விடவில்லை. ஏனையோர்கள் பெருமளவு அசௌகரியத்தைக் காட்டினர். இரவு முழுவதும் வெளிச்சம் போடப்பட்டிருப்பதை அவர்கள் விரும்பினர். கொள்ளை பற்றிய கதைகள் பேசப்படும் போதோ அல்லது நெருப்பு அணைக்கும் எஞ்சின்கள் போகும் போதோ அவர்கள் மனச்சுமையை வெளிப்படுத்தினர்.

சில பயந்த சிறுவர்களுக்கு நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது. இப்படியானவர்கள் தொடர்ச்சியான, செறிவான பயத்துக்கு உள்ளாகுபவர்கள் ஆவர். அவர்கள் தம் எதிர்வினையினை வெளிப்படுத்தும் செறிவினை ஒரு சமிக்ஞையாகக் கொண்டு நாம் இதைக் கண்டு கொள்ளலாம். அவர்கள் தமது பதகளிப்பால், செயலற்றவர்களாகவும், எதையும் செய்யும் சக்தியற்றவர்களாயும் - அவர்களது பயங்கள் கொஞ்சமும் தர்க்க ரீதியற்றதாகினும் கூட - இருப்பார்கள். அவர்கள் ஆகாயம் கீழே விழுந்து விடும், மின்னல் எமது வீட்டைத் தாக்கிவிடும், எமது முழுக் குடும்பமும் வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்பட்டு விடும் என்பன போன்ற பயங்களைக் கொண்டிருக்கலாம். அவர்களது பயத்துக்குரிய விடயங்களுக்கு ஒரு எல்லையே இருக்காது.

சில சிறுவர்கள் மிகவும் மட்டுமீறிய சத்தத்துடன் காணப்படுவார்கள். அவர்களுக்கு முழு உலகமுமே அழுக்கானதாக இருக்கும். அவர்கள் தாம் அழுக்கடையாமல் இருப்பதற்காக மிகவும் அவதானமாக இருப்பார்கள். தம்முடைய கைகளிலோ, உடையிலோ ஒது துளி தூசு கூடப் படுவதை அவர்கள் பொறுக்கமாட்டார்கள். உடனடியாக அதைக் கழுவ முடியாவிட்டால் மனமுடைந்து போய்விடுகிறார்கள். இன்னும் சில சிறுவர்கள் சத்தத்திற்குப் பயப்படுகிறார்கள். உயரமான இடங்கள், புதிய மனிதர்கள், ஓடும்நீர், இருட்டு மூலைகள், சிறிய பூச்சிகள், பெரிய மிருகங்கள் என்பவற்றிற்கும் அவர்கள் பயப்படுகிறார்கள். அவர்கள் தமக்குப் பயமூட்டும் இடங்களையும் செயல்களையும் தவிர்ப்பதன் மூலமாக அவற்றால் வரக்கூடிய தமது பதகளிப்பிலிருந்து தப்பிவிட முயல்கிறார்கள். இதனால் அவர்கள் தண்ணீருக்கு அருகாகப் போவதையோ, ஏணியில் ஏறுவதையோ இருட்டறையில் இருப்பதையோ தவிர்க்கிறார்கள்.

இவர்களுக்கான மனோவைத்தியத்தின் போது, பயந்த குழந்தை தனது பயத்துடன் போராட வேண்டிய நிலைமையை உருவாக்கக்கூடிய விளையாட்டிலோ, செயற்பாட்டிலோ சில சிறுவர்கள் இறக்கிவிடப் படுகிறார்கள். அவர்கள் சத்தம் போடும் விளையாட்டுத் துவக்குகளால் சுடுகிறார்கள், விரல் பூச்சுக்களைப் பயன்படுத்துவார்கள். சேற்றை அள்ளித் தம் உடலை முழுவதுமாகப் பூசிக்கொள்கிறார்கள். இந்தச் சிறுவர்கள் குழு, பயந்த சிறுவர்களைத் தமது பயங்களிலிருந்து தப்பியோட முடியாத நிலைமைக்குத் தள்ளி விடுகிறது. வைத்தியர் பயந்த குழந்தைகளின் எதிர்வினைகளை அவை நடக்கும் போதே கண்டு கொண்டு அவற்றைக் குணப்படுத்த முயற்சி எடுப்பார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக்கு அதன் பயத்தை விளையாட்டாகவும், பேச்சாகவும் வெளிப்படுத்த உதவுவதன் மூலம் பயந்த குழந்தையின் மேலோட்டமான பயத்தால் ஏற்படும் பதகளிப்பைக் குறைக்க உதவுகின்றார்.

## பெண் தன்மையுள்ள பையன்கள்

தகப்பனற்ற குடும்பங்களில் வளர்ந்த அல்லது பெருமளவுக்கு பெண்கள் உள்ள குடும்பத்தில் ஒரே ஆண் குழந்தையாகப் பிறந்த ஆண் குழந்தைகளே பையன்களுக்கான நிபுணத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகளாக இருக்கின்றனர்.

குடும்பங்களில் அவர்கள் அடையாளங் காணக்கூடிய மாதிரிகள் பெரும்பாலும் ஆண்தன்மையற்வையாக இருக்கும் போது, பையன்கள் தவிர்க்க முடியாமற் பெண்களின் பாத்திரங்களை உள்வாங்கிக் கொள்கிறார்கள். எம்முடைய சமூக கலாசாரத்தில் பையன்களிடம் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்படுகின்ற முரட்டுத்தனம் அவர்களிடம் குறைவாக இருக்கலாம். அவர்கள் கடுமையான விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்குக் கூச்சப்படலாம். அல்லது பெண்பிள்ளைகளுடன் விளையாடுவதில் பெருமளவுக்குச் சௌகரியமாக உணரலாம். இந்தப் பையன்கள் பெரும்பாலும் மற்றைய சிறுவர்களிடமிருந்து முரட்டுத்தனமான பராமரிப்பையே எதிர்கொள்வர். அவர்கள் பட்டப்பெயர்களால் பழிக்கப்பட்டவர்களாக, உணர்வு ரீதியாகக் காயப்படுத்தப் பட்டவர்களாக, எதிர்காலத்தில் பூரணத்துவமற்ற பெரியவர்களாக வளர்பவர்களாக இருக்கின்றனர்.

இத்தகைய குழந்தைகட்கு நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது. அது அவர்களுக்கு சரியான இனங்கண்டு கொள்ள உதவுகிறது. அத்துடன் உறுதித்தன்மையை ஊக்குவிக்கவும், அவர்களது ஆளுமையில் ஆண்தன்மையை விருத்தி செய்யவும் அது உதவுகிறது.

## இழுப்பு வலியும் இயற்கைக்கு மாறான நடத்தையும்

சில சிறுவர்கள் பெற்றோருக்கு எரிச்சலூட்டக்கூடிய செயற்கையான செயல்களைத் தொடர்ச்சியாகச் செய்வார்கள். அவர்கள் ஓரக் கண்ணால் பார்ப்பார்கள், மூக்கை உறிஞ்சுவார்கள், திடீரென தலைகளை இழுத்துக் கொள்வார்கள், முகத்தைச் சுளிப்பார்கள், நகத்தைக் கடிப்பார்கள், செருமுவார்கள், கண்களைக் கசக்குவார்கள், மூக்கைத் தோண்டுவார்கள், விரல் சூப்புவார்கள் அல்லது இது போன்ற நடத்தைகளில் ஈடுபடுவார்கள். இத்தகைய செயற்பாடுகளும் நடத்தைகளும் தம்மை மற்றவர்கள் கவனிக்க வேண்டும் என்பதற்காக செய்யப்படுபவையாக இருக்கலாம். விரல்கள் ஒழுங்கற்றும், தோல்கள் எப்போதும் ஈரமாயும், நகங்கள் அடிவரைக்கும் கடிக்கப்பட்டும் அவர்கள் தோன்றுவர். அவர்களது நகம் கடிப்போ, மூக்குறிஞ்சலோ, செருமுதலோ ஒரு போதும் நிற்பதில்லை. இத்தகைய சிறுவர்களுக்கு உளவியல் கலந்தாலோசனையும், அவர்களுக்குரிய சிகிச்சைக்கு அவசியமானது என்ன என்பதைக் கண்டுபிடிப்பதற்காக தொடர்ச்சியான வைத்தியக் கவனிப்பும் அவசியமாகும்.



சாதாரண சிறுவர்கள் இது போன்ற செயல்களைச் செய்த போதும் அவை அவர்களிடம் தொடர்ச்சியாக இருப்பதில்லை. அவர்கள் தூக்கம் வரும் போதும், உணர்வுரீதியாக ஏதாவது தாக்கத்துக்குள்ளாகி இருக்கும் போதும் அல்லது அதிகமாகக் களைத்துப் போயிருக்கும் போதுமே இதைச் செய்வார்கள்.

## படுக்கையில் சலங்கழிதலும் மலங்கழிதலும்

நான்கு வயதுக்குப் பிறகும், 10 முதல் 15 வீதமான குழந்தைகள் படுக்கையில் சலங்கழிக்கின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களிற் சிலர் பகல் நேரத்திலும் இவ்வாறு செய்கின்றனர். இவர்களில் பெரும்பாலோருக்கு சலப்பையினைக் கட்டுப்படுத்தும் பழக்கம் இல்லாமல் இது இருந்திருக்கிறது. ஒரு சிலர் உடுப்பை மாற்றுவதே திரும்பவும் அதை நனைக்கத்தான் என்பது போல் நடந்து கொள்வார்கள்.

சலங்கழிதல் பொதுவாக உணர்ச்சி சம்பந்தமான சிக்கலின் வெளிப்பாடாகக் கொள்ளப்படுகிறது. ஐந்து வீதமான சிறுவர்களே சேதனக் காரணங்களுக்காக இவ்வாறு நடந்து கொள்கிறார்கள். (குழந்தையின் சிறுநீர் கழிப்பிற்கான காரணம் இதுவல்ல என்பதை உறுதிசெய்து கொள்ள ஒரு வைத்தியரை நாட முடியும்.)

சலங்கழிப்பது மட்டுமே குழந்தையின் உணர்ச்சி சார்ந்த சிக்கல் எவ்வளவு மட்டத்திலுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளப் போதுமானதல்ல. மிகச் சாதாரணமான உளவியற் சிக்கலுள்ள குழந்தைகளிடமும் கடுமையான சிக்கலுள்ள குழந்தைகளிடமும் இவ்வாறு நடந்திருக்கிறதை நாம் காணலாம். சிலவேளைகளில் இது சாதாரண உளவியல் மருத்துவம் மூலம் குணமாகிவிடும். சிலவேளைகளில் இதை நிறுத்துவதே கடினமாக இருக்கும்.

மலம்கழித்தலைப் பொருத்தவரை மூன்று வயதுக்குப் பிறகும் இது தொடருமாயின், வேறு சேதன காரணங்கள் எதுவும் இல்லையென ஒரு வைத்தியர் சொல்வாராயின், அது அனேகமாக உணர்ச்சிச் சிக்கல்களின் வெளிப்பாடாகவே கொள்ளப்படும். ஆரம்பப்பள்ளி மாணவர்களிடையே இது பொதுவாகக் காணப்படலாம். ஆனால் இது பாடசாலை மாணவர்களிடமும் வளர்ந்த சிறுவர்களிடமும் கூடக் காணப்படலாம். குழந்தைகளின் வயது கூடக் கூட பிரச்சினை சிக்கல் தரக் கூடியதாக அமைகிறது. பொதுவாக பெற்றோருடைய அதிகாரத்துவத்தின் காரணமாகவும், குறிப்பாக கண்டிப்பாக மலம் கழிக்கும் பழக்கவழக்கம் போதிக்கப்படுவதன் காரணமாகவும் ஏற்படும் எதிர்ப்புணர்வின் ஒரு வெளிப்பாடாகவே இந்த மலம் கழியும் பழக்கம் கொள்ளப்படுகிறது. எனவே குழந்தையைப் பழித்தலோ, ஏசுதலோ நல்லதல்ல. இவை மேலும் அதிகமான முரண்பாடுகளையும் இறுக்கமான எதிர்ப்புக்களையுமே ஏற்படுத்தும்.

கட்டுப்பாடற்ற மலங்கழிதலும், சலங்கழிதலும் மிகச்சாதாரண சிக்கல்களின் வெளிப்பாடாக இருந்தாலும் கூட நிபுணத்துவ உதவியை நாடுவது பயனுள்ளதாகும். எவ்வாறாயினும் குழந்தைக்கும், பெற்றோருக்கும் இடையிலான நல்லுறவு வளர்க்கப்படுவது இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. நிபுணத்துவ உதவி தேவைப்படும் பெற்றோர்கள்

## பெற்றோரின் நடத்தையும் குழந்தைகளின் இயல்பும்

ஒரு குழந்தையின் ஆளுமையானது அதன் குடும்பத்தில் நிலவும் உணர்வு பூர்வமான சூழ்நிலையின் தம்மையைப் பொறுத்து மாறுபடுகிறது. இந்த உண்மைக்கு வேறு சாட்சிகள் எதுவும் தேவையில்லை என்ற போதும் மிகவும் அண்மைக் காலத்திலேயே குழந்தையின் நடவடிக்கைகட்கும் பெற்றோரின் நடவடிக்கைகட்கும் இடையில் உறவு இருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத் தொடங்கியிருக்கிறோம்.சில பெற்றோரின் நடவடிக்கைகள் வெளிப்படையானவையாகவும் ஒளிவு மறைவற்றவையுமாக இருக்கின்றன. அவை அவதானிக்கப்படக் கூடியவையாகவும் இருக்கும். வேறு சில பெற்றோரின் நடவடிக்கைகள் ஒளிவு மறைவானவையாகவும், விளங்கிக் கொள்ள முடியாதவையாகவும் இருக்கும். இவை ஊகித்தறியப்பட வேண்டியவையாகவும் இவற்றின் தாக்கங்கள் ஒரு கருதுகோளாக கொள்ளப்பட வேண்டியதாகவும் இருக்க முடியும்.



மட்டுமீறி உணர்ச்சி வயப்படல், மேலதிமான பாதுகாப்பு உணர்வு, குழந்தைத்தனம், குடிபோதை, தவறான பாலியல் பழக்கங்கள், எதையும் நிராகரிக்கும் இயல்பு, அளவுக்கு மீறிய அக்கறை காட்டல் என்பவற்றை விரும்பத்தகாத நடத்தையுள்ள பெற்றோரின் இயல்புகளில் சில என்று கூறலாம்.

## மட்டுமீறி உணர்ச்சி வயப்படும் பெற்றோர்

**தனிப்பட்ட மனப்பாங்கும், பகிரங்க நடத்தையும்:**
மட்டுமீறிய உணர்ச்சி வயப்படும் பெற்றோரின் குழந்தைகளை இலகுவில் அடையாளம் காணலாம். அவர்களின் சொற்கள் எப்போதும் கேட்கப்படுவதாகவும் செயல்கள் எப்போதும் காணப்படுவதாகவும் இருக்கும். தமது சிறுவயதிலிருந்தே, திட்டினால் தான் தாம் சொல்வதைப் பிறர் கேட்பார்கள் என்றும், தாம் வேகமாகப் பேசினால் தான் இடையூறின்றிப் பேச முடியும் என்றும் தமது அனுபவத்தினூடாகப் படித்து வந்திருப்பர். பெற்றோர்களின் கொந்தளிப்பைத்தான் அவர்கள் உண்மையில் பிரதிபலிக்கிறார்கள். இந்த விடயத்தை நாம் அவர்கட்குச் சுட்டிக் காட்டினாலோ அவர்கள் அதை ஒரு வகைத் தேசிய உணர்வுடனான பெருமிதத்துடன் ஒப்புக் கொள்கிறார்கள். 'நான் யார் தெரியுமா? நான் ஒரு செந்தலையன்' என்றோ அல்லது 'இது எனது ஐரிஸ் பழக்கம்' என்றோ தம்மை அவர்கள் பொதுமைப்படுத்திக் கொள்வார்கள்.

அவர்கள் தமது சொந்த கலாசார சமூக மட்டத்துள் வாழ்ந்து கொண்டிருக்கும் வரை அவ்வளவு பிரச்சினைக்குரியவர்களாக இருக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் அதற்கும் அப்பாற் சென்று பரந்த பிற சமூகங்களுடன் பழக ஆரம்பிக்கும் போது மிகவும் எரிச்சலூட்டுபவர்களாக ஆகிவிடுகின்றனர். இவர்கள் எதற்கெடுத்தாலும் விவாதம் செய்பவர்களாகவும், நீண்ட நேரத்தை உறிஞ்சுபவர்களாகவும் இருப்பார்கள். அதிகம் பேசுகின்ற போதும், இவர்கள் பிறர் சொல்வதைக் கேட்பது குறைவாகவே இருக்கும். ஒருவகை நாடக பாணியிலான இயல்புகளைக் கொண்டிருக்கும் தமது இந்தச் செயல்கள் பிறருக்கு எவ்வளவு துாரம் எரிச்சலூட்டுவதாக இருக்கிறது என்பது குறித்த பிரக்ஞை இவர்களிடம் இருப்பதில்லை.

இப்படியான பெற்றோர்களை நாம் மனோரீதியாக குழப்பமடைந்தவர்களாகக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் இவர்கள் சமூக ரீதியில் குழம்பியிருப்பவர்கள். இவர்களது தனிப்பட்ட மனப்பாங்கையும் பகிரங்க நடத்தைகளையும் திருத்திக்கொள்வதற்கு நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது.

## அதிகபட்ச பாதுகாப்புணர்வுடைய பெற்றோர்கள்

**சிறிய சிறிய விடயங்களில் கூட கடுமையாகக் கவனம் செலுத்துதல்:**
அதிகபட்ச பாதுகாப்புணர்வுடமை என்பது ஒரு குழந்தை செய்யும் செயலிலுள்ள சிறிய சிறிய அம்சங்களைக் கூட கடுமையாகக் கவனிப்பது ஆகும். இவர்கள் குழந்தையின் வாழ்க்கை பற்றி ஓய்வின்றிக் கவலைப்படுவார்கள். சாதாரண பெற்றோருக்கு வழமையானதாகத் தோன்றும் ஒரு செயல், மட்டுமீறிய பாதுகாப்புணர்வுடைய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்க்கு வாழ்வுக்கும், சாவுக்கும் இடையிலான ஒரு போராட்டமாகத் தான் இருக்கும். இந்தத்தாய் எஞ்ஜின் ஓடுவதைப் பார்ப்பதற்காக அதன் மூடியை திறந்து விட்டபடி காரை ஓட்டுகின்ற ஒரு சாரதியைப் போன்றவராவர்.

இந்தத்தாய் ஒரு நாளைக்கு பல தடவை தனது குழந்தை சுவாசிக்கிறதா என்று தொட்டுப் பார்ப்பார். அல்லது அதற்கு வழங்கப்படும் உணவை நிறுத்தப் பார்ப்பார்: அதன் வயிற்றின் அசைவுகளை அவதானித்துக் கொண்டிப்பார்: அல்லது குழந்தையின் தூக்கம் பற்றிக் கவலைப்படுவார். குழந்தை எழுந்து நின்றால், அது விழுந்து விடுமோ என்று கவலைப்படுவார்: அது ஓடினால், விழுந்து காயப்பட்டு விடுமோ என்று பயப்படுவார். குழந்தைக்கு சாதாரண காய்ச்சல் வந்தாலோ, அது இறந்தே விடும் என்று கருதத் தொடங்கி விடுகிறார்.

இத்தகைய பெற்றோர்கள் தமது வாழ்வுக்காக மிகவும் கடினமாக உழைக்கிறார்கள். அவர்கள் தமது குழந்தைகட்காக தேவையற்ற விடயங்களைச் செய்யாமல் விடுவதில்லை. குழந்தைகளால் செய்ய முடியாதவற்றையே அவற்றிற்கு ஒரு பெற்றார் செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதிகளவு பாதுகாப்புணர்வுள்ள தாயானவள் குழந்தைகட்கு அளவுக்கு மீறி உணவூட்டுகிறாள். அளவுக்கதிகமான உடையலங்காரம் செய்கிறாள். முடிந்தால் அவர்களுக்காக, அவர்களது உணவைத் தானே சமிபாடடையச் செய்தும் கொடுக்கவே விரும்புவாள்.

சுருக்கமாகச் சொல்வதானால், குழந்தையின் சொந்தச் செயலான வாழ்தலும் இயங்குதலும் தாயினால் பொறுப்பெடுக்கப்பட்டு விடுகின்றன. இந்தக் குழந்தை வளருமே ஒழிய முதிர்ச்சி அடையாது. பெற்றோரிடமிருந்து கடன் வாங்கப்பட்ட தன்னுணர்வுடன் வளர்ந்தும் பேசவும் தொடங்கி விட்ட போதும், அது தனது சொந்தத் தன்னுணர்வை வளர்த்தெடுக்கத் தவறி விடுகிறது. அது இன்னமும் ஒரு அம்மா, அப்பாவில் தங்கியிருக்கும் குழந்தையாகவே இருக்கும். அதற்கு அதனது சொந்த உணர்வுகளைப் பற்றியோ, விருப்பங்களைப் பற்றியோ எதுவும் தெரிந்திருக்காது என்பது மட்டுமல்லாது, மிக ஆரம்ப மட்ட சமூக தேர்ச்சிகளையும் அது அறிந்திருக்க மாட்டாது. தாயார் பெருமளவுக்கு அதன் மனதை உருவாக்குபவளாக இருப்பதால்,

குழந்தை சுயமாகச் சிந்திக்க முடியாமல் தடுமாறுகிறது. அதற்கு தன்னைப் பற்றியும், தன்னைச் சூழ உள்ள உலகம் பற்றியும் மிகச் சிறியளவான ஒரு வெளிச்சமே இருக்கும். இக்குழந்தைகள் விளைவுகளுக்குக் காரணங்களைத் தேடமாட்டா. அவை பெரும்பாலும் 'மந்திர தந்திர' விளக்கங்களுடன் திருப்தியடைந்து விடுகின்றன. இவ்வாறான குழந்தைகள் தமது தாயாரில் தாம் தங்கியிருப்பதற்கும் தம்மிடம் எழும் துட்டு அளவு சுயாதீனத்துவத்திற்கான விருப்பிற்கும் இடையில் ஏற்படும் என்றென்றைக்குமான முரண்பாட்டின் காரணமாக பெருமளவான தம் சக்தியை வீணாக்குகிறார்கள். அளவுக்கதிகமான பாதுகாப்புணர்வுடைய பெற்றோர்களுக்கும் அவர்களது குழந்தைகள் சுய பூரணத்துவம் பெற வேண்டுமானால் நிபுணத்துவ உதவி அவசியம்.



## குழந்தைத்தனமான பெற்றோர்கள்

குழந்தைகளை விளையாட்டுப் பொருட்களாகவும், தம்மைப் பாதுகாப்பவர்களாகவும் கருதுதல்:
சில தாய்மார்கள் தமது குழந்தைகளுடன் உறுதியான நீண்ட நாள் நீடிக்கும் உறவைப் பேணுவதற்குச் சிரமப்படுகின்றார்கள். அவர்கள் குழந்தையுடன் சந்தோசமாக, ஒரு விளையாட்டுப் பொருளுடன் விளையாடுவது போல விளையாடுகின்ற போதும், அதன் போது சந்தோசம் அடைகின்ற போதும், அவர்களால் தாய்மைச் சுமையைத் தாங்க முடிவதில்லை.

இவர்கள் தாமே ஒரு தாயாரின் பராமரிப்பை எதிர்பார்ப்பவர்களாக இருப்பார்கள். அதை தமது குழந்தைகளிடம் எதிர்பார்ப்பார்கள். அவர்களின், குழந்தைகள் தாய் குறித்தும், அவரைப் பாதுகாப்பது குறித்தும் கவலைப்படுமாறு தவிர்க்க முடியாமல் தள்ளப்படுகிறார்கள். ஆனால் குழந்தைகளாக இருப்பதால், அவர்களால் இவற்றைச் செய்ய முடியாமற் போகும் போது நிரந்தரமான தோல்வி மனப்பான்மைக்கும், புறக்கணிப்புக்கும் உள்ளாகிறார்கள். அவர்கள் தமது குழந்தைப் பருவம் மறுக்கப்பட்டவர்களாக, குற்ற உணர்வும் தன்னைத்தானே திட்டும் இயல்பும் உடையவர்களாக வளர்கிறார்கள். இத்தகைய தாய்மார்களுக்கு குழந்தை வளர்ப்பில் உதவி தேவை

## குடிப்பழக்கமுள்ள பெற்றோர்கள்

திடீர்ப் புயல்களும் அவ்வப்போது நடக்கும் விலகல்களும்:
குடிப்பழக்கமுள்ள பெற்றோரின் குழந்தை விளங்கிக் கொள்ள முடியாத திடீர்ப் புயல்களுக்குப் பழக்கப்பட்டதாகிறது. அது தனது பெற்றோர் எதிர்வு கூறமுடியாத பயமூட்டுகிற விதத்தில் தமது இயல்பைத் திடீரென மாற்றிக் கொள்வதைக் காண்கிறது. இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் தமது பெற்றோருக்கு ஒரு போத்தல் மதுவைத் தவிர வேறெதுவும் முக்கியமல்ல என்பதை அது அறிந்து கொள்கிறது. அது தான் கைவிடப்பட்ட ஒன்றாகத் தன்னை உணர்கிறது.

பெற்றோர் குடித்த பல காட்சிகள் அழியாமல் நிலைத்து நிற்கும் குழந்தை தனது பாதுகாப்புக் குறியீடு தனது கண் முன் குழம்பிப் போவதைக் காண்கிறது. தனது தாயாரோ, தகப்பனோ ஒழுங்கற்ற விதத்தில் மாறிவிடுவதைக் காண்கிறது. அவர்கள் பலவீனமாகவும், அலட்டுபவர்களாகவும், கொடுங்கோலர்களாகவும் இன்னுமின்னும் குழந்தையின் வார்த்தைக் கட்டுள் அகப்படாத இயல்புள்ளவர்களாகவும் மாறிவிடுவதை அவதானிக்கிறது. அது தானும் அவர்களது சுகயீனத்துடன் சேர்ந்து வாழ வேண்டி நிர்ப்பந்திக்கப்படுகிறது.
குடிப்பழக்கமுள்ள பெற்றோர் தமது குழந்தைகளைப் பெரிதும் விரும்பக்கூடும். ஆனால் அவர்களது சொந்தப் பிரச்சினைகள் காரணமாக, அவர்களால் தமது குழந்தைகளைத் தொடர்ச்சியாகக் கவனிக்க முடிவதில்லை. இப்படியான பெற்றோருக்கு அவர்களது பிரச்சினைகளைச் சமாளிக்க நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலியல் ரீதியாகக் கெடுக்கும் பெற்றோர்கள்

*முதிர்ச்சியானதும், நியாயமானதுமான நடத்தையின் தேவை:*
சில பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தம்மைத் தவறாக நோக்கக் கூடுமென்றோ, தம்முடன் பாலியல் ரீதியாக எதிர்வினையாற்றக் கூடுமென்றோ அறியாமல் இருக்கிறார்கள். தம்மை அறியாமலே அவர்கள் பிள்ளைகளைத் தம்மை நோக்கிய பாலியல் உந்துதலுக்கு உள்ளாக்குகிறார்கள். தனது மகளின் முன்னாலேயே தனது ஆடை களையும் தகப்பன், தனது பாடசாலை வயது மகனின் முன்னால் குளிக்கும் தாய் ஆகியோர் தமது பிள்ளைகளின் பாலியல் உணர்வுகளையும், ஆர்வத்தையும் தூண்டி விடுகிறார்கள். சில பெற்றோர்கள் தமது வளர்ந்த பிள்ளைகளை ஒரே படுக்கையில் படுக்க அனுமதிப்பதுடன் அவர்களுடன் அன்பொழுகப் பேசிச் சீராட்டவும், கட்டி அணைக்கவும் செய்கிறார்கள். சில பெற்றோர் பிள்ளைகளுக்கு வாயில் முத்தமிடுவதையோ, அவர்களை நீண்டநேரத்துக்கு இறுகத் தழுவிக் கொள்வதையோ தப்பாக நினைப்பதில்லை. வேறு சில பெற்றோர் காதல் செய்யும் போது பாவிக்கக்கூடிய சொற்களையோ, அதற்கு இணையான சொற்களையோ பயன்படுத்தி உரையாடுகிறார்கள். சில பெற்றோர் தமது பிள்ளைகளுடன் காதலர்களைப் போல் நடந்து கொள்வதுடன், அவர்களிடமிருந்தும் அப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். சில அம்மாக்கள் தமது மகன்மாருடன் நடனமாட விரும்புகிறார்கள். குளியலுடையுடன் இருக்கும் போது கூட பிள்ளைகளைக் கிள்ளுவதற்கு அவர்கள் தயங்குவதில்லை.

இத்தகைய நடத்தைகள் பிள்ளைகளது பாலியல் வளர்ச்சியைப் பாதிக்கக் கூடியவையாகும். பாலியல் ரீதியான இத்தகைய செயல்களில் ஈடுபடும் தகப்பனது பெண்பிள்ளைகள், வயதானவர்களுடன் பாலியல் உறவு வைத்திருக்கும் தன்மை கொண்டவர்களாக வளரக்கூடும். அவ்வாறே, இத்தகைய தாய்மாரின் ஆண்பிள்ளைகள் தவறான உந்துதலுக்குள்ளாவதுடன், முதிர்ச்சியடைய முன்பாக, முதிர்சியற்ற விதத்தில் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும். மறுதலையாக சிலர், பெற்றோரின் தவறான செயற்பாடுகளால் பாலியல் நடவடிக்கைகளை முற்றாகத் தவிர்க்கத் தூண்டப்படலாம். இத்தகைய இயல்புள்ள பெற்றோருக்கு உளவியல் வைத்தியம் அவசியமாகும்.

## நிராகரிக்கும் பெற்றோர்

*உடல் ரீதியான கைவிடலும் உணர்வு ரீதியான கைவிடலும்:*
பெரும்பாலான பெற்றோர் தமது குழந்தையை ஒரு தாய் வெறுக்கிறாள் என்பதைக் கற்பனை பண்ணக்கூட முடியாதவர்களாக உள்ளனர். அவர்கள் குழந்தைகள் தவறாக நடத்தப் படுவதைப் பற்றியோ, அவர்கள் பெற்றோர்களால் கைவிடப்படுவது பற்றியோ வரும் பத்திரிகைச் செய்திகளைப் பார்த்துத் திடுக்கிறார்கள். உடல் ரீதியான கைவிடல் என்பது நம்பமுடியாத ஒன்றாக இருக்கிறது அவர்களுக்கு.

ஆனால் மறுதலையாக உணர்வு ரீதியான கைவிடல் என்பது பரவலாகக் காணப்படுகிறது. குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தேவையான அன்பான பராமரிப்பைக் குறிப்பிடத்தக்களவு



தொகையான பெற்றோர் வழங்குவதில்லை. இத்தகைய உணர்வு ரீதியான கைவிடல்கள் பல காரணங்களின் அடியாக உருவாகிறது. முதிர்ச்சியின்மை, தன் அழகின் மீதே தான் விருப்பம் கொள்ளும் இயல்பு, போதாமை, பாலியல் பாத்திரத்தை ஏற்றுக் கொள்ளாமை என்பன அவற்றிற் சிலவாகும்.

உணர்வு ரீதியான நிராகரிப்புக்குப் பல முகங்கள் உண்டு. இது தொடர்ச்சியான நச்சரிப்பு. திருத்தமான வேலைக்கான வற்புறுத்தல் போன்றவற்றாலும் அக்கறையின்மை, பிரிந்திருத்தல் என்பவற்றாலும் வெளித் தெரியலாம். இது அளவு மீறிய அக்கறை, ஆகக்கூடிய பராமரிப்பு என்பவற்றை மறுப்பதாலும் ஏற்படக்கூடும்.

நிராகரிக்கப்படும் சிறுவர்கள் தமது பெற்றோரிடமிருந்து நோய்க் கூறான செய்தி ஒன்றைப் பெறுகிறார்கள்: 'உன்ரை வாழ்க்கைக்காக என்னைக் கரைச்சற்படுத்தாதை. கெதியாக வளர்ந்து வெளியே போய்விடு'. இத்தகைய பெற்றோர்கள் தமது குழந்தைகளின் குழந்தைத்தனம், சிறுபிள்ளைத்தனம் என்பனவற்றிலிருந்து விடுபட்டிருப்பதன் மூலம் சந்தோசமாகவும் கடப்பாடற்றும் இருக்கலாம் என்று நினைக்கிறார்கள். அவர்கள் தமது குழந்தைகட்கு உணவூட்டுவதை ஒரு கடமையாகச் செய்கிறார்கள். அவர்களைக் கழிவறைப் பழக்கத்துக்கு ப் பழக்குவதை அவசர அவசரமாகச் செய்கிறார்கள். தாமே கொண்டிராத பொறுப்புணர்ச்சியை அவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். விரைவாகவே அவர்களை - முதிர்ச்சியடைய முன்பாகவே - சுதந்திரமாக விடுகிறார்கள். இதன்மூலம் பிள்ளைகளை தவறிழைப்போமோ, விமர்சிக்கப் படுவோமோ என்ற பயத்தின் ஆளுமைக்கு உட்படுத்தி விடுவார்கள்.

இதனால் பிள்ளைகள் எப்போதும் குற்றச்சாட்டையும், கண்டனத்தையும் எதிர்பார்க்கிறார்கள். எனவே எப்போதும் தம்மைத் தற்பாதுகாப்பதற்கான தொகையான விவாதத்துக்குத் தம்மைத் தயாராக வைத்திருக்கத் தொடங்குகிறார்கள். தாம் எப்போதும் ஒரு நீதிமன்றத்தில் நிற்பது போலவும், எப்போதும் தாம் தம்மை நியாயப்படுத்த வேண்டும் என்பது போலவும் அவர்கள் உணர்கிறார்கள். கடந்த காலத்திய தமது 'பாவங்களை' த் தொடர்ந்து செய்யக் கூடாது என்பதிலும் எதிர்காலத்தில் வரக்கூடிய அபாயங்களைத் தவிர்ப்பதிலும் அவர்கள் அதிக கவனம் செலுத்துகிறார்கள். இதனால் நிகழ்காலக் குறிக்கோள்களைச் சிறப்பாக நிறைவேற்றாமல் விட்டுவிடுகிறார்கள்.

தொடர்ச்சியான பயமும், தற்பாதுகாப்பு உணர்வும் குடிகொண்டுள்ளமையானது பிள்ளைகளை உணர்வுரீதியாகக் களைத்துப் போகச் செய்வதுடன், உடல்ரீதியாகச் சோர்வடையவும் வைத்து விடுகிறது. இத்தகைய குழந்தைகள் கொஞ்சமாவது சந்தோசத்தை அடைய வேண்டும் என்றால், இக்குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் நிபுணத்துவ உதவி அவசியமாகும்.

## மட்டுமீறிய அக்கறை உடைய பெற்றோர்

*தங்கத்தட்டில் தரப்படும் சந்தோசம்:-* மட்டுமீறிய அக்கறை காட்டும் பெற்றோருக்குக் குழந்தை வளர்ப்பில் வழிகாட்டல் அவசியம். பெற்றோர் அன்பானவர்களாகவும், அர்ப்பணிப்பு உள்ளவர்களாகவும் இருக்கலாம். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பெரிதும் குழந்தையை மையமாக வைத்துச் சிந்திப்பவர்களாக இருக்கிறார்கள். தமது குழந்தைகளை, அவை தம்மைக் கொலை செய்தாலும் கூட, சந்தோசமாக வைத்திருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். தமது குழந்தை விரக்தி அடையக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு அம்சத்திலும் அவர்கள் கவனமாக இருந்து அத்தகைய சூழல்களை தவிர்த்துக் கொள்வார்கள். இந்த முயற்சியில் அவர்கள் தாம் விரக்திக்கும் வறுமைக்கும் கூட உள்ளாகக் கூடும்.

அதிசிறப்பான சந்தோஷம் என்பது ஒரு கற்பிதமான குறிக்கோள். அது ஒரு முடிவு அல்ல. அது ஒரு பயணத்தின் தன்மை மட்டுமே. சந்தோசம் தன்னுள் முடியும் ஒன்றல்ல. அது வேலை செய்தல், விளையாடல், அன்பு செய்தல், வாழ்தல் என்பனவற்றின் ஒரு பக்கவிளைவாகும். வாழ்வு என்பது தவிர்க்க முடியாமல் நமது விருப்பத்திற்கும் நமக்குக் கிடைப்பதற்கும் திட்டமிடுவதற்கும், நிறைவேறுவதற்குமிடையிலே ஒரு கால தாமதத்தைக் கொண்டதாக உள்ளது. வேறு வார்த்தைகளிற் சொல்வதானால் அது விரக்தியையும், விரக்தியால் ஏற்படும் துன்பத்தையும் உள்ளடக்கியதாகும்.

நாம் விரக்திக்காக திட்டமிடத் தேவையில்லை. ஒரு சுகயீனம் ஏற்படும் என்று முன்கூட்டியே நினைப்பது போல அது அவசியமற்ற ஒன்றாகும். ஆனால், ஒரு குழந்தை விரக்தியடைந்திருக்கும் போது, பெற்றோர் அதனைக் கண்டு துவண்டு போகத் தேவையில்லை. ஒரு பிள்ளை அழும் போது, அதைச் சிரிக்க வைப்பதற்காக ஒரு தாய் குத்துக்கரணம் அடிக்கத் தேவையில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக பிள்ளைகள் குற்ற உணர்வினை அல்லது தியாகத்தினை அடிப்படையாகக் கொள்ளாத புத்திபூர்வமான முகாமைத்துவத்திற்குப் பழக வேண்டும் என்பது முக்கியமானதாகும்.

பெற்றோரின் சிறிய வற்புறுத்தல்களும் நியாயமான கோரிக்கைகளும் கூட அழுகையாலும், அடம் பிடித்தலாலும் எதிர்கொள்ளப்படக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பிள்ளைகளைச் சரியாக நடப்பதற்கு வலியுறுத்துவதும், அந்தக் கஷ்டங்களுடன் வாழத் தயாராகும்படி கூறுவதுமே சிறப்பானதாகும். பிள்ளைகளை இவ்வாறான சந்தர்ப்பத்தில் தட்டிக் கொடுப்பது நிலைமையைச் சரிசெய்து விடுவதில்லை. சில முகில்கள் என்ன நடந்தாலும் மழையைக் கொண்டு வரத்தான் செய்யும். ஒருவரால் இதற்காகச் செய்யக் கூடியதெல்லாம் மழை போய் முடியும் வரை காலை நனைக்காமல் பொறுத்திருப்பது மட்டும் தான். இப்படியான சந்தர்ப்பங்களில் உறுதியாக, இருக்கும் எங்கள் ஆற்றலைப் பொறுத்துக் குழந்தைகள் உறுதியையும், பாதுகாப்புணர்வையும் கற்றுக் கொள்வார்கள்.

## விவாகரத்துச் செய்த பெற்றோர்

**நல்லிணக்க வெளித்தோற்றம்:** விவாகரத்து என்பது, ஒரு அவயவத்தை துண்டிப்பது போல, ஆத்மாவை உலுக்குகின்ற அனுபவத்தைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அளிக்கும் ஒன்றாகும். பெற்றோருக்குப் பல உடைந்த கனவுகளுக்கும், விருப்பங்களுக்கும் ஒரு முடிவாக இது அமைகிறது. பிள்ளைகட்கோ, இது உலகத்தின் முடிவாகத் தோன்றலாம். குடும்ப உடைவின் கசப்புக்கும், தடுமாற்றத்திற்கும் மத்தியில் பெற்றோர்கள் தமது



குழந்தைகள் முடிந்தளவு பாதிப்படைவதைக் குறைக்கக் கூடியவிதத்தில் தமது நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும்.

ஒருவர் மீது ஒருவர் பழிவாங்கக் குழந்தையைப் பயன்படுத்துவது தான் பெற்றோர் செய்யக்கூடிய மிகவும் மோசமான நடவடிக்கையாகும். இந்தச் சூழலில் இவ்வகையான செயலுக்கான உணர்வுகளும் வாய்ப்பும், செய்ய வேண்டும் என்ற உத்வேகமும் இருக்கிறது. ஒரு பெற்றோரால் மற்றவர் திட்டப்படலாம். குழந்தைகள் ஒரு பக்கத்தைச் சார்ந்து நிற்குமாறு கட்டாயப்படுத்தப்படலாம் அல்லது தூண்டப்படலாம். இதற்காகப் பணிவு, பாதுகாப்பு, பணம், கல்வி, பயணங்கள் என்பன பயன்படுத்தப்படலாம்.

கணவன் மனைவியாக இல்லாவிட்டாலும் கூட, தாம் பெற்றோராகத் தொடர்ந்து இருப்பதே விவாகரத்துச் செய்து கொண்ட பெற்றோர் செய்ய வேண்டிய சிறப்பான விடயமாகும். இது ஒன்றும் இலேசான விடயம் அல்ல. ஏனென்றால் இதற்கு ஒருவகை வெளித்தோற்ற அளவிலான நல்லிணக்கம் அவசியம். அதுவும் தம்மிடையேயான வெறுப்புக்கும் கசப்புணர்வுக்கும் மத்தியில் இதைச் செய்வதென்பது கடினமானது தான். பெற்றோர்க்கு இதைச் செய்வதற்கு நிபுணத்துவ உதவி உதவக்கூடும். அவர்களுக்குத் தமது துயரங்களைப் புறவயமாகப் பார்க்கவும், தமது பிள்ளைகட்கு எது சிறந்ததோ அதைச் செய்யவும் அது அவர்களுக்கு உதவலாம். டொக்டர் லூயிஸ் டெஸ்பேட் 'விவாகரத்து செய்தவர்களின் குழந்தைகள்' என்ற தமது நூலில் இப்படிக் கூறுகிறார்:

'ஒரு ஆணும் பெண்ணும் தமது திருமணத்தை வெற்றிகரமாகக் கொண்டு செல்ல முடியாதவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களால் ஒரு வெற்றிகரமான விவாகரத்தைச் செய்ய முடியும். முயற்சி, அறிவு, வழிகாட்டல் என்பவற்றின் உதவியுடன் தமது திருமண வாழ்விற் செய்ய முடியாததை, முதிரும் அனுபவத்தைத் தரும் விவாகரத்தில் செய்ய முடியும்...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னுரை

இந்த நூலிற் கூறப்பட்ட புதிய தீர்வுகள் பொருத்தமான விதத்தில், தெரிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படும் போது மட்டுமே அவை பெற்றோரின் நோக்கங்களுக்கு ஒளியூட்டுவதாய் அமையும். குழந்தைகள் கோரிக்கைகளுக்கான எதிர்வினைகள் ஆளுக்காள் மாறுபடக்கூடும், சில குழந்தைகள் சொன்னபடி கேட்பார்கள். வழமையான நடத்தையிலும் உறவுகளிலும் ஏற்படும் மாற்றங்களை இலகுவில் ஏற்றுக் கொள்வார்கள். வேறு சிலரோ மிகவும் கட்டுப்பெட்டித்தனமாக இருப்பார்கள். எதிர்ப்பு அல்லது தண்டனையின் பின்னரே அவர்கள் மாற்றத்திற்கு ஒப்புவார்கள். வேறு சிலரோ மிகவும் எதிர்ப்போக்கைக் காட்டுவார்கள். அவர்கள் தமது வாழ்வில் எந்தப் 'புதிய விடயத்தை'யும் தீவிரமாக எதிர்ப்பார்கள். ஒரு புத்திபூர்வமான புதிய அணுகுமுறையானது குழந்தையின் உணர்வையும் அதன் ஆளுமையையும் கணக்கிலெடுத்துச் செய்யப்படுவதாக அமைய வேண்டும்.

மனித உறவுகளில், முடிவுகள் வழிமுறைகளில் தங்கியுள்ளன. விளைவுகள் செயல்முறையில் தங்கியுள்ளன. குழந்தை வளர்ப்பு முறையானது கௌரவத்துடனும், அனுதாபத்துடனும் கடைப்பிடிக்கப்படும் ஒன்றாக உள்ள போது மட்டுமே அவர்களின் ஆளுமையும், நடத்தையும், மலர்ச்சியடையும். பெற்றோருக்கும் குழந்தைகட்கும் இடையிலான சவால் விடும் உறவின் தேவைகட்கு வேண்டியளவு பாரிய அக்கறையையும், உணர்வுகள் மீதான ஆழமான புரிதலையும் இந்தப் புதிய அணுகுமுறைகள் வழங்கும் என்று நம்பப்படுகிறது.

டொக்டர் ஹேய்ம் ஜி இனோட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய உரிமைகள், சிந்தனைகள் பற்றிய பெரும் புரிதல்களும் மாற்றங்களும் இன்று ஏற்பட்டு வருகின்றன. அவற்றை எமது சமூகப் பரப்பிலும் அனுபவங்களிலும் நாம் இணைத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. எமது சமூகத்தில் குழந்தைகளதும் சிறுவர்களதும் நிலை கடந்த இருபது ஆண்டுகளில் மிகவும் மோசமான பாதிப்புக்களுக்கு உள்ளாகி விட்டது.

போரும், வன்முறையும், பயங்கரமும் குழந்தைகளைப் பாதிக்கின்ற போது அவர்களுடைய உளவளர்ச்சி, சமூக இயங்குதிறன், பெற்றோருடனான உறவுகள், கல்வி, கிரகிப்பு போன்ற பல அம்சங்கள் தீவிரமாகப் பாதிக்கப்படுகின்றன. குடும்ப வன்முறையை அனுபவித்த, அனுபவிக்கிற குழந்தைகளைப் பெற்றோரியம் எப்படி அணுகுகிறது அல்லது இத்தகைய சிக்கல்களூடாக வளர்ந்த, வளர்கிற குழந்தைகளை நாம் எப்படி அணுகுவது என்பது பற்றிய அறிவும், அனுபவமும், பயிற்சியும் எமக்கு இன்று தேவை. இந்தத் தேவையின் அடிப்படையான ஒரு கூறு குழந்தைகளுடன் நாம் எப்படி உறவாடுகிறோம், உரையாடுகிறோம், தொடர்பு கொள்ளுகிறோம் என்பது. இந்த அடிப்படைத் தேவை குறித்த ஒரு சீரான புரிதலை இந்த நூல் வழங்குகிறது. தவிரவும், குழந்தைகளின் நடத்தைகள் தொடர்பான விடயங்களில் அக்கறை எடுத்து அவர்களை வழிப்படுத்த எடுக்கும் முயற்சிகளில் முக்கியமானது பெற்றோரை அறிவூட்டுவதுதான். குழந்தைகளை அறிவூட்டுவதை விடவும் முக்கியமான விடயம் இதுதான்.

இந் நூல் அதை மிகவும் சிறப்பாகச் செய்கிறது. இது ஒரு துவக்கம் தான். எமது தேவை பெரிது. வழங்கலும் வளமும் சிறிது. எந்த நீண்ட பயணமும் ஒரு சிறு காலடியுடனேயே துவங்கப்படுகிறது.

**சேரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org